ஏர்வாடியம்

பேராசிரியர் இரா.மோகன்
பேராசிரியர் நிர்மலா மோகன்

வானதி பதிப்பகம்

ஏர்வாடியம்

பேராசிரியர் இரா.மோகன்
பேராசிரியர் நிர்மலா மோகன்

வானதி பதிப்பகம்
23,தீனதயாளு தெரு
தி.நகர்,சென்னை – 17.

முதற்பதிப்பு : சனவரி, 2019
© பேராசிரியர் இரா.மோகன் & நிர்மலா மோகன்

வானதி வெளியீடு

விலை : ரூ. 125

Title	:	**Earvadiyam**
Author	:	Professor Era.Mohan Professor Nirmala Mohan
Language	:	Tamil
Subject	:	Literary Criticism
Edition	:	First Edition, January, 2019
Pages	:	176
Published by	:	**VANATHI PATHIPPAKAM** 23, Deenadayalu Street Thyagaraya Nagar Chennai - 600 017 Ph: 044 - 24342810/ 24310769 E-mail : vanathipathippakam@gmail.com
Price	:	Rs. 125
Laser Typeset	:	P.K.Ramkumar Cell: 86089 97165
Printed at	:	Novena Offset Printing Co., Ch - 5, Ph. : 28446166

தோரண வாயில்

கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் குறித்து யானும் என் துணைவியாரும் அவ்வப்போது எழுதிய கட்டுரைகளையும், அவரது நூல்களுக்கு நாங்கள் இருவரும் நல்கிய அணிந்துரைகளையும் ஒருநாள் தற்செயலாகக் காண நேர்ந்தது. 'மலர்களை உதிரியாகக் காணும்போது கிடைக்கும் உணர்வு வேறு; அவற்றையே ஒரு மாலையாகத் தொடுத்து நோக்கும்போது பெறும் அனுபவம் வேறு' என்ற எண்ணம் என் சித்தத்தில் அக்கணத்தில் தோன்றியது. அதன் விளைவே இப்போது உங்கள் கரங்களில் தவழும் ***'ஏர்வாடியம்'*** என்ற நூல்.

அடுத்து, நூலுக்கு என்ன தலைப்பு வைக்கலாம் என்ற சிந்தனை எழுந்தது. ***'குலோத்துங்கம்'***, ***'மணிமொழியம்'*** போல ***'ஏர்வாடியம்'*** என்ற தலைப்பினைச் சூட்டலாம் என்ற சித்திர மின்னல் என் சிந்தையில் பளிச்சிட்டது. "பிறந்த ஊரை உங்கள் பெயரோடு இணைத்துக் கொண்ட போது கிடைத்த பாராட்டுக்களை விட, 'ஏர்வாடியம்' என்ற இந் நூற்பெயருக்கு இரட்டிப்பு வரவேற்பும் புகழாரமும் கிடைக்கும்' என்று ஏர்வாடியாரிடம் யான் தொலைபேசியில் கூறினேன். பதச்சோறாக, பேராசிரியர் **தெ.ஞானசுந்தரம்** அவர்களிடம் இருந்து 'ஏர்வாடியம்' என்ற இந்நூற்பெயருக்குக் கிடைத்த பாராட்டு இதனை மெய்ப்பித்தது.

புதுதில்லி ***சாகித்திய அகாதெமி 'இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை'யில்*** வெளியிட்டுவரும் நூலினைப் போல் 'ஏர்வாடியம்' எனும் இந்நூலும் அமைய வேண்டும் என யானும் துணைவியாரும் திட்டமிட்டோம்; நூலின் இயல் பாகுபாட்டையும் அவ்வாறே அமைத்துக்

கொண்டோம். ஏர்வாடியாரின் பன்முகப் பரிமாணங்களை இலக்கிய ஆர்வலர்களுக்கு எளிய முறையில் தெளிந்த நடையில் அறிமுகப்படுத்தும் நோக்கிலேயே இந்நூல் கட்டமைக்கப் பெற்றுள்ளது.

இந்நூலுக்குத் தாய் உள்ளத்துடன் வாழ்த்துரை வழங்கியுள்ள மூதறிஞர் **சிலம்பொலி சு.செல்லப்பனார்** அவர்களுக்கும், அழகிய அணிந்துரை நல்கியுள்ள பேராசிரியர் **தெ.ஞானசுந்தரம்** அவர்களுக்கும் எங்களது உளங்கனிந்த நன்றியறிதலை உரித்தாக்குகின்றோம்.

குறுகிய காலத்தில் நூலினைக் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் வெளியிட்டுள்ள பதிப்புத் திலகம், மதிப்புறு முனைவர் **வானதி இராமநாதன்** அவர்களுக்கும், நூலின் கணினியாக்கத்தில் முனைப்புடன் செயலாற்றிய அன்பு இளவல் **பி.கி.இராம்குமார்** அவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றி மலர்களைக் காணிக்கை ஆக்குகின்றோம்.

உலகெங்கிலும் உள்ள **'கவிதை உறவு'** வாசகர்கள் இந்நூலை வரவேற்றுப் போற்றுவார்கள் என எதிர்நோக்குகிறோம்.

மதுரை 625 019

26.01.2019

இரா.மோகன்

நிர்மலா

வாழ்த்துரை

முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன்

முன்னை இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை
தலைவர், சிலம்பொலி செல்லப்பன் சிலப்பதிகார அறக்கட்டளை
தலைவர், தமிழகப் புலவர் குழு, சென்னை

கவிஞர், கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதா கிருஷ்ணன் அவர்கள் நீண்ட நெடுங்காலமாக என்னுடன் மட்டுமல்ல, எண்ணற்ற தமிழறிஞர்களுடன் தொடர்பில் இருப்பவர். அவரை எல்லோர்க்கும் பிடிக்கும் என்பதைப் போல அவருடைய எழுத்துகளும் எல்லோர்க்கும் பிடிக்கும்.

பாரத ஸ்டேட் வங்கி அதிகாரியான அவர் வங்கிக் கலைச்சொல் அகராதி ஒன்றை வெளிக்கொணர்வதில் காட்டிய ஆர்வமும், ஆற்றலும் பாராட்டிற்கு உரியது. இத் தொகுப்பை அவரது பெருமுயற்சியுடனும் நான் இயக்குநராக இருந்த நேரத்துத் தமிழ்வளர்ச்சித் துறையின் பேராதரவுடனும் ஓர் அரசு விழாவிலேயே மாண்புமிகு முதல்வர் டாக்டர் **எம்.ஜி.ஆர்**. அவர்கள் வெளியிட்டு வாழ்த்தியது இன்னமும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது.

கவிஞர் ஏர்வாடியார் ***'கவிதை உறவு'*** இயக்கத்தைத் தோற்றுவித்தபோது பன்னிரண்டு கவிஞர்கள் இணைந்து தொகுத்த ***'வண்ணங்கள்'*** கவிதைத் தொகுப்பில் தொடங்கி

அவர் எழுதிய நூல்கள் சிலவற்றிற்கு நான் அணிந்துரை தந்து அகம் மகிழ்ந்ததையும் நினைவுகூர்கிறேன். அவரது நூல் வெளியீட்டு விழாக்களிலும் கலந்துகொண்டு வாழ்த்தியிருக்கிறேன்.

ஏர்வாடியார் பன்முக ஆற்றல் கொண்டவர். அவரது கவிதைகள் பெரிதும் வரவேற்கப்பட்டதோடு சில தமிழ் அமைப்புகள் வழங்கிய பரிசுகளையும் பெற்றுள்ளன. அவரது சிறுகதை நூலும், நாடக நூலும் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசுகளைப் பெற்றுள்ளன. அவரது புதினத்திற்கும் தமிழ் அமைப்பு ஒன்று பரிசு வழங்கிப் பெருமை சேர்த்துள்ளது. அவரது கட்டுரை நூல்களும் பாராட்டிற்கு உரியவை. கவிதை, சிறுகதை, நாடகம், புதினம், கட்டுரை என்று எழுத்தின் எல்லாப் பரிமாணங்களிலும் திறம் காட்டும் அவர் இதுவரை 100-க்கும் அதிகமான நல்ல நூல்களைத் தந்துள்ளார்.

கவிஞர் ஏர்வாடியாரிடம் மிகுந்திருக்கிற ஆற்றல் அவரது பண்பு நலன்களை ஆவணப்படுத்தும் முகமாக தமிழ்கூறும் நல்லுலகம் நன்கறித்த தமிழறிஞர் பேராசிரியர் டாக்டர் **இரா.மோகனும்** அவரது துணைவியார் **நிர்மலா மோகனும்** இணைந்து மிகுந்த அன்போடும் ஆர்வத்தோடும் இந்த நூலை ஓர் ஆய்வு நூலாகவே வழங்கியமை பாராட்டிற்கு உரியது. பாராட்டி மகிழவும் ஒரு பெருந்தன்மை வேண்டும். அது பேராசிரியர் மோகன் அவர்களிடம் மிகுந்துள்ளது. அவரையும் இந்நூல் உருவாக உறுதுணை புரிந்த அவர்தம் துணைவியார் பேராசிரியர் **நிர்மலா மோகன்** அவர்களையும், நூலைச் சிறப்பாக வெளியிடும் **வானதி இராமநாதன்** அவர்களையும் நான் நெஞ்சாரப் பாராட்டி மகிழ்கிறேன்.

ஏர்வாடியாருக்கும் எப்போதும் போல என் அன்பும் வாழ்த்துக்களும்...



அணிந்துரை



முனைவர் தெ.ஞானசுந்தரம்
துணைத்தலைவர்
செம்மொழித் தமிழாய்வு
மத்திய நிறுவனம்
சென்னை - 600 113.

தமிழிலக்கியத்தில் **கபிலருக்கு** ஒரு தனியிடம் உண்டு. அவர் சங்க இலக்கியத்தில் மிகுதியான பாக்களைப் பாடியவர் என்னும் சிறப்புக்கு உரியவராகத் திகழ்கிறார். காலஞ்சென்ற மூதறிஞர் பேராசிரியர் **ம.ரா.போ.குருசாமி** அவர்கள் அப்பெரும்புலவரின் பாக்களையெல்லாம் திரட்டி அவரது புலமைச் சிறப்பை விளக்கிக் **'கபிலம்'** என்னும் பெயரில் ஒரு நூல் எழுதியுள்ளார். அதுபோல இருபெரும் தமிழ்ப் பேராசிரியர்களாகத் திகழும் இணையரால் இணையற்ற ஒரு பெரும் ஆளுமையாகத் திகழும் ஏர்வாடி இராதா கிருஷ்ணன் அவர்களின் வாழ்க்கை குறித்தும் படைப்புகள் குறித்தும் விளக்கும் நல்ல நூல் **'ஏர்வாடியம்'** என்னும் இந்நூலாகும்.

'ஏர்வாடி இராதாகிருஷ்ணன் யார்?' என்று யாரேனும் வினவினால் காவியக் கவிஞர் **வாலியின்** சொற்களைக் கடன்வாங்கி,

'நாடறிந்த
நல்ல கவிஞர்;
நானறிந்த
நல்ல மனிதர்'

என்று தயங்காமல் கூறுவேன். அவர் கவிஞராகத் திகழ்வதோடு நல்ல மனிதராகத் திகழ்வதாலேயே அவரைப் பற்றி இத்தகைய நூல் வெளிவருகிறது. ஏனெனில் கவிஞர்களை எளிதில் சந்திக்க முடிகிறது, ஆனால் நல்ல மனிதர்களைச் சந்திப்பதுதான் அரிதாக உள்ளது. எப்பொழுதும் மலர்ந்த முகம், பணிவைக் காட்டும் அடக்கமான குரல், தேனில் தோய்த்தெடுத்தது போன்ற கனிச்சொல், மெல்லிய நகைச்சுவை, பொதுநலச் சிந்தனை இவற்றின் கலவையாகத் திகழும் ஒருவர் நல்ல மனிதராக இருப்பதில் என்ன வியப்பு?

ஏர்வாடி இராதாகிருஷ்ணன் பன்முகத் திறனோடு திகழ்பவர். பயிரியல் படித்த அவர் உயிர் இயல்வதோ இலக்கியங்களில்தான். அவர் மரபு கொஞ்சும் மரபுக் கவிதைகளையும் புதுமை பளிச்சிடும் புதுக்கவிதைகளையும் புனைவதில் தேர்ந்தவர். அவரிடம் கவிதையும் குடியிருக்கிறது; கவிதையிலும் அவர் வாழ்கிறார். அவர் வங்கியில் நாணயத்தோடு உறவாடியவர்; மேடையில் நாநயத்தோடு உரையாடும் சொற்பொழிவாளர். அவரது பேச்சு பிசிரற்ற சொற்களால் தொடுத்த சொல்மாலையாக மணப்பது. சற்றொப்ப முப்பதாண்டுகளாக, **‘கவிதை உறவு’** என்னும் கவிதைத் திங்கள் இதழை நடத்திவரும் இதழாசிரியர். வானொலி நாடகங்கள் பலவற்றை உருவாக்கிய நாடக ஆசிரியர். அந்நாடகங்கள் சிலவற்றில் நடித்த நடிகர். திரைத்துறையில் கவியரசு **கண்ணதாசன்** அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு ஓரிரு பாடல்கள் எழுதி, மேலும் வாய்ப்புகள் உருவான போதிலும் அதிலிருந்து ஒதுங்கிக் கொண்ட பாடலாசிரியர். பரிசுக்கு உரிய சிறுகதைகள் படைத்தவர். பதினைந்தாயிரம் வங்கிக் கலைச்சொற்கள் அடங்கிய வங்கிக் கலைச்சொல் அகராதியை உருவாக்கி முதலமைச்சராகத் திகழ்ந்த பொன்மனச் செம்மல் **எம்.ஜி.ஆர்.** அவர்களைக் கொண்டு வெளியிட்ட சாதனை யாளர். அவர் வங்கியால் வாழ்வு பெற்றார்; அவரால் வங்கி புகழ்பெற்றது.

அவர் திறமையானவராகத் திகழ்ந்ததோடு அவருடைய திறமைகள் அங்கீகாரம் பெற்றது கூடுதல் சிறப்பு. அது பொன்மலர் நாற்றம் பெற்றது போல்

பொலிவுற்றது. அவர் வங்கியால் அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோவில் நடந்த ஐந்தாவது உலகக் கவிஞர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள அனுப்பப் பட்டவர். அவரது சிறுகதைத் தொகுப்புக்குத் தமிழ் வளர்ச்சித் துறையின் முதற்பரிசு, நாடக நூலுக்கான முதற்பரிசு, இயல் இசை நாடக மன்றத்தில் கலைமாமணி விருது, தமிழ்நாடு அரசின் பாவேந்தர் பாரதிதாசன் விருது, வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்புச் சாதனையாளர் விருது ஆகியன வளரும் பயிருக்குப் பாத்தியில் சொரிந்த நீர் போல் அமைந்து அவரை வளர்த்துள்ளன.

வறுமையிலிருந்து வளமையை நோக்கி உழைப்பால் உயர்ந்து ஓங்கிய வாழ்க்கை. பலருக்கு வழிகாட்டியாய் அமையும் நேரிய வாழ்க்கை. பிறரை மதிப்பவரே மதிக்கப்படுவர் என்பதும் பாராட்டுபவரே பாராட்டப் படுவர் என்பதும் உலக நடையை உற்று நோக்கும்போது கிட்டும் உயர் பாடமாகும். எர்வாடியாரும் பாராட்டுக்கு உரியர்களைத் தாராளமாகப் பாராட்டும் பெற்றியர். அவர் **'கவிதை உற'வில்** இருபது ஆண்டுகளுக்கு மேலாக எத்தனை ஆளுமைகளைப் பற்றி மனந்திறந்து பாராட்டிப் போற்றி எழுதியுள்ளார் என்பதை எண்ணும் போது வியப்பே மேலிடுகிறது. அத்துறையில் ஒன்பது வெளியீடுகள் வந்துள்ளன என்பது வேறு யாரும் செய்யாத செயற்கருஞ் செயலாகும். சென்ற தலைமுறைப் பெரியோர் களைப் பற்றித் தெரிந்துகொள்ள **திரு.வி.க.**வின் வாழ்க்கைக் குறிப்புத் துணைபுரிவது போல இந்தத் தலைமுறையைப் பற்றித் தெரிந்துகொள்ளத் துணைபுரியும் இலக்கிய ஆவணங்கள் இத்தொகுதிகள் என்பது 'உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை.' தாம் பல பரிசுகளையும் பாராட்டு களையும் பெற்றதோடு அமையாமல் தம் பிறந்த நாளில் பிற இலக்கியப் படைப்பாளிகளுக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டியும் மகிழ்பவர். அவரைப் பலரது இலக்கிய ஆர்வத்திற்குப் பரிசுப் பாலூட்டியும் பாராட்டுத் தாலாட்டியும் வளர்க்கும் செவிலித்தாய் எனலாம். **'மகுடத்தை மற்றவர்க்குச் சூட்டி அழகு பார்க்கும் தாய்மையாளர்'**

என்னும் **பழனிபாரதியின்** பாராட்டு எத்துணை உண்மையொளி மிக்க பாராட்டு!

பேராசிரிய இணையர், ஏர்வாடி இராதாகிருஷ்ணன் அவர்களின் வாழ்க்கையையும் எழுத்துகளையும் கூர்ந்து நோக்கி எழுதியிருப்பது மிக்க மகிழ்ச்சியளிக்கிறது. மற்றவர் களுக்குப் பாடமாக அமையும் அவருடைய வாழ்க்கை நிகழ்வுகள், அவருடைய நேர்மை, நகைச்சுவை உணர்வு போன்ற பண்புகள், மணிபோல் ஒளிரும் கவிதைத் தொடர்கள் ஆகியவற்றைக் **'கொங்குதேர் அஞ்சிறைச் தும்பி போல்'** தேடி **'உயர்ந்த சந்தன மரத்தில் தொடுத்த தீந்தேன் அடை போல்'** நூலாக்கியுள்ளனர்.

ஏர்வாடியார் எழுதிய முதல் கவிதை நூலுக்கு அணிந்துரை தந்த அறிஞர் **அ.கி.பரந்தாமனார்** 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா?' என்னும் அரிய நூலைத் தந்தவர். பிழையற்ற தமிழ் எழுத விழைவோர்க்கு உற்ற துணை அது. இவரது நூலில் உள்ள பிழைகளை எல்லாம் சுட்டிக் காட்டி, "கவிதைக்கு நல்ல கற்பனை வளமும் கருத்துச் செறிவும் இருந்தால் போதாது. பிழையில்லாத தமிழும் பிறமொழி கலவாத நிலையும் வேண்டும்" என்று எழுதித் தந்தாராம். அவரிடம் 'பிழைகளைத் திருத்தி அச்சிட்டு வந்தால் அணிந்துரையை மாற்றித் தர இயலுமா?' என்று வினவ, அவரும் இசைவுதர, அச்சிட்ட ஆயிரம் படிகளையும் எடைக்குப் போட்டுவிட்டுப் புதிதாக அச்சிட்டுப் பாராட்டத் தக்க வகையில் நூலை வெளியிட்டார் என்பது இந்நூலில் பதிவிட்டுள்ள மிகச் சிறந்த நிகழ்ச்சி எனலாம். இது பேராசிரியரின் தமிழ்ப் பிடிப்பினையும் எர்வாடியாரின் தவறு நேர்ந்தவழித் திருத்திக்கொள்ளும் மாண்பினையும் ஒருசேர உயர்த்திப் பிடிக்கும் நிகழ்ச்சியாகும். இதனை அழகுறப் பதிவுசெய்துள்ளார்கள் நூலாசிரியர்கள்.

நகைச்சுவை என்பது ஒரு சிறுசருக்கலில் நிகழ்வது. அறிஞர் கூட்டத்தில் பேசும் ஒருவர் வாழைப்பழம் என்பதனை 'வாயப்பயம்' என்று ஒலித்துவிட்டால் அது நகைப்புக்கு உரியதாகி விடுகிறது. பிறரின் தாழ்ச்சியில் பிறக்கும்

எள்ளலினும் தன்னைத் தாழ்த்திக் கொள்வதால் பிறக்கும் எள்ளல் சிறந்தது. அஃது எவரையும் காயப்படுத்தாமல் நகைப்பை விளைவிப்பது. தன்னைத் தாழ்த்திக்கொள்வது பிறரால் கொண்டாடத் தக்க பண்பாகவும் மாறிவிடுகிறது. எர்வாடியாரின் நகைச்சுவையும் பிறரைத் தாழ்த்தாமல் தம்மைத் தாழ்த்திக் கொள்வதால் விளைவதாக அமைந்துள்ளது. கவிஞர், **“‘உன் வீடு என்ன மதுரையா? சிதம்பரமா?’** என்று யாரேனும் கேட்டால் பெருமையாகச் **‘சிதம்பரம்தான்’** என்று சொல்லுவார். காரணம், அவருடைய மனைவியார் பெயர் **சிதம்பரத்தம்மாள்.**” இது யாரையும் நோகச் செய்யாத நகைச்சுவை. ஒருமுறை போக்குவரத்துக் காவலர் தம்மிடம் தவறாக நடந்துகொள்ளக் காவல்துறை அதிகாரியிடம் அந்நிகழ்வு குறித்துப் பேசுகிறார். அதிகாரி அந்தக் காவலருக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் என்று வினவுகிறார். உடனே இவர், “தண்டனைதானே, நானே கொடுத்துவிட்டேன்” என்கிறார். அதிகாரி, “என்ன தண்டனை?” என்கிறார். அதற்கு இவர், “வேறென்ன தண்டனை? என்னுடைய புத்தகங்கள் சிலவற்றைக் கொடுத்திருக்கிறேன், கட்டாயம் படிக்க வேண்டும் என்று... போதாதா?” என்கிறார். தன்னைத் தாழ்த்திக்கொண்டு அதனால் நகை தோன்றச் செய்யும் தன்மைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு இதுவாகும்.

நல்ல இலக்கியச் சிந்தனைகள் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன.

> **‘தானாய்க் கனிவதே கவிதை - தினம்**
> **தேனாய் இனிப்பதே கவிதை’**

என்னும் கருத்து,

> **‘உள்ளத்துள்ளது கவிதை - இன்பம்**
> **உருவெடுப்பது கவிதை’**

என்னும் ‘கவிமணி’ **தேசிக விநாயகம்பிள்ளையின்** வரையறைக்குத் தோள்தீண்டியாக நிற்கிறது.

சங்க இலக்கியத் தலைவியர் தகுதியும் பண்பும் நிறைந் தவர்கள். ஆனால் கணவன்மார்களை அப்படிச் சொல்ல

முடியாது. அவர்களில் பலரிடம் பரத்தைமை ஒழுக்கம் என்னும் குறை இருந்தது. குறுந்தொகையில் அத்தகைய குறையுடைய தலைவனிடம் தலைமகள் ஒருத்தி, 'இம்மை மாறி மறுமையாகினும் நீயே எனக்குக் கணவனாக வருதல் வேண்டும்' என்று தெரிவிக்கிறாள். தலைமகளிடம் இருந்த இந்தப் பண்பு தட்டு மாறி ஏர்வாடியாரின் உள்ளத்திலும் ஊறிக் கிடக்கிறது. இப்படிச் சொல்ல எத்தனை கணவர் மார்க்கு வாய்க்கும்? இயலும்?

'இன்னொரு முறை
நான் பிறக்கிறபோது
நீ முதல் தாயாய் இருந்தாலும்
மகிழ்ச்சி
இரண்டாவது தாயென்றாலும்
மகிழ்ச்சியே'

என்று மனைவியைப் பற்றித் தெரிவிப்பது அவர் பெற்ற நல்வரத்தைக் காட்டுகிறது. இப்படி அரிய உள்ளத்தைத் தொடும் கருத்துகள் பல அங்கங்கே ஒளிர்கின்றன.

ஒருவரின் உயர்வை ஏற்று மதிப்பதற்கும் அதனைப் போற்றி ஆவணப்படுத்துவதற்கும் பெரிய மனம் வேண்டும். பேராசிரியர் **இரா.மோகன்** அவர்களும் பேராசிரியர் **நிர்மலா மோகன்** அவர்களும் **'நனந்தலை உலகம்'** போலும் பரந்த உள்ளம் படைத்தவர்கள். ஆழ்ந்த அன்பும் நட்பும் உடையவர்களாலேயே இப்படிச் சம காலத்தவரைப் பாராட்டும் நூல் படைக்க முடியும்.

நூற்பொருளாய் அமைந்துள்ள ஏர்வாடியாருக்கும் நூலாக்கம் செய்துள்ள பேராசிரிய இணையர்க்கும் என் உளம் நிறைந்த பாராட்டுகள். மண் பயனுற மேலும் பல தமிழ்ப் பணிகள் புரிய என் வாழ்த்துகள்.

உலகைத் தமிழால் உயர்த்தும் உத்தமர்

ஞான பாரதி வலம்புரி ஜான்

கலைமாமணி, கவிஞர் ஏர்வாடியார் அவர்கள் வியர்வையால் விதியை எழுதுகிற வெகு சிலரில் முதல் வரிசை மனிதர். இவரை வாழ்க என்றால்தான் அந்த வார்த்தையே வாழ்ந்திருக்கும். கவிதை இதயத்தைத் தொடுவது; கணக்கு மூளையைச் சோதிப்பது. கணக்குப் போடுகிறவனுக்கு உள்ள கவனத்தோடு கவிதை எழுதுவது எல்லோருக்கும் வருகிற கலை அல்ல. ஆனால் அறிவும், உணர்ச்சியும் கைகுலுக்கிக் கொள்ளுகிற மகரந்த மைதானங்களாகத் திகழ்வன கவிஞர் ஏர்வாடியாரின் கனல் மணக்கும் கற்பூரக் கவிதைகள்.

எது எது நம்மைப் பிரிக்குமோ அவைகளைத் தவிர்த்து, எது எது தமிழ் இனத்தை இணைக்குமோ அவற்றையே எண்ணி, சொல்லி, செயலாற்றி பெரு வெற்றி பெற்ற நிகழ்கால நிழல் மரம் இவர்.

தமிழின் மேன்மைக்காகவும், தமிழரின் வெற்றிக் காகவும் எழுத்துப் போராளியாகப் பாடுபட்டு வரும் கவிஞர் ஏர்வாடியார் அவர்கள் வங்கி அதிகாரியாக இருந்து தமிழ்மொழிக்கும் இலக்கியத்திற்கும் வளம் சேர்த்து வருகிறார். உலகைத் தமிழால் உயர்த்தப் பிறந்த அகிலத் தமிழர் அன்பர் கவிஞர் ஏர்வாடியாரின் பத்து விரல்களுக்கும் பாசம் ஒன்றையே குழைத்துப் பரிசம் போடுகிறேன்.

பொருளடக்கம்

1. வாழ்க்கைச் சித்திரம் 15

2. கொஞ்சி நிற்கும் மரபும் பளிச்சிடும் புதுமையும் 35

3. நடைச் சித்திரம் எனும் இலக்கிய வகையின் நட்சத்திர எழுத்தாளர் 46

4. கட்டுரை வளம் 70

5. நயத்தக்க நகைச்சுவையாளர் 80

6. நிறையக் கனவு நிறையக் கவிதை வேண்டும் 96

7. வளர்தமிழுக்கு நல்லதொரு வரவு 106

8. 'நம் பக்க'மாக விளங்கும் 'என் பக்கம்' 113

9. கைதேர்ந்த நாடக ஆசிரியர் 118

10. நடை நலமும் நகைச்சுவை உணர்வும் மிளிரும் சிறுகதை ஆசிரியர் 133

1

வாழ்க்கைச் சித்திரம்

"சீர்வாடிப் போகாமல் செந்தமிழைக் காத்துவரும்
ஏர்வாடி யார்போல் இனியகுணம் கொண்டவரை
ஊர்கூடித் தேடினும் ஒருவரும் சிக்கமாட்டார்
பேர்கோடி பெற்றுப் பெருமையுடன் இவர் வாழ்க!-
முப்பாலின் வழிநின்று முழுநிலவாய் இவர்
வாழ்க!"
*- முத்துலிங்கம்**

தமிழகத்தின் தென்கோடி மாவட்டங்களுள் ஒன்று திருநெல்வேலி. அதில் **'ஏர்வாடி'** என்ற பெயரில் ஓர் அழகிய சிற்றூர். பெரும்பான்மையான இஸ்லாமியர் களோடு சிறுபான்மையான இந்துக்கள் மன நல்லிணக்கத்துடன் சேர்ந்து மகிழ்வுடன் வாழ்ந்து வரும் சிறப்பினைப் பெற்ற அவ்வூரில் 1947-ஆம் ஆண்டில் மே மாதம் 18-ஆம் நாளில் பிறந்தவர் **எஸ்.இராதாகிருஷ்ணன்**. துறைதோறும் பெருமக்கள் பலர் தாம் பிறந்த ஊரால் பேசப்படுவதைப் போல இலக்கிய உலகில் **'ஏர்வாடியார்'** என்று அழைக்கப் பெறுபவர் கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் ஆவார். இராதாகிருஷ்ணனின் தந்தையார் திரு.**சுப்பையா** இரண்டாவது உலகப் போரின் போது ஓர் இராணுவ அதிகாரியாக விளங்கியவர்; ஏறத்தாழ 15 ஆண்டுகள் இரயில்வே காவல் துறையிலும் அதிகாரியாகப் பணியாற்றியவர்; சரியாகவும் நேர்மையாகவும் வாழ்ந்து காட்டி உலகியல் வாழ்வில் தோல்வியை ஏற்றவர். இராதாகிருஷ்ணனின் தாயார் திருமதி **தங்கம்மாள்**; அவரது குணமும் தங்கம் தான்! உடன்பிறந்தோர் நான்கு தங்கைகள், ஒரு தம்பி

---

* பின்னட்டைக் கவிதை, ஏர்வாடியாரின் 'எப்போதும்' தொகுப்பு.

என ஐவர். "அப்பா இருக்கும் போதே தலையில் விழுந்த பொறுப்பைத் தாங்கிக்கொண்டு எல்லாருக்கும் தாயுமானேன்; தந்தையும் ஆனேன்" (அரும்பு, ஜுன் 2016, ப.35) என்று நேர்காணல் ஒன்றில் தம் இளமைப் பருவம் குறித்து நெகிழ்வோடு நினைவுகூர்ந்துள்ளார் இராதாகிருஷ்ணன்.

இராதாகிருஷ்ணன் ஏற்றுக்கொண்ட அறிவுரை

"என்னுடைய தந்தையார் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி. அளவே இல்லாமல் அநேக அறிவுரைகளை அன்றாடம் வழங்கிக் கொண்டிருப்பார். எதுவும் எனக்கு நினைவில் நிற்பதில்லை. ஆனால் என்னுடைய அம்மா ஒன்றே ஒன்று கூறுவார். **'உனக்கு எது நல்லதாகப் படுகிறதோ அதன்படி நடந்து கொள்'** என்பார். அதுதான் நான் ஏற்றுக் கொண்ட அறிவுரை" (எண்ணிய வண்ணமாய்...,ப.32) எனப் பிற்காலத்தில் எழுதிய நூல் ஒன்றில் தமது பெற்றோரைக் குறித்து நினைவு கூர்ந்துள்ளார் எஸ்.இராதாகிருஷ்ணன்.

வாழ்நாளில் பல்வேறு ஊர்களில் மாறி மாறிப் பணியாற்ற வேண்டிய சூழல் அவ்வப்போது எழுந்ததால் திரு.சுப்பையா, தமது மகன் இராதாகிருஷ்ணின் படிப்பு பாதிக்கப்படக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு தாத்தாவும் ஓவிய ஆசிரியருமான **அழகேசன்** அவர்களிடம் அவனை ஒப்படைத்தார். பள்ளியில் படிக்கிற காலத்தில் பல்வேறு பேச்சுப் போட்டிகளில் கலந்து கொள்ளத் தாத்தா அழகேசன் எழுதித் தந்த தமிழின் தாக்கமே இன்று எழுத்தும் பேச்சுமாக ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் என்னும் இலக்கிய ஆளுமையில் ஆல் போல் தழைத்து அருகு போல் வேரோடி உள்ளது எனலாம்.

இளமைப் பருவம்

இராதாகிருஷ்ணனின் இளமைப் பருவம் சொல்லி மகிழவோ, பெருமையுறவோ எதுவும் இல்லாத பருவமாக அமைந்தது. வாழ்ந்து கெட்ட குடும்பம் என்பதால் புத்தகங்கள் வாங்கவோ, பள்ளிக் கட்டணம் கட்டவோ கூட முடியாத வறுமை நிலவியது. தொடக்கப் பள்ளியில் பயின்று இராதாகிருஷ்ணன் எட்டாவது வகுப்பு (ESLC) முடித்த ஆண்டிலேயே ஏர்வாடியில் உயர்நிலைப் பள்ளி

வந்தது. இல்லையேல் எட்டாவது வகுப்போடு அவரது மேற்படிப்பு எட்டாது போய் இருக்கும். அரும்பாடுபட்டு எப்படியோ அவரது பெற்றோர் அவரை அறிவியல் பட்டப் படிப்பினைப் (பிஎஸ்.ஸி., தாவரவியல்) படித்து முடிக்க வைத்தனர்.

வங்கிப் பணியில் சேருதல்

1967-ஆம் ஆண்டு கல்லூரிப் படிப்பினை முடித்த நிலையில் இராதாகிருஷ்ணன் சென்னையில் சொந்தமாகத் தோல் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றினைத் தொடங்கி நடத்தினார்; சிலருக்கு வேலை வாய்ப்புக்-களையும் அளித்து வளரத் தொடங்கினார். அப்போது அவருக்குப் பாரத ஸ்டேட் வங்கியில் எழுத்தராக வேலை கிடைத்தது. 'வங்கிப் பணியில் சேர்ந்தால் படிப்படியாகப் பதவி உயர்வுகள் பெறலாம். உங்களிடத்தில் இருக்கிற எழுத்தாற்றலையும் வளர்த்துக் கொள்ளலாம். பொருள் தேடுவது மட்டுமே வாழ்க்கை இல்லை; அமைதியான வாழ்வைப் பெறுவதுதான் நல்லது' என்றெல்லாம் தாம் நிறுவனக் கணக்கினை வைத்திருந்த கிண்டி ஸ்டேட் வங்கியின் முகவர் திரு.**கோபாலகிருஷ்ணன்** கூறிய அறிவுரை அப்போது சரியாகத் தோன்றவே வங்கிப் பணியில் 13.12.1968-இல் சேர்ந்தார் இராதாகிருஷ்ணன்.

பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரியில் படித்து முடித்து தாவரவியலில் இளம்அறிவியல் பட்டத்துடன் சென்னைக்குப் புறப்பட்ட இராதா கிருஷ்ணனிடம், "சென்னையில் நீ சந்திக்க வேண்டியவர்கள் மூவர். ஒருவர் என்னுடன் பணியாற்றிய **கவிஞர் நெல்லை ஆ.கணபதி,** இன்னொருவர் உன்னுடைய மாமா **கவிஞர் நெல்லை அருள்மணி,** மற்றொருவர் **வில்லிசை வேந்தர் கவிஞர் சுப்பு ஆறுமுகம்**" என்று அறிவுறுத்தி அனுப்பி வைத்தார் தாத்தா அழகேசன். சென்னையில் ஓரளவு தம்மை நிலைப்படுத்திக் கொண்ட பிறகு, மூவரையும் அடிக்கடி சந்திப்பதை வழக்கமாகக் கொண்டார் இராதாகிருஷ்ணன். இந்தச் சந்திப்புகளுக்கு அப்பால், ஏர்வாடியில் உடன்படித்த நண்பர் **ஜமால், பொன்னடியாரை**

அறிமுகப்படுத்த, மாமா அருள்மணி **பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமனிடம்** அழைத்துச் செல்ல, வங்கியில் உடன் பணியாற்றிய எழுத்தாளர் **ஆர்.எஸ்.மணி,** 'அமுதசுரபி' ஆசிரியர் **விக்கிரமனிடம்** அனுப்பி வைக்க, இராதாகிருஷ்ணனின் படைப்புக்கள் ***'முல்லைச் சரம்', 'தமிழ்ப் பணி', 'அமுதசுரபி'*** ஆகிய இதழ்களில் அடுத்தடுத்து வெளிவரத் தொடங்கின. அவ்வப்போது ***'கண்ணதாசன்'*** இதழிலும் அவரது கவிதைகள் வெளிவந்தன.

மாணவப் பருவத்தில் இராதாகிருஷ்ணனைப் பெரிதும் பாதித்த சோகம்

தாஷ்கண்ட் ஒப்பந்தம் கையெழுத்தாகிற போது இராதாகிருஷ்ணன் ஒரு கல்லூரி மாணவர். வரலாறு படைத்த அந்த தாஷ்கண்ட் ஒப்பந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அதிர்ச்சியாகச் சில வலிகளை வரலாறு பதிவு செய்து கொள்ள வேண்டிய சோகம் நிகழ்ந்தது. ***லால் பகதூர் சாஸ்திரி*** மறைகிறார். அவரது மரணம் மாணவப் பருவத்தில் இருந்த இராதாகிருஷ்ணனைப் பெரிதும் பாதித்தது. அன்றிரவு விடுதி அறையில் தங்கி இருந்த அவருக்குத் தூக்கம் வரவில்லை; 'நல்ல மனிதர்களைக் காலம் இப்படிக் களவு செய்து கொண்டு விடுகிறதே' என்று கலங்குகிறார். அந்த அழுத்தமான அவல உணர்வு ஒரு கவிதையாக வெளிப்படுகிறது. அதுதான் அவரது முதல் கவிதை (என்னுரை, பாட்டு வெளியினிலே..., ப.10). ***'என்று இனி காண்போம்?'*** என்ற அக் கவிதை கல்லூரி ஆண்டு மலரில் அச்சானது. அடுத்து, ***'நாமகள்'*** என்ற சிற்றிதழிலும் இராதாகிருஷ்ணனின் படைப்புக்கள் வெளிவந்தன.

எழுத்தாளராக, கவிஞராக, பத்திரிகையாளராக, பேச்சாளராக வர வேண்டும் என்று ஏர்வாடியார் கருதியதும் இல்லை; கனவு கண்டதும் இல்லை. என்றாலும், கல்லூரி நாள்களில் இருந்தே அவர் எழுதுவார். அவரது கவிதைகள் பல சிற்றிதழ்களில் வெளிவந்துள்ளன. கல்லூரி மலரில் வெளிவந்த லால் பாகதூர் சாஸ்திரியின் மறைவு பற்றிய இரங்கற் பாவே அவரது முதல் கவிதை. ***'மாலை முரசு'*** இதழில் கவிதைகளும் சிறுகதைகளும் வெளிவந்தன.

ஏர்வாடியார் எழுதிய முதல் சிறுகதையே **'அமுதசுரபி'** இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்றது. **'திருமணம் வெறும் நிகழ்ச்சிகள் அல்ல'** என்ற அச் சிறுகதையோடு பலவேறு இதழ்களில் வெளியான சிறுகதைகளும் சேர்ந்து வெளியான சிறுகதைத் தொகுப்பு தமிழ் வளர்ச்சித் துறையின் முதற் பரிசினைப் பெற்றது. இதழ்களும், வானொலியும், தொலைக்காட்சியும் தந்த வாய்ப்புகளும் கூடுதலாகக் கொஞ்சம் வருவாயையும் ஈடுபாட்டையும் பயிற்சியையும் தந்தன எனலாம். எவரிடத்தும் இதமாகவும் இனிமையாகவும் பழகும் ஏர்வாடியாரின் பண்பு நலன் அவரது நட்பு வட்டத்தைப் பரந்து விரியச் செய்தது.

எழுத்தாளர் ஆதல்

வங்கிப் பணியில் சேருவதற்கு முன்பே இராதாகிருஷ்ணனை எழுத்துத் துறை ஆட்கொண்டது; என்றாலும், எழுத்துப் பணியில் அவரால் முனைப்புடன் ஈடுபட இயலவில்லை. வங்கிப் பணியில் நுழைவதற்கு முன்னும் வங்கிப் பணியில் சேர்ந்த பிறகும் இராதாகிருஷ்ணனுக்குச் சிற்றிதழ்களே ஆதரவுக் கரம் நீட்டின; வானொலியும் பெரிய ஆதரவினை அளித்தது. 'ஏர்வாடி' என்ற ஊரின் பெயரும் அவரது இயற்பெயரோடு இணைந்து **'ஏர்வாடி எஸ்.இராதா கிருஷ்ணன்'** என எழுத்துலகில் அறியப் பெற்றார். எழுத்துத் துறையைப் பொறுத்தவரையில், 'அமுதசுரபி' இதழின் ஆசிரியர் விக்கிரமன், இராதாகிருஷ்ணனுக்கு ஞானத் தந்தை போன்றவர்; "தனிப்பட்ட முறையில் கலைமாமணி **விக்கிரமன்** அவர்களுக்குத் தான் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன். என்னை ஒரு நல்ல எழுத்தாளனாக உருவாக்கியதும் தமிழ் கூறும் நல்லுலகத்திற்குக் காட்டியதும் அவர்தான். கலைமாமணி விக்கிரமன் அவர்கள் என் மூத்த சகோதரர் போன்றவர். என்னுடைய ஒவ்வொரு நூல் வெளியீட்டு விழாவிலும் கலந்து கொண்டுள்ளார்" (அரும்பு, ஜூன் 2016, ப.36) எனக் கலைமாமணி விக்கிரமனுக்குப் புகழாரம் சூட்டியுள்ளார் இராதாகிருஷ்ணன். 'அமுதசுரபி' இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில்

பரிசு பெற்ற உற்சாகத்தில் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் நிறைய எழுதத் தொடங்கினார்.

“வங்கி அதிகாரிகள் சிலர் என்னை உற்சாகம் இழக்கச் செய்தாலும் பணிகளைச் சரியாகச் செய்ததாலும், எல்லாரிடமும் இணக்கமாக இருந்ததாலும் இலக்கியம், வங்கி இவ்விரண்டையும் இரட்டைக் குதிரைச் சவாரியாக அல்லாமல், **இரு தண்டவாளப் பயணமாக்கி** வெற்றி கரமாக முன்னேறினேன்... 5-ஆவது உலகக் கவிஞர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள வங்கியே என்னை 01.07.1981-இல் அமெரிக்காவுக்கு (சான்பிரான்சிஸ்கோ) அனுப்பியது... வங்கி சிறந்த நூல்களுக்குப் பரிசுகள் அளித்ததில் பெரும்பங்கு பெற்றேன். 15 ஆயிரம் கலைச் சொற்கள் அடங்கிய வங்கிக் கலைச்சொல் அகராதித் தொகுப்பினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் **எம்.ஜி.ஆர்.** வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. 31.05.2007-இல் வங்கிப் பணியில் இருந்து பதவி ஓய்வு பெற்றேன்” (அரும்பு, ஜுன் 2016, ப.36) என வங்கியில் பணியாற்றிய ஏறத்தாழ 39 ஆண்டுக் காலம் பற்றிய தம் பசுமையான நினைவலைகளைப் பதிவு செய்துள்ளார் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்.

‘கவிதை உறவு’ இலக்கிய அமைப்பும் இதழும் தொடங்கல்

“கவிதை தமிழர்களாகிய நமக்குப் பொழுதுபோக்கு அல்ல, வாழ்க்கை! வாழ்க்கைக்கு ஓர் அர்த்தத்தையும் சுவையையும் அளிப்பது கவிதை. கவிதை எழுதுகிற தன்மையும், அதை ரசிக்கிற தன்மையும்தான் மனிதர்களை மனிதர்களாக, அவர்களை மனித நேயம் மிக்கவர்களாக வைத்திருக்க உதவுகிறது. மற்ற கலை, இலக்கிய வடிவங்களைப் போல் அல்லாது கவிதை ஒன்றுதான் உணர்த்துகிறது, உணர்வுகளைக் கிளர்த்துகிறது. ஊனை உருக்குவது கவிதை. கவிதையைத் தொலைத்து விடுகிற ஒரு சமூகத்தில் அமைதியும் தொலைந்து போய்விடும்” (ஆத்திமாலை: நவம்பர் 22-28, 2018, ப.4) என்பது ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணின் அழுத்தமான கருத்து; ஆழ்ந்த நம்பிக்கை. தமிழ்கூறு நல்லுலகில் கவிதை எழுதத் தொடங்குகின்றவர்களுக்கு எல்லாம் **‘கவிதை உறவு’**

என்ற ஓர் இலக்கிய அமைப்பினையும், மனித நேய இலக்கியத் திங்கள் இதழையும் 18.05.1972-இல் தொடங்கி, 1986-ஆம் ஆண்டு வரை தனிச்சுற்றேடு ஆகவும், பிறகு 1987-இல் இருந்து நடுவண் அரசு பதிவு இதழாகவும் (RNI) நாற்பத்து ஆறு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தி, அவர்கள் இயங்குவதற்குக் களமும் தளமும் அமைத்துக் கொடுத்த பெருமைக்கு உரியவர் ஏர்வாடியார்.

"பக்கம் பக்கமாய் வளர்வதல்ல கவிதை - இதயத்தின் பக்கம் வருவதே கவிதை" (கவிதை மின்னல்கள், ப.81) என்பது ஏர்வாடியாரின் கவிதைக் கொள்கை. அவரது நோக்கில், கவிதை எழுதுவது என்பது வேறு; கவிதையாகவே வாழ்வது என்பது வேறு. ஏர்வாடி இராதாகிருஷ்ணன் இயல்பாகவே மனித நேயமும் எல்லோர்க்கும் உதவும் மக்கட் பண்பும் கவிதை உள்ளமும் கொண்டவர். அவரது வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்வு அதற்குச் சான்றாகத் திகழ்கின்றது. உள்ளத்தைத்தொடும் அந் நிகழ்வு வருமாறு:

வங்கி வழங்கிய கடன் மூலம் அச்சு இயந்திரம் வாங்கிய **மணி** என்பவர் கடனாளியாகி, வாங்கிய கடனைத் திரும்பச் செலுத்த முடியாமல் தவிக்கின்றார். அவரது கடனை வசூல் செய்வது தான் வங்கியின் கடமையே தவிர, அவர் ஏன் கடனைச் செலுத்தாமல் தவிக்கின்றார் என்பதை எல்லாம் வங்கி ஆராய்ச்சி செய்யாது. ஆனால், ஏர்வாடியார் கடன் வாங்கியவர் ஏன் கடனைத் திரும்பச் செலுத்த முடியாமல் தவிக்கின்றார் என்பதை விசாரிக் கின்றார். அவர் வங்கி வழங்கிய கடன் தொகை மூலம் ஓர் அச்சு இயந்திரத்தை வாங்கி இருக்கின்றார்; ஆனால், அச்சு எழுத்துக்களை வாங்க வழிவகையின்றி நிற்கின்றார். இதனை அவரிடம் விசாரித்து அறிந்த ஏர்வாடியார், அவருக்கு அச்சு எழுத்துக்களை வாங்கத் தமது நண்பர்களோடு சேர்ந்து நிதி திரட்டிப் பண உதவி செய்கின்றார். அந்த அச்சக உரிமையாளர் கடனில் இருந்து மீண்டு இயந்திரம் வாங்கிய கடனை அடைக்கின்ற அதிசயம் நிகழ்கின்றது அவரது அச்சகத்திலேயே ஏர்வாடியாரும் அவரது நண்பர்களும் சேர்ந்து எழுதிய **'வண்ணங்கள்'** என்ற கவிதைத் தொகுப்பு நூல் ஒன்று அச்சிடப் பெறுகின்றது

புத்தகம் அச்சிட்டதற்கான செலவினை அந்த அச்சக உரிமையாளர் வாங்க மறுக்கின்றார்; 'நன்றிக் கடனை என்னால் அடைக்க முடியாது சார்' என்று கண்கள் குளமாகக் கூறி நிற்கின்றார். ஏர்வாடியாரும் மனம் கரைந்து உருகப் பேச வார்த்தைகள் இன்றித் தவிக்கின்றார். இந்த நிதர்சனமும் கரிசனமும் தான் அவரைக் கவிஞராகவும் எழுத்தாளராகவும் நாடக ஆசிரியராகவும் ஆக்கியது எனலாம்.

ஏர்வாடியாருக்கு வானொலி வசப்படல்

இராதாகிருஷ்ணன் வானொலியின் நாடக ஆசிரியராக அறிமுகம் ஆவதற்குக் காரணமாக அமைந்தவர் **திரு.டி.வி.ஆர்.சாரி** என்ற அதிகாரி ஆவார்; **'ஏர்வாடி இராதாகிருஷ்ணன்'** என்ற பெயரை இராதா கிருஷ்ணனுக்குச் சூட்டியவரும் அவரே. தொடர்ந்து, வானொலி நாடகக் கலையின் நுணுக்கங்களைக் கற்றுத் தந்து, வாய்ப்புக்கள் நல்கி, இராதாகிருஷ்ணனை ஒரு சிறந்த வானொலி நாடக ஆசிரியராக உருவாக்கியவர் **திரு.டி.என்.சுகி சுப்பிரமணியம்** ஆவார். வானொலியில் நாடகங்கள் படைத்ததோடு மட்டுமன்றி, மெல்லிசை, உரைச் சித்திரம், நேர்காணல், கவிதை வாசிப்பு, சிறுகதை படித்தல் என்றாற் போல் வானொலியின் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு, தமது படைப்புத் திறத்தினைப் பட்டை தீட்டிக் கொண்டார் இராதா கிருஷ்ணன். வானொலியால் அவரை வளர்த்த பெருமக்களில் **ஹகீம், துறைவன், ஏ.நடராசன்** ஆகியோரும் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர். **'வானொலி ஏர்வாடியாருக்கு வசப்பட்டதைப் போல வேறு எவர்க்கும் வசப்பட்ட தில்லை'** என்று ஒரு முறை ஞானபாரதி **வலம்புரி ஜான்**, ஏர்வாடியாருக்குச் சூட்டிய புகழாரமும் இங்கே நினைவுகூரத் தக்கதாகும்.

ஏர்வாடியாரின் முதல் வானொலி நாடகம் **'வாய்மையே வெல்லும்'** என்பது. அதற்கு முன்னால் **'அழகெல்லாம் முருகனே'** என்ற சிறப்புத் தேன் கிண்ணம் நிகழ்ச்சி. இரண்டிற்குமே 'ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்' என்றே

வானொலி நிலையத்தார் அறிமுகம் செய்து வைத்தனர். நாடகமோ, உரைச் சித்திரமோ, சிறுகதை வாசித்தலோ, தொகுப்பு நிகழ்ச்சியோ எதுவானாலும் வானொலியில் அடிக்கடி அறிவிப்புகள் செய்வார்கள். ஏர்வாடியார் பெயரை அடிக்கடி உச்சரித்து உச்சரித்தே சென்னை, திருச்சி வானொலி நிலையங்கள் அவரைப் புகழேணியின் உச்சிக்குக் கொண்டு சென்றன.

சென்னைத் தொலைக்காட்சி தொடங்கிய நாட்களில் மிகச் சிறந்த கலைஞர்களின் பட்டியல் ஒன்றினைச் சென்னை வானொலி தந்தது. அதில் குறிப்பிடப்பட்டிருந்த பத்து நாடக ஆசிரியர்களுள் ஏர்வாடியாரின் பெயரும் ஒன்றாக இடம்பெற்றிருந்தது. அவர்களுள் ஆறு பேருக்கு நாடகப் பட்டறை நடத்தித் தொடர்ந்து வாய்ப்பும் அளித்தது சென்னைத் தொலைக்காட்சி. அங்கே திருமிகு **சேனாபதி, கோபாலி, யு.எம்.கண்ணன், முத்துசாமி** போன்ற அதிகாரிகள் ஏர்வாடியாரின் நாடகப் புனைதிறனைப் பயன்படுத்திக் கொண்டதோடு, அதனை நன்கு மெருகூட்டிக் கூர்மைப்படுத்தவும் செய்தனர். தொலைக்காட்சியிலும் நாடகங்கள் படைப்பதோடு நின்று விடாமல், மெல்லிசை, நேர்காணல், சிறுகதை, கவிதை வாசிப்பு முதலான பிற நிகழ்ச்சிகளிலும் தமது தனித்திறன் வெளிப்படும் வகையில் முனைப்புடன் இயங்கி முத்திரை பதித்தார் ஏர்வாடியார்.

முதல் நூல் கற்றுத் தந்த வாழ்க்கைப் பாடம்

ஏர்வாடியாரின் முதல் நூல் **'உனக்காக ஒரு பாடல்'** என்பது. வானொலியில் அவ்வப்போது ஒலிபரப்பான மெல்லிசைப் பாடல்களின் தொகுப்பு அது. அந் நூலுக்குத் தமிழறிஞர் **அ.கி.பரந்தாமனாரிடம்** (இருவரும் சென்னை புரசைவாக்கத்தில் ஒரே தெருக்காரரர்கள்; பேட்டை வாசிகள்) அணிந்துரை பெற்று வந்து, வாசித்துப் பார்த்த போது அதிர்ந்து உறைந்து போனார் ஏர்வாடியார். காரணம், **'கவிதைக்கு நல்ல கற்பனை வளமும் கருத்துச் செறிவும் இருந்தால் மட்டும் போதாது. பிழையில்லாத தமிழும் பிறமொழி கலவாத நிலையும் வேண்டும்'** என்றெல்லாம் எழுதியதோடு அல்லாமல், ஒரு தேர்வுத்

தாளைத் திருத்துவது போலத் திருத்தியும் தந்துவிட்டார் அ.கி.பரந்தாமனார். ஏர்வாடியாரோ சற்றும் மனம் தளராமல்- உடைந்து போகாமல் - மீண்டும் அவரைச் சந்தித்து, 'அய்யா, இந்தத் திருத்தங்களோடு புதிதாக ஒன்றை நான் அச்சிட்டுக் கொண்டு வந்தால் அணிந்துரையை மாற்றித் தருவீர்களா?' என்று தயங்கியவாறே கேட்க, 'சரி' என்று அவரும் தலையாட்ட, அப்படியே செய்தார்; அடித்த ஆயிரம் படிகளையும் எடைக்குப் போட்டுவிட்டு பிழையே இல்லாத புது நூலாய், பாராட்டுகள் செறிந்த பாட்டுத் தொகுதியாய் மீண்டும் அந்நூலை வெளிக்கொணர்ந்தார். இந் நிகழ்வு அ.கி.ப., ஏர்வாடியார் என்னும் இருவரது ஆளுமைப் பண்புகளையும் ஒருசேரப் புலப்படுத்தி நிற்பது குறிப்பிடத்தக்கது. **'வாழ்க்கையில் தவறுகள் தவிர்க்க இயலாதவையாக இருக்கலாம்; ஆனால், அவற்றைத் திருத்திக் கொள்ள நாம் தயங்கவே கூடாது'** (என் பக்கம்: ஏழாவது தொகுதி, பக்.100-101) என்னும் வாழ்க்கைப் பாடத்தை ஏர்வாடியாருக்குக் கற்றுத் தந்தது அவரது முதல் நூல்.

ஏர்வாடியாரின் முதல் நூலைக் கவியரசர் **கண்ணதாசன்** 1976-ஆம் ஆண்டு ஜுன் திங்களில் எளிமையாக நடந்த விழா ஒன்றில் வெளியிட்டுப் பெருமை சேர்த்தார்; **'எளிமையான, இனிமையான இசைக்கு லாவகமான மொழி'** என்று ஏர்வாடியாரின் மொழி ஆளுமையைப் பாராட்டியதோடு நின்றுவிடாமல், ஏர்வாடியார் திரையுலகிற்கு வர வேண்டும் என்றும், தாமே அதற்கான வாய்ப்பை உருவாக்குவதாகவும் கூறி, இயக்குநர் **மோகன் காந்திராமன்** தயாரிப்பில் அப்போது உருவாகிக் கொண்டிருந்த 'ஆனந்த பைரவி' திரைப்படத்தில் தம்மோடு ஒரு பாடலாசிரியராக ஏர்வாடியாரை அறிமுகமும் செய்து வைத்தார். தொடர்ந்து, இயக்குநர் **கே.எஸ்.கோபால கிருஷ்ணனின்** உதவியால் மொழிமாற்றம் செய்யப்பட்ட மலையாளப் படங்கள் சிலவற்றிற்குப் பாடல்கள் எழுதும் வாய்ப்புகள் கிடைத்த போதிலும், குடும்பத்தினர் மற்றும் நெருங்கிய நண்பர்களின் அறிவுறுத்தலினால், ஒரு

திரைப்பாடலாசிரியராகத் தொடரும் நிலை ஏர்வாடியாருக்கு வாய்க்காமல் போனது.

ஒருநாளும் தளர்வறியாதது ஏர்வாடியாரின் மனம்

ஏர்வாடியார் எழுதிய 'திருமணங்கள் வெறும் நிகழ்ச்சிகள் அல்ல' என்ற சிறுகதையைப் புகழ் பெற்ற இதழ் ஒன்று 'பிரசுரிக்க இயலவில்லை' என்ற குறிப்புடன் திருப்பி அனுப்பியது. ஆனால், வேறு ஓர் இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் அக்கதை பரிசு பெற்றது. அது மட்டும் அன்று, மேலும் சில சிறுகதைகளோடு சேர்ந்து அதுவே ஒரு தொகுப்பாக வெளிவந்த போது தமிழ் வளர்ச்சித் துறையின் முதற்பரிசையும் அவருக்குப் பெற்றுத் தந்தது. அதில் ஒரு சிறுகதையை இந்தியத் திரைப்படப் பிரிவு திரைப்படமாகத் தயாரித்து வெளியிட்டது; அந்தக் கதை பத்தாவது வகுப்பு பயிலும் மாணவர்களுக்குப் பாடத் திட்டத்தில் சேர்க்கப் பெற்றது. **"பேர் வருமா, புகழ் வருமா, பணம் வருமா என்றெல்லாம் எதிர்பாராமல் எழுதிக் கொண்டிருக்கிறேன். எழுத வருகிறது. நான் தளர்வதில்லை என்பதே என் பலம்"** (வாழ்க்கை வாழத்தான்: இரண்டாம் பாகம், ப.31) என்னும் ஏர்வாடியாரின் ஒப்புதல் வாக்குமூலம் இங்கே மனங்கொளத் தக்கது ஆகும்.

வரமாக அமைந்த இல்லற வாழ்க்கை

ஏர்வாடியாரின் திருமண நாளான 10.09.1972-இல் நலங்கு என்கிற சடங்கின் போது நடந்த ஒரு நெகிழ்வான நிகழ்வு வருமாறு: "நீர் நிரம்பிய செம்பில் ஒரு மோதிரத்தைப் போட்டு எடுக்கச் சொல்கிறார்கள். இருவரும் உள்ளே கை நுழைக்கிறோம். மோதிரம் அவள் கையில் கிடைக்கிறது. யாருக்கும் தெரியாமல் அந்தச் செம்புக்குள்ளேயே அந்த மோதிரத்தை எனக்குக் கொடுத்து விடுகிறாள், அப்போது எனக்குத் தெரியவில்லை. தனியே இருக்கும் போது சொல்கிறாள் **'நீங்க தோற்கக் கூடாது, அதுக்காகத் தான்'** என்று" (எழுத்துச் சிறகுகள், பக்.87-88). ஏர்வாடியார் அமைதியான இல்லற வாழ்க்கையை வரமாகப் பெற்றவர். அலுவலகப் பணி, இலக்கிய ஆக்கம், இதழ்கள் மற்றும் நூல்கள் வெளியீடு, உலக நிகழ்ச்சிகள் பங்கேற்பு என

வெளியிலேயே மிகுதியாக வலம் வந்துகொண்டிருக்கும் அவரது வீட்டுப் பொறுப்புக்கள் எல்லாவற்றையும் சிறப்பாக நிறைவேற்றி, அவரது காரியம் யாவினும் கைகொடுத்து வருபவர் திருமதி சிதம்பரம்மாள் தான்!

மென்மையான நகைச்சுவை உணர்வும் கூர்மையான அறிவுத் திறனும் படைத்தவர் சிதம்பரம்மாள் அம்மையார் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு: பெரும்பாலும் ஏர்வாடியாரின் வானொலி, தொலைக்காட்சி நாடகங்களில் ஏதேனும் ஒரு பாத்திரத்திற்கு **'சங்கர்'** என்ற பெயர் நிச்சயமாக இருக்கும். காரணம் அந்தப் பெயரைக் கேட்கிற போதெல்லாம் 'தன்னுடைய பெயர் வருகிறதே!' என்று அவர்களது மூத்த மகன் சங்கர் சந்தோஷப்படுவான் என்பது தான். இதை ஒரு நாள் தம் வீட்டிற்கு வந்திருந்த நண்பர் ஒருவரிடம் ஏர்வாடியார் பெருமையாகச் சொல்லிக் கொண்டிருந்தாராம். அவர் போனதும் ஏர்வாடியாரின் துணைவியார் அவரிடம் இப்படிக் கேட்டாராம்: "சங்கர் சந்தோஷப்படுவது இருக்கட்டும். உங்கள் நாடகங்களில் **'கோமதி'** என்கிற பாத்திரமும் தவறாமல் வருகிறதே? இது எந்தக் கோமதியை சந்தோஷப்படுத்துவதற்கு? யார் இந்தக் கோமதி?" 'இதை அவள் விளையாட்டாகக் கேட்டாளோ அல்லது விஷமமாகவோ? இருந்தாலும் அதில் இழையோடிய நகைச்சுவையை நான் இன்னும் ரசிக்கிறேன்!" (என் பக்கம்: முழுமையான தொகுதி-I, ப.85) எனத் தம் உணர்வினை நயமாகப் பதிவு செய்துள்ளார் ஏர்வாடியார்.

ஏர்வாடியாருக்குத் தமது தாய்-தந்தையர் மீது போலவே மாமனார்- மாமியார் மீதும் அளப்பரிய மதிப்பும் மரியாதையும் உண்டு. நால்வருமே இப்போது உயிரோடு இல்லை. எனினும் தாய்-தந்தையரான **சுப்பையா-தங்கம்மாள்** பெயரில் சிறந்த மூன்று வாழ்வியல் நூல்களுக்கும், மாமனார்- மாமியாரான **பத்மநாபன்-பார்வதி** பெயரில் சிறந்த மூன்று சிறுகதைகளுக்குப் பரிசுத் தொகையும் ஆண்டுதோறும் **'கவிதை உறவு'** சார்பில் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. இராதாகிருஷ்ணன்-சிதம்பரம்மாள் இணையர் இரண்டு ஆண் மக்கள், ஒரு பெண் குழந்தை

என மூன்று மக்கட் செல்வங்களைப் பெற்றவர்கள். மூத்த மகன் திரு.**ஆர்.கௌரிசங்கர்** எம்.சி.ஏ. படித்தவர்; கனடா நாட்டின் குடியுரிமை பெற்றவர்; அங்கே கணினிப் பொறியாளராகப் பணியாற்றி வருகிறார். அவரது துணைவியார் திருமதி **சுமதி கௌரிசங்கர்** பி.இ., எம்.எஸ். படித்தவர்; அவரும் கனடாவில் பொறியாளராகப் பணியாற்றுகிறார். இரண்டாவது மகனான டாக்டர் **ஆர்.அருண்குமார்** எம்.எஸ்ஸி., எம்ஃபில்., பிஎச்.டி., கருத்தரிப்புக்கான சிறப்பு மருத்துவத் துறையில் பணியாற்றி வருகிறார். மேலும் அவர் புகழ் வாய்ந்த ஒரு மருத்துவ நிறுவனத்தின் இயக்குநரும் கூட. தந்தையின் வழியில் கவிதைகள் எழுதி வரும் அவர் நூல்களும் வெளியிட்டுள்ளார். அவரது துணைவியார் திருமதி டாக்டர் **குணசுந்தரி** எம்.பி.பி.எஸ்., எம்.டி., பயின்றவர்; அரசு மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்; மருத்துவப் பணியையும் ஆற்றி வருகிறார். மகள் திருமதி **சுதா இராமகிருஷ்ணன்** பி.இ. படித்தவர்; சொந்தமாக மென்பொருள் நிறுவனம் ஒன்றை நடத்திக் கொண்டு, கல்வி தொடர்பான பணிகளில் ஈடுபட்டு வருகிறார். அவரது கணவர் திரு.**வி.இராம கிருஷ்ணன்** பி.இ., எம்.எஸ்., காக்னிஸண்ட் நிறுவனத்தில் மூத்த மென்பொருள் பொறியாளராகப் பணியாற்றுகிறார். இரண்டு பேரன்கள் **கவின், நிதில்**. இவர்களில் நிதில் வளர்ந்து வரும் கார்ட்டூன் ஓவியர். பேத்திகள் இருவர். இவர்களில் செல்வி **கீர்த்தி** நல்ல ஆங்கிலக் கவிஞர். **கிருபா** வளர்ந்து கொண்டிருக்கிறாள்.

ஏர்வாடிக்குப் பெருமை சேர்த்த இராதாகிருஷ்ணன்

இஸ்லாமியர்களே அதிகமாய் வாழ்கிற இவ்வூரில் சிறுபான்மையினராகப் பல்வேறு இன மக்கள் வாழ்ந்தாலும் கூட, பெரும்பான்மை, சிறுபான்மை என்ற பாகுபாடு இன்றி வாழ்கிற பெருமக்களைக் கொண்டு இயங்குகிற ஊர் இது. மூன்றே மூன்று பிராமண குடும்பங்களைக் கொண்ட இவ்வூரின் கிராம முன்சீப் ஓர் ஐயர் என்பதே இவ்வூரின் மத, மனித நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டு. ஆண்டுகள் பலவாக ஆரம்பப் பள்ளிகளில் இந்து-இஸ்லாம்

வேறுபாடு இன்றி கலிமா சொல்வது தான் எல்லோருக்குமான காலை வணக்கப் பாடல்.

'ஏர்வாடி' என்றதும் பளிச்சென்று நினைவுக்கு வருகிற இடமும் நிகழ்வுகளும் மன நலம் குன்றியோர்க்கான முகாமும், சில ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த தீ விபத்தும் மரணங்களும்தான். 'ஏர்வாடி' என்ற பெயர் ஏளனமாகத் திரைப்பட வசனங்களில் கூட சித்திரிக்கப்படுவது உண்டு. இந்த ஏர்வாடி இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிற பிரபலமான தர்ஹா அமைந்துள்ள ஊர். தமிழ்நாட்டில் 'ஏர்வாடி' என்ற பெயரில் 4 கிராமங்கள் உள்ளன. இராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களைப் போலவே தஞ்சை மாவட்டத்திலும், சேலம் மாவட்டத்திலும் 'ஏர்வாடி' என்ற பெயரில் ஊர்கள் உள்ளன.

ஏர்வாடி என்றதும் இன்று எல்லோருக்கும் அது ஒரு ஊர் என்று நினைவுக்கு வருவதற்கு அப்பால், அது இலக்கியத்தில் இடம்பெற்றிருக்கிற ஒரு பெயர் என்பதாகவே பெருமையோடு பதிவு செய்யப்பட்டுவிட்டது. இயக்குநர் **விசு** அவர்கள் ஒரு முறை ஏர்வாடியாரிடம் "'ஏர்வாடி' என ஊர்ப் பெயரை இயற்பெயரோடு சூடிக் கொண்ட உங்கள் துணிவைப் பாராட்ட வேண்டும். கீழ்ப்பாக்கம் குணசீலம் ஏர்வாடி என்பன எல்லாம் மன நோயாளிகள் தொடர்பான ஊர்கள் என்பதாகக் கிண்டலாகப் பேசப்படும்போது துணிச்சலாக அதைப் பெயருக்கு முன்னால் சூடிக் கொண்டதற்காக உங்களைப் பாராட்ட வேண்டும். **ஏர்வாடியை ஓர் இலக்கியப் பெயராக, எழுத்தின் பெருமையாக மாற்றி விட்டீர்கள்!"** என்று தம் பாராட்டைத் தெரிவித்தாராம்.

'ஏர்வாடி' என்றதும் நினைவுக்கு வருகிற பிறிதொரு சுவையான நிகழ்ச்சி: ஒருமுறை புதுவைத் தொலைக்காட்சி நிலையம் கவிக்கோ **அப்துல் ரகுமான்** தலைமையில் ஏற்பாடு செய்திருந்த ஒரு கவியரங்கில் ஏர்வாடியார் கலந்து கொண்டார். அந்தத் தருணத்தில் தான் இராமநாதபுரம் ஏர்வாடியில் மன நல மையத்தில் தீ விபத்து ஏற்பட்டு பல மன நோயாளிகள் எரிந்து, இறந்து போயிருக்கின்றனர்.

பரபரப்பாகச் செய்திகள் பத்திரிகைகளில் பரவிக் கொண்டிருந்த நேரம். கவிக்கோ அவர்கள் ஏர்வாடியாரைக் கவிதை வழங்க மேடைக்கு அழைக்கிறார்.

"அடுத்து கவிஞர் இராதாகிருஷ்ணன்
ஏர்வாடியில் இருந்து வருகிறார்
யாரும் பயப்பட வேண்டாம்."

இந்த அறிமுகத்திற்குப் பலத்த கரவொலிகள் எழுந்தனவாம். கூடவே கேலியாக ஒரு சிரிப்பொலியும் அரங்கில் பரவியதாம். ஒலி பெருக்கிக்கு முன்னால் ஏர்வாடியார் வந்து நிற்க, கரவொலியும் சிரிப்பொலியும் இன்னும் அதிகமாயினவாம். சற்று அமைதி திரும்பியதும் ஏர்வாடியார் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல்,

"ஏர்வாடியில் இருந்து
வருகிறவர்களைப் பார்த்து
பயப்படத் தேவையில்லை;
போகிறவர்களோடு பழகும் போது தான்
கொஞ்சம் பத்திரமாக இருக்க வேண்டும்"

என்றதும் இன்னும் அதிகமான கரவொலியும் வரவேற்பும் அரங்கை அதிரச் செய்தனவாம் (மனத்தில் பதிந்தவர்கள்: 4-ஆவது தொகுதி, பக்.17-18).

நெல்லை ஏர்வாடி எத்தனையோ கலைஞர்களையும் கவிஞர்களையும் தமிழுக்குத் தந்திருக்கிறது கலைஞர் ***என்.பி.எம்.அப்துல் காதர், கள்ளத்தோணி அப்பாஸ், சமீரா மீரான், அண்ணாவி உதுமான், சாதுல்லா, சலாகுதீன்*** *என்று வரிசைப்படுத்தலாம். ஆனால் ஊரை முதன்மைப் படுத்திக் கொண்டதில் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணனுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு.*

பெற்ற விருதுகளும் பரிசுகளும்

ஏர்வாடியாரின் வாழ்நாள் பணிகளுக்காக நாற்பதுக்கும் மேற்பட்ட விருதுகளும் சீரிய பட்டங்களும் அவரைத் தேடி வந்து பெருமைப்படுத்தியுள்ளன. இயல் இசை நாடக மன்றத்தின் ***'கலைமாமணி விருது'****, தமிழ்நாடு அரசின்* ***'பாவேந்தர் பாரதிதாசன் விருது'****, கனடா*

'உதயன்' இதழ் வழங்கியுள்ள ***'வாழ்நாள் சாதனையாளர் விருது'***, வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு (FETNA) நல்கியுள்ள ***'சாதனையாளர் விருது'***, வாஷிங்டன் தமிழ்ச் சங்கத்தின் ***'சாதனையாளர் விருது'***, சென்னை கம்பன் கழகத்தின் ***'கா.சு.கோதண்டராமன் விருது'***, நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனின் ***'சிறந்த எழுத்தாளர் விருது'***, தாய்மண் இலக்கியக் கழகத்தின் ***'ஞாலக் கவிஞர் விருது'***, வி.ஜி.பி. நிறுவனங்களின் ***'வி.ஜி.பி. சந்தனம்மாள் அறக்கட்டளை விருது'***, தமிழ்நாடு நல்வழி நிலையத்தின் ***'பொதிகைத் தமிழ்ப் பாவலர் விருது'***, முத்தமிழ் ஆய்வு மன்றத்தின் ***'நாடகப் பேரொளி விருது'***. ஸ்ரீராம் நிறுவனங்களின் ***'பாரதி தமிழ்ப் பணிச் செல்வர் விருது'***, குன்றத்தூர் பாரதி தமிழ்ச் சங்கத்தின் ***'கவிதைக் காவலர் விருது'***, ஞானபீடம் இலக்கியப் பேரவையின் ***'இலக்கியத் தென்றல் விருது'***, சென்டினேரியன் டிரஸ்ட் வழங்கியுள்ள ***'சேவா ரத்னா விருது'***, பாரதியார் சங்கத்தின் ***'பாரதிச் செம்மல் விருது'***, செங்காடு திருக்கோயிலின் ***'எழுத்துச் செம்மல் விருது'*** ஆகியன அவற்றுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாகும். மேலும், மேனாள் முதல்வர்கள் **எம்.ஜி.இராமச்சந்திரன், ஜெ.ஜெயலலிதா** இருவரது திருக்கரங்களாலும் முறையே **சிறந்த நூல்களுக்கான விருது** *(1983)*, **கலைமாமணி விருது** *(11.03.1993)* வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றவர் ஏர்வாடியார் என்பதும், தமிழ்நாடு அரசு வழங்கும் சிறந்த நூலாசிரியருக்கான பரிசுகளை இருமுறை - ***'திருமணங்கள் வெறும் நிகழ்ச்சிகள் அல்ல'*** என்னும் சிறுகதைத் தொகுப்புக்கும், ***'இன்னும் ஒரு மீரா'*** என்னும் நாடக நூலுக்கும் ஆகப் பெற்றவர் ஏர்வாடியார் என்பதும் கூடுதல் சிறப்புகள் ஆகும்.

ஏர்வாடியாரின் படைப்புலகும் ஆளுமையும்

1. மகாகவி பாரதியாரின் பாட்டு வரிகளில்,

> **"வல்லமை தாராயோ**
> **இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே"**

என்ற வரிகள் ஏர்வாடியாருக்கு மிகவும் பிடித்தவை. **"'யாரிடமும் பயன்பெறக் கருதாமல், யாருக்கும்**

பயனுற வேண்டும் என்கிற விழைவு மிகுந்தவன்' என்பதால் இவ் வரிகள் எனக்கு மிகவும் பிடித்த வரிகளாய் இருப்பதில் வியப்பில்லை" *(நல்லது நடந்தால் நல்லது, ப.219)* என்பது தனிப்பட்ட முறையில் அதற்கு அவர் கூறும் காரணம் ஆகும்.

2. **'கவிதை என் ஆன்மாவிற்கு நான் பரிமாறுகிற உணவு. நாளும் என் கண்களில் வளர்கிற கனவு'** ('என்னுரை', வெளிச்சம் வருகிறது..., p.vi) என மொழியும் ஏர்வாடியார், **'நான் எழுதுகிறவற்றுள் எனக்கு இதம் சேர்ப்பது கவிதைதான்'** ('இந்த வானில்...', கவிதை வானில்..., ப.3) என அறுதியிட்டு உரைப்பது கருத்தில் கொள்ளத்தக்கது மரபுக் கவிதை, புதுக்கவிதை, முகநூல் கவிதை என்ற மூவகையான வடிவங்களிலுமாக 19 தொகுதிகளை வெளியிட்டுள்ளார் ஏர்வாடியார்.

3. **'எனக்கு மிகவும் பிடித்த நாள்களில் ஒன்று என் பிறந்த நாள்'** *(என் பக்கம்: ஐந்தாவது தொகுதி, ப.128)* எனக் கூறும் ஏர்வாடியார், ஆண்டுதோறும் தம் பிறந்த நாளின் போது நூல் ஒன்று வெளியிடுவதை இன்று வரை வழக்கமாகவும் வாடிக்கையாகவும் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

4. **'ஆசிரியராக வேண்டும் என்பது தான் என்னுடைய அந்நாளைய கனவு'** எனக் குறிப்பிடும் ஏர்வாடியார், 'இவன் என் மாணவன் என்று எந்தச் சாதனையாளனையும் சொல்லிப் பெருமையுறலாம்' *(என் பக்கம்: ஐந்தாவது தொகுதி, ப.81)* எனக் கூறுவது ஒட்டுமொத்த ஆசிரியர் இனத்திற்கே பெருமிதம் சேர்ப்பதாகும்.

5. **"என் எழுத்தில் நான் ரசிக்கிற எழுத்தே 'என் பக்கம்' தான். இது நம் பக்கம்'..."** *(என் பக்கம்: 12-ஆவது தொகுதி, ப.10)* என ஒப்புதல் வாக்குமூலம் வழங்கும் ஏர்வாடியார், இதுவரை 'என் பக்கம்' வரிசையில் 14 தொகுதிகளை வெளியிட்டிருப்பது போற்றத்தக்கது.

6. **"வங்கி ஜீவனமாகவும் கவிதை ஜீவனாகவும் என் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள உதவியவை"**

(*'மின்னலுக்கு முன்...', கவிதை மின்னல்கள், ப.3*) என்பது ஏர்வாடியாரின் புகழ்பெற்ற கொள்கை முழக்கம்; தாரக மந்திரம்.

7. **"வானம் வசப்படுவது இருக்கட்டும்**
வாழ்க்கை முதலில்
வசப்படட்டும்" (வெளிச்ச மலர்கள், ப.23)

என்பது இன்றைய இளைய தலைமுறையினருக்கு ஏர்வாடியார் விடுக்கும் செய்தி. அவரது கருத்தியலில், **"தோன்றுவதில் இல்லை - வாழ்க்கை, துலங்குவதில் இருக்கிறது"** (*எப்போதும், ப.53*).

8. **'மனித நேயம் - மாண்பு மிகு வாழ்க்கை - மண்ணில் எவர்க்கும் அஞ்சாமை'** என்னும் குறிக்கோள் வாசகத்துடன் *1972*-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் மனித நேய இலக்கியத் திங்கள் இதழ் *'கவிதை உறவு'*. இதில் **ஏழாம் பக்கக் கவிதை, மனதில் பதிந்தவர்கள் தொடர், நூல் மதிப்புரை** *(3 நூல்களுக்கு)*, **என் பக்கம்** (இதழின் கடைசிப் பக்கத்தில்) என்னும் நான்கு கூறுகளையும் ஏர்வாடியாரே தொடர்ந்து எழுதி வருவது ஓர் இமாலயச் சாதனை ஆகும்.

9. **'எழுத்து எனக்குத் தந்திருக்கிற எண்ணற்ற பெருமைகளில் பலரோடு பழகுகிற பேறுதான் மிகப் பெரிது'** (*'நெஞ்சில் ஒரு நாற்காலி', மனத்தில் பதிந்தவர்கள்: எட்டாவது தொகுதி, ப.13*) என மொழியும் ஏர்வாடியார் இவ்வகையில் தம் 'மனத்தில் பதிந்த மாண்புறு மனிதர்கள்' குறித்துக் 'கவிதை உறவு' இதழில் இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து எழுதி வருவதும், அவற்றை ஒன்பது தொகுதிகளாக நூல் வடிவில் வெளியிட்டிருப்பதும் ஏர்வாடியாரின் எழுத்துத் திறத்திற்கான கட்டளைக் கல் ஆகும்.

10. **'தங்கள் எதிர்காலக் கனவு?'** என்று ஒரு நேர்காணலில் கேட்கப்பட்ட வினாவுக்கு ஏர்வாடியார் சொன்ன நறுக்கான விடை இதுதான்:

"கனவு என்று பெரிதாக எதுவும் இல்லை.
பயனுள்ள மனிதனாக வாழ வேண்டும்.
பண்புள்ளவனாகத் திகழ வேண்டும்.
இன்னும் நிறைய எழுத வேண்டும்.
இயல்பாக நடந்து கொள்ள வேண்டும்.
- இப்படி வாழ்ந்தால் சாதனைகளும் தொடரும்"

(அரும்பு, ஜூன் 2016,ப.37)

ஏற்வாடியார் பெற்ற சிறப்புகளில் இமயமாய் ஓங்கி உயர்ந்து நிற்பது

"என்னைப் பொறுத்த வரை **என் வங்கி வாழ்க்கை இதமானது. எனக்கு ஏற்றதாகவும், ஏற்றமாகவும் அமைந்தது.** வங்கியில் வேலைக்குச் சேர்ந்தது முதல் ஓய்வு பெற்று விடை பெறுகிற நாள் வரை எனக்கு அமைந்த உயர் அதிகாரிகள் மிகச் சிறந்தவர்கள். நல்லவர்கள். அப்படி அமைவது அபூர்வமானது. அது ஒரு பேறும் கூட" (சொந்தமாக ஒரு சொர்க்கம், பக்.41-42) எனத் தமது வங்கி வாழ்க்கை குறித்து உளமார்ந்த நெகிழ்வுடன் மொழிகிறார் ஏர்வாடியார்.

வங்கிப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு வேறு சில நிறுவனங்களில் இருந்து அவருக்கு அழைப்புகள் வந்தன. எனினும், அவற்றை ஏற்றுக் கொள்ளாமல், போதும் என்ற மன நிறைவோடும் மகிழ்வோடும் முழுநேர இலக்கியவாதியாக இருப்பதிலும் இயங்குவதிலுமே இன்பமும் இதமும் கண்டு வருகிறார் ஏர்வாடியார். எழுதுவது, பேசுவது, பயணங்கள் மேற்கொள்வது, பயன்படுவது, படைப்பது, படிப்பது என்று நிறைவாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற அவரது அனுபவங்களும் ஆளுமைப் பண்புகளும் ஒரு நல்ல, முழுமையான வாழ்வின் தனித்த அடையாளங்களாகத் துலங்குகின்றன எனலாம். முத்தாய்ப்பாக, **'உங்களின் இந்த 72 ஆண்டுக் கால வாழ்வில் பெற்ற எத்தனையோ சிறப்புகளில் இமயமாய் ஓங்கி உயர்ந்து நிற்பது எது?'** என்ற வினாவுக்கு ஏர்வாடியார் தரும் ஏற்றமிகு விடை இதுதான்:

"வங்கியில் அலுவலும்
வளமார்ந்த தமிழ்த் திறனும்
எண்ணிலா நண்பர்களும்
இயன்றவரை நூல்பலவும்
எத்தனையோ நாடுகளில்
இறங்கியெழும் அனுபவமும்
விருதுகளும் பரிசுகளும்
வந்தமைந்த பெருமைகளும்
நன்மக்கட் பேறுடனும்
நாடறிந்த பெயரும் சேர்ந்த
எத்தனையோ சிறப்புகளில்
இமயமாய் எதுவென்றால்
நல்லவன் என்பதொன்றே
நான் அறிந்த பெருமையாகும்!"

(ஏர்வாடியார் கவிதைகள், ப.28)

'சுருங்கச் சொல்லல்' என்னும் உத்தியின் வழிநின்று, சுண்டக் காய்ச்சிய மொழியில், ஒரு வாய்பாடு வடிவில் ஏர்வாடியாரைக் குறித்து நாம் இப்படிச் சொல்லி நிறைவு செய்யலாம்.

மனித நேயம் + மாண்புமிகு வாழ்க்கை +
மண்ணில் எவர்க்கும் அஞ்சாமை = ஏர்வாடியம்.

2

கொஞ்சி நிற்கும் மரபும் பளிச்சிடும் புதுமையும்

"இவர் (ஏர்வாடியார்) மரபுக் கவிதை, புதுக்கவிதை எனும் இரு முறைகளிலும் உள்ளம் கொள்ளை கொள்ள எழுதுகின்ற பேராற்றல் பெற்றவர். இந்நூலிலுள்ள கவிதைகளில் மரபு கொஞ்சுகிறது; புதுமை பளிச்சிடுகிறது."

*- சிலம்பொலி சு.செல்லப்பன்**

"பாரத வங்கியில்
பணிபுரியும் - ஒரு
பாட்டு வங்கி; இவர்
உள்ளம் உடுத்தியிருப்பது
பூந்தமிழ் அங்கி!
நாடறிந்த
நல்ல கவிஞர்:
நானறிந்த
நல்ல மனிதர்"

எனக் 'காவியக் கவிஞர்' **வாலி,** ஏர்வாடி எஸ்.இராதா கிருஷ்ணனுக்குப் புகழாரம் சூட்டுவார். 'வார்த்தைச் சித்தர்' **வலம்புரி ஜான்,** 'வெற்றி பெறுகிற வெல்ல எழுத்துக்களை நாளும் வடிக்கும் இலக்கிய வானம்பாடி' என

---

* மதிப்புரை: எர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணனின் 'வெளிச்சம் வருகிறது...', ப.1.

ஏர்வாடியாரின் **'வசந்தம் வருகிறது'** என்னும் இசைப்பாடல் தொகுப்பிற்கு எழுதிய அணிந்துரையில் குறிப்பிடுவார். ஏர்வாடியாருக்கு வங்கியும் வளர்தமிழும் இரு கண்களைப் போல.

"வங்கி எனக்கு
ஜீவனம் தந்ததென்றால்
வளர்தமிழ் என்றன்
ஜீவனை வளர்த்தது"

(கனவின் பெயர் கவிதை,ப.42)

என்பது ஏர்வாடியாரின் ஒப்புதல் வாக்குமூலம்.

ஏர்வாடியாரின் படைப்பாளுமையைச் செதுக்கிய இருபெருஞ்சக்திகள் 'கவிதை உறவு'ம் கவிதை உணர்வும் ஆகும். கட்டுரை, வானொலி நாடகம், சிறுகதை என்றாற் போல் பல்வேறு இலக்கிய வடிவங்களில் படைப்புக்கள் பலவற்றைப் படைத்தாலும், ஏர்வாடியாரின் உள்ளத்தைப் பெரிதும் ஆட்கொண்டது கவிதை வடிவமே. **"படைப்புத் திறனில் எனக்குப் பாட்டுத் திறனே பெரிதும் பிடிக்கும்"** ('என்னுரை', ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் கவிதைகள், ப3) என மொழியும் ஏர்வாடியார், **"கவிதை என் ஆன்மாவிற்கு நான் பரிமாறுகிற உணவு, நாளும் என் கண்களில் வளர்கிற கனவு"** ('என்னுரை', வெளிச்சம் வருகிறது, p.vi) என அதற்கான காரணங்களையும் எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது. தமிழக அரசின் 'கலைமாமணி' விருதினையும், பாவேந்தர் பாரதிதாசன் விருதினையும் தம் தகைசால் தமிழ்ப் பணிகளுக்காகப் பெற்ற ஆளுமையாளர் ஏர்வாடியார் ஆவார். இக்கட்டுரை, ஒரு பறவைப் பார்வையில் ஏர்வாடியாரின் பாட்டுத் திறத்தினைக் கோடிட்டுக் காட்ட முனைகின்றது.

கவிதை மற்றும் கவிஞர் பற்றிய ஏர்வாடியாரின் கொள்கைகளும் குறிக்கோள்களும்

"கலைஞர் ஒவ்வொருவர்க்கும் வாழ்க்கையில் சில கொள்கைகளும் குறிக்கோள்களும் உண்டு. ஆகையால், அந்தக் கொள்கைகளும் குறிக்கோள்களும் எவ்வாறேனும் அவர்களின் கலைப்படைப்பில் இடம்பெற்றுவிடும்"

(இலக்கிய மரபு, பக்.144-145) என்பார் பேராசிரியர் **மு.வரதராசன்**. ஒரு படைப்பாளி என்ற முறையில் ஏர்வாடி இராதாகிருஷ்ணனுக்கும் கவிதை குறித்தும், கவிஞர் பற்றியும் சில தனிப்பட்ட, திட்டவட்டமான, தெள்ளத் தெளிவான கொள்கைகளும் குறிக்கோள்களும் உள்ளன. அவற்றை அவர் ஒல்லும் வகைகளில் எல்லாம் தம் கவிதை களிலும் கவிதைத் தொகுப்புக்களுக்கு எழுதிய முன்னுரைகளிலும் வெளிப்படுத்தியுள்ளார்.

"செய்யப்படுவது கவிதையன்று.
மழையெனப்
பெய்யப்படுவதே கவிதையாவது.
தானாய்க் கனிவதே கவிதை - தினம்
தேனாய் இனிப்பதே கவிதை"

(கவிதை வானில்...,ப.121)

என்பது ஏர்வாடியார் கவிதைக்கு வகுக்கும் வரைவிலக்கணம்.

ஏர்வாடியாரின் கருத்தில், கவிதைக்கு இலக்கணம் இருப்பது போல் கவிஞனுக்கும் இருக்கிறது. 'கவிஞனுக்கு என்ன இலக்கணம்?' என்ற வினாவுக்கு அவர் தரும் விடை இதுதான்:

"கொதிக்கத் தெரிந்த மனமும், பிறரை
மதிக்கத் தெரிந்த குணமுமே கவிஞன்...
எழுத்துக்கும் வாழ்க்கைக்கும் இடைவெளி இல்லாத
தன்மைக் கவிஞனே உண்மைக் கவிஞன்."

(கவிதை வானில்...,ப.131)

சுருங்கக் கூறின்,

"கவிதையில் கவிஞன்
இருக்க வேண்டும்
கவிஞனில் கவிதை
இருக்க வேண்டும்" **(கவிதை மின்னல்கள்,ப.45)**

என மொழிவார் ஏர்வாடியார்.

பிறிதோர் இடத்தில் கவிஞன் என்பவன். 'சுற்றி வளைக்காமல் / சொல்வதாய் இருந்தால் / **சுப்பிரமணிய**

பாரதியாய் / சுடர்விட வேண்டும்' (பாட்டு வெளியினிலே... ப.76) என இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிடுவார் ஏர்வாடியார்.

'கவிதை சிலருக்கு' என்ற தலைப்பிலேயே ஏர்வாடியார் ஒரு நல்ல கவிதை படைத்துள்ளார். அதில் அவர் கவிஞர்கள் என்ற பெயரில் உலகில் இயங்கி வரும் **ஒன்பது வகையினரை** அடையாளம் காட்டியுள்ளார். 'கவிதை பலருக்குக் / **காற்றாக** இருக்கிறது / சுவாசிக் கிறார்கள்; கவிதை பலருக்கு / **ஏணியாக** இருக்கிறது/ ஏறிக் கொள்கிறார்கள்; கவிதை பலருக்கு / எந்திரமாக இருக்கிறது / இயக்குகிறார்கள்; கவிதை பலருக்கு / **ஆறுதலாக** இருக்கிறது / ஆற்றிக் கொள்கிறார்கள்; கவிதை பலருக்குச்/ **சிறகாக** இருக்கிறது / பறந்து திரிகிறார்கள்; கவிதை பலருக்குப் / **பிழையாய்** இருக்கிறது/ பிழைத்திருக்கிறார்கள்; கவிதை பலருக்குக் / **கனவாய்** இருக்கிறது / கலைந்து போகிறார்கள்; கவிதை பலருக்கு / **நிகழ்வாய்** இருக்கிறது/ நிகழ்த்துகிறார்கள்; கவிதை பலருக்கு / **விதையாக** இருக்கிறது / விளைவிக்கிறார்கள்' என இன்றைய கவிஞர்களை நிரல்படுத்திக் கூறிவரும் ஏர்வாடியார், முத்தாய்ப்பாக உண்மைக் கவிஞரின் இயல்பினைச் செவ்வனே உணர்த்தி யுள்ளார்.

> **"கவிதை சிலருக்குத்தான்**
> **கவிதையாக இருக்கிறது**
> **காலத்தை வெல்கிறார்கள்"**
>
> **(யாரும் யாராகவும்....,பக்.17-18)**

என்பதே கவிதை மற்றும் கவிஞர் பற்றிய ஏர்வாடியாரின் ஒட்டுமொத்தமான - முடிந்த முடிபான - கொள்கை ஆகும்.

வாலியின் அடிச்சுவட்டில் நடை பயிலும் ஏர்வாடியார்

இடமறிந்து, காலமறிந்து, வலியறிந்து சொற்களை ஆளும் கலையில் - **ஆற்றல்சால் சொல் விளையாட்டில்-** கைதேர்ந்தவர் 'காவியக் கவிஞர்' **வாலி**. இக்கலையில்- சொல் விளையாட்டில் - வாலியை அடியொற்றி, அவரை நெருங்கி வருபவர் ஏர்வாடியார். ஓர் எடுத்துக்காட்டு:

"மகாத்மா காந்தி
மீண்டும் பிறக்க வேண்டும்
ராட்டையோடு அல்ல -
ஒரு சாட்டையோடு"

(யாரும் யாராகவும்... ப.120)

மகாத்மா காந்தி காலத்தில் ராட்டை போதுமானதாக இருந்தது; ஆனால் இன்று தேவைப்படுவதோ ராட்டை இல்லையாம்; சாட்டை தானாம்! சாட்டைக்குத் தான் சரிப்பட்டு வரும் காலமாம் இது! ***ராட்டை - சாட்டை;*** *அருமையான சொல் விளையாட்டு!*

ஏர்வாடியாரின் தேர்ந்த சொல் விளையாட்டிற்குப் பிறிதோர் உதாரணம்:

"நம்மில் பலருக்கு / அழத் தெரிகிறதே தவிர
எழத் தெரியவில்லை.
கால்களைப் பார்த்து / விழத் தெரிகிறதே தவிர
மனத்தை / உழத் தெரியவில்லை"

(எப்போதாவது...,ப.23)

வெல்லும் சொற்களால் அமைந்து பயில்வோர் நெஞ்சை அள்ளும் வரிகள் ஏர்வாடியாரின் கவிதை உலகில் நிறைய உண்டு. பதச்சோறு ஒன்று:

"பாட்டுத் திறத்தாலே வையத்தைப்
பாலித்திடச் சொன்னாயே பாரதி...
நோட்டுத் திறமல்லவா இந்த
நாட்டை நடத்துகிறது?"

(பாட்டு வெளியினிலே...,ப.37)

பாட்டுத் திறம் X நோட்டுத் திறம்: *நல்ல முரண்! திறமான சொல்லாடல்!*

ஒரு நடுத்தர வர்க்கத்தின் மனத்தில் மாதத்தின் இறுதி நாளில் தோன்றும் சிந்தனை இது:

"இடுக்கண் இருப்பினும் / இதயத்தில் துயரில்லை
கடுக்கன் காதில் / கிடந்ததே காரணம்.
அடகுக் காகவோர் / அணிகலன் இருந்தால்

அளவிலாத் துயரிலும் / ஆறுதல் உண்டு"

(எனது வானில்...,ப.15)

இடுக்கணைத் தீர்க்கும் விதத்தில் காதில் கிடக்கும் கடுக்கன் நடுத்தர வர்க்கத்திற்குத் தரும் ஆறுதலை இங்கே நயமாகப் பதிவு செய்துள்ளார் ஏர்வாடியார்.

படைப்பாளுமையின் முப்பரிமாணங்கள்

"எளிமையாகச் சொல்வது, இதயத்தைத் தொடுவது, எல்லோரையும் அடைவது எனும் எளிய, வெற்றிகரமான கவிதைச் செயல்பாடு இவருடையது" (அணிந்துரை, யாரும் யாராகவும், ப.10) என ஏர்வாடியாரின் படைப்பாளுமையில் காணலாகும் முப்பரிமாணங்களைச் சுட்டுவார் **கல்யாண்ஜி**. **'பிறர்க்கென வாழும் பேருளம் வளர்ப்போம்'** என்னும் தலைப்பில் ஏர்வாடியார் சென்னைத் தொலைக்காட்சியில் வழங்கிய கவிதை இவ்வகையில் நினைவுகூரத்தக்கது. அக்கவிதையில் இடம்பெற்றுள்ள சில உயிர்ப்பான வரிகள் இதோ:

"இருப்பவர் யாரும் வாழ்பவர் அல்லர்
இறந்தவர் யாவரும் மாண்டவர் அல்லர்
மனிதரில் பலபேர் தாவரம் போன்றவர்
மற்றவர் சிலரோ மாமிசம் போன்றவர்.
மூச்சுவிடுவதே வாழ்வெனச் சொன்னால்
மாடுகள் கூட வாழ்வதாய் ஆகிடும்.
விலங்குகள் எல்லாம் வாழ்பவை அல்ல:
இருப்பதாய் மட்டுமே எடுத்துக் கொள்ளலாம்"

(வெளிச்சம் வருகிறது,பக்.71-72)

'இருத்தல்' (Being) என்பது வேறு; **'வாழ்தல்'** (Living) என்பது வேறு. இருப்பவர் யாவரும் வாழ்பவர் அல்லர்; இறந்தவர் அனைவரும் மாண்டவர் அல்லர். 'உயிரோடு இருந்தும் வெறும் நடைப்பிணமாய்த் திரிவோர் உள்ளனர்; இறந்த பிறகும் தமது புகழால் வாழ்ந்து வருவோர் உள்ளனர்' என்னும் கருத்தை எளிமையான நடையில்-படிப்பவர் இதயத்தைத் தொடும் பாங்கில் - எல்லோரையும்

சென்று சேரும் வகையில் - ஏர்வாடியார் புலப்படுத்தி இருக்கும் திறம் போற்றத்தக்கதாகும்.

"பிறர்க்கென வாழும் பேருளம் வளர்த்தால்
பிறர்நமக் காக வாழ்வதைக் காணலாம்.
தமக்கென வாழாத் தகைமை வளர்ப்போம்
மனத்தால் உயர்ந்து மேருவைக் காண்போம்" (ப.72)

என்பதே இக்கவிதையின் வாயிலாக ஏர்வாடியார் யாவருக்கும் உணர்த்த விரும்பும் செய்தி ஆகும். அருமையான இக் கருத்தினை எளிய மொழியில் அழகிய முறையில் வெளிப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றுள்ளார் ஏர்வாடியார். **'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்'** என்று ஓர் அழகுத் தொடர் அகநானூற்றில் உண்டு. அதன் அழகிய விரிவாக்கமே ஏர்வாடியாரின் இக்கவிதை ஆகும்.

கவிதை மின்னல்கள்

"இவற்றுள் ஹைக்கூக்கள் இருக்கின்றன. சந்த ஒழுங்கு செறிந்த மரபுக் கவிதைகளும் உள்ளன. புதுக்கவிதைப் பாணியிலும் சில வரிகள் தேறும். பல்வேறு சுவைகள், பல்வேறு வடிவங்கள் என்பதாக விளங்கும் இக் கவிதைப் பொறிகளை அல்லது வீச்சுக்களை **மின்னல்கள்** எனவும் மொழியலாம்" ('மின்னலுக்கு முன்...', ப.3) என்னும் அறிமுகக் குறிப்போடு ஏர்வாடியார் வெளியிட்டிருக்கும் கவிதைத் தொகுப்பு **'கவிதை மின்னல்கள்'**. இத்தொகுப்பில் கவிஞரின் தத்துவ நோக்கும், நகைச்சுவை உணர்வும், மொழி ஆளுமையும், வாழ்க்கைக் கண்ணோட்டமும் பளிச்சிடும் தெறிப்பான சித்திர மின்னல்கள் மண்டிக் கிடக்கின்றன.

பொட்டில் அடித்தாற்போல் கூரிய கேள்விக் கணையினைத் தொடுக்கும் ஏர்வாடியின் கவிதை மின்னல் ஒன்று இதோ:

"இந்துவுக்குத் தீபாவளி
கிறிஸ்தவர்க்குக் கிறிஸ்துமஸ்

இஸ்லாமியருக்கு ரம்ஜான்...
ஏழைக்கு?"

(கவிதை மின்னல்கள்,ப.23)

மெல்லிய நகைச்சுவை உணர்வு இழையோடும் பிறிதொரு கவிதை மின்னல்.

"பாராட்ட அழைத்துவிட்டு
பொய் பேசக்
கூடாதென்றால் எப்படி?"

(கவிதை மின்னல்கள்,ப.78)

அங்கதச் சுவையும் ஏர்வாடியாருக்குக் கை வந்த ஒன்றே என்பதைப் பறைசாற்றும் மற்றொரு கவிதை மின்னல் வருமாறு:

"இந்த நாட்டில்
பணத்தாளே அடிக்கலாம்;
மாட்டிக்கொண்டால்
பணத்தாலே அடிக்கலாம்"

(கவிதை மின்னல்கள்,ப.71)

பணத்தாளே - பணத்தாலே ; நயமான சொல்லாடல்!

'எது கவிதை?' என்னும் வினாவிற்கான விடையாக அமைந்த அழகிய கவிதை மின்னல் இது:

"பக்கம் பக்கமாய்
வளர்வதல்ல கவிதை;
இதயத்தின்
பக்கம் வருவதே கவிதை"

(கவிதை மின்னல்கள்,ப.61)

ஏர்வாடியாரின் கை வண்ணத்தில் இங்ஙனம் உண்மை ஒளியும் சொல் நயமும் பளிச்சிடும் கவிதை மின்னல்கள் பலவற்றைக் காணலாம்.

சமுதாயத்திற்கு உரம் சேர்க்கும் கவிதைகள்

"சிறந்த உணர்ச்சி, விழுமிய கற்பனை, நல்ல வடிவம், உயர்ந்த கருத்து இவற்றையெல்லாம் தம் கவிதைகளில்

கொண்டு வரும் கவிஞர் **ஏர்வாடியாரின் கவிதைகள் தமிழ்ச் சமுதாயத்திற்கு உரம் சேர்ப்பவை"** ('அணிந்துரை', வெளிச்சம் வருகிறது, p.v) என்பது பேராசிரியர் **சி.பாலசுப்பிரமணியனின்** மதிப்பீடு. முன்னை அமைச்சர் **கக்கனைப்** பற்றிய ஏர்வாடியாரின் கவியரங்கக் கவிதை இம் மதிப்பீட்டினை உறுதி செய்யும் ஓர் அற்புதமான கவிதை ஆகும்.

> **"எளிமைக்கு என்ன பெயர்**
> **வைப்பதென்றால்**
> **எளிதாய்ச் சொல்வேன்;**
> **கக்கன் என்பதுதான்**
> **கச்சிதமான பெயர்"**
>
> **(எப்போதாவது...,ப.128)**

என்பது அக்கவிதையின் உயிர்ப்பான ஒரு பகுதி,

'கக்கன் என்கிற காலத்தின் கௌரவமே!' என விளித்து,

> **"உனக்குச் சொந்தமாக**
> **நாடிருந்தது; வீடுதானில்லை"**
>
> **(எப்போதாவது...,ப.135)**

எனக் கவிஞர் பாடும் உருக்கமான வரிகள் நம்மை நெகிழ வைப்பவை.

> **"எப்படி வாழ்வது என்றினிக் கேட்டால்**
> **கக்கனாய் வாழ்கெனக் கட்சிக்குச் சொல்வோம்"**
>
> **(எப்போதாவது...,ப.141)**

என்னும் கவிஞரின் தெறிப்பான கருத்தோடு யாவரும் நூற்றுக்கு நூறு உடன்படுவர் என்பது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை.

கவிதையைப் படித்து முடித்ததும் இந்தக் காலத்தில் அரசியல் உலகில் இப்படியும் ஓர் அமைச்சர் இருந்திருப்பாரா என்று அதிசயப்படுகிறோம். 'கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும்...' என்று பாட்டுக்கொரு புலவர் **பாரதி**

கம்பனைக் கண்டு வியந்தது போல, கக்கனைக் கண்டு நாமும் வியக்குமாறு செய்து விடுகிறார் ஏர்வாடியார்.

ஏர்வாடியார் போற்றும் மனைவியின் மாண்பு

"அவள் உடுத்திய
சேலைகள் கிழிந்திருக்கலாம்;
அவளைப் பற்றிய நினைவுகள் மட்டும்
இன்னும் அப்படியே...."

(யாரும் யாராகவும்...,ப.30)

எனத் தாய்மைக்குப் புகழாரம் சூட்டும் ஏர்வாடியார், **'என் இரண்டாவது தாய்'** என்னும் கவிதையில் மனைவியின் மாண்பினை மனமுருகிப் போற்றுகின்றார். 'தாய்க்குப் பின் தாரம்' என்பார்கள்; ஏர்வாடியாரோ, 'என்னைப் பெற்றவள் தாய் / அவளிடமிருந்து / என்னைப் பெற்றவள் நீ' என அக்கவிதையைத் தொடங்குகின்றார். கவிஞரின் நோக்கில் மனைவியைத் 'தலையணை மந்திரம்' என்பது தவறு; **'தலை முதல் என்னைத் தினம் இயக்கும் இயந்திரம்'** என்பதே சரி. ஓர் ஆடவனின் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர் ஓட்டத்திற்கு ஒப்பிட்டால், அதில் பாதி வரை தீபத்தை ஏற்றி ஓடி வருபவள் தாய்; மீதித் தூரத்திற்குத் தாய் தீபத்தை ஒப்படைப்பது தாரத்திடமாம். **தாரம் மட்டுமல்ல; ஆடவனின் ஆதாரமும் தாரம் தானாம்**. தாயால் ஓர் ஆண்மகனுக்கு வருவது **உயரம்** என்றால், பெண்மயிலாம் தாரத்தால் வருவன **உயர்வுகளாம்.** முத்தாய்ப்பாக,

"இன்னொரு முறை
நான் பிறக்கிற போது
நீ
முதல் தாயாய் இருந்தாலும்
மகிழ்ச்சி
இரண்டாவது தாயென்றாலும்
மகிழ்ச்சியே" **(யாரும் யாராகவும்...,பக்.33-37)**

என்னும் உருக்கமான வேண்டுகோளுடன் அக் கவிதையை நிறைவு செய்துள்ளார் ஏர்வாடியார்.

இளைய தலைமுறைக்கு ஏர்வாடியார் வழங்கும் செய்தி

ஏர்வாடியாரின் கருத்தில் **ஆசை** என்பது வேறு; **இலட்சியம்** என்பது வேறு. 'ஆசைகள் என்பவை அன்றாட நிகழ்ச்சி; **இலக்குகள் மட்டுமே நிரந்தர மகிழ்ச்சி'** என்பது அவர் தரும் அழகிய விளக்கம், 'தனக்கென நினைப்பது தேவைகள்' எனக் குறிப்பிடும் கவிஞர், **'இங்கே பிறர்க்கென வாழ்வது இலட்சிய வாழ்க்கை!'** என அறிவுறுத்துகிறார்.

> **"எண்ணம் வானம் வரையில் இருந்தால்**
> **குறைந்தது இமயக் குன்றினில் ஏறலாம்.**
> **பெரிதாய் நினைக்கப் பழகிக் கொண்டால்**
> **சிறிதள வேனும் சிறந்தவை நிகழும்.**
> **வல்லமை வளர்த்துக்கொள்வது நல்லது**
> **நல்லவர் ஆவது அதனினும் நல்லது!"**
>
> **(வெளிச்சம் வருகிறது,ப.96)**

என்பதே ஏர்வாடியாரின் வாழ்வும் வாக்கும் வலியுறுத்தும் உயரிய விழுமியம் ஆகும்; இதுவே இன்றைய இளைய தலைமுறைக்கு - ஒட்டுமொத்த மனித குலத்திற்கு - ஏர்வாடியார் வழங்கும் செய்தி ஆகும்.

3

நடைச் சித்திரம் எனும் இலக்கிய வகையின் நட்சத்திர எழுத்தாளர்

" 'இதைக் காட்டிலும் இவரைப் பற்றி இன்னொரு கட்டுரையைச் சிறப்பாக எழுதிவிட முடியாது' என்று அடித்துச் சொல்லும் வண்ணம் செறிவோடும், திறத்தோடும், திட்பத்தோடும், நுட்பத்தோடும் செதுக்கப்பட்ட இவ் வாழ்க்கைக் காவியப் பனுவல் இந்த நூற்றாண்டின் ஒரு காலக் கண்ணாடியாக மிளிரப் போவது உறுதி."

*- கா.வேழவேந்தன்**

மேலை நாட்டார் தொடர்பால் தமிழுக்கு வந்து சேர்ந்த ஒரு புதிய இலக்கிய வகை **நடைச் சித்திரம்** (Pen Picture) என்பது. ஆங்கில எழுத்தாளர் **ஏ.ஜி.கார்ட்னர்** இவ்வகையின் முன்னோடி ஆவார். அவர் எழுதிய ***'சமூக நிலைதாங்கிகள்'*** (Pillars of Society), ***'தீர்க்கதரிசிகளும் மறையோரும் மன்னர்களும்'*** (Prophets, Priests and Kings) என்னும் இரு உரைநடை நூல்கள் - வாழ்க்கையில் வெற்றி கண்ட பெரியவர்களைப் பற்றிய சொற்சித்திரங்கள் இலக்கிய உலகில் நாற்பதுகளில் பரவலாகப் பேசப் பட்டவை; வாசகர்களால் பெரிதும் போற்றப் பெற்றவை. இவை 'அக்கிரகாரத்து அதிசய மனிதர்' எனப் பேரறிஞர் **அண்ணாவால்** அடையாளம் காட்டப்பெற்ற எழுத்தாளர் **வ.ரா.வின்** உள்ளத்தை ஈர்த்தன. இத்தகைய சொற்சித்திரங்களைத் தமிழிலும் தீட்ட வேண்டும் என்ற சித்தம் அவரது நெஞ்சில் கால் கொண்டது. அதன்

---

* 'செம்மையுடன் செதுக்கிய வாழ்க்கைச் செப்பேடுகள்!', மனத்தில் பதிந்தவர்கள்: நான்காவது தொகுதி, ப.8.

விளைவாக, **'நடைச் சித்திரம்'** என்னும் புதிய இலக்கிய வகை தமிழுக்கு அறிமுகம் ஆயிற்று.

'நடைச் சித்திரம்' (1940), 'தமிழ்ப் பெரியார்கள்' (1943), 'வாழ்க்கை விநோதங்கள்' (1947) என்ற **வ.ரா.**வின் நடைச் சித்திரங்களுக்குத் தமிழ் வாசகர்கள் இடையே நல்ல வரவேற்பு கிடைத்தது. வ.ரா.வை அடியொற்றி எழுத்தாளர் **கல்கியும்** 'யார் இந்த மனிதர்கள்?' (1998) என்ற நடைச் சித்திரத் தொகுப்பினை வெளியிட்டார். இவற்றின் தொடர் முயற்சிகளாக **பி.ஸ்ரீ.யின்** 'நான் அறிந்த தமிழ் மணிகள்' (1971), **கண்ணதாசனின்** 'சந்தித்தேன் சிந்தித்தேன்' (1982), **நெ.து.சுந்தரவடிவேலுவின்** 'நினைவில் நிற்பவர்கள்' (1982), **கு.அழகிரிசாமியின்** 'நான் கண்ட எழுத்தாளர்கள்' (1988), **வைரமுத்துவின்** 'இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்' (1991), **குமரி அனந்தனின்** 'இத்தரையில் முத்திரை பதித்தோர்' (1992), **எஸ்.வையாபுரிப் பிள்ளையின்** 'தமிழ்ச் சுடர் மணிகள்' (1995), **சி.மோகனின்** 'நடைவழிக் குறிப்புகள்' (2000), **அ.ச.ஞானசம்பந்தனின்** 'நான் கண்ட பெரியவர்கள்' (2001), **ஏ.நடராசனின்** 'காற்றினிலே...' (2001), **திருப்பூர் கிருஷ்ணனின்** 'சுவடுகள்' (2003), 'இலக்கிய முன்னோடிகள்' (2007), **திருவேங்கிமலை சரவணனின்** 'தலைநிமிர்ந்த தமிழர்கள்' (இரு பாகங்கள்: 2004, 2006), **சின்னக் குத்தூசியின்** 'எத்தனை மனிதர்கள்' (2004) முதலான நூல்கள் அடுத்தடுத்து வெளிவந்து நடைச் சித்திரம் என்னும் இலக்கிய வகைக்கு வளம் சேர்த்தன. இவ்வரிசையில் ஏர்வாடியாரும் தம் பங்கிற்கு **'மனத்தில் பதிந்தவர்கள்'** என்னும் தலைப்பில் **ஒன்பது தொகுதிகளை** நடைச் சித்திர வளர்ச்சிக்குத் தம் பங்களிப்பாக நல்கியுள்ளார்.

நடைச் சித்திரம் என்பது வாழ்க்கை வரலாறு (Biography) அன்று; ஆனால் வாழ்க்கை வரலாற்றின் கூறுகள் அதில் இருக்கும். நடைச் சித்திரம் என்பது புனைகதையும் (Fiction) அன்று; ஆனால் புனைகதையின் தாக்கம் அதில் காணப்படும். படைப்பாளியின் மனத்தில் பதிந்த - தாக்கம் ஏற்படுத்திய - ஓர் ஆளுமையாளரின் வாழ்க்கை பற்றிய சுவையான தகவல்களை - அவரது ஆளுமைப் பண்புகளை-

ஒரு நடைச் சித்திரம் தனக்கே உரிய பாணியில் பதிவு செய்யும். பிறப்பு, வளர்ப்பு, படிப்பு, குடும்பம் முதலான வாழ்வியல் செய்திகளை வரிசை முறைப்படியே சொல்லிச் செல்ல வேண்டும் என்ற கட்டாயம் நடைச் சித்திரத்திற்கு இல்லை.

நடைச் சித்திரத்தைப் படைக்கும் எழுத்தாளரின் உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய ஆளுமையாளர், படிப்பவரின் உள்ளத்திலும் அதே தாக்கத்தினை ஏற்படுத்த வேண்டும். இதுவே வெற்றி பெற்ற ஒரு நடைச் சித்திரத்தின் பண்பும், பயனும் ஆகும்.

ஏர்வாடியாரின் 'மனத்தில் பதிந்தவர்கள்': ஒன்பது தொகுதிகள்

ஏர்வாடி இராதாகிருஷ்ணன் என்றவுடன் அவரது **'கவிதை உறவு'** இதழ் நம் மனக்கண் முன்னே வந்து நிற்கும். 'கவிதை உறவு' இதழைப் பிரித்தவுடன் இலக்கிய ஆர்வலர்கள் அனைவரும் முதலில் படிக்க விரும்புவது அவர் எழுதும் **'மனத்தில் பதிந்தவர்கள்'** நடைச் சித்திரத் தொடரைத் தான். இந்த இதழில் ஏர்வாடியார் யாரைப் பற்றி எழுதியுள்ளார், அவர் ஆற்றிய பணிகள் யாவை, அவரது ஆளுமைப் பண்புகள் யாவை என்பதை அறிந்து கொள்வதில் ஓர் ஆர்வம் அனைவருக்குமே உண்டு. பெருமைக்குப் பெருமை சேர்ப்பது போல, அவரது அழகிய நிழற்படத்தினை இதழின் முன்னட்டைப் பக்கத்திலேயே வெளியிடுவதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

'மனத்தில் பதிந்தவர்கள்' நூலின் முதல் தொகுதி **'மனிதர்களும் மகத்துவங்களும்'** என்னும் சிறப்புக் குறிப்பினைத் தாங்கி மே, 1997-இல் வெளிவந்துள்ளது; இந்நூல் மக்கள் தலைவர் திரு.**ஜி.கே.மூப்பனார்** அவர்களால் ஏர்வாடியாரின் பொன் விழா நாளில் (18.05.1997) வெளியிடப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. "நான் பெரிய மனிதர்களுக்குத் தெரிந்த சாதாரணன்... அவர்களிடம் காணப்படுகின்ற சில சிறந்த பண்புகளைச் சொல்லி மகிழ்வது தான் இக் கட்டுரைகளின் நோக்கம்... இவர்களின் உயர்வுக்கும், புகழுக்கும் இன்னின்ன மாண்புகளே காரணம் என்பதை எல்லோருக்கும் - குறிப்பாக, வளர நினைக்கும்

வருங்காலச் சந்ததிக்கு - சொல்லி வைக்க வேண்டும் என்ற ஆர்வம்தான். **வெற்றி பெறுவதற்கான பண்பு களையும், குணநலன்களையும் இப்பெரியோர்களிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்"** (மனத்தில் பதிந்தவர்கள்: முதல் தொகுதி, ப.6) என 'என்னுரை'யில் ஏர்வாடியாரே இக்கட்டுரைகளைக் 'கவிதை உறவு' இதழில் தொடராக எழுத நேர்ந்ததற்கான காரணத்தினைத் தெளிவுபடுத்தி யுள்ளார்.

'மனத்தில் பதிந்தவர்கள்' நூலின் இரண்டாம் தொகுதி **'மனிதர்களும் மாண்புகளும்'** என்னும் சிறப்புக் குறிப்பினைத் தன்னகத்தே கொண்டு மே,2003-இல் வெளிவந்துள்ளது; இந்நூல் இளைய தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.**ஜி.கே.வாசன்** அவர்களால் 18.05.2003 அன்று வெளியிடப் பெற்றுள்ளது. இந்நூலுக்கு எழுதிய 'என்னுரை'யில் ஏர்வாடியார், **'இமயம் தொடுவது இருக்கட்டும்; முதலில் இதயம் தொடுங்கள்'** என ஒரு முறை தாம் எழுதிய கருத்தினை எடுத்துக்காட்டி யுள்ளார்; இந்நூலில் இடம்பெற்றுள்ள அரசியல், ஆன்மிகம், கல்வி, இலக்கியம், தொழில், தொழிற்சங்கம், வங்கி, வணிகம் என்று பல்வேறு துறை சார்ந்த சாதனை யாளர்களிடம் குடிகொண்டிருக்கின்ற **'எளிமை, இனிமை, யாரையும் மதித்தல், எவரிடத்தும் அன்பு காட்டல், எவருக்கும் எளிதில் கிடைத்தல் போன்ற பண்புகள் தான் தம்மை ஈர்த்தனவே தவிர வேறு எவையும் அல்ல'** (மனத்தில் பதிந்தவர்கள்: இரண்டாம் தொகுதி, பக்.5-6) எனப் பதிவு செய்துள்ளார்.

'மனத்தில் பதிந்தவர்கள்' நூலின் மூன்றாவது தொகுதி மே, 2006-இல் வெளிவந்துள்ளது. இந்தியக் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா டாக்டர் **ஏ.பி.ஜே.அப்துல் கலாம்** பற்றிய நடைச்சித்திரம் இந்நூலுள் முதலாவதாக இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. "புகழ் வாய்ந்தவர்களை நான் எழுதக் காரணம் அவர்கள் புகழாளர்கள் மட்டுமல்ல; பண்பாளர்களும் கூட என்பதே ஆகும். மேலும் **அவர்களின் வெற்றிக்கான காரணங்களை வளரும் இளைய சமுதாயம் வெற்றிக்கான படிக்கட்டுக்களாய்ப் பயன்படுத்திக்**

கொள்ள உதவும் என்பதும் ஆகும்" (மனத்தில் பதிந்தவர்கள்: மூன்றாம் தொகுதி, ப14) என்னும் ஏர்வாடியாரின் 'என்னுரை'க் குறிப்பு இளைய தலைமுறையினர் கருத்தில் கொள்ளத்தக்கது.

மே, 2008-இல் வெளிவந்த 'மனத்தில் பதிந்தவர்கள்' நூலின் நான்காவது தொகுதிக்கு எழுதிய 'என்னுரை'யில் ஏர்வாடியார் தமக்கே உரிய நகைச்சுவை உணர்வு மிளிர, "எனக்குத் தெரிந்த பிரபலமானவர்களை இந்நூலில் நான் பதிவு செய்திருக்கிறேன். அதற்காக பிரபலமானவர்கள் எல்லோரையும் எழுதிவிட மாட்டேன். அது போல இதுவரை எழுதவில்லை என்பதால் அவர் பதியவில்லை என்றும் அர்த்தம் இல்லை. இது தொடர்; ஆதலால் தொடர்வேன். **எழுதுவதற்காக என் மனத்தில் இன்னும் பலர் இருக்கிறார்கள்**. இவர்களை எல்லாம் நான் விளையாட்டாக என் 'ஹிட் லிஸ்ட்'டில் இருப்பவர்கள் என்பது உண்டு" (மனத்தில் பதிந்தவர்கள்: நான்காவது தொகுதி, ப.10) எனக் குறிப்பிட்டுள்ளார். இந் நூலுக்கு நல்கிய அணிந்துரையில் கவிவேந்தர் **கா.வேழவேந்தன்** இந் நடைச் சித்திரங்களைச் **'செம்மையுடன் செதுக்கிய வாழ்க்கைச் செப்பேடுகள்!'** (ப5) எனப் புகழாரம் சூட்டியுள்ளார்.

டிசம்பர்,2009-இல் வெளிவந்துள்ள 'மனத்தில் பதிந்தவர்கள்' நூலின் ஐந்தாவது தொகுதியில் ஏர்வாடியாரின் மனத்தில் பதிந்த மாண்புறு மனிதர்கள் இருபது பேரைப் பற்றிய நடைச் சித்திரங்கள் இடம் பெற்றுள்ளன. "இந்நூலில் இடம் பெற்றவர்கள் வல்லவர்கள் மட்டுமல்லர், நல்லவர்களும் கூட.... **மல்லிகைப் பூக்களை அள்ளுகிற போது அள்ளிய கைகளும் மணப்பது போல இவர் களுடன் பழகிய உங்களின் மனமும் மணக்கக் காண்பீர்கள்"** (மனத்தில் பதிந்தவர்கள்: ஐந்தாவது தொகுதி, ப.6) என இந்நூலுக்கு எழுதிய 'என்னுரை'யில் சுவையாகக் குறித்துள்ளார் ஏர்வாடியார்.

டிசம்பர்,2011-இல் வெளிவந்துள்ள 'மனத்தில் பதிந்தவர்கள்' நூலின் ஆறாவது தொகுதிக்கு எழுதிய 'என்னுரை'யில் ஏர்வாடியார், **"இனிய பண்புகளோடு, இமயமாய் உயர்ந்தாலும் இயல்பாய் இருப்பதும்,**

மாறாது இருக்கிற மாண்புகளுமே அவர்களை வெற்றி யாளர்கள் வரிசையில் வைத்திருக்கிறது" (மனத்தில் பதிந்தவர்கள்: ஆறாவது தொகுதி, ப.14) எனத் தம் மனத்தில் பதிந்த மாண்புறு மனிதர்களைக் குறித்துக் கூறுவது ஆளுமை வளர்ச்சி நோக்கில் இளைய தலைமுறையினர் கற்றுக் கொள்ள வேண்டிய ஓர் இன்றியமையாத வாழ்க்கைப் பாடம் ஆகும்.

'ஸ்ரீ அரவிந்தர் அன்னை' பற்றிய நடைச் சித்திரத்துடன் தொடங்கும் 'மனத்தில் பதிந்தவர்கள்' நூலின் ஏழாவது தொகுதி மே,2014-இல் வெளிவந்துள்ளது. "மனிதர்களும் மகத்துவங்களும் என்கிற வரிசையில் மிக அதிகமான பெருமக்கள் குறித்து எழுதியவன் என்கிற நிறைவு எனக்கு உண்டு... என் மனத்தில் பதிந்திருப்பதைப் போலவே **எல்லோருடைய மனத்திலும் பதிந்திருக்கிற இந்த மேன்மையாளர்கள் நாம் வாழும் சமூகத்திற்கு இறைவனால் வழங்கப்பட்டிருக்கிற மகுடங்கள் என்று பெருமையுறுகிறேன்"** (மனத்தில் பதிந்தவர்கள்: ஏழாவது தொகுதி, ப.4) என இந்நூலுக்கு எழுதிய 'என்னுரை'யில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார் ஏர்வாடியார்.

மே,2016-இல் வெளிவந்துள்ள 'மனத்தில் பதிந்தவர்கள்' நூலின் எட்டாவது தொகுதிக்கு 'நெஞ்சில் ஒரு நாற்காலி' என்னும் தலைப்பில் எழுதிய முன்னுரையில், **"எழுத்து எனக்குத் தந்திருக்கிற எண்ணற்ற பெருமைகளில் பலரோடு பழகுகிற பேறுதான் மிகப் பெரிது-** என் மனத்தில் பதிந்த இவர்கள் எல்லாம், தமிழ் கூறும் நல்லுலகத்தின் தலைசிறந்த மனிதர்கள், உழைத்து உயர்ந்தவர்கள் என்பது முதல் தகுதி.... அடுத்து, பண்பாளர்களாக, பழகுதற்கு இனியவர்களாக என்னிடத்தில் மட்டுமல்ல, எல்லோரிடத் திலும் இருக்கிறார்கள் என்பது இரண்டாவது தகுதி, மிக முக்கியமான மூன்றாவது தகுதி அவர்கள் சாதனை நிகழ்த்த விழையும் இளைஞர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள்" (மனத்தில் பதிந்தவர்கள்: எட்டாவது தொகுதி, ப.13) என ஏர்வாடியார் தாம் நடைச்சித்திரங் களாகத் தீட்டியுள்ள மாண்புறு மனிதர்களிடம் காணப் பெறும் முப்பெருந்தகுதிகளைப் பட்டியல் இட்டுள்ளார்.

"மாதந்தோறும் ஒரு மாண்புமிகு மனிதரை கவிதை உறவில் சில பக்கங்கள் எழுதிச் சிந்தை நிறைகிறேன்" (மனத்தில் பதிந்தவர்கள்: ஒன்பதாவது தொகுதி, ப.13) என்னும் தமது நெகிழ்வான அனுபவப் பகிர்வுடன் மே 2018-இல் 'மனத்தில் பதிந்தவர்கள்' நூலின் ஒன்பதாவது தொகுதியினை வெளியிட்டுள்ளார் ஏர்வாடியார். மேலும் அவர், ***"வெற்றி பெற்றவர்களின் வித்தகம், வாழ்வியல் நுட்பம், சமூக அக்கறை, பண்பு நலன்களைப் படிக்கிறவர்கள் தாமும் அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்வர் என்னும் பயன் கருதியே இப் பதிவுகளைச் செய்கிறேன்"*** *(ப.14) என்றும் தெரிவித்துள்ளார்.*

21 ஆண்டுக் கால இடைவெளியில் (மே, 1997- மே, 2018) ஏர்வாடியாரின் 'மனத்தில் பதிந்தவர்கள்' ஒன்பது தொகுதிகளும் அடுத்தடுத்து வெளிவந்துள்ளன என்பதும், இத் தொகுதிகளில் ஒட்டுமொத்தமாகப் பல்துறை சார்ந்த 241 பேரைப் பற்றிய நடைச்சித்திரங்கள் இடம்பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கன.

எல்லோருடைய மனத்திலும் பதிய வேண்டிய மேன்மக்கள்

'மனத்தில் பதிந்தவர்கள்' என்னும் பெயரே நம் நெஞ்சை முதலில் ஈர்த்து விடுகின்றது.

> ***"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்***
> ***உள்ளத்துள் எல்லாம் உளன்" (குறள்:294)***

என்று ***வள்ளுவப் பெருந்தகை*** *கூறுவது போல், உலகத்தார் உள்ளத்துள் இடம் பெற்று நிற்கும் சாதனை யாளர்களை - வெற்றியாளர்களை - ஆளுமையாளர்களை- இச்சித்திரங்கள் நமக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றன; இச்சித்திரங்கள் ஏர்வாடியாரின் மனத்தையும் நமக்குப் படம்பிடித்துக் காட்டிவிடுகின்றன.* ***'இனிய காண்க'*** *என்பதற்கு ஏற்ப, உலகில் நல்லனவற்றைக் காண்பது, நல்லாருடன் பேசுவது, நல்லாருடன் இணங்கி நடப்பது, நல்லாரைப் போற்றுவது என்பது நல்ல மனம் படைத்த ஒருவருக்குத் தான் வாய்க்கும். இவ்வகையில்* ***ஏர்வாடியார் ஓர் இன்முகச் செவ்வியர் - உடன்பாட்டுச் சிந்தனையாளர்***

(Positive thinker) என்பதை இந்நூல் பல்லாற்றானும் மெய்ப்பிக்கின்றது.

ஒவ்வொரு மனிதரிடமும் ஒவ்வொரு வகையான திறமை, பெருமை, பொறுமை, உண்மை, நேர்மை முதலான உயர்பண்புகள் குடிகொண்டிருக்கும். அவற்றைக் கண்டறிந்து தம் நடைச் சித்திரங்களில் அழகுற வெளிப் படுத்துகிறார் ஏர்வாடியார். 'இந்தியன் - தமிழன் - விஞ்ஞானி - மனிதன் - அப்துல் கலாமிடம் குடிகொண்டிருக்கும் இவர்களை வரிசைப்படுத்துக' என்று கேட்ட சிறுமிக்கு, **'மனிதனில் அனைவரும் அடக்கம்'** என்று கூறிய பாரத மணித் திருநாட்டின் முதல் குடிமகன் **அப்துல் கலாம்** முதல் பல வகையான மனிதர்கள் ஏர்வாடியாரின் 'மனத்தில் பதிந்தவர்'களாக உள்ளனர்.

அன்னை **அமிர்தானந்தமயியைப்** பற்றிய ஏர்வாடியாரின் நடைச்சித்திரத்தைப் படிக்கும்போது, அவரது முகப்பொலிவு, ஒளி பொருந்திய கண்கள், தாயாய் இருந்து அனைவரையும் அரவணைக்கும் அருள்திறம் ஆகியவற்றை எல்லாம் நம் வாழ்வில் நாமும் பெற வேண்டும் என்னும் உந்துதல் உள்ளத்தில் எழுகிறது.

"நல்லதைச் சொல்லும்போதும், பேசும்போதும் நல்லது நடக்கும். எதிர்மறையாகப் பேசினால் எதிர்மறை யாகவே நடக்கும். 'நான் ஒரு ராசியில்லாத ராஜா' என்று நண்பர் **டி.எம்.எஸ்.** பாடினார். அதுவரை ராசியான ராஜாவா இருந்தவர் அதற்குப் பிறகு ராசியில்லாம ஆயிட்டார்- யாரையும் எப்பவும் 'வாழ்க'ன்னுதான் சொல்லணும் என்பார் அவர். தொலைபேசி எடுத்தால் கணீரென்று **'வாழ்க'** என்றுதான் பேசத் தொடங்குவார்" (மனத்தில் பதிந்தவர்கள்: மூன்றாவது தொகுதி, ப.158)- திரைப்பட நடிகர் **டணால் தங்கவேலு** பற்றிய இச்சித்திரம், மற்றவர்களுடன் நாம் எப்படிப் பேச வேண்டும், பழக வேண்டும் என்பதைக் கற்றுத் தருகிற ஓர் அருமையான வாழ்க்கைப் பாடம் ஆகும்.

"ஒரு மனிதரிடம் இத்தனை ஆற்றல்களா என்கிற வியப்புக்கும் மேலே இத்துணை அரிய பண்புகள் அந்த

ஒருவரிடத்திலேயா என வியக்கும் வண்ணம் மானுடத்துக்கு மாண்பு சேர்த்திருக்கிற மாமனிதர் டாக்டர் **வா.செ.குழந்தை சாமி** அவர்கள்" (மனத்தில் பதிந்தவர்கள்: மூன்றாவது தொகுதி, ப.105) - நீர்வளத் துறையில் **'குழந்தைசாமி மாதிரியம்'** (குழந்தைசாமி மாடல்) என்று கூறும் அளவிற்கு முத்திரை பதித்த விஞ்ஞானியும், **'குலோத்துங்கன்'** என்னும் புனைபெயரில் கவிஞரும் ஆன வா.செ.குழந்தை சாமியைப் பற்றிய சித்திரம் இவ்வாறு தொடங்குகிறது. ஒரு நல்ல தொடக்கம் வாசகரின் மனத்தில் படிப்பதற்கான ஆர்வத்தைத் தோற்றுவிக்கும் சிறந்த தூண்டுகோல் ஆகும். ஏர்வாடியாரின் நடைச் சித்திரங்கள் பலவும் இத்தகைய முறையில் அமைந்திருப்பது அவரது எழுத்தாற்றலுக்குக் கிடைத்த வெற்றி எனலாம்.

சிறுசிறு தொடர்களால், வாக்கியங்களால் நடைச் சித்திர நாயகர்களின் ஒட்டுமொத்த வாழ்வையும் கோடிட்டுக் காட்டிவிடும் கலைத்திறம் ஏர்வாடியாருக்குக் கைவந்த ஒன்று:

"மெய்யப்பன் அவர்களின் எழுத்தில் இருக்கிற இனிமை பேச்சிலும் இருக்கும். உறவில் இருக்கிற வாஞ்சை நட்பிலும் இருக்கும். பொருளை ஈட்டுவதில் இருக்கிற ஆர்வம் ஈத்துவப்பதிலும் இருக்கும். இயல்பான இவரிடம் கனம் இருக்கும். ஆனால் கர்வம் இராது. **ஆள் தான் கொஞ்சம் கறுப்பே தவிர, தாள் போல வெள்ளை உள்ளம்.** அமைதி இவருக்கு ஆண்டவன் தந்த வரம். உழைப்பு இவருக்கு உண்மை தந்த திறம். **வளர்ச்சிக்காகவே வாழ்ந்த மனிதர்"** (மனத்தில் பதிந்தவர்கள்: மூன்றாவது தொகுதி, ப.218) - 'பதிப்புச் செம்மல்' ச.மெய்யப்பனாரைப் பற்றிய இரத்தினச் சுருக்கமான சொற்சித்திரம் இது!

ஏர்வாடியாரின் 'மனத்தில் பதிந்தவர்கள்', நம் எல்லோருடைய மனத்திலும் பதிய வேண்டிய மேன்மக்கள்; உழைப்பினால் உயர்ந்தவர்கள்; தத்தம் தொழில் துறைகளில் சாதனை படைத்தவர்கள்; சிகரம் தொட்டவர்கள்; முத்திரை பதித்தவர்கள். கவிஞர் **வைரமுத்து** கூறுவது போல, "இந்தச் சமூகத்தின் வேர்களை நன்கு விசாரித்தவர்கள்;

மானுடத்தைத் தம் தோள்களில் ஏற்றி உயர்த்தியவர்கள்; திசைகளின் நெற்றிகளுக்குத் தம் பெயரைப் பொட்டாக வைத்தவர்கள் (இன்னொரு தேசிய கீதம், பக்.67-68).

நடைச் சித்திரத்தின் வெற்றி

எடுப்பாகத் தொடங்கி, சுவையாக வளர்த்துச் சென்று, முத்தாய்ப்பாக முடிப்பதிலே தான் ஒரு நடைச் சித்திரத்தின் வெற்றி அடங்கியுள்ளது எனலாம். **எடுப்பு-தொடுப்பு-முடிப்பு** என்னும் மூன்று கூறுகளையும் திட்டமிட்டுச் சரிவரக் கையாளும் சதுரப்பாடு வாய்க்கப் பெற்றவராக ஏர்வாடியார் விளங்குகின்றார். இக் கருத்தினைத் தக்க இரு சான்றுகள் காட்டி நாம் நிறுவலாம்.

"மதுரை என்றதுமே நமக்கு மல்லிகைதான் நினைவுக்கு வரும். தொடர்ந்து வேறெவை வந்தாலும், வராவிட்டாலும் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறிந்து வைத்திருக்கிற வேறு ஒரு பெயர் அதாவது ***காலேஜ் ஹவுஸ்*** *கண்டிப்பாக நினைவுக்கு வந்துவிடும். தொடர்ந்து அதன் அதிபர் நினைவுக்கு வந்துவிடுவார். அவர் அதன் அதிபர் என்பதால் அல்ல. அவரே ஒரு அற்புதமான மனிதர், அறிஞர், போற்றுதற்கு உரிய புகழாளர் என்பதால்" (மனத்தில் பதிந்தவர்கள்: ஆறாவது தொகுதி, ப.153)* என்பது **'திருக்குறள் மணிமொழியன்'** என்னும் நடைச் சித்திரத்தின் அழகிய தொடக்கம். இத் தொடக்கமே மதுரை என்றதுமே நமது நினைவுக்கு மோனையைப் போல் ஓடி வரும் மணக்கும் மல்லிகை - 'நியூ காலேஜ் ஹவுஸ்' என்னும் புகழ்பெற்ற உணவு விடுதி - அதன் மேலாண்மை இயக்குநர் **'திருக்குறள் செம்மல்' ந.மணிமொழியன்** - அவரது மக்கட் பண்பு ஆகியவற்றைப் படிப்படியாக வளர்த்துச் சென்று, தொடர்ந்து படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தைப் படிப்பவரின் மனத்தில் தூண்டி விடுகின்றது. *"எத்துணை ஆண்டுக் காலம் இவர் வாழ வேண்டும் என்று வாழ்த்த எண்ணும்போது கவிப்பேரரசு* ***வைரமுத்து*** *இவரைக் குறிப்பிடுவது போல் அதிகாரத்துக்கு ஓர் ஆண்டு வீதம் 133 ஆண்டுகள் நலத்தோடு வாழ்த்தத் தோன்றுகிறது" (ப.160)* என இந்

நடைச் சித்திரத்தின் முடிவில் வைரமுத்துவின் மேற்கோளையும் தக்க வகையில் ஏர்வாடியார் பயன்படுத்திக் கொண்டிருப்பது முத்தாய்ப்பு.

முதியோர் நலச் சிறப்பு மருத்துவர் **'பத்மஸ்ரீ' வ.செ.நடராசன்** பற்றிய ஏர்வாடியாரின் நடைச் சித்திரம் எடுப்பானது; ஏற்றம் மிக்கது. "டாக்டர் வி.எஸ்.நடராசன் அவர்களின் நட்பில் இருந்தும் நல்ல ஆலோசனைகளில் இருந்தும் நாம் பெற வேண்டுவது **நல்ல உணவு, நல்ல உடற்பயிற்சி, நல்ல மனம்** இந்த மூன்றும் தான். **இவை இருந்தால் முதுமையைக் குப்புறத் தள்ளி முதுகில் ஏறி உட்கார்ந்து கொள்ளலாம்"** (மனத்தில் பதிந்தவர்கள்: ஆறாவது தொகுதி, ப.125) என்பது இந்நடைச் சித்திரம் உணர்த்தும் சீர்மிகு வாழ்வியல் பாடம்; அனுபவ உண்மை. இந்நடைச் சித்திரத்தின் முடிவில் **'எந்த இறுக்கத்திலும், இடர்ப்பாடுகளுக்குள்ளும் மனம் அமைதியைக் காண முடியும்'** என்னும் டாக்டர் வ.செ.நடராசனின் கருத்திற்கு அரண் சேர்க்கும் விதத்தில் ஏர்வாடியார் கையாண்டுள்ள ஒரு சுவையான குறுங்கதை இது:

"அரசன் ஒருவன் **'அமைதி'** என்ற தலைப்பில் ஓவியங்களைப் போட்டிக்கு வரவேற்கிறான். வந்து குவிந்த எண்ணற்ற ஓவியங்களில் இரண்டைத் தேர்வு செய்கிறான். ஒன்று, அமைதியான சலனமற்ற ஏரி. அதில் பிரதிபலிக்கும் அடர்ந்த மரங்கள் சூழ்ந்த மலை, நீல வானம் காட்டும் ஓவியம்.

மற்றொன்று, இடியுடன் கூடிய மழை, மின்னல், சூறாவளிக் காற்று காணப்படும் ஓவியம். அரசவையில் எல்லோரும் 'அமைதி' என்ற தலைப்புக்கு முதல் ஓவியமே முற்றிலும் பொருத்தமானது என்கிறபோது அரசன் மட்டும் இரண்டாவது ஓவியத்தைத் தேர்வு செய்வதாகக் கூறுகிறான். காரணம் அதில் இருந்த நுட்பம், இடி, மின்னல், மழை, புயல் என்ற எண்ணற்ற அமைதியின்மைக்கு நடுவிலும் ஒரு பறவை தன் குஞ்சுகளுக்கு அமைதியாக உணவூட்டிக் கொண்டிருக்கிறது.

பக்கத்தில் ஒரு பாறைக்கு இடையிலிருந்து பச்சைப் பசேலென்று முளைத்து வெளிக் கிளம்பியிருக்கிறது ஒரு சிறு செடி. மனித மனமும்கூட எத்தனைத் துயரங்களுக்கு இடையிலும், வெளியுலக இரைச்சல்கள், இன்னல்களுக்கு இடையிலும் இந்தச் செடியைப் போலவும், பறவையைப் போலவும் அமைதியாகத் தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருக்கலாம் என்றாராம் அரசர்" (பக்.125-126).

'மன அமைதியை அமைதியான சூழலில் பெறுவதை விடவும் அமைதியற்ற நிலையிலும் பெற முயன்று வெல்ல வேண்டும்' என்பதே இக்கதையின் வாயிலாக ஏர்வாடியார் உணர்த்த விரும்பும் உயரிய வாழ்க்கைப் பாடம்.

"உடலும் உள்ளமும் நலம் பெற **டாக்டர் வி.எஸ்.நடராசன் அவர்களைச் சந்தியுங்கள், நோயாளியாக அல்ல; ஒரு நல்ல நண்பராக**" (ப.126) என இந்நடைச் சித்திரத்தினை ஏர்வாடியார் முடித்திருக்கும் பாங்கு சிறப்பானது.

'கவிதை உறவின் 'மனத்தில் பதிந்தவர்கள்' தொடரில் இடம்பெற்ற முதியோர் நலச் சிறப்பு மருத்துவர் வ.செ.நடராசனுக்கு இந்திய அரசு **'பத்மஸ்ரீ'** என்னும் உயரிய விருதினை வழங்கிப் பெருமைப்படுத்தியிருப்பது நினைந்து நினைந்து மனம் மகிழத்தக்க, நெகிழத்தக்க ஒரு நல்ல நிகழ்வாகும்.

நடைச் சித்திரத்தின் கட்டுக்கோப்பு

'சான்றோர் சான்றோர் பாலர் ஆப' (218) என்று புறநானூற்றுப் புலவர் **கண்ணகனார்** பாடுவது போல், ஏர்வாடியாரின் நட்பு வட்டம் நாள்தோறும் விரிந்து கொண்டே செல்கின்றது. அவரது நட்பு வட்டத்தில் நெடுநாள் பழகிய சான்றோரும் உண்டு; நேற்று அறிமுகமான ஆளுமையாளரும் உண்டு. அவருடைய நடைச் சித்திரத்தில் ஓர் அருமையான கட்டுக்கோப்பு அமைந்திருப்பதைக் காணலாம். முதல் கூறு, குறிப்பிடப்படும் ஆளுமையாளர், ஏர்வாடியாரின் மனத்தில் பதிந்ததற்கான காரணத்தைக் கூறுவது; இரண்டாவது கூறு, ஆளுமையாளர் அவரது

துறையில் நிகழ்த்தியுள்ள சாதனைகளை எடுத்துரைப்பது; மூன்றாவது கூறு, அவர்தம் பண்பு நலன்களை மொழிவது; நான்காவது கூறு, அவருடைய இல்லற மாண்பினை, குடும்பத்தினரைச் சுட்டுவது; ஐந்தாவது கூறு, ஆளுமை யாளரை வாழ்த்தி நிறைவு செய்வது என ஐந்து கூறுகளாக அமைவது ஏர்வாடியாரின் நடைச்சித்திரம். ஓர் எடுத்துக் காட்டின் வழி இக் கருத்தினை நிறுவலாம்.

*"முனைவர் **தெ.ஞானசுந்தரம்** அவர்கள் தமிழகத்தின் தலைசிறந்த தமிழறிஞர்களில் ஒருவர். ஆய்வு நோக்கில் கம்ப நாடனை அணுகிப் புதிய வெளிச்சத்தை நமக்குத் தந்தவர். அவருடைய இனிமையான குரல், தேர்ந்த தமிழ்ச் சொற்கள், உன்னதமான உரை வளம் நம்மை உட்கார வைத்துவிடும். அவரை நம் மனதில் நிற்க வைத்து விடும். **தெளிவு அவரது தனிச்சிறப்பு.** நீண்ட நாள்களாகவே அவர் மீது எனக்கு அளப்பரிய ஈடுபாடு உண்டு. அதற்கு அவரது தமிழும், கூடுதலாக இனிய பண்புகளுமே காரணம்" (மனத்தில் பதிந்தவர்கள்: ஒன்பதாவது தொகுதி, ப.139)* என்ற அறிஞர் தெ.ஞானசுந்தரம் பற்றிய ஏர்வாடியாரின் அழகிய அறிமுகம்,

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்" (குறள்:394)

என்னும் வள்ளுவர் வாய்மொழியை மெய்ப்பிப்பதாய் அமைகின்றது. அவரது கம்ப ராமாயண ஆய்வுகளில் வெளிப்படும் புதிய வெளிச்சங்கள் அவரது கூர்த்த மதி நுட்பத்தை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன என்று குறிப்பிடும் ஏர்வாடியார், *"வால்மீகி இராமாயணத்தில் இராவண வதம் **அமாவாசையில்** நடந்ததாகக் கூறப்படுகிறது. கம்ப ராமாயணத்தில் அது **பௌர்ணமியில்** நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது." (ப.141)* எனச் சான்று காட்டி விளக்குவது தனிச்சிறப்பு. புரட்சித் தலைவர் **எம்.ஜி.ஆர்.** மறைந்தபோது நேரடி வருணனை செய்த தெ.ஞானசுந்தரம் ***"மண்ணைத் தோண்டி தங்கத்தை எடுப்பார்கள். இன்றோ, மண்ணைத் தோண்டி தங்கத்தைப் புதைக்கிறார்கள்'*** என்று குறிப்பிட்டது பலரது நெஞ்சில் பதிந்து விட்ட அற்புதமான வைர

வரிகள் எனலாம்" (ப.146) என்று எழுதி அவர் மீது படிப்பவர் மனத்தில் மிகுந்த மதிப்பும், மரியாதையும் ஏற்படுமாறு செய்து விடுகின்றார் ஏர்வாடியார்.

சாதனைப் பெண்ணைப் பற்றிய சீரிய பதிவு

'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே' (பாரதியார் கவிதைகள், ப.180) என மகாகவி **பாரதியார்** பாடியது போல், ஆண்களைப் போலவே பெண்களும் இன்று பல துறைகளிலும் முத்திரை பதித்து வருவது கண்கூடு. 'ஆண்களே அஞ்சுகின்ற ஆபத்தான பணியிலும் பெண்கள் ஈடுபட்டு, அதில் வெற்றி பெற்றுச் சாதனையும் படைக்கிறார்கள்' என்று புலனாய்வுப் பணியில் ஈடுபட்டு **'லேடி ஜேம்ஸ்பாண்ட்'** என்று பலரும் பாராட்டும் வகையில் பெயர் பெற்ற **திருமதி. யாஸ்மினைப்** பற்றி அழகான நடைச் சித்திரம் ஒன்றைப் படைத்துள்ளார் ஏர்வாடியார்.

'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்த ஞானச் செருக்கு கொண்ட செம்மை மாதர்' (பாரதியார் கவிதைகள்,ப.501) என்று **பாரதியார்** படைத்துக் காட்டிய செம்மை மாதராக- உதய கன்னியாக - வீர நங்கையாக- புதுமைப் பெண்ணாக- திருமதி யாஸ்மின் விளங்குவதை- கராத்தே, வர்மக் கலை, குதிரை ஏற்றம், அனைத்து ரக வண்டிகளையும் ஓட்டும் ஆற்றல் எனப் பல்வகைத் திறன்களையும் பெற்று துணிச்சல் மிக்கவராகத் திகழ்வதை- சோதனைகள் வந்தாலும், தடைகள் குறுக்கிட்டாலும் அவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து சாதனை படைக்கும் வீரப் பெண்ணாக விளங்குவதை எடுத்துக்காட்டும் ஏர்வாடியார், அவருடைய வாழ்க்கைப் பயணத்தில் நிகழ்ந்த சில சுவையான அனுபவங்களையும் சுட்டிச் செல்கின்றார். பதச்சோறாக ஒரு நிகழ்ச்சி:

திருமணத்திற்கு முன் ஒரு சில மாதங்களே இருந்த சூழலில் மணமகன் குறித்து சந்தேகம் கொண்ட மணப்பெண் ஒருத்தி அவனுடைய குடும்பத்துக்குத் தெரியாமல் தகவல் சேகரிக்க திருமதி.யாஸ்மினிடம்

வேண்டியிருக்கிறாள். துப்பறிந்ததில் அவனுக்கு எய்ட்ஸ் நோய் இருப்பது தெரிய வருகிறது. திருமணம் நிற்கிறது. இப்படி ஒரு பெண்ணின் வாழ்வு நிர்மூலமாவது தவிர்க்கப் படுகிறது.

மற்றும் ஒரு நிகழ்ச்சி: ஈரோட்டைச் சார்ந்த தொழிலதிபரின் மகன் கடத்தல் குறித்த புலன் விசாரணையில், அவருடைய மகிழுந்து ஓட்டுநரே அதைத் திட்டமிட்டு நடத்தியது தெரிய வருகிறது.

யாஸ்மின் எதிர்கொண்ட இத்தகைய பல அனுபவங்களை ஏர்வாடியார் பட்டியலிட்டுக் காட்டும்போது, திருமதி யாஸ்மினைப் போன்ற துணிச்சல் மிக்க பெண்கள் இன்னும் பலர் சமுதாயத்தில் உருவாக வேண்டும் என்ற விருப்பம் படிப்பவர் மனத்தில் எழுவது உறுதி.

" **'நண்பர்களால் நண்பர்களைப் பெறுவோம்'** என்கிற என் கோட்பாட்டின் படி விரிந்து பரந்த என் நட்பு வட்டத்திற்கு **அமிர்தம் சூர்யா** அழைத்து வந்து அறிமுகம் செய்திருக்கிற அன்புச் சகோதரி திருமதி யாஸ்மின் அவர்களுக்கு எப்போதும் என் வாழ்த்துக்கள் உண்டு" (மனத்தில் பதிந்தவர்கள்: ஒன்பதாவது தொகுதி, பக்.91-92) என்ற வாழ்த்துக்களுடன் நிறைவுறுகிறது யாஸ்மின் பற்றிய ஏர்வாடியாரின் நடைச் சித்திரம்.

'இன்னார்க்கு இன்னார் என அமைந்த இணைய'ரைப் பற்றிய நயமிகு நடைச்சித்திரம்

'ஒவ்வொரு வெற்றி பெற்ற ஆணின் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள்' என்பது பழமொழி. **'ஒவ்வொரு வெற்றி பெற்ற பெண்ணின் பின்னாலும் ஓர் ஆண் இருக்கிறான்'** என்பது புதுமொழி. 'Made for each other' என்று ஆங்கிலத்தில் கூறுவது போல், **'இன்னார்க்கு இன்னார் என்று எழுதி வைத்தான் இறைவன் அன்று'** என்று தமிழில் கூறுவது போல், வாழ்க்கை இணையராகப் புகழ்பெற்று விளங்கும் ஆளுமையாளர்களையும் தமது நடைச்சித்திரங்களில் அவ்வப்போது அறிமுகப்படுத்தி யுள்ளார் ஏர்வாடியார். இவ்வகையில் டாக்டர் **நசிவகடாட்சம்-**

எழுத்தாளர் திருமதி **சாந்தகுமாரி சிவகடாட்சம்** இணையர் பற்றிய நடைச்சித்திரம் குறிப்பிடத்தக்கது.

"மருத்துவ மொழிகளால் மிரட்டுகிற மருத்துவர்கள் நடுவே, புன்முறுவலால் இதப்படுத்துகிற சில மருத்துவர் களில் முதல் வரிசை மருத்துவர் டாக்டர் ந.சிவகடாட்சம் அவர்கள்... **உற்சவர்** சிவகடாட்சம் உலகறிந்த மருத்துவ ரெனில், **மூலவர்** திருமதி சாந்தகுமாரி உன்னதமான எழுத்தாளர் என்ற உயரத்தில் இருப்பவர்... புகழ் மணக்கும் இந்த மருத்துவ, எழுத்தாளர் தம்பதியர் என் மனதில் பதிந்திருப்பதைப் போலவே எண்ணற்றோரின் இதயங்களிலும் இடம் பிடித்திருக்கிறவர்கள்... நல்ல மனம், நல்ல பழக்க வழக்கங்கள், சிரித்த முகம், பயன்பட வேண்டும் என்கிற பேரவா, நட்பு, சமூகக் கரிசனம் இவை எல்லாவற்றையும் விட நல்ல மனைவி, மகன், மருமகள், பேத்தி, உண்மையான தெய்வ பக்தி - யாவும் இன்னும் நூற்றாண்டுக்கான நலத்தை அவருக்கு வழங்கும்" (மனத்தில் பதிந்தவர்கள்: ஒன்பதாவது தொகுதி, பக்.170;173) என்று இதய நல மருத்துவர் **சிவகடாட்சம்** அவர்களை ஏர்வாடியார் தம் நடைச் சித்திரத்தில் அறிமுகம் செய்திருப்பது முற்றிலும் உண்மை என்பதை இவ் இணையருடன் பழகிய எவரும் ஒப்புக் கொள்வர். திருமதி **சாந்தகுமாரி சிவகடாட்சம்** சிறந்த நூலாசிரியர், சுற்றுலா விரும்பி, பயணக் கட்டுரை யாளர், சிறுகதை மற்றும் புதின எழுத்தாளர், கவிஞர், எழுதுவதைப் பொழுதுபோக்காக அல்ல; தமது வாழ்க்கையின் நோக்கமாகவே நினைத்து எழுதி வரும் ஆற்றலாளர், கணவரைப் போல உண்மையானவர், நன்மையானவர் என்பது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை.

பயண இலக்கியத்தில் **சோமலெ, மணியன், ஏ.கே.செட்டியார்** போல், முத்திரை பதித்துள்ள எழுத்தாளர் திருமதி சாந்தகுமாரி. சுற்றும் உலகில் சுற்றிய உலக நாடுகள் பற்றிப் பல பயனுள்ள தகவல்கள், நாகரிக, பண்பாட்டுச் சின்னங்கள், வாழ்க்கை முறைகள் இவரது நூல்களில் இடம்பெற்றிருக்கும். காட்டாக, கிரேக்க நாடு பற்றி திருமதி சாந்தகுமாரி குறிப்பிடும் ஒரு செய்தி வருமாறு:

"நாடுகளைப் படைப்பதற்காக இறைவன் மண்ணை அள்ளி ஒரு சல்லடையில் சலித்துப் பல நாடுகளைப் படைத்த பின் தங்கியிருந்த கரடு முரடான கற்களை எறிந்ததில் உருவான நாடுதான் கிரேக்கமாம்" (ப.174): இவ்வாறு திருமதி சாந்தகுமாரி சிவகடாட்சத்தின் நூலில் இருந்து ஏர்வாடியார் எடுத்துக்காட்டும் சான்றுகள் அந்நூலை வாங்கிப் படிக்க வேண்டும் என்னும் ஆர்வத்தைத் தூண்டுகின்றன.

இங்ஙனம் ஏர்வாடியாரின் மனத்தில் பதிந்தவர்கள் யாவரும் சமூகத்திற்குப் பணியாற்றி வரும் நல்லவர்களாக, வல்லவர்களாக, பொது நலம் கொண்டவர்களாக, மனித நேயம் மிக்கவர்களாக, வாரி வழங்கும் வள்ளல்களாக, தமிழ்ப்பணி ஆற்றும் இலக்கிய வித்தகர்களாக விளங்கி வாழ்வில் தடம் பதித்தவர்களாகத் திகழ்கிறார்கள்.

எதையும் சுவை மிளிர எழுதும் வல்லமை

எதை எழுதினாலும் சுவை குன்றாமல் எழுதும் வல்லமை படைத்தவர் ஏர்வாடியார். சான்றாக, இலக்கிய சாம்ராட் மூத்த அறிஞர் **கோவி.மணிசேகரனைப்** பற்றிய நடைச் சித்திரத்தில் இடம்பெற்றுள்ள ஒரு சுவைக் குறிப்பு வருமாறு:

"அவருடைய (கோவி.மணிசேகரனுடைய) எழுத்துப் பயணத்தில் பல சுவையான, மறக்க முடியாத அனுபவங்கள் உண்டு. திடுமென்று ஒரு நாள் **கல்கி திரு.ராஜேந்திரன்** அவர்கள் கோவி அவர்களுக்குத் தொலைபேசி, ஒரு தொடர்கதை வேண்டும் என்றும், உடனே தலைப்பைச் சொல்லுமாறும் வேண்டவே, அப்போதுதான் மாண்புமிகு முதல்வர் டாக்டர் **எம்.ஜி.ஆர்.** அவர்களைச் சந்தித்துத் திரும்பியிருந்த கோவி. **'மாண்புமிகு முதலமைச்சர்'** என்ற தலைப்பைத் தந்ததோடு, பெரியபுராணம் தந்த சேக்கிழாரைப் பற்றிய சரித்திரத் தொடர்கதையை ஏறத்தாழ 43 வாரங்கள் எழுதிச் சிறந்த புகழ் பெற்றார்" (மனத்தில் பதிந்தவர்கள்: ஆறாவது தொகுதி,ப.167).

இத்தகைய சுவையான அனுபவங்களும் பயனுள்ள தகவல்களும் மேலோரின் மேற்கோள்களும் நெகிழ்வூட்டும்

வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்புக்களும் ஏர்வாடியாரின் நடைச் சித்திரங்களில் பயின்று வரக் காண்கிறோம்.

பொதுவுடைமை இயக்கம் கண்ட முதுபெரும் தலைவர், தோழர் **இரா.நல்லகண்ணு** குறித்து ஏர்வாடியார் தீட்டியுள்ள அற்புதமான நடைச் சித்திரம் இவ்வகையில் சிறப்பாக நினைவுகூரத்தக்கது. அந் நடைச் சித்திரத்தில் இடம் பெற்றுள்ள ஓர் உயிர்ப்பான பகுதி இதோ:

"'இப்படி ஒரு தலைவர் நம்மிடையே இருந்தார் என்பதே ஒரு கதை போல இருக்கும்' என்று அண்ணல் காந்தியைப் பற்றி அறிஞர் **ஐன்ஸ்டீன்** கூறுவார். **இருந்தார் என்பதற்கு காந்தி ஒரு எடுத்துக்காட்டு என்றால், இருக்கிறார் என்பதற்கான எடுத்துக்காட்டு தான் தோழர் இரா.நல்லகண்ணு அவர்கள்"** (மனத்தில் பதிந்தவர்கள்: ஆறாவது தொகுதி, ப.143).

இந்நடைச் சித்திரத்தில் தோழர் இரா.நல்லகண்ணுவின் எளிமையையும், தூய்மையையும் பறைசாற்றும் விதத்தில் ஏர்வாடியார் எடுத்துக்காட்டி இருக்கும் நிகழ்வுகள் பயில்வோர் உள்ளத்தை உருக்க வல்லவை. "ஒரு தலைவன் எப்படியெல்லாம் இருக்கக் கூடாது என்பதைக் கற்றுக் கொடுக்கிற தலைவர்கள் தெருவெங்கும், தலைநகரெங்கும் இருக்கும்போது **எப்படி இருக்க வேண்டும் என்று உலகத்துக்கே எடுத்துக்காட்டாய் நமது தேசத்தில் விளங்குகிற ஒரே தலைவர்"** (ப.145) என்று தோழர் இரா.நல்லகண்ணு அவர்களுக்கு ஏர்வாடியார் சூட்டியுள்ள புகழாரம் முற்றிலும் உண்மையே.

நீதியரசர் **மு.கற்பக விநாயகம்** குறித்து வரைந்துள்ள நடைச் சித்திரத்தில் ஏர்வாடியார் பதிவு செய்திருக்கும் ஓர் உருக்கமான நிகழ்ச்சி: "இருபது வயது இளைஞன் ஒருவன் பக்கத்து வீட்டுப் பெரியவரிடம் ஏற்பட்ட வாய்ச்சண்டையில் மரக்கிளை ஒன்றால் அவரை அடித்து விடுகிறான். இரண்டு நாட்களுக்குப் பிறகு அந்தப் பெரியவர் இறந்துவிடுகிறார். வழக்கை விசாரித்த கீழ்க்கோர்ட் அந்த இளைஞனுக்கு ஆயுள் தண்டனை வழங்குகிறது. வழக்கின் மேல் முறையீடு உயர்நீதி மன்றத்தில் செய்யப்பட்டபோது,

திரு.கற்பக விநாயகம் அவர்கள் தலைமையிலான டிவிஷன் பெஞ்சுக்கு விசாரணைக்கு வருகிறது. அந்த இளைஞனின் வழக்கறிஞர் தண்டனையைக் குறைக்க வாதாடியபோது, அந்த வழக்கின் தன்மை, இளைஞனின் எதிர்காலம் குறித்து மேலும் சிந்தித்த திரு.கற்பக விநாயகம், யாரும் எதிர்பாராத வண்ணம் அந்த இளைஞனை விடுதலை செய்து விடுகிறார்.

இறந்து போன பெரியவரின் மனைவி, யாருடைய நிர்ப்பந்தமும் இல்லாமல், "'அய்யா...! இறந்து போன கணவர் இனி வர மாட்டார். அவரும் அந்த இளைஞனைக் கண்டபடி திட்டி அவமானப்படுத்தியிருக்கிறார். கோபத்தால் அந்தப் பையன் அடித்திருக்கிறான். அடித்ததால் அவர் இறந்தார் எனக் கூற முடியாது. இரண்டு நாட்கள் கழித்துத் தான் இறந்திருக்கிறார். அவர் மீதும் தவறு இருக்கிறது. என் வாழ்க்கை போனது போனதுதான். ஆனால் அந்தப் பையன் வாழ வேண்டிய பையன். அவனுக்குத் திருமணமாக வேண்டும். அவனைச் சிறைக்கு அனுப்பினால் அவனுடைய வாழ்க்கை இருண்டு போகும். அவனை விடுதலை செய்யுங்கள் என்றதும், அவனை விடுதலை செய்ததோடு அந்தப் பெண்மணியின் பெயரில் வங்கியில் ரூ.5லட்சம் வைப்பு நிதியாக வைத்து அவரது உறவினர்கள் அப்பணத்தைப் பறிக்காதபடி கண்காணிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார்" (மனத்தில் பதிந்தவர்கள்: எட்டாவது தொகுதி, பக்.71-72). இப்படி எண்ணற்ற வழக்குகளில் நீதியரசர் கற்பக விநாயகம் வழங்கியுள்ள மனிதநேயம் மிக்க தீர்ப்புகளில் வெளிப்படும் அவரது வேறுபட்ட அணுகுமுறையைப் பார்க்கும்போது, "'தனித்த நறும் திலகமென' அவரைப் பாராட்டத் தோன்றும்" (ப.72) எனப் புகழாரம் சூட்டுகின்றார் ஏர்வாடியார்.

மனோன்மணீயம் சுந்தரனாரின் மணிமொழியினை இங்கே ஏர்வாடியார் திறம்படப் பயன்படுத்திக் கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. நிறைவாக, நீதியரசர் மு.கற்பக விநாயகத்திற்கு மிகவும் விருப்பமான புரட்சித் தலைவர் **எம்.ஜி.ஆர்.** அவர்களின் திரைப்படம் ஒன்றில் வரும் **'இவர் போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்'**

என்ற காப்பியக் கவிஞர் வாலியின் வைர வரிகளை நினைவூட்டி இந்நடைச் சித்திரத்தினை ஏர்வாடியார் முடித்திருப்பது சிறப்பு.

"வேறு வகையில் வித்தியாசமாகச் சிந்திப்பதுதான் உயர்ந்த சிந்தனையின் வெளிப்பாடு. வேறுபட்டுச் சிந்திப்பதில்தான் வளர்ச்சி இருக்கிறது. வாழ்க்கையும் சிறக்கிறது. **ஒரே மாதிரி என்பது சாதாரணம். வேறு மாதிரி என்பதுதான் அசாதாரணம். அப்படியொரு அசாதாரண மனிதர்தான் என் அன்பிற்குரிய நண்பர் எழுத்து வேந்தர் திரு. இந்திரா சௌந்தர்ராஜன்"** (மனத்தில் பதிந்தவர்கள்: எட்டாவது தொகுதி, பக்.91;93) எனத் தம் நடைச்சித்திர நாயகரை ஏர்வாடியார் அறிமுகப்படுத்தும் பாங்கு வித்தியாசமான ஒன்று; அவரது வேறுபட்ட எழுத்துத் திறத்தினைத் தெற்றெனப் புலப்படுத்துவது.

"சிங்கப்பூரில் பொருள்கள் மட்டுமல்ல, பொழுது போக்குகள் மட்டுமல்ல, நாம் பார்த்துப் பேசவும், பழகிக் களிக்கவும் நம் மக்கள் பலர் அங்கே இருக்கின்றனர். நாம் போய்ச் சந்திக்கிறோமோ இல்லையோ, போகும்போது நம்மை வரவேற்று மகிழச் சிங்கப்பூரில் நண்பர்களும், நல்ல இலக்கிய அமைப்புகளும் நிறையவே இருப்பது நெஞ்சில் இனிக்கிற செய்தியாகும்" (மனத்தில் பதிந்தவர்கள்: எட்டாவது தொகுதி, ப.98) என்பது, 'இலக்கிய வேந்தர்' சிங்கப்பூர் **நா.ஆண்டியப்பனைக்** குறித்த நடைச் சித்திரத்திற்குத் தோரண வாயிலாக ஏர்வாடியார் எழுதி இருக்கும் சிறப்புக் குறிப்பு ஆகும். ஆண்டியப்பனின் பிறந்த ஊரான புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ராங்கியத்தைப் பற்றிக் குறிப்பிடும் போது, "ராங்கியம் என்றதுமே, எனக்கு மட்டுமல்ல, யாருக்குமே கவியரசர் **கண்ணதாசன்** 'தென்றல்' இதழில் நடத்திய வெண்பாப் போட்டியில் **'பூவை மேல் எத்தனை பூ'** என்ற ஈற்றடிக்கு வெண்பா எழுதி முதற்பரிசு பெற்ற கவிஞர் **ராங்கியம் எழில்மதி** நினைவுக்கு வந்துவிடுவார்" (ப.99) என ஏர்வாடியார் எழுதிச் செல்வது, அவரது ஆழங்காற்பட்ட இலக்கியப் பயிற்சியினைப் பறைசாற்றுவதாகும். "வேகத்தின் மறுபெயர்தான் ஆண்டியப்பன். நேரத்தின் நேர்த்தியும்

அவரேதான்" (ப.103) என்றும், "நல்ல மனிதரான அவருக்கு நல்லனவாக யாவும் வாய்த்திருப்பது வியப்பன்று" (ப.105) என்றும் நறுக்கான வரிகளால் இந்நடைச் சித்திரத்தில் ஆங்காங்கே ஆண்டியப்பனுக்குப் புகழாரம் சூட்டியுள்ளார் ஏர்வாடியார்.

"காஞ்சி பச்சையப்பனில் இயற்பியல் பட்டமும், சென்னை பச்சையப்பனில் தமிழ் முதுகலைப் பட்டமும் பெற்றவர். 'பச்சையப்பன் படிக்கட்டுகளே பைந்தமிழ் பேசும்' என்பார்கள். முத்தமிழில் முத்துக்குமார் மேலோங்கி இருப்பதில் வியப்பில்லை. சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் திரைப்பாடல்கள் குறித்து ஆய்வு செய்து முனைவராகவும் விளங்குகிறார். தமிழிலும் திரையிலும் தம்மை முதன்மைப்படுத்திக் கொண்டுள்ள முத்துக்குமார் கவிஞராக மட்டுமல்ல, ஒரு முழு மனிதராகவே மிளிர்கிறார் எனலாம்... அவரது உயரங்களை அவரது ஆற்றல் அவருக்குக் கொணர்ந்தாலும், உயர்வை அவரது உன்னதமான பண்புகளே கொடுத்துள்ளன. தொலைபேசினால் வேலை இருக்கிறது என்று தவிர்க்க மாட்டார். தொலைபேச முடியாதபோது ஓய்வாக அவரே அழைத்துப் பேசுவார்" (மனத்தில் பதிந்தவர்கள்: எட்டாவது தொகுதி, பக்.159;160-161) எனக் கவிஞர் **நா.முத்துக்குமாரைப்** பற்றிய நடைச்சித்திரத்தில் ஏர்வாடியார் முன்னிறுத்தி இருக்கும் செறிவான வரிகளைப் படித்த பிறகு நம் உள்ளத்தில் தோன்றும் எண்ணம் இதுதான்: 'தம் மனத்தில் பதிந்த ஓர் ஆளுமையாளரைக் குறித்து எழுதுவதற்கு ஏர்வாடியார் எவ்வளவு மெனக்கெடுகிறார்! உண்மையிலேயே ஓர் ஆளுமையாளரைக் குறித்துக் கிடைக்கின்ற அத்தனைத் தன்மைகளையும் ஒன்றுதிரட்டி, அதனைச் சுவை குன்றாத முறையில் நடைச் சித்திரமாக வடித்துத் தருவது என்பது உண்மையில் ஓர் அரிய கலைதான்!' அந்தக் கலை வடிவம், ஏர்வாடியாருக்கு நன்றாகவே வசப்பட்டுள்ளது. "நூற்றுக் கணக்கான ஆளுமைகளைப் பற்றித் தனித்தனியே எவ்வித அச்சு ஆவணங்களும் இன்றித் தெரிந்து கொள்வது என்பது எத்தகைய கடினமான செயல் என்பது அனைவரும் அறிந்ததே. இந் நிலையில் பலாச்சுளையை உரித்து அதைத்

தேனிலும் தோய்த்து உதட்டருகே கொண்டு வந்து ஊட்டி விடுவதைப் போல இந்நூல் நமக்குப் பயன்படுகிறது" (மனத்தில் பதிந்தவர்கள்: ஐந்தாவது தொகுதி, ப.13) என்னும் கவிஞர் **ஜெயபாஸ்கரனின்** மதிப்பீடு மிகச்சரியானதே.

திரை உலகில் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள், இயக்கம் என்னும் அனைத்துப் பொறுப்புகளையும் ஒரு சேரத் தாங்கி நின்று திறம்படச் செயல்படும் ஆற்றலாளர்கள் உள்ளனர். அதுபோல் 'கவிதை உறவு' இதழில் **என் பக்கம், ஏழாம் பக்கக் கவிதை, மனத்தில் பதிந்தவர்கள், நூல் விமர்சனம்** என்றாற் போல் பல்வேறு கூறுகளையும் பாங்குற ஏற்றுச் செயல்படும் எழுத்தாண்மை - படைப்பாளுமை - ஏர்வாடியாருக்கு நிரம்பவே உள்ளது.

ஏர்வாடியாரின் மொழி ஆளுமை

நடைச் சித்திர நாயகர்களின் ஒட்டுமொத்த ஆளுமைப் பண்புகளையும், சுண்டக் காய்ச்சிய சில சொற்களிலேயே புலப்படுத்திவிடும் வல்லமை ஏர்வாடியாரின் எழுது கோலுக்கு உள்ளது. இவ்வகையில் மனங்கொளத்தக்க சில சித்திர மின்னல்கள் இதோ:

1. உரைவேந்தர் **ஔவை நடராசன்** - 'ஆற்றல் பலவற்றின் அதிசயக் கொள்கலனாக இருப்பவர்' (மனத்தில் பதிந்தவர்கள்: மூன்றாவது தொகுதி, ப.74).

2. பத்மஸ்ரீ டாக்டர் **நல்லி குப்புசாமி செட்டி**- 'தனி ஒரு மனிதருக்கு பல்வேறு துறைகளில் இத்துணை ஆற்றல்களா என வியக்க வைக்கிற வித்தியாசமான மனிதர்' (மனத்தில் பதிந்தவர்கள்: நான்காவது தொகுதி, ப.115).

3. எழுத்தாளர் **ஜெயகாந்தன்** - 'இந்த நூற்றாண்டின் இணையற்ற எழுத்தாளர், இலக்கிய இமயம்' (மனத்தில் பதிந்தவர்கள்: முதல் தொகுதி, ப.278).

4. இயக்குநர் **எஸ்.பி.முத்துராமன்** - 'எளிமை, திறமை, தெளிவு, தொலைநோக்கு, இடையறா உழைப்பு மிகுந்த இம்மனிதர் நட்புக்கு உகந்தவர்' (மனத்தில் பதிந்தவர்கள்: முதல் தொகுதி, ப.205).

5. பதிப்பாளர் **வானதி திருநாவுக்கரசு** - 'இவரின் தோழமை பெறாத பிரபலங்களே இல்லை. ஆனாலும் எளிமைக்கு இவரே எல்லை' (மனத்தில் பதிந்தவர்கள்: மூன்றாம் தொகுதி, ப.187).

6. 'மலேசிய நண்பன்' ஆசிரியர் **ஆதி.குமணன்** - 'மலேசியத் தமிழர்களுக்கு மட்டுமல்ல, தமிழினத்துக்கே பெருமை கொணர்கிற மாசற்ற தமிழர்' (மனத்தில் பதிந்தவர்கள்: இரண்டாம் தொகுதி, ப.39).

7. திருக்குறளார் **வீ.முனிசாமி** - 'நல்லவர், எல்லோருடைய நெஞ்சிலும் நிறைந்திருப்பவர், உணர்வில் உறைந்திருப்பவர்' (மனத்தில் பதிந்தவர்கள்: முதல் தொகுதி, ப.215).

8. உவமைக் கவிஞர் **சுரதா** - 'வாழும் போதே வரலாறு படைத்துள்ள இந்த வளமார்ந்த தமிழ்க்கவிஞர் வணக்கத்திற்கு உரியவர்' (மனத்தில் பதிந்தவர்கள்: முதல் தொகுதி,ப.109).

9. தவத்திரு **குன்றக்குடி அடிகளார்** - 'பட்டிமன்றங் களுக்குப் பாங்கறிவித்தவர்' (மனத்தில் பதிந்தவர்கள்: முதல் தொகுதி, ப.22).

10. எழுத்தாளர் **சிவசங்கரி** - 'பயனுற வாழும் இந்தப் பெண்மணி பாரதி கண்ட புதுமைப் பெண்' (மனத்தில் பதிந்தவர்கள்: முதல் தொகுதி, ப.97).

'The Language of Dickens' என்றாற் போல் மேலை இலக்கியத் திறனிகள், தேர்ந்த படைப்பாளிகளின் மொழிநடை குறித்து நுண்ணாய்வு செய்து தனி நூல்களே எழுதியுள்ளனர். ஏர்வாடியாரின் மொழிநடையும் இங்ஙனம் நுண்ணாய்வுக்கு உட்படுத்தத்தக்க ஒன்றாகும். **அருமையும் எளிமையும் அழகும் ஆற்றலும் கொலுவிருக்கும் தனித்தன்மை வாய்ந்த மொழி ஆளுமைக்குச் சொந்தக் காரரர் அவர்.**

சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், நவின்றோர்க்கு இனிமை, நன்மொழி புணர்த்தல், ஓசையுடைமை,

ஆழமுடைத்தாதல், முறையின் வைப்பு, உலகம் மலையாமை, விழுமியது பயத்தல், விளங்கு உதாரணத்தது ஆகுதல் என நன்னூலார் ஒரு நூலுக்கு இருக்க வேண்டும் எனப் பட்டியல் இட்டுள்ள பத்து வகையான அழகுகளும் ஏர்வாடியாரின் நடைச் சித்திரங்களில் பாங்குறப் பொருந்தி இருக்கக் காண்கிறோம்.

4

கட்டுரை வளம்

"எளிமை, இனிமை, வலிமை இந்த மூன்று மைகளையும் இயல்பாகத் தன்னுள் கொண்டு நேர்மையுடன் எழுதி வருபவர் எழுத்தாளர் கவிஞர் திரு. ஏர்வாடி இராதாகிருஷ்ணன்."

*- கீழாம்பூர் சங்கர சுப்ரமணியம்**

"தினம்
ஒரு வரிதான் படிக்க முடியும்
என்றால்
ஆத்திசூடி படி;

தினம்
இரு வரிகள்தான் படிக்க முடியும்
என்றால்
திருக்குறள் படி;

தினம் மூவரிகள்தான் படிக்கமுடியும்
என்றால்
ஹைகூ படி;

தினம்
நாலு வரிகள்தான் படிக்க முடியும்
என்றால்
நாலடியார் படி;

---

* *வாழ்த்துரை, மனத்தில் பதிந்தவர்கள்: மூன்றாம் தொகுதி, ப.11*

படிக்கவே முடியாது என்றால்
எப்படி?"

என்பார் மூத்த கவிஞர் **ஈரோடு தமிழன்பன்**. நாம் இவ் வாக்கினைச் சற்றே மாற்றி ஏர்வாடியாரின் எழுத்தாளுமையைப் பொறுத்தவரையில் இப்படிக் கூறலாம்:

"தினம்
ஒரு பக்கம் தான் படிக்க முடியும்
என்றால்
ஏர்வாடியாரின்
'என் பக்கக்' கட்டுரை படி
'ஏழாம் பக்கக் கவிதை' படி;

தினம்
இரு பக்கங்கள்தான் படிக்க முடியும்
என்றால்
ஏர்வாடியாரின்
'நூல் மதிப்புரை' படி;

தினம்
ஒருசில பக்கங்கள்தான் படிக்க முடியும்
என்றால்
'மனத்தில் பதிந்தவர்கள்' படி.

படிக்கவே முடியாது என்றால்
எப்படி?"

இதழாசிரியர், கவிஞர், நாடக ஆசிரியர், புனைகதை ஆசிரியர், கட்டுரையாளர், நடைச்சித்திர ஆசிரியர், திறனாய்வாளர், சொற்பொழிவாளர், ஊடகவியலாளர் எனப் பன்முகத் திறன்களைத் தன்னகத்தே கொண்ட ஓர் ஆற்றல்சால் படைப்பாளி கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன். அவரது 99-ஆவது படைப்பு **'சொந்தமாக ஒரு சொர்க்கம்'** சங்கச் சான்றோர் **கபிலர்**

ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவித்ததற்காகப் பாடிய குறிஞ்சிப் பாட்டில் 99 வகையான மலர்களைப் பட்டியல் இட்டிருப்பது இங்கே நினைவுகூரத் தக்கது. வாழ்க்கையை வசப்படுத்திக் கொள்ளுவதற்கான வழிவகைகளை நிரந்தினிது கூறும் 20 கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல்.

கட்டுரைக்கான அடிப்படைத் தகவல்களைத் தேடித் தொகுப்பதிலும், தொகுத்தவற்றைச் சிறுசிறு உட்பிரிவுகளாக வகைப்படுத்துவதிலும், அத்துடன் நின்று விடாமல், கட்டுரையின் செய்தியை இரத்தினச் சுருக்கமாக எடுத்துரைப்பதிலும் ஏர்வாடியாருக்கு நிகர் ஏர்வாடியார் தான்! பதச்சோறாக, **'அழுதால் கொஞ்சம் நிம்மதி'** (பக்.45-50) என்னும் கட்டுரையின் அமைப்பும் அழகும் குறித்து இங்கே அலசி ஆராயலாம்.

தொல்காப்பியம் மெய்ப்பாட்டியலில் குறிப்பிடும் எட்டுவகையான மெய்ப்பாடுகளில் அழுகையும் இடம்பெறுவதைச் சுட்டித் தொடங்குகின்றது கட்டுரை. முன்னைப் பழைய இலக்கண, இலக்கிய நூல்களில் ஏர்வாடியாருக்கு உள்ள பயிற்சியை இதனால் உணர முடிகின்றது.

" 'ஆனந்தா! என் கண்ணையே உன்னிடம் ஒப்படைக்கிறேன். இதில் ஆனந்தக் கண்ணீரே வரவேண்டும்' என்பது அந்நாளில் கைதட்டல் வாங்கிய புகழ்பெற்ற திரைப்பட வசனம்" என்றாற் போல் சுவையாக எழுதிச் செல்லும் சதுரப்பாடும் கைவரப் பெற்றவராக ஏர்வாடியார் விளங்குகின்றார்.

"பிரிந்தவர் மீண்டும் சேர்ந்திடும் போது, அழுதால் கொஞ்சம் நிம்மதி" என்ற கவியரசர் **கண்ணதாசனின்** புகழ்பெற்ற திரைப்படப் பாடல் வரிகள், "கண்ணீரால் கழுவப்பட்ட கண்களுக்குத் தான் புனித தரிசனங்கள் கிடைக்கும்" என்னும் ஆங்கிலக் கவிஞர் **பிரான்சிஸ் தாம்சனின்** அருமையான மேற்கோள், "மன அழுத்தத்தை ஏற்படுத்தும் ஹார்மோன்களை அழுகை கரைப்பதால் மனம் இலகுவாகிறது" என மினசோட்டா பல்கலைக்கழகப் பேராசிரியர் **வில்லியம் ஹெப்ஃரி** தெரிவிக்கும் அறிவியல் உண்மை,

லார்ட் டென்னிசன் எழுதியுள்ள 'த வுமன் ஷீ வெப்ட்' என்ற படைப்பில் இடம்பெறும் ஓர் உருக்கமான காட்சி, ஆண்களை விட பெண்களே அதிகமாக அழுவதாக ஓர் ஆய்வறிக்கை கூறும் அரிய தகவல், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி 'அழுதால் உனைப் பெறலாமே' என இறைவனிடத்தில் உருகி உருகிப் பாடிய **மாணிக்க வாசகரின்** 'திருவாசகம்', "மழையில் நனைவது எனக்குப் பிடிக்கும், ஏனெனில் என் கண்ணீர் அப்போது யாருக்கும் தெரியாது" (ப.49) என்னும் உலகப் புகழ்வாய்ந்த நகைச்சுவை நடிகர் **சார்லி சாப்ளினின்** அனுபவ மொழி, வான்புகழ் **வள்ளுவரின்** திருக்குறள், **இராமலிங்க அடிகளாரின்** திருவருட்பா, **பாரதியார்** பாடல், **டி.எஸ்.எலியட்டின்** கருத்து ஆகியவற்றை ஒல்லும் வகையில் பொருத்தமாகக் கையாண்டு ஏர்வாடியார் தம் கட்டுரைக்கு வண்ணமும் வனப்பும், வலிமையும் வளமும் சேர்த்திருப்பதை எவ்வளவு பாராட்டினாலும் தகும். நிறைவாக, அழுகைச் சுவையைப் பொருளாகக் கொண்ட கட்டுரையை நகைச்சுவையான ஒரு நிகழ்ச்சியை எடுத்துக்காட்டி முடித்திருப்பதும் ஏர்வாடியாரின் தனித்தன்மையைப் பறைசாற்றும்.

வித்தியாசமான முறையில் எடுப்பாகத் தொடங்குவது-வழிகாட்டும் வரை வரிகளையும், நெகிழ்வான வாழ்க்கை நிகழ்ச்சிக் குறிப்புக்களையும், படிப்பவரை ஈர்க்கும் குறுங் கதைகளையும் கையாண்டு சுவையாக வளர்த்துச் செல்வது-முத்தாய்ப்பான வரிகளோடு முடிப்பது - இதுவே ஏர்வாடியாரின் கட்டுரைகளில் சிறந்து விளங்கும் வெற்றிக் கூட்டணி ஆகும். கட்டுரைகளின் முழுப் பொருளையும் ஒட்டுமொத்தச் செய்தியையும் புலப்படுத்தும் வகையில் அழகிய தலைப்புக்களைச் சூட்டுவதும் ஏர்வாடியாரிடம் காணப்படும் தனிப்பெரும் பண்பு ஆகும்.

"தமிழில் எனக்கு மிகவும் பிடித்த வார்த்தை **'மன்னிப்பு'** (திரு.விஜயகாந்த் மன்னிப்பாராக!). இது கொஞ்சம் வித்தியாசமாக மட்டுமல்ல. பைத்தியக்காரத்தனமாகக் கூடத் தோன்றும். ஆனால் மன்னிப்பதும், மன்னிக்க வேண்டுவதும் எவ்வளவு பாதுகாப்பு என்பதை என்னைப்

போன்ற அனுபவசாலிகளே அதிகம் அறிவர்" (ப.31); இப்படி வித்தியாசமான முறையில் தொடங்குகின்றது ஏர்வாடியாரின் **'மன்னிப்பு'** என்னும் கட்டுரை.

"இப்போது சொல்லுங்கள்; உங்களுக்கு விலை வேண்டுமா? மதிப்பு வேண்டுமா? அல்லது உங்கள் வாழ்க்கை விலைமதிப்பற்றதாக விளங்க வேண்டுமா?" (ப.56) என்னும் பொருள் பொதிந்த வினாக்களைத் தொடுத்து, படிப்பவரைச் சிந்திக்கத் தூண்டும் விதத்தில் முடிவடைகின்றது. **'விலை வேறு மதிப்பு வேறு'** என்னும் கட்டுரை.

"சொந்தமாக நாம் வாங்கும் இந்த சொர்க்கத்துக்கு நாம் செலவிட வேண்டிய சிறந்த மூலதனம் பணம் அல்ல, நல்ல மனம் தான். பணம் என்பது வானம் வசப்பட நமக்கு உதவலாம். ஆனால் **வாழ்க்கை வசப்படுவது நம் மனத்தால் மட்டுமே சாத்தியமாகும். வாழ்க்கையை வசப்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஒரு சொர்க்கம் சொந்தமாகி விடும்"** (ப.44) என்னும் முத்தாய்ப்பான வரிகளுடன் நிறைவு பெறுகின்றது **'சொந்தமாக ஒரு சொர்க்கம்'** என்னும் கட்டுரை.

"மனித மனம் அமைதியைத் தேடி அலைகிறது. அது எங்கே கிடைக்கும் என்றும் அலைக்கழிக்கிறது" (ப.57) எனத் தொடங்கும் **'அமைதியான மனதினிலே...'** என்னும் கட்டுரை, "இதிலிருந்து நாம் அமைதி வெளியே இல்லை. அது நம் அகத்தில்தான் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்" (ப.62) என்னும் வரிகளுடன் முடிவடைவது சிறப்பு; முத்தாய்ப்பு. இங்ஙனம் தொடக்கமும் முடிவும் **இயைபு நயம்** மிளிரக் கட்டமைக்கப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

நட்பின் மேன்மையைப் பறைசாற்றும் **'பழகிப் பாருங்கள்'** என்னும் கட்டுரையின் முடிவில், **'நட்பு என்பது விலைக்கு வாங்க முடியாத கடவுளின் பரிசு'** என்ற அறிஞர் **பிரான்சிஸ் ஃபார்மரின்** கருத்தினை மேற்கோள் காட்டும் ஏர்வாடியார், "கடவுளிடம் கேளுங்கள். அவர் உங்களுக்கும் ஒரு நண்பரைப் பரிசாகத் தருவார்" (ப.150) எனக் குறிப்பிடுவது இலக்கிய நயத்தின் சிகரம்.

ஏர்வாடியாரின் படிப்பறிவும் பட்டறிவும் உண்மையறிவும் இந்நூல் முழுவதும் சுடர் விட்டு நிற்கக் காண்கிறோம். **புத்தர் பெருமான், நபிகள் நாயகம், ஏசு பெருமான், ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர், அண்ணல் காந்தியடிகள், பண்டித ஜவகர்லால் நேரு, டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம், லியோ டால்ஸ்டாய், பேரறிஞர் சாக்ரடீஸ், அன்னை தெரசா, வேதாத்திரி மகரிஷி, கபீர் தாசர், சர்ச்சில், ராக் பெல்லர், வான்புகழ் வள்ளுவர், மாக்கவி பாரதி, கவியரசர் கண்ணதாசன், கவிக்கோ அப்துல் ரகுமான், கவிஞர் வாலி, பேரறிஞர் அண்ணா, ஞான பாரதி வலம்புரி ஜான், முன்னேற்றச் சிந்தனையாளர் அப்துற் றஹீம், கவிப்பேரரசு வைரமுத்து** *முதலான 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிகள்'- உண்மை ஒளி வீசும் அனுபவ உண்மைகள் - இந்நூலில் எங்கும் பல்கிக் காணப்படு கின்றன. உள்ளம் கவரும் உதாரணங்கள் சில இதோ:*

- **"தாயின் மடியில் தான் சொர்க்கம் இருக்கிறது."**

  - நபிகள் நாயகம்

- **"விட்டுக் கொடுப்பவர்கள் கெட்டுப் போவதில்லை; கெட்டுப் போகிறர்கள் விட்டுக் கொடுப்பதில்லை."**

  - பேரறிஞர் அண்ணா

- **"இறைவன் நமக்குத் தருகிற பிரசாதம் என்பது மூச்சு மட்டுமே."**

  - கபீர்தாசர்

- **"வாக்குறுதி கொடுக்கலாம், தவறில்லை. தவறும் போது ஏன் நிறைவேற்ற முடியவில்லை என்பதற்கான காரணங்களையும் முன்னதாகத் திட்டமிட்டு வைத்துக் கொள்ள வேண்டும்."**

  - சர்ச்சில்

"தெய்வத்தை ஒரு நம்பிக்கையாக மட்டுமே வைத்துக் கொள்ள வேண்டும். அதற்காக அதை மட்டுமே நம்பி இருக்கவும் முடியாது. **நம்பிக்கையோடு உழைப்பவர்க்கே தெய்வம் துணையிருக்கும்"** *(ப.65) என்பது ஏர்வாடியார்*

தம் கட்டுரை ஒன்றில் தெரிவித்திருக்கும் வாழ்க்கை நெறி; அனுபவ உண்மை.

"கையில்லை என்பதை விடவா கையில் இல்லை என்கிற கவலை?" என்னும் ஏர்வாடியாரின் கருத்து படிப்பவர் நெஞ்சங்களில் தன்னம்பிக்கையை விதைக்க வல்லதாகும்.

'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?' என்பது ஆன்றோர் அமுத மொழி. இதனை வழிமொழிவது போல், "கடின உழைப்பைப் போல் எதுவும் சிறந்ததாகவும் உயர்ந்ததாகவும் இருக்க முடியாது. கடினமான உழைப்பு என்பது ஊழ் எனும் விதியைக் கூட முனைமுறித்துப் போட்டுவிடும் என்பதால் தான், 'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்று பவர்' என்று **வள்ளுவப் பெருந்தகை** வாய்மலர்ந்து அருளியிருக்கிறார்" (பக்.125-126) எனத் திருக்குறளை மேற்கோள் காட்டி ஏர்வாடியார் தம் கருத்தினை வலியுறுத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஏர்வாடியாரின் கட்டுரைத் தலைப்புக்கள் அவரது கலை உள்ளத்தையும் இலக்கியப் புலமையையும் ஒருங்கே புலப்படுத்த வல்லனவாக விளங்குகின்றன.

'சொந்தமாக ஒரு சொர்க்கம்', 'நல்லது நடந்தால் நல்லது', 'அடுத்த தலைமுறை', 'முதுமை ஒரு வதமல்ல... வரம்' என்னும் கட்டுரைத் தபைப்புக்கள் ஏர்வாடியாரின் கலை உள்ளத்திற்குக் கட்டியம் கூறி நிற்கின்றன.

'விலை வேறு மதிப்பு வேறு', 'சேர்ந்தும் சார்ந்தும்...', 'படிப்போம் பயன்பெறுவோம்', 'எளிமை - இனிமை-வலிமை', 'பழகிப் பாருங்கள்', 'சின்னச் சின்ன பொய்கள்' என்னும் தலைப்புக்களே கட்டுரைகளின் ஒட்டுமொத்தச் செய்திகளையும் குறிப்பாகப் புலப்படுத்தி விடுகின்றன.

'ஆதலினால் காதல்', 'செய்யும் தொழிலே தெய்வம்', 'அழுதால் கொஞ்சம் நிம்மதி', 'அமைதியான மனதினிலே...' ஆகியன ஏர்வாடியாரின் ஆழ்ந்த இலக்கியப் பயிற்சியையும் புலமையையும் காட்டும் கட்டுரைத் தலைப்புக்கள் ஆகும்.

'மன்னிப்பு', 'ஒப்பீடுகள்', 'வாக்குறுதிகள்' என்றாற் போல் இரத்தினச் சுருக்கமான ஒற்றைச் சொற்களையே கட்டுரைத் தலைப்புக்களாகக் கையாண்டிருக்கும் ஏர்வாடியார், 'இறைவனுக்கென்ன இதுவா வேலை?' என்பது போல் வினா வடிவில் சிந்திக்கத் தூண்டும் தலைப்புக்களைத் தம் கட்டுரைகளுக்குச் சூட்டுவதும் உண்டு.

ஏர்வாடியாரின் எழுத்து நடையில் தூக்கலாகக் காணப்பெறுவது **எள்ளலோடு கூடிய மென்மையான நகைச்சுவை உணர்வு; குறும்பும் கிண்டலும் சரி விகிதத்தில் கலந்த அங்கதச் சுவை.** இதற்கான சுவையான சான்றுகள் ஏர்வாடியாரின் கட்டுரைகளில் அங்கிங்கு எனாத படி எங்கும் நீக்கமற நிறைந்து காணப்படுகின்றன.

சாலையில் ஒரு பெண்ணும் ஓர் ஆணும் நடந்து போய்க் கொண்டிருந்தால் காதலர்களா, கணவன் மனைவியா என்பதை எளிதாகக் கண்டுபிடித்து விடலாம். எப்படி என்கிறீர்களா? இதோ, ஏர்வாடியாரின் சுவையான மறுமொழி:

"ஆண் பேச, பெண் அமைதியாகக் கேட்டுக் கொண்டு வந்தால் அது காதல். ஆண் அமைதியாக இருக்க, பெண் மட்டுமே தொணதொணவென்று பேசிக் கொண்டிருந்தால் அவர்களுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது என்று பொருள்."

ஏர்வாடியார் இயல்பான நகைச்சுவை உணர்வுக்குச் சொந்தக்காரரர். இதனை மெய்ப்பிக்கும் ஓர் எடுத்துக்காட்டு இதோ:

" 'உன்னை ராணியைப் போல அல்லது ராஜாத்தியைப் போல வைத்திருப்பேன்' என்கிறவன் எல்லாம் 'வைத்தி'ருப்பதற்காக அந்த வாக்குறுதியைப் பயன்படுத்து கிறவனே தவிர நிறைவேற்றுவதற்கு அல்ல. சொன்னபடி செய்திருந்தால் நாட்டில் எத்தனை ராணிகளும் ராஜாத்திகளும் இருந்திருக்க வேண்டும். இல்லையே!" (பக்.135-136).

இந்நூலை மனம் கலந்து பயிலும் அறிமுகப் பேச்சாளருக்கு மட்டுமன்றி, வெற்றிப் பேச்சாளருக்கும்

நிறையத் தகவல்கள் கிடைக்கும்; பயனுள்ள வழிகாட்டுதல்கள் கிடைக்கும்; பலத்த கர ஒலியையும் சிரிப்பொலியையும் பெற்றுத் தரும் சுவையான குறுங்கதைகள் கிடைக்கும். ஓர் எடுத்துக்காட்டு: **'பொய் சொன்ன வாய்க்கு போஜனம் கிடைக்காது'** என்பது நாம் காலங்காலமாகக் கேள்விப்பட்டு வரும் ஒரு பழமொழி. இதற்கு அரண் சேர்க்கும் வகையில் ஏர்வாடியார் எடுத்தாண்டுள்ள ஒரு குறுங்கதை வருமாறு:

"அரபு நாடு ஒன்றுக்குப் பிழைக்கப் போன இரண்டு இந்திய இளைஞர்கள். ராமசாமி, கந்தசாமி என்று வைத்துக் கொள்வோம். வேகாத வெயிலில் நடந்து களைத்துப் போயிருக்கிறார்கள். வழியில் ஒரு பள்ளிவாசல் தெரிகிறது. 'அங்கு போய் சற்று இளைப்பாறுவோம். அங்கே இருக்கிற இஸ்லாமிய சகோதரர்கள் ஏதேனும் பருகவும், உண்ணவும் தந்தால் பசியாறுவோம்' என்கிறான் ராமசாமி. 'அவர்கள் இஸ்லாமியர்களானதால் நம்மை நாம் இஸ்லாமியர்கள் என்று சொல்லிக் கொள்வோம். உணவு தருவதோடு கூடுதலாகப் பரிவும் பாசமும் காட்டுவார்கள்' என்கிறான் கந்தசாமி. ராமசாமிக்கு அப்படிப் பொய் பேசுவதில் உடன்பாடில்லை. மறுக்கிறான்.

பள்ளிவாசலுக்குப் போனதும் கந்தசாமி தன்னை அப்துல் காதர் என்று அறிமுகம் செய்து கொள்கிறான். ராமசாமியோ தன்னை ராமசாமி என்றே அறிமுகம் செய்து கொள்கிறான். தன்னை ஓர் இஸ்லாமியர் என்று அறிமுகப்படுத்திக் கொண்ட கந்தசாமியை இஸ்லாமிய முறைப்படி ஆரத் தழுவி வரவேற்று, 'இது ரமலான் மாதம். நிச்சயமாக நோன்பு மேற்கொண்டிருப்பீர்கள். அதனால் களைப்பாகத் தோன்றுகிறீர்கள். உள்ளே சென்று ஓய்வெடுங்கள். மாலை நோன்பு துறக்கலாம்' என்று பச்சைத் தண்ணீர் கூடக் கொடுக்காமல் உள்ளே அனுப்பி விடுகிறார்கள். 'இதோ இவர் ராமசாமி. இந்து சகோதரர். இவர் அருந்தப் பழ ரசமும் உணவும் கொண்டு வாருங்கள்' என்கிறார்கள். இப்போது கந்தசாமிக்கு மட்டுமல்ல நமக்கும் புரியுமே, 'பொய் சொன்ன வாய்க்கு போஜனம் இல்லை' என்று" (பக்.117-118).

"காப்பியக் கவிஞர் வாலி சொல்வதை நினைவிற் கொள்வது இத்தருணத்தில் நல்லது.

புத்தகங்களுக்குச் செலவழி...
அதுவே உயரச் செல வழி" (ப.76)

என்பது போல் இந்நூலில் ஆங்காங்கே ஏர்வாடியார் எடுத்தாண்டிருக்கும் மேலோரின் மேற்கோள்களை ஒரு வளரும் பேச்சாளர் குறிப்பெடுத்து வைத்துக் கொண்டு, அவற்றைத் தம் பேச்சின் ஊடே பயன்படுத்திக் கொள்ளும் திறமையை வளர்த்துக் கொண்டால், காலப் போக்கில் அவர் பேச்சுத் துறையில் வெற்றி பெறலாம்; முத்திரை பதிக்கலாம்.

அருமையும் எளிமையும் அழகும் கொலுவிருக்கும் ஆற்றல் சான்ற எழுத்தாளுமை படைத்தவர் ஏர்வாடியார். **"முதுமை என்பது வரம். வாழ்க்கையில் நமக்கு நிகழ்கிற வதமல்ல, அது வரம்"** *(ப.99)* என்னும் இரு வரிகளே போதும், இக்கருத்தினை நிலைநாட்ட.

***நி**றைவாக ஒரு கருத்து:*

"காகிதத்துக்கு கனம் சேர்ப்பது அதில் எழுதப்படுகிற சிந்தனை மட்டுமே! வெற்றுக் காகிதத்துக்கு ஒரு விலை இருக்கிறது என்றால் புத்தகத்துக்கு விலையோடு சேர்த்து ஒரு மதிப்பும் இருக்கிறது. காரணம் அதில் ஒரு படைப் பாளனின் சிந்தனை இருக்கிறது" *(ப.71)*. ஆம்; ஏர்வாடியாரின் 'சொந்தமாக ஒரு சொர்க்கம்' என்னும் இந்நூலில் அவரது விழுமிய சிந்தனைகள் பொதிந்து கிடக்கின்றன. அவை நமக்குச் **'சொந்தமாக ஒரு சொர்க்கம்'** உருவாக்கிக் கொள்வதற்கான வழிவகைகளைக் கற்றுத் தருகின்றன; **'சேர்ந்தும்... சார்ந்தும்'** வாழச் சொல்லித் தருகின்றன; **'எளிமை - இனிமை - வலிமை'; இவை மூன்றும்தான் மகிழ்ச்சிக்கான மந்திரங்கள்** என அழுத்தம் திருத்தமாக மொழிகின்றன; ஒற்றை வரியில் குறிப்பிடுவது என்றால், **'நமக்கு அடுத்த தேர்தல் முக்கியம் அல்ல. அடுத்த தலைமுறை முக்கியம்'** என்பதை 'நச்'சென்று உணர்த்தி நிற்கின்றன!

5

நயத்தக்க நகைச்சுவையாளர்

"சிரித்த முகம் மனிதத் தன்மையைக் காட்டுகிறது, ஆண்மையை நிலைநாட்டுகிறது, அன்பைப் பூட்டுகிறது, துயரை ஓட்டுகிறது, பகையை வாட்டுகிறது, உறவைக் கூட்டுகிறது, இன்பம் ஊட்டுகிறது"

*- ஜி.சுப்பிரமணிய பிள்ளை**

எண் வகையான இலக்கியச் சுவைகளுள் முதல் இடத்தில் இருப்பது **நகை**. "நகையே அழுகை இளிவரல் மருட்கை, அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று, அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப" (1197) என்பது தொல்காப்பிய நூற்பா. **'விளையாட்டுப் பொருட்டாகிய நகையை முன்வைத்தான்'** (தொல்காப்பியம்: பொருளதி காரம், பேராசிரியம், ப.5) என்பது **பேராசிரியர்** எண் வகை மெய்ப்பாட்டு வரிசையில் தொல்காப்பியர் நகையை முன் வைத்ததற்குக் கூறும் நயமான காரணம் ஆகும். **'இடுக்கண் வருங்கால் நகுக'** (621) என்பது வள்ளுவர் மனித குலத்திற்கு வழங்கும் அனுபவ மொழி; வாழ்வியல் பாடம். மேலும், பிறிதொரு குறட்பாவில் அவர், **'யாரோடும் சிரித்துப் பழகத் தெரியாதவர்க்கு இப்பேருலகம் பகற்காலத்தும் இருளாகத் தோன்றும்'** என்பார்:

> **"நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**
> **பகலும்பாற் பட்டன்று இருள்" (குறள்:999)**

என்பது வள்ளுவர் வாக்கு.

---

* வள்ளுவர் விருந்து,ப.58.

"கறுப்பா, வெளுப்பா என்பதை எடுத்துக்
காட்டும் கண்ணாடி சிரிப்பு...
துன்ப வாழ்விலும் இன்பம் காணும்
விந்தை புரிவது சிரிப்பு! - இதைத்
துணையாய்க் கொள்ளும் மக்களின் முகத்தில்
துலங்கிடும் தனிச்செழிப்பு!"

(உடுமலை நாராயண கவியின் பாடல்கள்,ப.133)

எனச் சிரிப்பின் சிறப்பைச் சீர்தூக்கிப் பார்த்துத் தம் திரைப்பாடல் ஒன்றில் எடுத்துரைப்பார் **உடுமலை நாராயண கவி.**

"எந்த உதடும் பேசத் தெரிந்த
சர்வ தேச மொழி சிரிப்பு...

ஒவ்வொரு முறை சிரிக்கும் போதும்
இருதயம் ஒட்டடையடிக்கப்படுகிறது...

சிறுசிறு சொர்க்கம் சிரிப்பு
ஜீவ அடையாளம் சிரிப்பு...

மரணத்தைத் தள்ளிப்போடும்
மார்க்கம்தான் சிரிப்பு"

(பெய்யெனப் பெய்யும் மழை,பக்.56,57,60)

எனத் தம் பங்கிற்குச் சிரிப்புக்குப் புகழாரம் சூட்டுவார் கவிப்பேரரசு **வைரமுத்து.**

இங்ஙனம் முன்னைய தொல்காப்பியர் முதலாக இன்றைய வைரமுத்து வரையிலான கவிஞர்கள் யாவரும் நகைச்சுவையின் தேவையை - சிரிப்பின் சிறப்பினை - புன்னகையின் பெருமையை - புன்முறுவலின் ஆற்றலைப் பலபடப் பாராட்டிப் பாடியுள்ளனர். வாழையடி வாழை என வரும் இப் படைப்பாளர்களின் வரிசையில் கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணனும் உரிய இடத்தில் சேர்ந்து கொண்டுள்ளார்.

இயல்பு + இதம் + இங்கிதம் = ஏர்வாடியாரின் நகைச்சுவை

"உச்சிதனை முகந்தால் தமிழுக்குக் கர்வம் ஓங்கி வளரும் பெயர் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்.

தமிழர்களின் கவிதை உறவு. கவியரசர் தொடங்கி வைத்த கவிதை இயக்கம். இதயத்தைக் கண்களில் ஒளிர விட்டிருக்கும் வெள்ளை மனிதர். காற்றும் கண்ணீரும் போல அன்பும் எளிமையுமான பண்பாளர். **மகுடத்தை மற்றவர்களுக்குச் சூட்டி அழகு பார்க்கும் தாய்மையாளர்"** என்னும் கவிஞர் **பழநிபாரதியின்** சொல்லோவியத்திற்கு மேலாக வேறு எவரும் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணனின் ஆளுமையை அடையாளம் காட்டிவிட முடியாது. அவரது குருதியில் ஒன்றாகக் கலந்துவிட்ட முத்திரைப் பண்பு நகைச்சுவை.

ஏர்வாடியாரைப் பார்த்து அவரது நண்பர் ஒருவர் விளையாட்டாக, **"உங்கள் வீடு என்ன சிதம்பரமா? மதுரையா?"** என்று கேட்டாராம். வேறொன்றும் இல்லை. 'சிதம்பரம்' என்றால் குடும்பத்தில் அய்யாவின் ஆட்சி என்றும், 'மதுரை' என்றால் அம்மாவின் ஆட்சி என்றும் பொருள். அந்த நேரத்தில் அதை மறந்துவிட்டு, **'சிதம்பரம்தான்!'** என்றாராம் ஏர்வாடியார். அதற்கு அவர் கூறும் காரணம்:

"உண்மைதான். எங்கள் வீட்டைப் பொறுத்தவரை சிதம்பரம்தான்... ஆனால் விபரம் தெரிந்தவர்களுக்குத் தெரியும் **என் மனைவியின் திருநாமம் திருமதி சிதம்பரம்மாள்** என்பது. இதை நான் பெருமையாக என் மனைவியிடம் கூறுவதுண்டு, அவள் பாவம் மகிழட்டுமே என்று. ஆனால் அவள் அதை ரசிக்கமாட்டாள். காரணம் அவள் படுகிற பாடு அவளுக்குத் தான் தெரியும்" (எழுத்துச் சிறகுகள், ப.75).

நகைச்சுவை மிளிரும் கவியரங்க அனுபவங்கள்

ஏர்வாடியாரின் கவியரங்க அனுபவங்கள் சுவை மிக்கவை; கேட்போர் நினைவில் நிலைத்து நிற்க வல்லவை. அவரது கவியரங்கக் கவிதைகளில் நயத்தக்க நாகரிகமான முறையில் நகைச்சுவை உணர்வு ஆட்சி செய்யக் காணலாம். ஓர் எடுத்துக்காட்டு: சென்னை ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியின் சார்பில் நடைபெற்ற ஒரு கவியரங்கில் ஏர்வாடியாருக்குத் தரப்பட்டிருந்த தலைப்பு 'குடும்பக்

கட்டுப்பாடு!' அதில் அவையினரால் பெரிதும் வரவேற்கப் பெற்ற அவரது நகைச்சுவை:

" 'குடும்பத்தைக் கட்டுப்படுத்த என்ன செய்ய வேண்டும்?' என்று என்னைக் கேட்டால் **'எதுவும் செய்யாது இருப்பதே குடும்பக் கட்டுப்பாடு'** என்று ஒரு போடு போட்டேன். மிக சீரியஸாக எழுதிய பல வரிகளைக் காட்டிலும் இந்த வரிகளே அதிகம் வரவேற்கப் பட்டன. புலவர் (கவியரங்கத் தலைவர் **புலமைப்பித்தன்**) என்னைப் பெரிதும் பாராட்டிவிட்டு 'செய்தக்க செய்யாமை யானும் கெடும்' என்பதை, இனி **'செய்தக்க செய்யாமையும் நலம்'** என்று நாம் நினைக்க வேண்டும் என்றதும் இன்னும் அதிகமாய்க் கரவொலி எழுந்தது. அதற்குப் பிறகு, 'குடும்பக் கட்டுப்பாட்டுக்கு என்ன செய்ய வேண்டும் என்றால் எதுவும் செய்யக்கூடாது' என்கிற விவகாரம் இன்று வரை பலரால் பத்திரிகைகளில் துணுக்காகி விட்டது" (**எழுத்துச் சிறகுகள்**,ப.20)

இன்று பட்டிமன்றங்களிலும் பத்திரிகைகளிலும் பெரிதும் வரவேற்கப் பெறும் பல நகைச்சுவைத் துணுக்கு களுக்கு மூலம் ஏர்வாடியார் என்பதை அறியும்போது வியப்பே மேலிடுகின்றது.

கவிதை மின்னல்களில் பளிச்சிடும் நகைச்சுவை

ஒழுங்கு செறிந்த மரபுக் கவிதை வடிவில் - புதுக்கவிதைச் சாயலில் - ஹைகூ பாணியில் அமைந்த தமது கவிதைப் பொறிகளையும் (Sparks) வீச்சுக்களையும் (Flashes) **'கவிதை மின்னல்கள்'** என்னும் தலைப்பில் ஏர்வாடியார் தனி ஒரு நூலாகத் தொகுத்துத் தந்துள்ளார். இக் கவிதைத் துளிகள் அரங்குகளிலும் இதழ்களிலும் நூல்களிலுமாய் இடம்பெற்று கலைஞர்கள் இடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றவை; ஒட்டுமொத்த அவையினரின் பலத்த கைதட்டலால் அரங்கத்தையே அதிர வைத்தவை.

வாழ்வில் அன்றாடம் கேட்கும் விளம்பர வாசகங்களைக் கூட நயமான நகைச்சுவை ஆக்கிவிடும் வல்லமை படைத்தவர் ஏர்வாடியார். பதச்சோறு ஒன்று:

"செய்கூலி இல்லை
சேதாரம் இல்லை
கல்லுக்கு விலை இல்லை"

என்று முழங்கிய விளம்பர வாசகத்தை நம்பித் தங்கத்தை விலைபோட்டு வாங்கி, வாழ்வில் எதிர்பாராத ஒரு நெருக்கடி வந்தபோது, விற்கச் சென்ற போதுதான் விவரமே தெரிந்ததாம். அது என்ன விவரம் என்று கேட்கிறீர்களா? இதோ, ஏர்வாடியாரே அந்த விவரத்தைப் பளிச்சென்று போட்டு உடைக்கின்றார், கேளுங்கள்:

"விற்கப் போனபோது தான்
விவரமே தெரிந்தது
வாங்கியதும் தங்கமே இல்லை."

(கவிதை மின்னல்கள், ப.46)

எந்த அவையில் மேற்கோள் காட்டினாலும், அரங்கையே அதிரச் செய்யும் உத்தரவாதமான நகைச்சுவை இது!

'அறிதோறு அறியாமை கண்டற்றால்' (1110) என்பது திருக்குறள் காமத்துப்பாலில் 'புணர்ச்சி மகிதல்' அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள ஓர் அற்புதமான உவமை. இதனை எளிமைப்படுத்தி,

"தெரிந்தபோதுதான்
தெரிந்தது
தெரியாதிருந்தது" (ப.18)

என முரண் சுவை மிளிரும் கவிதை மின்னலாகப் படைத்து, படிப்பவர் இதழ்களில் குமிண் சிரிப்பினைத் தோற்றுவிக்கின்றார் ஏர்வாடியார்.

"மருத்துவர் கூறினார்:
'நான் இருக்கிறேன் கவலை வேண்டாம்!'
சொன்னவாறே
அவர் இருக்கிறார்...
நோயாளிதான் இல்லை!" (ப.32)

என்பது நகைச்சுவைத் துணுக்கு வடிவில் அமைந்த பிறிதொரு கவிதை மின்னல்.

"பேய் இருக்கிறதா...?
ஆம்... தாய் வீட்டுக்குப்
போய் இருக்கிறது" (ப.96)

என்பது இன்றைய பட்டிமன்றங்களில் அடிக்கடி மேற்கோள் காட்டப்பெற்று, அவையினரின் கர ஒலியையும் சிரிப்பொலியையும் ஒருங்கே பெற்றுத் தரும் கவிதை மின்னல் ஆகும்.

அங்கதச் சுவை துலங்கும் அரசியல் மற்றும் சமூகச் சாடல்கள்

நகைச்சுவையைத் தோற்றுவிப்பதில் அங்கதத்திற்குத் (Satire) தனித்த ஓர் இடம் உண்டு.

'உழைத்தால் உயரலாம்' என்னும் குறிக்கோள் வாசகத்தோடு, 'உங்கள் முதலாளிகள்' என்னும் இரண்டே சொற்களைக் கையாண்டு,

"உழைத்தால் உயரலாம்
உங்கள் முதலாளிகள்"
(கவிதை மின்னல்கள்,ப.28)

என்னும் அங்கத வடிவிலான ஓர் ஆற்றல்மிகு கவிதை மின்னலைத் தந்துள்ளார் ஏர்வாடியார்.

'அரசியல் அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்' என்னும் பழமொழி இன்று அடியோடு மாறிவிட்டது; அயோக்கியர்களின் முதல் புகலிடமாக ஆகிவிட்டது. வாழைப் பழத்தில் ஊசியை ஏற்றுவது போல், மெல்லிய அங்கதச் சுவை விளங்க இன்றைய அரசியல் போக்கினைச் சாடுகின்றார் ஏர்வாடியார்.

"சிரிக்க வைக்கிறார்கள்
எழுத்தில் பாக்கியம் ராமசாமி
திரையில் வடிவேலு, விவேக்
மேடையில் லியோனி
அரசியலில் எல்லோரும்..."
(யாரும் யாராகவும்...ப.60)

'அரசியலில் எல்லோரும்...' என்னும் இக் கவிதையின் முடிப்பு முத்தாய்ப்பு.

'வாரிசு அரசியல்' என்பது இன்றைய அரசியல் உலகில் மேலோங்கி நிற்கும் இமாலய அவலம் ஆகும். இதனைத் தமக்கே உரிய கேலியும் கிண்டலும் கலந்த பாணியில் ஒரு கவிதையில் விமர்சனத்திற்கு உள்ளாக்கி இருக்கின்றார் ஏர்வாடியார். 'இளைஞர்கள் அரசியலுக்கு வர வேண்டும்' என இன்றைய அரசியல் தலைவர்கள் ஒருமித்த குரலில் வரவேற்பது எல்லாம் சரிதானாம்! ஆனால், பொட்டில் அடித்தாற்போல் ஏர்வாடியார் முன்வைக்கும் கூரிய கேள்விக் கணை இதுதான்:

"இளைஞர்கள் அரசியலுக்கு
வரவேண்டுமாம் வரவேற்கிறோம்
சரி....
யார் வீட்டு இளைஞர்கள்?" (யாரும் யாராகவும்...,ப.68)

நகைச்சுவை ததும்பி நிற்கும் முகநூல் கவிதைகள்

ஏர்வாடியாரின் முகநூல் கவிதைகள் ***'வெளிச்ச மலர்கள்'*** என்னும் தலைப்பில் ஒரு குறுநூலாக வெளிவந்துள்ளன. குறுகத் தறித்த முகநூல் கவிதைகளிலும் அவரது நகைச்சுவை உணர்வு கேலியாகவும் கிண்டலாகவும் குத்தலாகவும் சாடலாகவும் வெளிப்பட்டிருக்கக் காண்கிறோம்.

"சிலர் சிறையில்
இருக்கிறார்கள்;
சிலர் ஜாமீனில்
இருக்கிறார்கள்;
பலர் சிக்காமல்
இருக்கிறார்கள்" (வெளிச்ச மலர்கள்,ப.118)

என்னும் கவிதை இவ்வகையில் இன்றைய அரசியல் வாதிகளின் போக்கினைத் தர வரிசையில் தோலுரித்துக் காட்டுவதாகும்.

'செய்க பொருளை' *(759)* என்றார் வள்ளுவர். அவரது கூற்றினைத் தவறாகப் புரிந்து கொண்ட இன்றைய அரசியலார் எங்ஙனம் செயல்படுகின்றார்கள் தெரியுமா?

இதோ, ஏர்வாடியாரே அவர்களை அடையாளம் காட்டுகின்றார், பாருங்கள்:

"ஈட்டுக பொருள் என்று
யாரோ சொன்னதற்கு
நீட்டுக கை என்றா
நாம் பொருள் கொள்வது?" (ப.122)

ஈட்டுக x நீட்டுக: அருமையான **சொல் விளையாட்டு!**

இன்று சாமியார் என்றாலே - ஆசிரமம் என்றாலே- கேலியும் கிண்டலுமாய்ப் பார்ப்பதும் பேசுவதும் வாடிக்கை ஆகிவிட்டன. இதனை,

"சாமியார் சரி
கூடவே அந்த
மாமி யார்..,.?" (ப.54)

என்னும் முகநூல் கவிதையில் கேள்விக்கும் கேலிக்கும் உள்ளாக்குகின்றார் ஏர்வாடியார்.

இறைவனை வம்புக்கு இழுக்கும் ஏர்வாடியார்

'கடவுள் மனிதனாகப் பிறக்க வேண்டும் - அவன் காதலித்து வேதனையில் வாட வேண்டும்' எனப் பாடிய கவியரசர் **கண்ணதாசனின்** அடிச்சுவட்டில் இறைவனைச் சீண்டியும் வம்புக்கு இழுத்தும் கவிதை பாடியுள்ளார் ஏர்வாடியார். **'இறைவா நீ வரவேண்டும்'** என்னும் தலைப்பில் ஒரு கவிதை புனைந்துள்ள அவர், **'இறைவா நீ வரவேண்டாம்!'** என்னும் தலைப்பிலும் ஒரு கவிதை யாத்துள்ளார். 'மறைவாக இருந்ததால் தான் பிழைத்தாய். இல்லை, மண்ணில் வர நினைத்தாலோ முடிந்து போவாய்' என அக்கவிதையின் தொடக்கத்தில் இறைவனை எச்சரிக்கும் ஏர்வாடியார், 'வரம் கொடுக்க நேரில் வர வேண்டும் என்று வந்திடாதே! விபரீதம் உனக்கு ஏன் வம்பு?' என வம்புக்கு இழுத்து, முடிவாக இறைவனிடம் அறுதியிட்டு உரைக்கின்றார்!

"இல்லையில்லை பக்தர்களைப் பார்க்க வேண்டும்
என்றுஉனக்கு போதாத ஆசை வந்தால்

சொல்லுகிறேன்; ஒருநாளில் இறங்கி வந்து
தேர்தலிலே தனியாக நின்று பார் நீ!
சில்லறையும் செல்வாக்கும் செல்லும் வண்ணம்
செயும்வித்தை வெல்லும், நீ தோற்பாய். அன்று
எல்லோர்க்கும் அருள்சுரக்கும் இறைவா பக்தி
எட்டத்தில் இருந்தால்தான் என்று உணர்வாய்."
(ஒரு நாளும் ஒவ்வொரு நாளும்,பக்.30-32)

'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்' என்னும் தமது முத்திரைக் கதையின் முடிவில், **'உங்களிடம் எல்லாம் எட்டி நின்று வரம் கொடுக்கலாம்; உடன் இருந்து வாழ முடியாது!'** *(காஞ்சனை,ப.169) எனப்* **புதுமைப் பித்தன்** *எழுதி இருக்கும் வாசகம் இங்கு ஒப்பு நோக்கத் தக்கவை ஆகும்.*

கட்டுரைகளில் களிநடம் புரிந்து நிற்கும் நகைச்சுவை

"என் எழுத்தில் நான் ரசிக்கிற எழுத்தே 'என் பக்கம்' தான். இது நம் பக்கம்" *(என் பக்கம்:12-ஆவது தொகுதி, ப.10) என்பது ஏர்வாடியார் தரும் ஒப்புதல் வாக்குமூலம். அவரது கூற்றின்படி, 'என் பக்கம்', 'நம் பக்கம்' ஆவதில் அவருக்கு மிகுதியும் உற்றுழி உதவி நிற்பது* **இயல்பான நகைச்சுவை உணர்வு** *ஆகும். அதில் மெல்லிய கேலியும் உண்டு; நயமான கிண்டலும் உண்டு; நறுக்கான குத்தலும் உண்டு; நாகரிகமான குறும்பும் உண்டு. இவ்வகையில் குறிப்பிடத்தக்க சில நகைச்சுவைகளை இங்கே காணலாம்.*

"வீட்டுக்குள் நுழைந்துவிட்டால் நான் வங்கி மேலாளரும் அல்ல, கலைமாமணியும் அல்ல. கையில் பையை எடுத்துக் கொண்டு காய்கறி வாங்கக் கடைக்குப் போகிற சாதாரண கணவன். இதமான வசவுகளுக்குச் செவி கொடுக்கிற சராசரி குடும்பத் தலைவன். 'போங்கப்பா உங்களுக்கு ஒன்றும் தெரியாது' என்று செல்லமாக என்னைச் சீண்டுகிற செல்வங்களுக்குத் தந்தை. வீட்டில் நான் வேறெவனும் அல்ல. நான் ஒரு நல்ல கணவன். நல்ல தந்தை. அவ்வளவுதான்" (என் பக்கம்: எட்டாவது தொகுதி, பக்.142-143) என்னும் பகுதி ஏர்வாடியாரின்

இயல்பான நகைச்சுவை உணர்வுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு ஆகும்.

'வார்த்தையில் என்ன இருக்கிறது? நெருப்பென்னு சொன்னால் வாய் என்ன வெந்தா போய்விடும்?' என்று நம்மில் பலர் அவ்வப்போது கூறுவதைக் கேட்டிருப்போம். ஆனால், ஏர்வாடியாரோ **'வார்த்தைகளில் கூட வாழ்க்கை இருக்கிறது'** என்பதைத் தமக்கே உரிய தனிப்பாணியில் நகைச்சுவையோடு ஒரு கட்டுரையில் புலப்படுத்தியுள்ளார்:

*"மாண்புமிகு மந்திரி ஒருவர் கலந்து கொண்ட மாபெரும் நிகழ்ச்சி. விழாவை நடத்தியது அரசின் பொறுப்பான துறை. அத்துறை சார்ந்த அதிகாரி ஒருவர் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிக் கொண்டிருந்தார். 'கடைசியாக மாண்புமிகு... பேசுவார்கள்' என்று குறைந்தது நாலைந்து தடவையாவது திரும்பத் திரும்பச் சொன்ன போது மாண்புமிகு மந்திரிக்கு முகம் சுண்டிப் போனது. கூடியிருந்த கூட்டத்தாரும் முகம் சுளித்தனர். அதென்ன 'கடைசியாகப் பேசுவார்' என்பது? இதுவா அவருக்குக் கடைசிப் பேச்சு? இன்னும் எவ்வளவோ இருக்கிறதே... **'நிறைவாகப் பேசுவார்'** என்ற சொல் தமிழில் இருக்கிற போது கனியிருக்கக் காய் கவர்வானேன்?" (என் பக்கம்: ஏழாவது தொகுதி, பக்.48-49)* இங்ஙனம் நகைச்சுவையோடு நல்ல செய்தியையும் கலந்து தருவது ஏர்வாடியாரின் வாடிக்கை. இங்கே, *'இனிய உளவாக இன்னாத கூறல், கனி இருப்பக் காய் கவர்ந்தற்று' (100)* என்னும் குறட்பாவின் கருத்தினைத் தம் நகைச்சுவைக்கு அணியும் அரணும் சேர்க்கும் விதத்தில் பயன்படுத்திக் கொண்டுள்ளார் ஏர்வாடியார்.

சொல் விளையாட்டு

'இன்சொல் அமுது' என்னும் தலைப்பில் சென்னை வானொலியில் ஏர்வாடியார் ஆற்றிய சிற்றுரைகளின் தொகுப்பு **'நாளும் நல்லது சொல்வோம்.'** அத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள 'தினமும் என்னைக் கவனி' என்னும் சிற்றுரை கையூட்டு பற்றியது. **'கவனி'** என்ற சொல்லுக்கு இன்று 'கையூட்டு அளி' - 'லஞ்சம் கொடு' - என்று பொருளாகி விட்டது. லஞ்சம் என்பதைக் குறிக்க இன்று நடைமுறையில்

'கையூட்டு', 'கவனித்தல்', 'மேல் வருமானம்', 'சம்திங்', 'வெயிட்டாக வை', 'தள்ளு', 'அன்பளிப்பு', என்றாற் போல் பல்வேறு சொற்கள் வழங்கி வருகின்றன. **'சொல் விளையாட்டு'** (Fun) என்னும் நகைச்சுவைத் திறம் விளங்கத் தமது சொந்த அனுபவம் ஒன்றினை எடுத்துக்காட்டி ஏர்வாடியார் அச் சிற்றுரையை முடித்திருக்கும் பாங்கே தனி.

"'கவனி'த்தால் தான் காரியம் நடக்கும் என்பவர்களை அரசும் சமூகமும் கவனிக்க வேண்டும். முடிந்தால் செமர்த்தியாகவே 'கவனி'க்க வேண்டும்.

ஒருநாள் நின்று போக வேண்டிய இடத்தில் காரை நிறுத்தாமல் ஓட்டி வந்துவிட்டேன். காவலர் பிடித்துக் கொண்டார். 'சாரி சார் கவனிக்காம வந்திட்டேன்' என்றேன். 'அதனால் என்ன இப்ப கவனிக்கலாமே' என்று நெளிந்தார் அவர். 'கவனி'த்தல் என்பதற்கு அப்படியும் ஒரு அர்த்தம் இருக்கிறது என்பதை அன்று தான் நான் முதலில் தெரிந்து கொண்டேன்" (நாளும் நல்லது சொல்வோம்,ப.92).

உற்றுநோக்கினால் நம் வாழ்வின் அன்றாட அனுபவங்களில் நகைச்சுவையும் முரணும் கைகோர்த்துக் கொண்டு கூடவே வருவது தெரியவரும். எதுவும் நேரத்துக்குள் கிடைப்பது தான் வரம்; ஆனால் எப்போதும் அது கிடைக்காது. பேருந்து நிறுத்தத்தில் திருவல்லிக் கேணிக்குப் போகக் காத்திருந்தால், நாலைந்து திருவேற்காடு பேருந்துகள் தொடர்ச்சியாகக் காலியாகப் போகும்; திருவல்லிக்கேணி பேருந்தோ நம் நிறுத்தத்தில் நிற்காமலே போகும். **'காலத்தால்...'** என்னும் 'என் பக்க'க் கட்டுரையில் இதனைப் பொருளாக்கியுள்ளார் ஏர்வாடியார். குடை விஷயத்தில் அவருக்கு ஏற்பட்ட ஒரு சுவையான அனுபவம்:

"அண்மையில் நான் 'எப்போதும் என்ன வேண்டும்...' என்பதாக ஒரு நீண்ட கவிதை எழுதி இருந்தேன். **'குடை இருக்கும் போது மழை பொழிய வேண்டும்'** என்று அந்த விருத்தம் விரியும். அதில் இருக்கிற வருத்தம் எனக்கு

மட்டுமே தெரியும். வேறொன்றும் இல்லை. ஒரு சின்ன ஆதங்கம்.

அண்மையில் சென்னையில் பெய்த மழையில் அடிக்கடி நான் நனைய நேரிட்டது. காலை அலுவலகம் போகும்போது நன்றாக வெயில் அடிக்கும். இருக்கிற சுமையோடு இதுவும் எதற்கு என்று குடையை வீட்டிலேயே விட்டுவிட்டுப் போவேன். சொல்லி வைத்தாற்போல் பேருந்தை விட்டு இறங்கியதும் மழை கொட்டும். இன்றைக்கு மாட்டிக் கொள்ளக்கூடாது என்று மறுநாள் குடையோடு கிளம்பினால் மப்பும் மந்தாரமுமாக நாள் முழுக்க வானம் என்னைப் பார்த்து நகைக்கும் எனவே இப்போதெல்லாம் என் பிரார்த்தனை... **எப்போது என் கையில் குடை இருக்கிறதோ அப்போது மழை பெய்ய வேண்டும், குடை நனைந்தாலும் பரவாயில்லை"** (என் பக்கம்: ஐந்தாவது தொகுதி, ப.105).

ஆற்றல்சால் ஆளுமையாளர்களின் நகைச்சுவை உணர்வு

ஏர்வாடியாரின் **'கவிதை உறவு'** இதழில் வாசகர்கள் பெரிதும் விரும்பிப் பயிலும் ஒரு பகுதி **'மனத்தில் பதிந்தவர்கள்.'** இவ்வரிசையில் அவரது நூல் வடிவில் ஒன்பது தொகுதிகள் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஏர்வாடியாரின் மனத்தில் பதிந்தவர்கள் ஆற்றல் சான்ற ஆளுமையாளர்களாக விளங்குவதோடு, நல்ல நகைச்சுவை உணர்வு படைத்தவர்களாகவும் இருப்பது மனங்கொளத் தக்கது.

ஏர்வாடியாரின் மனத்தில் காவியக் கவிஞர் **வாலி**க்குத் தனி இடம் உண்டு. அவரைப் பற்றிய ஏர்வாடியாரின் சுவையான பதிவு ஒன்று:

"வாலி அவர்கள் இயல்பானவர் என்பது போலவே நல்ல நகைச்சுவை உணர்வும் கொண்டவர். எண்ணற்ற எடுத்துக்காட்டுகளைச் சொல்லலாம். **'வாலியின் நகைச்சுவை'** என்றே ஒரு நூல் வெளியிடலாம். ஒன்றிரண்டு செய்திகளை மட்டும் குறிப்பிடலாம். **'உலகம் சுற்றும் வாலிபன்'** படத்தில் வாலி அவர்கள் பாடல் எழுதவில்லை. **புரட்சித் தலைவர்** அவர்கள் வாலியிடம், 'இந்தப் படத்தில்

உமக்கு வாய்ப்பு இல்லை. உம்ம பேர் படத்தில் வராது' என்றபோது, 'என்னுடைய பெயர் டைட்டில்ல வராமல் உங்க படமே வெளிவராது' என்று வாலி சொன்னதும் எம்.ஜி.ஆர். திகைக்கிறார். 'பின்னே என்ன..? உலகம் சுற்றும் வாலிபன்' படத்திலே என் பெயரை எடுத்து விட்டு 'உலகம் சுற்றும் பன்'னுன்னா படத்தை வெளியிடப் போறீங்க?' என்றதும் எல்லோரும் அந்த நகைச்சுவையை ரசித்தார்களாம்" (நல்லது நடந்தால் நல்லது,பக்.71-72)

வாலியின் முத்திரை நகைச்சுவைக்குப் பிறிதோர் எடுத்துக்காட்டு: "ஒருமுறை வாலி அவர்களுடைய வீட்டிற்குள் பாம்பு வந்துவிட்டது. அதைக் கூட நகைச்சவையாக 'பாம்பு படம் எடுக்கும் இல்லையா? என் கிட்டே பாட்டு கேட்டு வந்திருக்கும்' என்று நண்பர்களிடம் குறிப்பிட்டாராம்" (ப.72)

நகைச்சுவை உணர்வில் தனிமுத்திரை

ஒருமுறை ஏர்வாடியார் பணியாற்றிய வங்கிக் கிளைக்கு வந்த அவரது உயர்அதிகாரி ஒருவர் ஆய்வுகளை முடித்த பிறகு காரில் ஏறுவதற்கு முன், "ஏர்வாடி! உங்க நகைச்சுவையைக் கேட்டுப் பல ஆண்டுகள் ஆகின்றன. ஒண்ணு சொல்லுங்களேன்..." என்ற போது மகிழ்ச்சியில் சிலிர்த்துப் போய்விட்டாராம் ஏர்வாடியார் (என் பக்கம்: எட்டாவது தொகுதி, ப.143). இந்நிகழ்ச்சி நகைச்சுவை உணர்வில் தனிமுத்திரை பதித்தவர் ஏர்வாடியார் என்பதைப் பறைசாற்றுவது. **'மயிலிறகின் வருடல் போல நல்ல செறிவுள்ள நகைச்சுவை'** (அணிந்துரை, ஏர்வாடியாரின் 'நல்லது நடந்தால் நல்லது', ப.4) என ஏர்வாடியாரின் நகைச்சுவைக்கு எழுத்தாளர் **இந்திரா சௌந்தர்ராஜன்** சூட்டியுள்ள புகழாரம் இங்கே நினைவுகூரத்தக்கது.

ஏர்வாடியாரின் கருத்தில் 'சிரிக்க வைப்பது வேறு; சிரிக்க விடுவது வேறு.' அவரைப் பொறுத்த வரையில் **'சிரிக்க விடுவது தான் சிறந்த பண்பு'**. 'சிரிக்க விடுங்கள்' என்ற தலைப்பிலேயே அவர் 'என் பக்க'க் கட்டுரை ஒன்றினை எழுதியுள்ளார். 'யாரையும் மகிழ்ச்சியாக இருக்க மனம் உவந்து அனுமதிப்பதும் அதற்கான மார்க்கத்தைக்

காட்டுவதுமே சிரிக்க விடுவது ஆகும். சுற்றி இருக்கிறவர் கஞைச் சிரிக்க விடுங்கள். சந்தோஷமாக இருக்க விடுங்கள். நீங்களும் சிரிக்கலாம். சந்தோஷமாக இருக்கலாம்' என்பது அக்கட்டுரையில் அவர் வலியுறுத்தியுள்ள கருத்து.

"ஒரு விளையாட்டுக்குச் சொல்வதாக இருந்தால் நம்மைச் சிரிக்கச் சொல்கிறவர்கள் ஒளிப்படக் கலைஞர்கள் மட்டும் தான். படம் எடுக்கும் முன் **'ஸ்மைல் ப்ளீஸ்'** என்னும் போது செயற்கையாகவேனும் சிரித்து வைப்போம். அப்போதுதான் நம் முகம் சுமாராகவாவது இருக்கும். சிரிக்கச் சொன்னது கூட ஒரு சர்தார்ஜிக்கு சங்கடத்தை ஏற்படுத்தியதாகப் படித்த ஞாபகம். போட்டோ எடுக்கும் முன் 'கொஞ்சம் ஸ்மைல் ப்ளீஸ்' என்றது தவறா என்று உங்களைப் போல் நானும்தான் நினைத்து மேலும் படித்தேன். அந்தப் பாவி மாலை மரியாதையோடு பிணக்கோலத்தில் இருந்த கிழவனைப் படமெடுக்கப் போன இடத்தில் ஏதோ ஞாபகத்தில் 'ஸ்மைல் ப்ளீஸ்' என்று சொல்லித் தொலைத்து விட்டாராம். இது எப்படி....?" (என் பக்கம்: 9ஆவது தொகுதி, ப.116).

ஏர்வாடியார் போற்றும் நகைச்சுவை நாகரிகம்

'நகைச்சுவை உணர்வு நமக்கெல்லாம் அவசியம் வேண்டும். வேண்டாம் என்று சொல்கிறவர்களுக்கு வேலூர் சிறை கூடக் குறைந்தபட்சத் தண்டனை தான்!' என நகைச்சுவையின் இன்றியமையாமையை எடுத்துரைக்கும் ஏர்வாடியார், **நகைச்சுவையில் நாகரிகம் வேண்டும்,** எல்லைகளைச் சரியாக வகுத்துக் கொள்ள வேண்டும் என்பதிலும் கருத்தாகவும் கவனமாகவும் உள்ளார். நகைச்சுவை யாரையும் கோபம் ஊட்டுவதாக, எரிச்சல் அடையச் செய்வதாக, மட்டம் தட்டுவதாக, மனத்தைப் புண்படுத்துவதாக, அழ வைப்பதாக இருந்துவிடக்கூடாது. "சிரிக்க வைக்கலாம், யாரையும் சீற வைக்கக்கூடாது. நகைச்சுவையாகப் பேச முற்படுமுன் இந்த நாகரிகமான பண்புகளைக் கற்றுக்கொள்வது அவசியம். அது மேலிருந்து கிழ் என்றாலும், கீழிருந்து மேல் என்றாலும்!" (என் பக்கம்: ஐந்தாவது தொகுதி, ப.19) என நகைச்சுவைக்குத்

தாம் வகுத்துக் காட்டிய வரைவிலக்கணத்திற்கு ஏற்ப, ஏர்வாடியார் தம் எழுத்திலும், பேச்சிலும், தனி வாழ்விலும் எப்போதும் மெல்லிய, மேன்மையான நகைச்சுவை உணர்வையே போற்றி வந்துள்ளார். நகைச்சுவையைப் பொறுத்த வரையில் வள்ளுவர் மொழியில் கூறுவது என்றால் **'நயத்தக்க நனிநாகரிகம்'** போற்றுபவராகவே ஏர்வாடியார் விளங்கி வந்துள்ளார் எனலாம். இதனை உறுதிப்படுத்தும் விதத்தில் ஒருமுறை அவரது வாழ்வில் நடைபெற்ற ஓர் உண்மை நிகழ்ச்சி:

'கவிதை மாலை' நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்க ஏர்வாடியார் ஒருநாள் மோட்டார் சைக்கிளில் சென்றபோது ஒரு போக்குவரத்துக் காவலர் அவரிடம் தவறாக நடந்து கொள்கிறார்; வாய்க்கு வந்தபடி பேசி அவரை அவமானப்படுத்துகிறார். போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அறைக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு காவல்துறை அதிகாரியிடம் இந்த அனுபவம் குறித்துப் பேசுகின்றார் ஏர்வாடியார். "அந்தப் போலீஸ்காரரர் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்? புகார் எழுதித் தரப் போகிறீர்களா? என்ன தண்டனை சரியாக இருக்கும் என்று கருதுகிறீர்கள்?" என்று கட்டுப்பாட்டு அறை அதிகாரி கேட்டபோது, "தண்டனை தானே...? நானே கொடுத்துவிட்டேன் சார்" என்கிறார் ஏர்வாடியார்.

'தண்டனையா...? என்ன சார் தண்டனை?' எனக் கேட்கிறார் அதிகாரி.

"வேறென்ன தண்டனை? என்னுடைய புத்தகங்கள் சிலவற்றைக் கொடுத்திருக்கிறேன். கட்டாயம் படிக்க வேண்டும் என்று... போதாதா?" என்கிறார் ஏர்வாடியார்.

எதிர்முனையில் 'வெடித்த சிரிப்பு' அடங்க வெகுநேரம் ஆகின்றது (எழுத்துச் சிறகுகள், பக்.53-54)

'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்' **(314)**

என்னும் குறட்பாவின் பொருளை இங்கே ஏர்வாடியார் தம் வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு கசப்பான அனுபவத்தின்

வாயிலாகப் புலப்படுத்தி இருக்கும் பாங்கு நம் உள்ளத்தைத் தொடுகின்றது.

'ஏர்வாடியாரின் எழுத்துக்களில் நகைச்சுவையின் பரிமாணங்கள்' என்பது தனிநூலுக்கு உரிய ஒரு பொருள். இக்கட்டுரை அதற்கான ஒரு முன்னோட்டமே.

6

நிறையக் கனவு நிறையக் கவிதை வேண்டும்

"நாற்பதாண்டுக் காலம் வங்கி நற்காலிகளில் நான் உட்கார்ந்து தேய்ந்த அனுபவத்தை விடவும், ஐம்பதாண்டுக் காலம் கவிதையில் தோய்ந்த அனுபவம் எனக்குத் தந்த பயனும், பெருமையும் அதிகம்."

*- ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்**

கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணனின் எழுதுகோல் **கவிதை, நாடகம், சிறுகதை, புதினம், கட்டுரை, நடைச்சித்திரம், தொகை நூல், சிறப்பு வெளியீடு** என்னும் பல்வேறு துறைகளைச் சார்ந்த நூற்றுக்கணக்கான நூல்களை ஈன்று புறந் தந்துள்ளது. அவரது ***'இன்னும் ஒரு மீரா'*** *(நாடகம்)*, ***'திருமணங்கள் வெறும் நிகழ்ச்சிகள் அல்ல'*** *(புனைகதை)*, ***'ஒருமுறைதான் வரும்'*** *(புதினம்)* ஆகிய படைப்புகள் தமிழ்நாடு அரசு வழங்கும் பரிசு உள்ளிட்ட பல்வேறு பரிசுகளை அவருக்குப் பெற்றுத் தந்துள்ளன. ***'கலைமாமணி விருது', 'பாவேந்தர் பாரதிதாசன் விருது'*** எனத் தமிழக அரசு அளிக்கும் இரு உயரிய விருதுகளை ஒருசேரப் பெற்ற சிறப்பும் ஏர்வாடியாருக்கு உண்டு.

'கவிதை உறவு' என்ற பெயரில் ஓர் அமைப்பையும், இலக்கியச் சீரிதழையும் பல்லாண்டுக் காலமாகத் திறம்பட நடத்தி வரும் அவரது வாழ்நாள் சாதனை போற்றத்தக்கது. ***'வங்கிக் கலைச்சொல் அகராதி'*** என்னும் தலைப்பில்

---

* 'கவிஞனாய் இருக்கிறேன்', கொஞ்சம் கனவு கொஞ்சம் கவிதை, ப.11.

அவர் தொகுத்து வெளியிட்டுள்ள சிறப்பு வெளியீடு, அன்னைத் தமிழுக்கு சூட்டப்பெற்றுள்ள ஓர் அழகிய அணிகலன் ஆகும். தே மதுரத் தமிழோசையைப் பரப்புவதற்காகப் பல்வேறு நாடுகளுக்குப் பலமுறை உலகப் பயணம் மேற்கொண்டுள்ள ஏர்வாடியாரின் ஆளுமைத் திறன் விரிப்பின் பெருகும்; தொகுப்பின் எஞ்சும். இப்போது நம் கைகளில் தவழும் **'கொஞ்சம் கனவு கொஞ்சம் கவிதை'** என்பது 2017-ஆம் ஆண்டில் வெளிவந்த அவரது படைப்பாகும்.

உண்மைக் கவிஞர்களின் இயல்பு

"வாழ்தல் வேண்டிப்
பொய் கூறேன் மெய் கூறுவல்" (புறநானூறு,139)

என அறுதியிட்டு உரைப்பார் சங்கச் சான்றோர் **மருதன் இளநாகனார். வன்பரணர்** பிறிதொரு புறநானூற்றுப் பாடலில், 'பெருமையற்ற மன்னரைப் புகழ்ந்து, அவர் செய்யாதவற்றைச் செய்ததாகச் சொல்லிப் புகழ்வதை எம்முடைய சிறிய செவ்வையான நாவு அறியாததது ஆகும்' எனப் பெருமிதத்துடன் மொழிவார்:

"பீடுஇல் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டி
செய்யாக் கூறிக் கிளத்தல்
எய்யாது ஆகின்றுஎம் சிறுசெந் நாவே." (148)

இவர்களது வாக்குகளை வழிமொழிவது போல் ஏர்வாடியாரும் **'கவிஞனாய் இருங்கள்'** என்னும் தலைப்பில் பாடிய கவிதையில்,

"கவிஞர்கள்
யாப்பில் பிழை செய்யக்கூடும்
யாரையும்
ஏய்த்துப் பிழைப்பதில்லை...

கவிஞர்கள் பயன்படுகிறவர்கள்
யாருக்கும்
பயப்படுகிறவர்கள் அல்லர்" (ப.19)

என உண்மைக் கவிஞர்களின் இயல்பினை உளங்கொள்ளுமாறு எடுத்துரைப்பது போற்றத்தக்கது.

நல்ல நேரம் எது?

'அல்லும் பகலும் தெருக் கல்லாய் இருந்துவிட்டு, எனக்கு நேரமே சரி இல்லை, அதிர்ஷ்டமும் இல்லை' என அலுத்துக் கொள்வோர் ஒருபுறம்: 'எனக்கு நேரமே இல்லை, நான் ரொம்ப பிசி' என அலட்டிக் கொள்வோர் மறுபுறம். இவ்விரு வகையான மனிதர்களுக்கு அப்பாற்பட்டு, **நேர மேலாண்மையின்** (Time Management) அருமையைப் புரிந்துகொண்டு, நேரத்தை ஏன், ஒவ்வொரு நொடியையும் நன்கு பயன்படுத்திக் கொள்வோர் உள்ளனர். அவர்களே வாழ்வில் சாதனை படைப்பர்; முத்திரை பதிப்பர். இத் தகையோரை அடையாளம் காட்டும் வகையில் ஏர்வாடியார் படைத்துள்ள அருமையான கவிதையே **'எல்லோர்க்கும் பொதுவான 24'**.

"யார் வந்து கேட்டாலும்
கேட்காமல் போனாலும்
எல்லோர்க்கும் இறைவன்
தருகிற பரிசு
இருபத்து நான்கு மணிநேரம்.
அது
யாருக்காகவும் காத்திருக்காது
எவருக்காகவும் தானடங்காது" (ப.23)

என நேரத்தின் அருமையையும் பெருமையையும் உணர்த்தித் தொடங்கும் அக்கவிதை,

"நன்றாகப் பயன்படும் நேரம்தான்
நமக்கு நல்ல நேரம்..."

"போதவில்லை எனும்அளவு
போக வேண்டும் நேரம்;
போகவில்லை எனில் நமக்குப்
போதாத நேரம்" (ப.25)

என நிறைவு பெறுவது சிறப்பு.

'புலர்காலைப் பொழுதில் புதிதாய்ப் பிறப்போம்!'

வாழ்க்கையில் பிறப்பும் இறப்பும் நமக்கு ஒருமுறை தான் நிகழ்வதாக நாம் எண்ணிக் கொண்டிருக்கின்றோம்; ஆனால், ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் உண்மை அது அன்று. தமிழ்த்தென்றல் **திரு.வி.க.** *தம் வாழ்க்கைக் குறிப்புகளில், "ஒரு கருத்தில் யான் நிற்கும்போது ஒருவித மனிதனாகிறேன்; அதை விடுத்து யான் வேறு கருத்துக்குச் செல்லுங்கால், யான் வேறு ஒருவித மனிதனாகிறேன். இவ்வாறு பலவித மனிதன் ஆகி ஆகி வளர்கிறேன். இம்மாற்றமே பிறப்பிறப்பென்பது.* **ஒவ்வொரு கருத்தெழுவது ஒவ்வொரு பிறப்பெடுப்பதாகும். அவ்வக் கருத்து வீழ்வது அவ்வப்போது இறப்பதாகும்.** *இப்பொழுது எனக்கு வயது அறுபது. இவ்வயதிலே எத்தனை முறை பிறந்திருப்பேன்; எத்தனை முறை இறந்திருப்பேன்; யான் எத்தனை எத்தனை மனிதனாகி மனிதனாகி வளர்ந்திருப்பேன். ஆனால் உலகம் என்னை ஒரே கலியாண சுந்தரம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறது" (பகுதி -2, பக்.620-621) எனக் கூறுவது நோக்கத் தக்கது. இக் கருத்தின் ஒளியில் ஏர்வாடியாரின்* **'தினமும் புதிதாய்ப் பிறப்போம்'** *என்னும் கவிதையை நாம் அலசிப் பார்க்கலாம்.*

"இரவில் முதல் நாள் / இறந்து விடுங்கள்" என்று தொடங்கும் அக்கவிதை,

"கிழக்கில் உதிக்கும்
கதிர்போல் காலைப்
பொழுதில் புதிதாய்ப்
பிறந்து விடுங்கள்"

என்றும்,

"உறக்கமும் மரணமும்
ஒன்றுதான் என்பதை
பிறக்கும் நாளெலாம்
புரிந்து கொள்ளுங்கள்" *(ப.86)*

என்றும் தொடர்ந்து நடை பயின்று,

"...நாம் வேண்டும் உயிர்ப்புதான், புதிதாய்ப் பிறப்பு" (ப.87) என நிறைவடைவது முத்தாய்ப்பு. 'முதல் நாள் வலிகளை மறந்துவிட்டு' - 'இருக்கும் துயர்களை எரித்து விட்டு'- 'மறையும் சூரியன் மறுநாள் புதிதாய் விரிவதைப் போலவே விழித்து எழ வேண்டும்' என்பதே இக்கவிதை வாயிலாக ஏர்வாடியார் மனித குலத்திற்கு உணர்த்தும் செய்தி. 'இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்ற எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு தின்று விளையாடி இன்புற்றிருந்து வாழ்வீர்!' என்று தானே கவியரசர் **பாரதியாரும்** மனிதனுக்கு அறிவுறுத்தியுள்ளார்? 'உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி விழிப்பது போலும் பிறப்பு' (339) என்பதுதானே வான்புகழ் **வள்ளுவர்** வாய்மொழியும்?

இறந்த பின்னும் வாழ்வதற்கு...

'இறந்த பின்னும் வாழ்வதற்கு...' (பக்.46-47) என்பது இத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கும் ஒரு நல்ல கவிதை. இதில் 'மில்லியன் டாலர்' மதிப்பு வாய்ந்த வினாக்கள் எட்டினைக் கேட்டு, அவற்றிற்கான ஆகச் சரியான விடைகளையும் கவிஞரே தந்துள்ளார். இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க சில வினாக்களும் விடைகளும் வருமாறு:

1. **'இறந்த பின்னும்**
வாழ்வதற்கு
என்ன செய்யலாம்?'

'இருக்கும் போது
பிறருக்காக
வாழ்ந்து காட்டலாம்.'

'உண்டால் அம்ம இவ்வுலகம்... தமக்கென முயலா நோன்தாள், பிறர்க்கென முயலுநர் உண்மை யானே' (புறநானூறு, 182) என்னும் சங்கச் சான்றோரின் மணிமொழி இங்கே மனங்கொளத்தக்கது.

2. **'சேர்த்த சொத்தின்**
பயனைக் காண
என்ன செய்யலாம்?'

'சார்ந்திருக்கும்
பிறர்க்கு உதவும்
பண்பை வளர்க்கலாம்.'

'அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள் வைப்புழி' (குறள்:226)

என்னும் **வள்ளுவர்** வாய்மொழி ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது.

3. **'தமிழன் என்ற**
பெருமை காண
என்ன செய்யலாம்'

'தமிழர் எல்லாம்
தமக்கு உறவு
என்று வாழலாம்'

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்' (புறநானூறு, 192) என்னும் **கணியன் பூங்குன்றனாரின்** முத்திரை வாக்கு இவ்வகையில் கருதத்தக்கது.

4. **'ஊழலற்ற**
ஆட்சி காண
என்ன செய்யலாம்?'

'நம்மை முதலில்
திருத்தி அந்த
நாளைத் தேடலாம்.'

'உள்ளம் திருந்தின் உலகம் திருந்தும்' என்பார் பேராசிரியர் **மு.வரதராசனார்.**

5. **'வெற்றிக்கான**
வழி என்று
எதனைக் கொள்ளலாம்?

'வாழும் நல்ல
வாழ்க்கை தன்னை
வெற்றியாக்கலாம்.'

'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவில்லை'

என்னும் **திருஞானசம்பந்தரின்** தெய்வத் தமிழோடு ஏர்வாடியாரின் சிந்தனை ஒத்துச் செல்கிறது.

6. 'எல்லை என்று
எதனை வாழ்வில்
வரையறுக்கலாம்?

'வானம் கூட
இல்லை என்று
மேலும் பறக்கலாம்.'

'வானமே எல்லை' என்பார்கள்; ஏர்வாடியாரோ இன்னும் ஒரு படி மேலாக, **'வானம் என்ற எல்லையைத் தாண்டி, மேலே மேலே பறக்கலாம்'** என வலியுறுத்துகின்றார்.

புதுமைக் கண்ணோட்டம்

முன்னைப் பழமையைப் பின்னைப் புதுமையான கண்ணோட்டத்தில் அணுகுவது ஏர்வாடியாரின் தனித் திறன். இத்திறன் பளிச்சிட்டு நிற்கும் ஓர் எடுத்துக்காட்டு:

'ஆண்டு பலவான பின்னும் / ஆகவில்லை நரை; காரணம் யாது?' என வினவியபோது அன்று ஒரு சங்கப் புலவர் **(பிசிராந்தையார்)** 'அரசனில் தொடங்கி அனைவரும் நல்லவர்' என விடையளித்தாராம்! 'யாரும் இப்போது / நல்லவர் இல்லையே? / எனினும் எப்படி நரை இல்லை?' எனக் கேட்டதற்கு இன்றைய கவிஞன் இப்படிச் சொன்னானாம்:

"நரையில வானதன் காரணம் நமது
தலை'மை' தானன்றி, வேறுஎதும் இல்லை." (ப.53)

கூடுதல் செய்தியாக நகைச்சுவை உணர்வோடு,

"நரைமுடியால் பல
நன்மைகள் உண்டு;

நாளும் அதனால்
பெருமைகள் நன்று;
பெரியவர் என்கிற
பெருமதிப்பு கிடைக்கும்;
சொறியும் ஒவ்வாமை
சங்கடம் தவிர்க்கும்....” (ப.54)

என ஏர்வாடியார் கவிதையின் முடிவில் மொழிவது சிறப்பு.

தடம் பதித்தோர் திறம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அருளியலிலும், அரசியலிலும் தடம் பதித்த சான்றோர்களின் விழுமிய ஆளுமைப் பண்புகளை ஏர்வாடியார் தம் கவிதைகளில் உரிய வகையில் பதிவு செய்துள்ளார். **‘வடலூர் காட்டும் வழி’, ‘எல்லோர்க்கும் கொடுத்த எம்.ஜி.ஆர்.’, ‘கதர் போர்த்திய கண்ணியம்’** என்னும் கவிதைகள் இவ்வகையில் அமைந்தவை.

“கைகளை வீசி
நடப்பதைக் கூட
கர்வமாய்க் கருதிக்
கைகட்டி நடந்தவர்
அகந்தை என்பது
அணுவும் இல்லாத
விதத்தை அவர்தம்
வாழ்வே உணர்த்தும்.”

என்பது ‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய’ **வடலூர் வள்ளல் பெருமானுக்கு** ஏர்வாடியார் சூட்டியுள்ள புகழாரம்.

ஏர்வாடியாரின் கருத்தில் **‘பிள்ளை மனமும் / வள்ளல் குணமும்** தான் / எம்.ஜி.ஆரை அடையாளம் காட்டும் / அரிய பண்புகள்’ (ப.69) ‘அடுத்துக் கெடுக் கிறவர்கள் நடுவே / **கொடுத்து மகிழ்ந்தவர் எம்.ஜி.ஆர்’** (ப.70)

கவித்துவம் மிளிர ***'கதர் போர்த்திய கண்ணியம்'*** *என்னும் அழகிய தலைப்பில் அமைந்தது பெருந்தலைவர்* ***காமராசரைப்*** *பற்றிய ஏர்வாடியாரின் கவிதை.* ***'இப்படி ஒருவர் / இருந்தார் என்பதை / இப்போது நம்ப முடியவில்லை'*** *(ப.74) என அக்கவிதை சிறப்பாகத் தொடங்குவது குறிப்பிடத்தக்கது.*

ஏர்வாடியாரின் கவிதை உலகு

ஏர்வாடியாரின் கவிதை உலகு பரந்தது; விரிந்தது. கடவுள் தொடங்கிக் காதல் வரை அனைத்தும் அவரது கவிதைப் பாடுபொருளில் அடக்கம். அவரது எழுதுகோல் ***'அருட்பெருஞ்சோதி, தனிப்பெருங் கருணை'*** *(பக்.77-81) என முழங்கிய வள்ளலாரையும் படம்பிடித்துக் காட்டும்; 'சிக்னல்'களில் விற்கும் சிறுவர்களின் வாழ்க்கை அவலத்தையும் சித்திரிக்கும் (பக்.33-34); தலையணை மந்திரம் பற்றியும் பேசும் (பக்.37-39); தோல் நலத்திற்காகவும் குரல் கொடுக்கும் (பக்.55-56).*

"விதைகளை
அலட்சியப் படுத்தாதீர்கள்
வருங்காலம் ஒரு
விருட்சத்தை இழந்துவிடும்" **(ப.27)**

எனப் படிப்பவர் நெஞ்சில் விழிப்புணர்வை விதைக்கும் போதும்,

"தேடுதல் இல்லா
வாழ்க்கையில் யார்க்கும்
தெய்வ தரிசனம்
கிடைப்பதில்லை" **(ப.41)**

எனத் தேடல் மனப்பான்மையை உயர்த்திப் பிடிக்கும் போதும்,

"காதல் ஒரு
அருமையான விஷயம்
அழகான விஷயம்
அதில்

பத்திரமாக இருக்க வேண்டுமானால்
நாம்
பாத்திரமாக இருக்கக் கூடாது" *(பக்.35-36)*

என அவசரப்பட்டு காதலில் 'வீழ்ந்து விடும்' இளைய பாரதத்திற்கு வழிகாட்டும் போதும்,

"ஆயிரம் கனவுகள்
வரும் போகும் - அட
ஆயினும் கவிதைகள்
சில போதும்" *(ப.90)*

எனக் 'கொஞ்சம் கனவு கொஞ்சம் கவிதை' என்னும் கவிதையை முடிக்கும்போதும், ஏர்வாடியாரின் பாட்டுத் திறத்தில் அருமையும் எளிமையும், அழகும் இனிமையும், உயிர்ப்பும் உரத்த சிந்தனையும் கொலுவிருக்கக் காண்கிறோம்.

சிரித்த முகத்திற்கும், சீரிளமைத் திறத்திற்கும் சொந்தக்காரரான ஏர்வாடியார், எதிர்காலத்தில் இன்னும் பல படைப்புகளைப் படைத்துத் தந்து அன்னைத் தமிழுக்கு அரணாகவும், அணியாகவும் விளங்க வேண்டும், வண்ணமும் வனப்பும் சேர்க்க வேண்டும் எனத் தமிழ் கூறு நல்லுலகம் ஆவலோடு காத்திருக்கின்றது. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், ஏர்வாடியாரிடம் இருந்து எழுத்துலகம் எதிர் நோக்குவது 'நிறையக் கனவுகளையும் நிறையக் கவிதை களையும்!'

7

வளர்தமிழுக்கு நல்லதொரு வரவு

"இவர் (ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்) எழுதினால், அது கட்டுரையாக இருப்பினும் கவிதை இன்பத்தைத் தாங்கி வரும்."
*- ஞானச்செல்வன்**

"**எ**ண்ணிய வண்ணமாய்...' என்ற என் அண்மை நூலுக்கு நீங்கள் அணிந்துரை எழுதித் தர வேண்டும்" என்று கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் சொன்ன போது, இன்பத் தேன் வந்து பாய்ந்தது என் நெஞ்சுக்குள்ளே. ஏர்வாடியாருடன் எனக்கு முதன்முதலில் தொடர்பு ஏற்பட்டது பாரத மாநில வங்கி ஏற்பாடு செய்திருந்த ஒரு **'கவிதை மாலை'** நிகழ்ச்சியின் வாயிலாகத் தான். தொடர்பு வளர்பிறை போல வளர்வதற்குக் காரணமாக அமைந்தது **'கவிதை உறவு'** இதழ்தான். 'உங்கள் தகுதிக் குறிப்பினை (Bio-Data) அனுப்பி வையுங்கள்' என்று உலகின் எந்த மூலையில் இருந்து யார் கேட்டாலும் நான் உடனடியாக அனுப்பி வைப்பது ஏர்வாடியார் என்னையும் என் துணைவியாரையும் பற்றித் தீட்டியிருக்கும் நடைச் சித்திரத்தைத்தான். உலகில் நண்பர்கள் நமக்கு ஆயிரம் பேர் கிடைப்பார்கள்; நம் இன்ப துன்பங்களில் பங்குபெறக் கூடிய நண்பர்கள் நூற்றுக் கணக்கில் இருப்பார்கள்; ஆனால், வான்புகழ் வள்ளுவர் சுட்டுவது போல் **'உணர்ச்சி ஒத்த'** நண்பர்கள் - அரம் போலும் கூர்மையும் மக்கட் பண்பும் ஒருசேர வாய்க்கப்பெற்ற **உயிர் நண்பர்கள்** - ஒவ்வொருவருக்கும் கைவிரல்களின் எண்ணிக்கைக்கு உள்ளே தான் அமைவார்கள். அதிலும்

---

* *அணிந்துரை, தமிழ்ச் சுவை, ப.3.*

குறிப்பாக, ஏர்வாடியாரின் நட்பு என்பது, திரும்பத் திரும்பப் பார்க்கத் தூண்டும் ஓர் இளம்பெண்ணின் பருவ அழகைப் போன்றது; 'நவில்தொறும் நூல் நயம்' அனையது.

எழுத்தின் மீது ஏர்வாடியார் வைத்திருக்கும் பற்று நிலத்தினும் பெரிது; வானினும் உயர்ந்தது; கடலினும் ஆழம் வாய்ந்தது. "நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப் பொழுதும் சோராது இருத்தல்" என்று கவிதை வடிவில் முழங்கியது எட்டயபுரத்துக் கவிச்சிங்கம் பாரதி. ஏர்வாடியாரோ, **"ஒரு வங்கி அதிகாரி என்பதினும் மேலான வரவேற்பும் வாழ்த்தும் கவிஞனாக இருப்பதில்தான் எனக்குக் கிடைத்துள்ளது என்பது மறுத்தற்கியலாத உண்மை. நானும் அதிகமாக கவிஞனாக, எழுத்தாளனாகக் கருதப்படுவதையே கௌரவமாக நினைக்கிறேன்"** (ப.38) என இந்நூலில் ஓர் இடத்தில் உரைநடை வடிவில் வாக்குமூலம் தந்துள்ளார். இங்ஙனம் எழுத்தின் மீது மலையளவு மதிப்பும் மரியாதையும் கொண்டிருக்கும் ஏர்வாடியாரின் எழுதுகோல் ஈன்று புறந்தந்திருக்கும் படைப்பே **'எண்ணிய வண்ணமாய்...'** என்னும் இக்கட்டுரைத் தொகுப்பாகும்.

ஏர்வாடியாரின் எழுத்து வண்ணத்தில் முதன்முதலில் நம் நெஞ்சை அள்ளுவது சிறுசிறு சொற்களில், தொடர்களில், வாக்கியங்களில் செதுக்குவது போல் உரைநடையை எழுதிச் செல்லும் பாங்கே ஆகும். தமிழ்த்தென்றல் **திரு.வி.க.வுக்குக்** கைவந்த இந்தப் பாங்கு - பாணி - பான்மை ஏர்வாடியாருக்கும் வசப்பட்டுள்ளது. உள்ளங்கவர் உதாரணங்கள் ஒரு சிலவற்றைக் காண்போமா?

"இதுதான் நிம்மதி...இதைத் தருவதுதான் அன்னையின் சந்நிதி" (ப.17).

"நல்ல நெஞ்சங்களில்தான் இறைவன் குடியிருக்கிறான்" (ப.21).

"கவிஞன் உங்கள் உள்ளத்தைத் திருடுவானே தவிர, உடைமையைத் திருட மாட்டான். கருத்தைக் கவருவானே தவிர, யாருடைய கையிருப்பையும் களவாட மாட்டான்" (ப.37).

"நன்றாக எழுதுவதைக் காட்டிலும் நல்லதை எழுதுகிறவனே நல்ல எழுத்தாளனாக இருக்க முடியும்" (ப.51).

"கவலைகளிலிருந்து விடுபடுவது எப்படி என்பதே இப்போது பலருக்குப் பெருங்கவலையாகியுள்ளது" (ப.65).

"ஒரு நல்லபேச்சு எப்படி இருக்க வேண்டும் என்றால் நறுக்குத் தெறித்தாற் போல் இருக்க வேண்டும். இன்னும் கேட்க மாட்டோமா என்கிற ஏக்கத்தைத் தரவேண்டும்" (ப.85).

"நீங்கள் என்னவாக ஆவதற்கும் கல்வியே அடிப்படை. கல்வியே அடித்தளம். கல்வியே ஆணிவேர்" (ப.120).

இத்தகைய **வைர வரிகளின் அணிவகுப்பு** இந்நூலில் அங்கிங்கு எனாதபடி எங்கும் சுடர்விட்டு நிற்பதைக் காண முடிகின்றது.

ஓர் எழுத்தாளர் தம் படைப்போடு நின்றுவிடாமல்-அமைதியடைந்து விடாமல் - மற்ற எழுத்தாளர்கள் எழுதியுள்ள உயரிய படைப்புகளைத் தேடிப் பிடித்துப் படிப்பவராகவும் இருத்தல் வேண்டும்; அடுத்தவர்களின் கருத்துக்களை அவரவர் பெயர்களோடு பொன்னே போல் போற்றிக் கையாளும் பெருந்தன்மை பெற்றவராகவும் விளங்குதல் வேண்டும். 'எண்ணிய வண்ணமாய்...' நூலை மேலோட்டமாகப் படிப்பவர்களும் - ஏன், புரட்டிப் பார்ப்பவர்கள் கூட - ஏர்வாடியாரின் பரந்துபட்ட - ஆழங்காற்பட்ட - படிப்பறிவை எளிதில் உணரமுடியும். கவியரசர் **கண்ணதாசனும்** வள்ளல் **இராமலிங்க அடிகளும்** கவிமணி **தேசிக விநாயகம் பிள்ளையும்** கவிஞர் **வைரமுத்துவும் வெ.இறையன்பும்** வார்த்தைச் சித்தர் **வலம்புரி ஜானும்** மாக்கவி **பாரதியும்,** பிற நாட்டு நல்லறிஞர்களான **சாமர்செட் மாமும் பெர்னார்ட் ஷாவும் வேர்ட்ஸ்வொர்த்தும்** ஏர்வாடியார் அழைத்த போதெல்லாம் 'அன்பான விருந்தாளிகளாக' வருகை தருகிறார்கள்; அவரது கருத்துக்களுக்கு வண்ணமும் வனப்பும்,

வளமும் வலுவும் சேர்க்கிறார்கள். இவ்வளவு ஏன்?

"காந்தி வேடமிட்டதில்
கோட்ஸேக்கு முதல் பரிசு..." **(ப.55)**

என்ற 'கவிதை உறவுக் கவிஞ'னின் எழுத்தையும் உரிய இடத்தில் மேற்கோள் காட்டத் தவறவில்லை ஏர்வாடியார். மேலும் அவர், **பக்த மீரா, அன்னை தெரசா, இராமகிருஷ்ண பரமஹம்சர்** முதலான அருளாளர்களின் அரிய ஆன்மிகச் சிந்தனைகளையும் தம் கட்டுரைகளில் ஆங்காங்கே கையாண்டுள்ளார்.

பாரதியாரின் சொற்களிலே சுட்ட வேண்டும் என்றால் நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் கொண்ட ஒரு படைப்பாளி ஏர்வாடியார். எப்படி என்கிறீர்களா? பதச்சோறு இதோ:

"இப்போது இங்கே எல்லோருமே குற்றவாளிகள் தான். சிலர் சிறையில் இருக்கிறார்கள். சிலர் ஜாமீனில் இருக்கிறார்கள். பலர் சிக்காமல் இருக்கிறார்கள். அவ்வளவுதான்" (ப.26).

- ஏர்வாடியாரை அடையாளம் காட்டும் முத்தான, முத்தாய்ப்பான வரிகள் அல்லவா இவை?

ஒரு கைதேர்ந்த வீரன் தன் குறுவாளை இலக்கு நோக்கிக் கச்சிதமாக எறிவது போல, ஏர்வாடியார் இன்றைய சமுதாயத்தை நோக்கி - இந்நூற்றாண்டு மனிதனைக் குறி வைத்து - எறிந்திருக்கும் கேள்விக் கணைகள் தெறிப்பானவை; துடிப்பானவை. இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க சில சான்றுகள் வருமாறு:

"மனைவியை மகிழ்விப்பதெப்படி என்று மாநாடா போட வேண்டும்?" (ப.79).

"உபதேசங்கள் ஊருக்குத்தான் என்ற போது ஊரில் எவனை எவன் கேட்பான்" (ப.28).

"போனால் போகட்டும் போடா என்றிருப்பதைப் போல நிம்மதி எதிலிருக்கிறது?" (ப.77).

'விளங்கு உதாரணத்தது ஆகுதல்' என்பது கவிதைக்கு மட்டுமன்றி, உரைநடைக்கும் பொருந்தி வரும் ஓர் அழகு ஆகும். ஏர்வாடியாரின் கவிதைகளில் இடம்பெற்றிருப்பது போலவே அவரது கட்டுரைகளிலும் ஆங்காங்கே அழகிய உவமைகள் உலா வருவதைக் காண முடிகின்றது. காட்டாக, ஒரு சிறந்த சொற்பொழிவில் இடம்பெற வேண்டிய முக்கியமான மூன்று கூறுகளை விமானப் பயணத்துடன் ஒப்பிட்டு ஏர்வாடியார் எழுதியிருக்கும் சுவையான பகுதியை இங்கே சுட்டிக்காட்டலாம்:

"விமானப் பயணத்தில் முதலில் வேண்டுவது **எழுதல்** (Take Off). விமானம் தரையில் சற்று ஓடி வேகம் கொண்டு மேலெழுவது போல் அரங்கைக் கவர்ந்து பேச்சு எழுதல் எடுப்பு ஆகும். இது எடுப்பாக இருக்க வேண்டும். மேலெழுந்த விமானம் தன் சக்கரங்களை உள்ளிழுத்துக் கொண்டு பத்திரமாகப் பறக்க வேண்டும். பேச்சு தொடர்வதும் இப்படித்தான். இதைத் **தொகுப்பு** என்றும் கூறலாம். அளிக்கப்பட்ட அவகாசம் முடிகிற நேரம் சொல்ல வந்த செய்திகளைச் சொல்லியாயிற்று. இனி பத்திரமாக இறங்க வேண்டும். மேடையிலிருந்து இறங்க வேண்டும். 'இத்துடன் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்' என்று தடாலென்று தரையிறங்கக் கூடாது. முத்தாய்ப்பு வைத்தாற்போன்று நாசூக்காகச் சொல்ல வந்ததைச் சுருக்கமாகத் தொகுத்துச் சொல்லி நோக்கத்தை வெளிப்படுத்திவிட்டு **நிறைவு** (Safe landing) செய்து கொள்ள வேண்டும்" (ப.90).

பேச்சுக் கலையில் வெற்றி பெற விழைவோர் பின்பற்ற வேண்டிய இன்றியமையாத நெறிமுறைகளை இங்கே பொருத்தமான ஓர் உவமையைக் கையாண்டு திறம்பட வெளிப்படுத்தியுள்ளார் ஏர்வாடியார்.

மெல்லிய நகைச்சுவை உணர்வு இழையோட எழுதுவதிலும் வல்லவராக விளங்குகிறார் ஏர்வாடியார். **'ஆதலினால் காதல் செய்வீர்'** என்று உலகத்தவர்க்கு அறைகூவல் விடுத்தார் மாக்கவி பாரதியார். ஏர்வாடியாரோ காதலைப் பற்றி ஒரு வித்தியாசமான கருத்தை

வெளியிட்டுள்ளார். காதலில் வென்றவர்களுடைய விலாசங்கள் வெளியே தெரிவதில்லையாம்; தோற்றவர்களே அதிகம் தெரிகிறார்களாம்; பேசப்படுகிறார்களாம்; போற்றப் படுகிறார்களாம்.

"காதலிலே தோற்றுவிடுங்கள்' என்று காதலிக்காமலேயே நான் ஒரு கவிதை எழுதியிருக்கிறேன்.

'காதலிலே வென்றுவிட்டால்
குடும்பம் தன்னிலே - சில
குழந்தைகள் வந்திருக்கும்
கவிதையல்லவே...' (ப.46)

என்ற வரிகள் அவ்வப்போது என் நினைவுக்கு வரும்" என்று ஏர்வாடியார் எழுதியிருப்பதைப் படிக்கும் எவர் முகத்திலும் குமிண் சிரிப்பு தோன்றவே செய்யும்.

"சில வீடுகளில் சிலர் இருந்ததே
அவர்கள் இறந்த பிறகுதான்
எல்லோர்க்கும் தெரிகிறது" (ப.39)

என்னும் அடுக்குமாடி வாழ்க்கையைப் பற்றிய ஏர்வாடியாரின் கவிதைப் பதிவில் நகைச்சுவையும் அங்கதச் சுவையும் கைகுலுக்கிக் கொள்வதைக் காண்கிறோம்.

படிப்பதற்கு இனிமையாகவும் சுவையாகவும் இருக்கும் விதத்தில் ஏர்வாடியார் தம் எழுத்துக்களின் ஊடே பொருத்தமான இடங்களில் நகைச்சுவைத் துணுக்கு களையும் குறுங் கதைகளையும் அனுபவ உண்மை களையும் கையாண்டு சென்றுள்ளார். இவ்வகையில் உள்ளத்தில் சுடர்விட்டு நிற்கும் உண்மை ஒளி விளங்க ஏர்வாடியார் எழுதியிருக்கும் ஓர் இடம் இதோ:

"வழியைக் காட்டுகிறவர்களை விட, வாழ்ந்து காட்டுகிறவர்களே வழிபடத் தக்கவராகிறார்கள். வழிகளைக் காட்ட மனிதர்கள் தேவையில்லை. கைகாட்டி மரங்கள்கூட அக்காரியத்தைக் கச்சிதமாகச் செய்யும். 'நான்தான் கெட்டுக் குட்டிச் சுவராகப் போய்விட்டேன். நீயாவது உருப்படியா வளரணும்' என்று ஒரு தந்தை ஆசைப்படலாம். நியாயமான ஆசைதான். 'நீ மட்டும்

படிக்காம ஜாலியா ஊர் சுற்றலாம். கெட்டுக் குட்டிச் சுவராகப் போகலாம். எனக்கு மட்டும் அந்த உரிமை கிடையாதா?' என்று பிள்ளை கேட்டுவிடக் கூடாதே என்று தந்தை தயங்க வேண்டும். தவிக்க வேண்டும். 'நான் வழியைக் காட்டுகிறேன் என்பதினும் மேலாய் வாழ்ந்து காட்டுகிறேன் என்பதே ஒரு தந்தைக்குப் பெருமையாக இருக்க முடியும்'" (பக்.28-29).

அறிவுரை கூட - ஏன் ஆலோசனை கூட - இது போல் அன்பிலே குழைத்துத் தனித்தன்மையோடு கொடுக்கப் பெற்றால், அது கேட்பவர் நெஞ்சில் கல்வெட்டாய்ப் பதியும். இங்ஙனம் ஆழ்ந்திருக்கும் தம் கலையுள்ளம் விளங்க ஏர்வாடியார் எழுதியிருக்கும் இடங்கள் பல இந்நூலில் உள்ளன.

தேர்ந்து மனிதன் வாழும் வகைக்கு ஆறு கட்டளை களைத் தம் திரைப்பாடல் ஒன்றில் வகுத்துத் தந்தார் கவியரசர் **கண்ணதாசன்**. அதுபோல் ஏர்வாடியாரும் மனிதன் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கான தம் சிந்தனைகளையும் செய்திகளையும் ஒன்பது கட்டுரைகளில் வடித்துத் தந்துள்ளார். அவரே ஓர் இடத்தில் குறிப்பிடுவது போல், **"வாழ்வாங்கு வாழ்தல்** என்பது வண்ணத் தொலைக்காட்சி முதல் வாகனங்கள் வரை என்பதன்று. வசதிகளை வைத்திருப்பவர்கள் நன்றாக வசித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மையே தவிர, வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது தவறு." (ப.39)

ஏர்வாடியாரின் பொன்னான இவ்வாக்கினை ஏற்று, வசதிகளைப் பற்றி அதிகமாகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் வேண்டாத வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைப்போம்; ஏர்வாடியாரின் எழுதுகோல் எதிர்காலத்தில் வளர்தமிழுக்கு இன்னும் பற்பல வரவுகளைத் தரட்டும். இந்த மண்ணிலேயே விண்ணைக் காண்போம் நாம்!

8

‘நம் பக்க’மாக விளங்கும் ‘என் பக்கம்’

“நிலவுக்கும் மறுபக்கம் உண்டு. கலைமாமணி ஏர்வாடியாரின் ‘என் பக்கம்’ வாழ்வின் மறு பக்கத்தை, உட்பக்கத்தை இதுவரை மனிதர்கள் பாராத கோணங்களில் பார்க்க வைக்கிறது.
- வலம்புரி ஜான்*

*சமூக உணர்வு உள்ள இலக்கிய ஆர்வலர்கள் ‘கவிதை உறவு’ இதழ் கைக்குக் கிடைத்ததும் முதலில் தேடிப் படிப்பது **‘என் பக்கம்’** கட்டுரையைத் தான். மனித உறவுகளையும், உணர்வுகளையும் குறுகத் தறித்த வடிவில் ‘நச்’சென்று படிப்பவர் உள்ளத்திற்குச் சென்று சேரும் மொழியில் சொல்லோவியங்களாக்கிக் காட்டும் பகுதி அது. “என் பக்கம் என்பது என்னருகே வருகிற விஷயங்கள் என்பதுதான் உண்மை. இந்த எழுத்து - அதாவது **என் பக்கம் ஒவ்வொருவரையும் என் பக்கம் கொணர்கிறது என்பது கூடுதலான செய்தி”** என்பது ஏர்வாடியாரே ‘என் பக்கம்’ குறித்துத் தந்திருக்கும் ஒப்புதல் வாக்குமூலம் ஆகும்.*

கவிதை உணர்வும் மனித உறவும்

ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்களுக்குக் கவிஞர், நாடக ஆசிரியர், நகைச்சுவையாளர், நடைச்சித்திரப் படைப்பாளி, இதழாசிரியர் எனப் பல்வேறு பரிமாணங்கள் உண்டு. இவற்றுள் எல்லாம் ஏர்வாடியார் என்றதுமே நம் நினைவில் மோனையைப் போல் முன்னே வந்து நிற்பது இதழாசிரியர் என்ற பரிமாணம் தான். ஓர் இலக்கிய

---

* *வார்த்தைச் சாமரம், என்பக்கம்: முழுமையான தொகுதி,ப.4)*

இதழை - அதுவும் கவிதை வடிவத்திற்காகவே ஓர் இதழை- இத்தனை ஆண்டுக் காலம் நடத்திக் காட்டுவது என்பது அரிதினும் அரிய காரியமே ஆகும். ஒட்டுமொத்தமாக ஏர்வாடியாரின் ஆளுமைப் பண்பினைக் குறித்து இரண்டே இரண்டு உயிரோட்டமான தொடர்களில் - 'அருட்பெருஞ் சோதி, தனிப்பெருங் கருணை' என்பது போல. இப்படிக் கூறலாம்.

"கவிதை உணர்வு, மனித உறவு."

இந்த உணர்வும், உறவும் தான் ஏர்வாடியாரின் பக்கம் எல்லோரையும் ஈர்த்துள்ளன. இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. அவர் பல்லாண்டுக் காலம் பாரத மாநில வங்கியில் பணியாற்றி இருக்கலாம்; ஆனால் அவரது **'வாக்கு வங்கி'** (Vote Bank) என்னவோ கவிதை உணர்வும், மனத உறவும் தான்!

கட்டுரைக் கலையின் கூறுகள்

'என் பக்க'த்தைப் பொறுத்த வரையில், **தலைப்பிடுதல், தொடங்குதல், வளர்த்துக் கொண்டு செல்லல், முடித்தல்** என்றாற் போல் கட்டுரைக் கலையின் அனைத்துக் கூறுகளிலும் ஏர்வாடியாரின் கைவண்ணம் பளிச்சிட்டு நிற்கக் காண்கின்றோம். சான்றாக, 'இதனை எதனால்...?' எனச் சிந்தனையைத் தூண்டும் வண்ணம் ஒரு கட்டுரைக்குத் தலைப்பிட்டுள்ளார் ஏர்வாடியார். **'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன்கண் விடல் (517)'** என்பது பலராலும் அடிக்கடி மேற்கோள் காட்டப் பெறும் குறட்பா. இதற்கு வேறு கோணத்தில் நின்று சிந்தித்து ஒரு வித்தியாசமான விளக்கத்தினைத் தந்துள்ளார் ஏர்வாடியார். 'சரியாக இருந்தால் சரி... இல்லாவிட்டால் சாரி' என்ற தன்னடக்கக் குறிப்போடு அவர் கூறும் வாழ்வியல் அனுபவ விளக்கம் இதுதான்:

> **"தவறு செய்தவரிடமே மீண்டும் பொறுப்பைத் தருவது கூட ஒரு நிர்வாக யுக்தி தான். தவறு செய்யாதவனை விட தவறு செய்தவன்தான் தன் பணியில் கவனமாக, மிகக் கவனமாக இருப்பான். தெரியாமல் தவறு செய்கிறவர் களைத் தள்ளிவைக்கத் தொடங்கினால் தவறுகளைத்**

> **தெரியாமல் பார்த்துக் கொள்ளத் தான் தோன்றுமே தவிர திருத்திக்கொள்ள வாய்ப்பில்லாது போய்விடும். அழித்தழித்து எழுதுவதில்லையா? அது போலத்தான் வாழ்க்கையும்" (பக்.16-17).**

இங்கே தம் கருத்திற்கு அரணாக அறிவியல் அறிஞர் **தாமஸ் ஆல்வா எடிசனின்** வாழ்வில் நடந்த ஓர் உண்மை நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டியுள்ளார் ஏர்வாடியார்.

உயரமும் உயர்வும்

ஏர்வாடியாரின் கருத்தியலில் **உயரம்** வேறு; **உயர்வு** வேறு. இரண்டிற்கும் என்ன வேறுபாடு? இவ்வினாவுக்கான விளக்கமே **'உயரமும் உயர்வும்'** என்ற கட்டுரை. இதில் தமக்கே உரிய பாணியில் ஏர்வாடியார் தந்திருக்கும் விளக்கம் வருமாறு:

> **"உயரமான மனிதர் வேறு. உயர்ந்த மனிதர் வேறு. உயர்ந்த மனிதர் என்பது அடிக்கணக்கு பார்த்து அளந்து மதிப்பதல்ல. உலகிலேயே உயரமான மனிதர் என்று கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றவர் உயரமான மனிதரே தவிர உயர்ந்த மனிதர் அல்லர். லால் பகதூர் சாஸ்திரி இந்தியப் பிரதமராக இருந்தார். இந்தியாவுக்காகவே இறந்தார். இருந்தாலும் எல்லோருடைய இதயங்களிலும் இருக்கிறார். இத்தனைக்கும் அவர் உயரத்தில் குள்ளமானவர்தான். ஆனால் நம் உள்ளங்களி லெல்லாம் உயர்ந்த மனிதராக விளங்குகிறார்." (ப.30)**

'உயரம் என்பது **தோன்றுவது,** உயர்வு என்பது **துலங்குவது'** என்பதை இங்கே தக்க சான்று காட்டிப் படிப்பவர் மனத்தில் பசுமரத்தாணி போல் பதியுமாறு செய்துள்ளார் ஏர்வாடியார்.

அனுபவ மொழிகள்

'இருவரிச் செய்திகள்' என்னும் தலைப்பில் ஊடகங்களில் நாட்டில் அவ்வப்போது ஆங்காங்கே நடைபெற்ற முக்கியமான நிகழ்வுகளை இரத்தினச் சுருக்கமாக எடுத்துரைப்பார்கள். அதுபோல் தம் நீண்ட, நெடிய வாழ்வில் பட்டறிவின் பயனாகக் கண்டுணர்ந்த அனுபவ மொழிகளை ஏர்வாடியார் 'என் பக்க'க்

கட்டுரைகளில் அங்கிங்கு எனாதபடி எங்கும் உண்மை ஒளி விளங்க எடுத்துரைத்துள்ளார். இவ்வகையில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க சில வைர வரிகள் இதோ:

"எப்படி இருந்தாலும் நாமாக நாம் இருக்க வேண்டும். யாராகவும் நாம் இருக்க வேண்டாம்." (ப.22)

"நம்பிக்கை இருந்துவிட்டால் எதற்கும் நாம் பயப்படத் தேவையில்லை. இந்த நம்பிக்கை தான் சரணாகதி." (ப.36)

"கடவுளை நம்புவது, அதிர்ஷ்டத்தை நம்புவது எல்லாம் ஒருபுறம் இருக்க, நம்மையும் நாம் நம்பவேண்டும். வாய்ப்புக்களை வரங்களாகக் கருதி உழைக்க வேண்டும். (ப.93)

"மனசு அப்படியே இருப்பது ஆரோக்கியமானது என்றால் மனிதர்கள் அப்படியே இருப்பது ஆராதனைக்கு உரியது. அப்படியே இருந்தல் என்பதை இளமையாகத் தோன்றுவது என்பதைவிட, இனிய பண்புகளால் துலங்குவது என்று அர்த்தப்படுத்திக் கொள்ளுங்கள்." (ப.82)

இவை போல் மண்ணில் நல்ல வண்ணம் நாம் வாழ வழிகாட்டும் அனுபவ மொழிகள் இந்நூல் முழுவதும் மண்டிக் கிடக்கின்றன.

தலைகாட்டும் நகைச்சுவை உணர்வு

மூன்றாம் பிறை போல ஏர்வாடியாரின் எழுத்திலும், பேச்சிலும் நகைச்சுவை உணர்வு அவ்வப்போது தலை காட்டுவது உண்டு. பதச்சோறு வருமாறு:

"சில மருத்துவ மனைகளில் இப்படி எழுதி வைத்திருப் பார்கள்: 'நாங்கள் சிகிச்சையளிக்கிறோம். கடவுள் தான் குணப்படுத்துகிறார்.' நம்மூரில் சில மருத்துவர்களின் சிகிச்சைக்குக் கடவுள் குணப்படுத்தினால் தான் உண்டு. அது வேறு விஷயம்." (ப.72)

நயத்தக்க நாகரிகம்

வளரும் எழுத்தாளர்கள் மட்டுமன்றி, வளர்ந்த எழுத்தாளர்களும் ஏர்வாடியாரிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு நற்பண்பு உண்டு. அது அடுத்தவர் கருத்தை

அவர்களது கருத்தாகவே - தம் சொந்தக் கருத்துப் போல அல்லாமல் - பதிவு செய்யும் நயத்தக்க நாகரிகம் ஆகும். இந்த நேர்மைத் திறம்தான் ஏர்வாடியாரை இந்த அளவிற்கு உயரத்திற்கு அழைத்து வந்திருக்கின்றது. "கவிஞர் **மு.மேத்தா** இப்படிக் குறிப்பிடுவார், 'வரம் கொடுக்கும் தேவதைகள் வந்தபோது தூங்கினேன், வந்தபோது தூங்கிவிட்டு வாழ்க்கையெல்லாம் ஏங்கினேன்' என்று" என்றாற்போல் தாம் மேற்கோள் காட்டும் கருத்துக்குச் சொந்தக்காரரின் பெயரைத் தவறாமல் சுட்டிக்காட்டுவது ஏர்வாடியாரின் தனிப்பெரும் பண்பு ஆகும். இப்பண்பு ஏர்வாடியாரின் எழுத்திலும் பேச்சிலும் என்றென்றும் - எப்போதும் - கொலு வீற்றிருப்பதைக் கண்டு மகிழலாம்; நாமும் நம் வாழ்விலும், வாக்கிலும் அதனைப் பின்பற்றி உயரலாம்.

வெற்றி வாழ்க்கை

'வெற்றியும் வாழ்க்கையும்' என்னும் தலைப்பில் ஏர்வாடியார் எழுதியிருக்கும் 'என் பக்க'க் கட்டுரையின் முடிப்பு வரிகள் இவை:

> **"வெற்றி வெறுவது வாழ்க்கையல்ல. வாழ்க்கையைப் பெறுவதுதான் வெற்றி. வெற்றியை எப்படி வேண்டுமானாலும் பெறலாம். ஆனால் வாழ்க்கையை எப்படிப் பெற வேண்டுமோ அப்படித்தான் பெற வேண்டும். அதை எப்படியும் பெற முடியாது. பெறவும் கூடாது."** (ப.86)

இதோ, 'என் பக்க'க் கட்டுரைகள் வாயிலாக ஏர்வாடியார் நாம் வாழ்க்கையில் வெற்றி பெற மட்டுமல்ல, வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையைப் பெறவும் வழிகாட்டுகிறார். அவர் காட்டும் வழியில் நடை பயில்வோம்; வாழ்வில் முத்திரை பதிப்போம். சரிதானே?

9

கைதேர்ந்த நாடக ஆசிரியர்

"வானொலியில் கேட்ட நாடகம் படிப்பதற்குத் தகுந்ததா என்று வினவினால் இதோ இந்த நாடகம் 'ஆம்' என்ற அழுத்தமான பதிலைப் பெற்றுத் தருகிறது. வானொலியில் தொடர் நாடகமாக வந்து வாராவாரம் ஆர்வத்தைத் தூண்டிய நாடகம் ஒரே மூச்சில் படித்து முடிக்கவும் புத்தகமாக வந்திருப்பது மகிழ்ச்சிக் குரியது."

*- விஜய திருவேங்கடம்**

"நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்"

என்று பாடினார் **மாணிக்கவாசகர்**. 'உலகமே நாடக மேடை; இதில் நாம் அனைவரும் நடிகர்கள்' என்றார் நாடக மேதை **ஷேக்ஸ்பியர்**. நாடகம் கண்ணாலும் செவியாலும் அனைவரையும் ஈர்க்கும் நல்ல கலை வடிவம் ஆகும்.

**"கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே"**

- தொல்காப்பியம்,மெய்ப்பாட்டியல்,நூ.27)

என்று தொல்காப்பியர் கூறியது, நாடகக் கலைக்கும் பொருந்துவதாகும்.

நாடகம் படைப்பது என்பது எளிதான செயல் அன்று. நாடகம் பார்ப்பவர் கண்ணுக்கு விருந்தளிக்கும் வகையில், மெய்ப்பாடு விளங்க நடிக்கும் நடிப்புத் திறனும், செவிக்கு விருந்தளிக்கும் வகையில் உணர்ச்சி பொங்கும் உரையாடலும், நடிகர்களின் செயல்களை எல்லாம்

* *அணிந்துரை, சின்னசாமி பெரியசாமி, ப.4.*

கற்பனையில் அமைக்கும் ஆற்றலும் கைவந்தவராக விளங்கினால்தான் சிறந்த நாடகங்களைப் படைக்க முடியும். ஏர்வாடியார் அவர்கள் இத்தகைய ஆற்றல்களையெல்லாம் ஒருங்கே பெற்றவராக விளங்குகிறார்.

நாடகம், "கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பு; கண்டவர்க்குக் கண்ணளிக்கும் காட்சி; சிரிப்பிலே சிந்தனை, சிந்தனையிலே சிரிப்பு; அழுகையிலே அறிவு, அறிவிலே ஆனந்தம்; ஆடலிலே மனமகிழ்ச்சி, பாடலிலே மனத்தெளிவு, அத்தெளிவிலே ஓர் நிறைவு; வாலிபர்-வயோதிகர், வசதியுள்ளவர் - வசதியற்றவர், படித்தவர்-படிக்காதவர், ஆண் - பெண் அனைவரையும் கவரவல்லது" என்று குறிப்பிடுவார் **பொன்.பரமகுரு** (அணிந்துரை, நல்ல மனம் வாழ்க, ப.5) இத்தகைய நாடகத்தை,

1. நடிப்பதற்கு ஏற்ற நாடகம்

2. படிப்பதற்கு ஏற்ற நாடகம்

3. நடிப்பதற்கும் படிப்பதற்கும் ஏற்ற நாடகம்

என்று மூவகைப்படுத்தினர் அறிஞர் பெருமக்கள். ஆனால் வானொலி வந்த பிறகு, **'கேட்பதற்கேற்ற நாடகம்'** என்று வானொலி நாடகத்தையும் சேர்த்து நான்கு வகைப்படுத்த வேண்டிய காலகட்டம் உருவாகி விட்டது. இயலும், இசையும் சேர்ந்து கதையைத் தழுவி வரும் கூத்தே நாடகம் ஆகும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தே நாடகங்கள் உரைநடை வடிவில் தோன்றத் தொடங்கின. தேசியப் பற்று மக்களிடையே தீ போல விரைந்து பரவிய காலகட்டத்தில், **'கதரின் வெற்றி'**, **'தேசியக் கொடி'**, **'பம்பாய் மெயில்'** போன்ற புரட்சிகரமான நாடகங்கள் நாடு முழுவதும் நடிக்கப் பெற்று, மக்களிடையே விடுதலை உணர்வைத் தட்டியெழுப்பின. விடுதலைக்குப் பின்னர், கண்மூடிப் பின்பற்றிய மூடப்பழக்க வழக்கங்கள் யாவும் மண்மூடிப் போகவும், சாதி மதச் சடங்குகளும் சம்பிர தாயங்களும் வேரற்று வீழவும், இளமை மணம், பொருந்தா மணம், வரதட்சணைக் கொடுமை போன்ற சமூகப் பிரச்சினைகளைக் களையவும் சமுதாயச் சீர்திருத்த நாடகங்கள் தோன்றலாயின. மேடைகளில் அரங்கேற்றப்பட்டு

வந்த நாடகங்கள், வானொலியிலும் இடம்பெறலாயின. வானொலி நாடகங்கள் எழுதிய சிறந்த அறிஞர்கள் பத்துப் பேரைக் குறிப்பிட்டால், ஏர்வாடியின் பெயரும் அதில் நிச்சயமாக இடம்பெறும் என்பதில் சிறிதளவும் ஐயம் இல்லை. அந்த அளவிற்கு ஏர்வாடியார் படைத்துள்ள வானொலி நாடகங்கள் பலப்பலவாகும். சில நாடகங்கள் நூல் வடிவமும் பெற்றிருக்கின்றன. அவை வருமாறு:

1. ***நீ வந்த நேரம்***
2. ***பணம் பணம் பணம்***
3. ***அன்புள்ள கீதாவுக்கு***
4. ***இப்போது புரிகிறது***
5. ***இன்னும் ஒரு மீரா*** (தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசு பெற்றது)
6. ***ஒரே ஒரு வீடு***
7. ***நிழல் தேடும் நெஞ்சங்கள்***
8. ***இடைவேளை இடைவெளி அல்ல***
9. ***வருகிறாள் உன்னைத் தேடி***
10. ***சின்னசாமி பெரியசாமி***
11. ***நல்ல மனம் வாழ்க!***

மேடையில் பார்க்கும் நாடகத்திற்கும் வானொலியில் கேட்கும் நாடகத்திற்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. வானொலி நிலைய மேனாள் இயக்குநர் திரு.**விஜய திருவேங்கடம்** குறிப்பிடுவது போல், **"குரல் ஒன்றின் வாயிலாகவே நேயர்தம் மனம் என்னும் மேடையில் நடத்தப்பெறும் நாடகம் இது (வானொலி நாடகம்)...** நேயர்தம் மனத்தகத்தே நிகழும் வானொலி நாடகத்திற்கு எல்லை வரையறைகள் இல்லை. நமது கற்பனை செல்லக்கூடிய தொலைவே இதன் எல்லை என்பதால் கோடானுகோடி விதமான வரையறைகள்... எல்லையற்ற மனவெளியில் நிகழ்த்தப் பெறுவதனால் வானொலி நாடகம் வரைவது எளிதன்று. **செவி எனும் புலத்திற்கென எழுதப் பெறுவதால் சரியான சொற்களும் காட்சி அமைப்புக்களும் தேவைப்படுகின்றன"**

(அணிந்துரை, சின்னசாமி பெரியசாமி,ப.3). இந்தக் கலையில் கைதேர்ந்தவராக விளங்குகிறார் ஏர்வாடியார்.

நாடக அமைப்பு

வானொலியிலும், மேடையிலும் ஒலிபரப்பப்பட்டும், நடிக்கப்பெற்றும் வந்த நாடகங்கள் இன்று நூல் வடிவம் பெற்று, படிப்பதற்கும் ஏற்ற நாடகங்களாக உருப்பெற்றிருக் கின்றன. கதை, வசனம், இயக்கம் என்று திரைப்படத்தில் போடுவது போல், மூன்றையும் ஏர்வாடியார் மிகச் செம்மையாகச் செய்திருக்கின்றார். இம்மூன்றுடன் நாடகத்திலும் நடித்திருக்கிறார் அவர். நாடகம் காட்சிகளாகப் பகுக்கப் பட்டு அடுத்தடுத்துக் காட்சிகள் அமைக்கப்படும் முறை, அக் காட்சிகளில் இடம்பெறும் கதைமாந்தர்கள், அக்காட்சிகள் இடம்பெறும் இடம், காட்சிகளில் இடையிடையே சில ஒலிக்குறிப்புகள், காட்ட முடியாத சில செயல்கள் அடைப்புக் குறியில் குறிப்பிடப்படுதல் முதலான நாடக அமைப்பு முறைகள் அவரது நாடகங் களில் மிகச் சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளன. இவை, படிப்பவர்க்கு, நாடகத்தைப் பார்ப்பது போன்ற உணர்வைத் தருகின்றன. ஏர்வாடியாரின் நாடகங்களில் நாம் வாழ்வில் அன்றாடம் சந்திக்கும் மக்களே கதைமாந்தர்களாக உலவுகின்றனர். கதை மாந்தர் களின் உணர்வுகளைப் புலப்படுத்தும் வசனங்கள்- நகைச்சுவையுடன் அமைந்த உரையாடல்கள் என அமைத்துத் தேர்ந்த நாடக ஆசிரியராக அவர் விளங்குகிறார்.

நாடகப் பொருள்

சமுதாயத்தில் நடக்கும் பல சீரழிவுகளைக் கண்டு நம்மில் பலர் ஆவேசப்படுகின்றனர்; ஆத்திரப்படுகின்றனர்; ஆனால் அவற்றை, நீறு பூத்த நெருப்பாக மனத்தில் வைத்துப் பூட்டிப் பாதுகாத்து, உரிய நேரத்தில் வெளிப்படுத்துகிறவன் தான் படைப்பாளி ஆகிறான். இவ் அனுபவத்தை, **“சமுதாயக் கொடுமைகளைச் சாட வேண்டும் என்கிற வெம்மை எப்போதும் என் நெஞ்சில் கனன்று கொண்டிருக்கும்”** (ப.6) என்று ஏர்வாடியார், ‘சின்னசாமி பெரியசாமி’ நாடகத்தின் ‘என்னுரை’யில் குறிப்பிடுகின்றார். அவருடைய நாடகங்கள் நகைச்சுவை

நாடகங்களைப் போலத் தோன்றினாலும், சமுதாயத்திற்கு, இளைஞர்களுக்கு ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்துவனவாக விளங்குகின்றன.

'சின்னசாமி பெரியசாமி' என்னும் வானொலித் தொடர் நாடகம். அய்யாச்சாமி என்னும் சிறந்த ஆசிரியர் ஒருவரின் இரண்டு மைந்தர்களைப் பற்றிய கதை. ஆசிரியர் ஆசு+இரியர் என்பதற்கேற்ப, மாணவர்களின் குற்றங்களைத் திருத்தி, அவர்களை நல்வழிப்படுத்தி வழிகாட்டியாக விளங்குகிறார் அய்யாச்சாமி. அவரிடம் படித்த மாணவர்கள் பலரும் வாழ்க்கையில் முன்னேறி நல்ல நிலைமையில் நேர்மையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்; ஆனால் 'வாத்தியார் மகன் மக்கு' என்னும் பழமொழிக்கு ஏற்ப அய்யாச்சாமியின் பிள்ளைகள் படிக்காதவர்களாக, சோம்பேறிகளாக விளங்குகின்றனர்; தந்தை எவ்வளவோ திருத்த முயன்றும் திருந்தாதவர்களாக இருக்கின்றனர்; அவருடைய ஏச்சுக்களைப் பொறுக்க முடியாமல், எப்படியாவது வாழ்ந்து தீர வேண்டும் என்கிற வேகத்தில், குறுக்கு வழிகளில் முன்னேற முயல்கின்றனர்; ஒவ்வொரு முயற்சியிலும் தோல்வியைத் தழுவுகின்றனர். இறுதியில் வீடு வந்து சேர்ந்த புதல்வர்களுக்கு அய்யாச்சாமி வீட்டை வங்கியில் அடமானம் வைத்துக் கடனுதவி பெற்று ஓர் அச்சகத்தைத் தொடங்கி அவர்கள் வாழ வழிகாட்டுகின்றார் என்பது இந்நாடகத்தின் கதைப்பொருள்.

"உண்மையான உழைப்பு, நேர்மை இதெல்லாம் இருந்தா எந்தத் தொழில்லேயும் முன்னுக்கு வரலாம். படிப்பு வாழ்க்கையிலே ஒரு சாதகமான விஷயம்தான். ஆனா **பாதகங்களையும் தன்னுடைய வாழ்க்கைக்கு சாதகமா மாத்திக்கறது ஒரு சாதனை.** நீங்க பலவிதமான கஷ்டங்களை அனுபவிச்சிட்டீங்க. பலவிதமான மக்களைச் சந்திச்சிட்டீங்க. அந்த கஷ்டமும், அனுபவமும் கூட உங்க வாழ்க்கையிலே ஒரு பாடமா அமையும்" என்று ஆசிரியர் அய்யாச்சாமி கூறும் வசனம், 'வாழ்க்கையில் முன்னேறுவதற்குப் படிப்பு மட்டும் போதாது. உழைப்பும் தேவை, அதுவும் ஒரு வகையில் படிப்பே' என்னும் வாழ்வியல் பாடத்தை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

"ஏர்வாடியாரின் 'சின்னசாமி பெரியசாமி' நாடகம் எப்படியும் பிழைத்து விடலாம் என்று எண்ணுகிறவர் களுக்குச் சரியாகச் சூடு போடுகிற நாடகம். **'உண்மை, உழைப்பு, உயர்ந்த எண்ணங்களே நம்மை உயர வைக்கும், குறுக்கு வழிகள் அல்ல'** என்பதை நல்ல கதையொன்றின் வாயிலாய் நன்கு உணர்த்துகிறார்" (ப5) என்று 'அமுதசுரபி' ஆசிரியர் கலைமாமணி **விக்கிரமன்** தம் வாழ்த்துரையில் இந்நாடகம் குறித்துக் கருத்துரைத்துள்ளார் (ப.5). மேலும், வாரந்தோறும் வெள்ளிக்கிழமை, இந்நாடகம் ஒலிபரப்பும் நேரத்தில், அவரது துணைவியார் வானொலிக்கு முன்னால் உட்கார்ந்து விடுவார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் ஏர்வாடியாரின் நாடகங்கள் பெண்களையும் கவரக்கூடியதாக இருந்தமையை அறிய முடிகிறது.

1994-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட **'நல்ல மனம் வாழ்க'** என்னும் நாடகத் தொகுப்பில் 'நல்ல மனம் வாழ்க' என்னும் நாடகமும், 'வாசலில் வசந்தம்' என்னும் நாடகமும் இடம்பெற்றுள்ளன. இவ்விரண்டு நாடகங்களும் சென்னை வானொலியின் வர்த்தக ஒலிபரப்பில் ஒலி பரப்பப்பட்டவை; மேடைகளிலும் நடிக்கப் பெற்றுள்ளவை. முதல் நாடகம் ஏழை, பணக்காரன், நடுத்தரம் என்று வாழ்க்கையின் மூன்று நிலைகளில் உள்ள மக்களின் உணர்வுகளையும், அவர்தம் நிலைமைகளையும் சித்திரிக்கும் நாடகம். இரண்டாவது நாடகம் குடும்பக் கட்டுப்பாடு, பெண் குழந்தை நலம் குறித்த நாடகம்.

'நல்லதை நினைத்தால் நல்லதே நடக்கும்' என்னும் உடன்பாட்டுச் சிந்தனையின் அடிப்படையில் அமைந்துள்ளது 'நல்ல மனம் வாழ்க' என்னும் நாடகம். காணாமல் போன தன் மகள் ஜெயா, செத்துப்போயிருப்பாள் என்று எல்லோரும் கருத, அவள் நிச்சயம் உயிருடன் தான் இருக்கிறாள் என்று கருதுகிறார் இந்த நாடகத்தில் வரும் குமாரசாமி. ஜெயாவைப் பள்ளிக்கு ஏற்றிச் செல்லும் ரிக்ஷாக்காரன் சின்னசாமிக்கு, மாதந்தோறும் ரிக்ஷா வாடகை ரூ. 100. தவறாது கொடுத்து வருகிறார் அவர். மகனும், மனைவியும் அது தண்டச் செலவு என்றும் பைத்தியக்காரத்தனம் என்றும் கூறித் தடுக்கின்றனர். ஜெயா

உயிருடன் இருக்க வேண்டும் என்று தாம் மானசீகமாக ஆசைப்படுவதையும், நம்புவதையும் எடுத்துக்கூறி, சின்னசாமிக்கு மாதந்தோறும் பணம் கொடுப்பதை நிறுத்த வில்லை. முடிவில், அவருடைய நம்பிக்கை உண்மையாகி ஜெயாவும் கிடைத்துவிடுகிறாள்.

"குறைகள் எல்லாருடைய வாழ்க்கையிலும் தான் இருக்குது... **கொஞ்சம் வச்சிருக்கிறவன் ஏழை இல்லேடி... அதிகமா ஆசைப்படுறவன் தான் ஏழை.** நம்ம வசதிக்குத் தகுந்த வாழ்க்கையை அமைச்சுக்கிட்டா எந்த ஒரு வாழ்க்கையிலும் சுவை இருக்கும். இருக்கிறது போதாதுன்னு இன்னும் சேர்க்கிறது எப்படிங்கிற கவலையாலே பணக்காரனுக்கு நிம்மதி இல்லே... இன்னிக்கிப் பாட்டுக்கு என்ன பண்றதுங்கிற கவலையிலே இல்லாதவனுக்கு நிம்மதி இல்லே...ஆனா நாம அப்படி இல்லையே... நம்மை மாதிரி நடுத்தர வர்க்கத்துக்கு ரெண்டு கவலைகளுமே கிடையாது. வருமானத்துக்குத் தகுந்த வாழ்க்கையை நாம வகுத்துக் கிறோம்" என்று நாடகத்தில் வரும் குடும்பத் தலைவர் குமாரசாமி மூலம் ஏழை, பணக்காரன், நடுத்தர வர்க்கம் என்னும் மூன்று பிரிவினரின் நிலைகள் பற்றி விளக்கம் தருகின்றார் ஆசிரியர். இது அவரது சிந்தனைத் திறனை எடுத்துரைப்பதாகும்.

நாடகத்தின் இறுதிப் பகுதியிலும் ஏழை, பணக்காரன், நடுத்தர வர்க்கத்தினரின் நிலைகளைப் புலப்படுத்திச் செல்கின்றார் ஆசிரியர்; ரிக்ஷாக்கார சின்னசாமி, தான் தேர்தலில் கவுன்சிலராகப் போட்டியிடப் போவதாகக் கூறுமிடத்து குமாரசாமி அவனைப் பாராட்டு கிறார். நடுத்தர வர்க்கம் நடுத்தர வர்க்கமாகவே இருப்பதற்கு உரிய காரணத்தையும் எடுத்துரைக்கிறார்:

"நாம வாழ்க்கையிலே ரிஸ்க் எடுக்கிறதில்லே. அதனாலேதான் முன்னுக்கு வர மாட்டேங்கிறோம். ஆனா உண்மையான குடிமக்கள் மிடில் கிளாஸ்தான். இந்த நாட்டிலே எத்தனையோ பணக்காரங்க தங்களோட உண்மையான வருமானத்துக்கு வரி கட்டறதில்லை. வாங்கற சம்பளத்துக்கு கரெக்டா வரி கட்டறது நாம

தான்... இந்த மிடில் கிளாஸ் லைப்பிலே கஷ்டங்கள் இருக்கிற மாதிரி சில சுகங்களும் இருக்கத்தான் செய்யுது... பணக்காரனுக்கு பணம் இருக்கிறதே ஒரு பிரச்சினை.. ஆனா **நம்ம வாழ்க்கை ஒரு சலனமில்லாத நீரோடை.** ஏதோ மாசக் கடைசியிலே கொஞ்சம் இழுபறியா இருக்கும். ஆனா முதல் வாரத்திலே எல்லாம் சரியாப் போயிடும்"

இதன் மூலம் நடுத்தர வர்க்கத்தினரின் குடும்பச் சூழலை, எந்தத் துன்பத்தையும், இன்பத்தையும் ஏற்றுக்கொண்டு பொறுத்துப் போகும் அவாதம் நிலையை அழகாக எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர்.

'பணக்காரர்களிடம் பணம் இருக்கலாம். ஆனால் அன்பு என்னும் குணம் இருப்பதில்லை. பணம் இல்லாத ஏழைகளிடம் அன்பு நிறைந்து இருப்பதால் அவர்கள் சிறந்த மனிதர்களாக விளங்குகிறார்கள்' என்பதையும் இரண்டு கதைமாந்தர்கள் மூலம் இந்த நாடகத்தின் நோக்கமாகப் புலப்படுத்தியுள்ளார் ஆசிரியர் ஏர்வாடியார்.

குமாரசாமி, காணாமல் போன தன் மகள் ஜெயாவின் ரிக்ஷா வாடகைச் செலவாக மாதந்தோறும் கொடுக்கும் 100 ரூபாயை ரிக்ஷாக்காரன் சின்னசாமி, அப்படியே சேர்த்து வைக்கிறான். ஜெயாவின் கல்யாணத்துக்காகப் பணமின்றித் தவிக்கும் குமாரசாமிக்கு, தான் சேர்த்து வைத்த 20,000 ரூபாய் பணத்தை 'இது யாசகப் பணம் அல்ல, உங்கள் சொந்தப் பணம்' என்று கூறிக் கொடுக்கிறான்; தான் மனிதன் என்பதை மெய்ப்பிக்கிறான்.

"சாக்கடையிலே 10 காசு விழுந்தாக் கூட கழுவி எடுத்துக்கற இந்த சமுதாயத்திலே இவ்வளவு பெரிய தொகையை நினைச்சித் திருப்பித் தர்றியே... உன்னை எப்படிப் பாராட்டுறதுன்னே புரியலேப்பா" என்று மனம் நெகிழ்ந்து பாராட்டும் குமாரசாமியிடம்,

"பணம் என்ன பெரிய பணம்... பணத்தை சம்பாதிச்சுப் புடலாம்... (குறும்பாக) இப்ப நான் கவுன்சிலர் தான். ஆனா மனுஷாளைச் சம்பாதிக்க முடியுமா" (ப.111) என்று சின்னசாமி கூறுவதன் மூலம் **'அன்பு நிறைந்த மனிதத் தன்மையே ஒருவரை உயர்த்த முடியும்'** என்பதை

எடுத்துக்காட்டியுள்ளார் ஆசிரியர். அதே போல, பணக்காரனாக வரும் கனகசபையிடம், அவரது வளர்ப்பு மகள் ஷோபாவும் 'அன்பு தான் வெல்லும்' என்னும் கருத்தை வெளிப்படுத்துவதாக அமைத்துள்ளார் ஆசிரியர்:

"அழகா குளிப்பாட்டி. வாசனைத் திரவியங்கள் கொடுத்து, உயர்ந்த ரக உணவுகளைக் கொடுத்து, ஊர் மெச்ச காரிலே கூட்டிக்கிட்டுப் போனீங்க அழகான உயர்ந்த ஜாதி நாயைப் போல. வேண்டியதை வாங்கப் பணம் தந்தீங்க... அன்பு காட்டினதுண்டா? அப்பா! இதோ இந்த ஜனங்ககிட்டே பணம் கிடையாது. ஆனா எவ்வளவு உயர்ந்த அன்பு இருக்கு பார்த்தீங்களா? நான் பிறந்தது எப்படியோ தெரியாது. ஆனா பணத்தோட வளர்ந்தேன். இனி ஒரு பண்புள்ள குடும்பத்திலே வாழ விடுங்கப்பா" (ப.112).

இங்ஙனம் சமுதாயத்திற்குத் தேவையான நல்ல பண்புகளை உணர்த்தும் உரையாடல்களை நூல் முழுவதும் தெளித்துச் செல்கின்றார் ஏர்வாடியார்.

'நல்ல மனம் வாழ்க' என்னும் நூலில் இடம் பெற்றுள்ள மற்றொரு நாடகம் **'வாசலில் வசந்தம்'**, இது குடும்பக் கட்டுப்பாடு, பெண் குழந்தை நலம் குறித்த நாடகம் ஆகும்.

ஆறு பெண் குழந்தைகள் பிறந்த பிறகும், ஆண் குழந்தை வேண்டும் என்பதற்காகப் பிள்ளை பெறும் இயந்திரமாகத் தன் மனைவி மரகதத்தை ஆக்கி வைத்திருக்கும் அண்ணன் வரதராஜன், குழந்தைப் பேறு இல்லாத தம்பி பார்த்தசாரதி. அவன் மனைவி சுமதி, மாமனார் சுந்தரேசன் என்று ஒரு கூட்டுக் குடும்பத்தில் நிகழும் சின்னச் சின்ன சண்டைகள், கருத்து வேறுபாடுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப் பட்டுள்ளது இந்நாடகம். இந்நாடகத்தில் இடம்பெறும் சிந்தனையைத் தூண்டும் உரையாடல்கள் சில வருமாறு:

"ஆணோ பெண்ணோ எல்லாம் ஒண்ணுதான். பொண்ணா பிறக்கிறது பாவமுமில்லை. ஆணாப் பிறக்கிறது

பெரிய சாதனையுமில்லை. **சாதனை செய்யறதுக்கு ஆண் பெண் பேதமுமில்லை.** இன்ப துன்பங்களிலே கூட பேதமில்லை. ஆண் பிறக்கணும்னு பெண்ணையோ, பெண் பிறக்கணும்னு ஆணையோ அலட்சியப்படுத்தக் கூடாது" (ப.177).

"பெண்கள் கூட ஒரு குடும்பத்தோட சந்ததியா இருக்க முடியும். பாரம்பரியத்தைப் பேச முடியும். தலைமை ஏற்கிற அளவுக்குத் தகுதியும் திறமையும், ஆண்களுக்கு இணையான ஆற்றலும் பெண்களுக்கும் இருக்கு. **வாய்ப்புகளைப் பொறுத்த வரை ஆணும் பெண்ணும் சமமாகிட்ட யுகம் இது.** பிரச்சினைகளும் எல்லாருக்கும் பொதுவானதே தவிர பெண்ணுன்னும் ஆணுன்னும் பேதம் பார்க்கிறதில்லே" (ப.156).

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றார் **ஔவைப் பிராட்டியார்**. கோவில், குளம், வழிபாடு என்று செல்வதெல்லாம் வீணான வேலை என்று நினைப்பவர் களுக்குக் கோவில் வழிபாடு பற்றி ஓர் அருமையான கருத்தைச் சொல்லிச் செல்கிறார் ஏர்வாடியார்.

"எல்லாரும் வீட்டோட வழிபாடு, மனசோட தெய்வம்னு இருந்திட்டா கோவில், கும்பாபிஷேகம், அர்ச்சனை, அலங்காரம் இதெல்லாம் எதுக்குன்னு ஆயிடும். மேலும் குளிக்கறதுக்கு ஒரு இடம், கூடறதுக்கு ஒரு இடம், விளையாட ஒரு இடம், வெட்டியாப் பொழுதைப் போக்க ஒரு இடம்னு இருக்கிற மாதிரி கும்பிட ஒரு இடம்னு இருக்கத் தாங்க வேணும்" (ப.148) என்று சுமதி கூறும் கருத்து சிந்திக்கத்தக்கதாகும்.

'விட்டுக் கொடுத்து, ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு, அன்பு பாராட்டும் குணம் இருந்தால் போதும், கூட்டுக்குடித்தன வாழ்க்கை சிறக்கும்' என்பதைச் சுமதி கதாபாத்திரத்தின் மூலம் இந்நாடகத்தில் உணர்த்துகிறார் ஆசிரியர். சிந்தனையைத் தூண்டும் பல நல்ல கருத்துக்கள் இவ்விரு நாடகங்களிலும் நிறைந்துள்ளன.

'வருகிறாள் உன்னைத் தேடி' என்னும் நாடகம், எழுபதுகளில் ஏர்வாடியார் எழுதிய முதல் மேடை நாடகம்.

"எனக்கு நாடகங்கள் - குறிப்பாக வானொலி நாடகங்கள் தான் அதிகமாய்ப் புகழீட்டித் தந்தன" (ப.5) என்று 'என்னுரை'யில் ஏர்வாடியார் குறிப்பிடுவது போல இந்நாடகம் இருபதுக்கும் மேற்பட்ட மேடைகளில் நடிக்கப் பெற்ற முழு நீள நகைச்சுவை நாடகம். வானொலியிலும் வர்த்தக ஒலிபரப்பின் வண்ணச் சுடரில் தொடராக இது ஒலிபரப்பப்பட்டுள்ளது.

இந்த நாடகத்தில் வரும் நாயகன் கல்யாணராமனுக்கு வயது 28. இன்னும் கல்யாணம் ஆகவில்லை. அவனது ஜாதகத்தில் ஏதோ தோஷம் இருப்பதாகவும், அதனால் 30 வயது வரை அவனுக்குத் திருமணம் செய்யக் கூடாது என்றும், மீறிச் செய்தால் அது பெற்றோரை பாதிப்புக்கு உள்ளாக்கும் என்றும் காரணம் கூறுகின்றனர் அவனது பெற்றோர். அதனால் கல்யாணராமனின் கல்யாணம் தள்ளிப்போகிறது. அலுவலகத்திலும், வெளியிலும் அவனைச் சுற்றியிருக்கும் சிலருக்கு ஒவ்வொரு வகையான பிரச்சினைகள்; அனைவருமே பிரம்மச்சரிய வாழ்க்கையை அனுபவிக்குமாறு அறிவுறுத்துகின்றனர்; 'எத்தனை நாள் வேணும்னாலும் விரதத்திலே இருக்கலாம். ஆனா ஒரு நாள் கூட விரகத்திலே இருக்க முடியாது, விரகம் வந்திட்டாலே வாழ்க்கை நரகம் தான்' என்று எண்ணும் கல்யாணராமன். தன்னுடைய திருமணத் தேவையைப் பெற்றோர்க்கு உணர்த்தப் பல வழிகளிலும் முயல்கிறான்; 'நாம் ஒன்று நினைக்க, கடவுள் வேறு ஒன்று நினைப்பார்' என்பதற்கு ஏற்ப, விளைவுகள் மாறுகின்றன.

சென்னையில் ஹோட்டல் சாப்பாடு ஒத்துக் கொள்ளவில்லை என்று புலம்பினால், சமைத்துப் போடப் பாட்டியை அனுப்புவதாகக் கூறுகின்றனர் பெற்றோர்கள். அடுத்து, அலுவலக மேலாளர் கூறியதற்கு ஏற்பப் 'பிள்ளையின் நடவடிக்கை சரியில்லை. ஒரு பெண்ணோடு ஊர் சுற்றுகிறான்' என்று தானே பெற்றோர்க்கு மொட்டைக் கடிதம் போடுகிறான்; அதன் விளைவு - காதலில் தோல்வியுற்று மனநிலை சரியில்லாத ஒரு பெண்ணின் காதலன் இவன் என்பதாகப் பழி சுமத்தப்படுகிறான்; அந்தப் பெண்ணோ இவன் மீது காதல் கொண்டு, இவன்

சொல்வதை மட்டுமே கேட்கின்றாள்; எனவே மருத்துவர், இவனை வற்புறுத்தி, அப்பெண் இருக்கும் இடத்திலேயே தங்க வைக்கின்றனர்; இச்சூழலைப் பயன்படுத்திக் கொண்டு, மருத்துவரின் உதவியுடன், அவள் தாயாகிவிட்டாள் எனப் பொய் சொல்லி அவளையே திருமணம் செய்து கொள்வதாக முடிகிறது நாடகம். நாடகம் முழுவதும் நகைச்சுவை இழையோடுகிறது.

இந்நாடகத்தின் மூலம், ஜோதிடத்தின் மீது மிகுந்த நம்பிக்கை கூடாது என்னும் கருத்தை வலியுறுத்த முனைகிறார் ஏர்வாடியார்:

“ஜோசியம் எப்பவும் வாழ்க்கைக்கு ஒரு ‘outline’ தானே தவிர, ஜோசியமே ‘out and out’ வாழ்க்கையை நிச்சயப்படுத்த முடியாது” (ப.70).

மேலும், “கல்யாணங்களாலே பிரச்சினைகள் உண்டாகறது உண்மைதான். அதுக்காக கல்யாணமே பண்ணிக்கக் கூடாதுன்னு சொல்றது பைத்தியக்காரத்தனம். விபத்துக்கள் நடக்குதுங்கிறதுக்காக பிரயாணங்கள் நடக்காமலா இருக்கு? விபத்துக்களைத் தவிர்க்க நினைக்கிறதுதான் புத்திசாலித்தனமே தவிர, பிரயாணங்களை நிறுத்தறது முட்டாள்தனம்” என்று கல்யாணராமன் கூறும் வசனத்தின் மூலம், திருமணத்தின் இன்றியமையாமையையும் ஆசிரியர் புலப்படுத்தி விடுகிறார். இங்ஙனம் ஏர்வாடியாரது நாடகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சமுதாயப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன.

ஏர்வாடியாரின் நகைச்சுவைகள்

“ஏர்வாடியாரின் நாடகங்களில் இயல்பாய் இழையோடும் நகைச்சுவையும் இதயத்தைத் தொடுகிற சமுதாயப் பிரக்ஞையும் என்னை எப்போதும் ஈர்க்கும்” (வாழ்த்துரை, நல்ல மனம் வாழ்க, ப.15) என்று கலைமாமணி **விக்கிரமன்** குறிப்பிடுவது போல், ஏர்வாடியாரின் நாடகங்களில் கேலி, கிண்டல், குத்தல், எள்ளல் என்னும் நகைச்சுவையின் எல்லாப் பரிமாணங்களையும் காண முடிகின்றது. அவரது நாடகங்களில் இடம்பெற்றுள்ள நகைச்சுவைகள் இன்று பல மேடைகளிலும்,

பட்டிமன்றங்களிலும் இடம்பெற்று வருகின்றன என்பது கண்கூடு. உள்ளம் கவரும் சில எடுத்துக்காட்டுகள் வருமாறு:

- தன் இரண்டு மனைவிகளைப் பற்றி வரதராசன் நண்பர் ரங்கநாதனுடன் நிகழ்த்தும் உரையாடல்:

*"**வரத :** ஏதோ அனுசரிச்சு போறாளுங்க.. பெரிய விஷயங்களைப் பத்தி என் முடிவை ஒத்துக்குறாங்க... சின்னச் சின்ன விஷயங்களை அவுங்க இஷ்டத்துக்கு விட்டுடுவேன்.*

***ரங்:** அதென்ன பெரிய விஷயம்...? சின்ன விஷயம்...?*

***வரத:** ரெண்டு வியட்நாமும் இணையலாமா? இது போன்றது பெரிய விஷயம்... வீட்டுக்கு என்ன வாங்கணும், எப்படிச் செலவழிக்கணும்... இதெல்லாம் சின்ன விஷயம்..."*

(வருகிறாள் உன்னைத் தேடி, ப.67)

- டாக்டர் பரஞ்சோதிக்கும் கனகசபைக்கும் இடையே நடக்கும் உரையாடல்:

*"**கனக:** 'கண்ணே கமலா'ன்னு ஒரு நாவல் போட்டோமில்லையா...?! அது விஷயமா கொஞ்சம் வேலை இருந்திச்சு... போயிருந்தேன்.*

***டாக்டர்:** 'கண்ணே கமலா' நல்ல பேரு.. எத்தினி காப்பி போட்டே?*

***கனக:** 5000 போட்டேன்.*

***டாக்:** கடைசிலே அதிலே எத்தனை மீதியிருக்கு...?*

***கனக:** கடையிலே ஒன்று கூட மீதி. இல்லே சார்...*

***டாக்:** பரவாயில்லையே... எல்லாத்தையும் வித்தாச்சா?*

***கனக:** ஒண்ணுகூட விக்கலே... எல்லாத்தையும் வீட்டுக்குக் கொண்டு வந்து பரணையிலே அடுக்கிட்டேன்.*

***டாக்:** அந்த புஸ்தகமெல்லாம் கடையிலே விற்பனையாகலேன்னா எடையிலே விற்பனையாக்கு."*

(வருகிறாள் உன்னைத் தேடி,ப.161)

• குடும்பத் தலைவன் குமாரசாமியும், அவன் மனைவி தனலட்சுமியும் உரையாடுமிடத்து வெளிப்படும் நகைச்சுவை:

"**குமா:** லாண்டரியிலே இருந்து துணி வந்துதா? அந்த நீலநிற பேண்ட் பத்திரமா இருக்காடி....?

தன: அது தானே? பாத்திரமா இருக்குங்க.

குமா: பாத்திரமா இருக்கா?

தன: ஆமாங்க பாத்திரக்காரன் வந்தான். அதைப் போட்டுட்டேன்...

குமா: உன்னோட பெரிய தொல்லையாப் போச்சு. என்னோட துணிமணி எதைப் பார்த்தாலும் உடனே பாத்திரக்காரனுக்குப் போட்டுடறே... ஒரு நாளைக்கு என்னையே தூக்கிப் போட்டாலும் போட்டுடுவே போல இருக்கே.

தன: அலுமினிய டபரா கூட தரமாட்டான்."

(நல்ல மனம் வாழ்க, பக்.13-14)

• டாக்டர் அர்த்தநாரியும், செல்வந்தர் கனகசபையும் உரையாடும்போது வெளிப்படும் நகைச்சுவை.

கன: நம்ம மளிகைக் கடை பாய் உன்னோட க்ளினிக்லே இருந்து சொல்லிக்காம ஓடிட்டாராமே! என்ன விஷயம்?

டாக்: அவரு அப்பெண்டிசைடிஸ்னு வந்தார். ஆபரேஷன் பண்ணனும்னு சொன்னேன். சார் நான் என் வாழ்நாளிலே செய்துக்கிற முதல் ஆபரேஷன் இது. அதனாலே ரொம்ப பயமா இருக்குன்னார். இதுக்கெல்லாம் பயப்படலாமா? எனக்குக்கூடத்தான் நான் செய்யப்போற முதல் ஆபரேஷன் இது... நான் என்ன உன்னை மாதிரியா பயப்படுறேன்னேன். படுபாவி... ஏனோ சொல்லிக்காம ஓடிட்டான்." *(நல்ல மனம் வாழ்க, ப.29)*

• 'வாசலில் வசந்தம்' நாடகத்தில் இருந்து ஒரு நகைச்சுவை: கதைத் தலைவன் வரதராசனும் அவன் மனைவி மரகதமும் இங்ஙனம் உரையாடிக் கொள்கின்றனர்:

*"**மரக:** (கோபமாகத் தன் மகள் கமலாவிடம்): சனியனே நீ எதுக்கு ஸ்கூல்ல பென்சிலைத் திருடினே. நான் தான் உனக்கு ஆபிஸிலேர்ந்து பென்சில் எடுத்திட்டு வந்து தர்றேன் இல்லையா...?*

***வரத:** நல்லா இருக்கு... ஸ்கூல்லேர்ந்து எடுத்துட்டு வந்தா திரட்டு. ஆனா நீ ஆபீஸிலேர்ந்து எடுத்திட்டு வந்தா திருட்டு இல்லையா அதுவும் திருட்டுதான். (கமலாவிடம்) கமலா, நீ கிளாஸிலே இனிமே திருடக்கூடாது. எது வேணும்னாலும் அப்பாகிட்டே கேட்கணும். இல்லே அம்மாகிட்டே கேட்கணும். திருடறது தப்பு. (வாசலில் வசந்தம், ப.118)*

- 'இடைவேளை இடைவெளியல்ல' நாடகத்தில் வரும் ஒரு நகைச்சுவை வருமாறு:

***துரை:** (வடிவேலுவின் தோள்பட்டையைத் தொட்டு) ஹலோ இது ராயப்பேட்டை தானே....?*

***வடி:** இல்லே! என்னோட தோள்பட்டை*

***துரை:** இது முத்தையா முதலி தெரு தானே?*

***வடி:** நோ. இது வெறும் முத்தையா தெரு.*

***துரை:** பாவம் அந்த முத்தையா முதலி. தன்னோட கடைசிக் காலத்திலே தான் சம்பாதிச்சதை எல்லாம் இழந்திட்டார் போல இருக்கு.*

***வடி:** தான் சம்பாதிச்சதை அவர் இழக்கலே. சமீபத்திலே தன்னோட சாதியை இழந்திட்டார். நாங்க இப்போ ஜாதி பேதமில்லாத சமதர்ம சமுதாயத்தை உருவாக்கிட்டிருக்கோம்" (ப.110),.*

நகைச்சுவை இழையோடப் பார்க்கப்பட்ட, கேட்கப் பட்ட ஏர்வாடியாரின் நாடகங்கள், இன்று படிப்பதற்கும் ஏற்றவையாக வெளியிடப்பட்டிருப்பது தமிழ் உலகிற்குக் கிடைத்த நற்பேறு ஆகும்.

10

நடை நலமும் நகைச்சுவை உணர்வும் மிளிரும் சிறுகதை ஆசிரியர்

"எனக்குத் தோழர் ஏர்வாடியாரிடம் பிடித்தது நடை. ஒரு ஆத்மார்த்த தோழன் இன்னொரு தோழனிடம் கண்டதை, கேட்டதை எப்படி விளக்குவானோ அப்படிப்பட்ட நடை."

*- சு.சமுத்திரம்**

ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன்னர்தான். **எட்கர் ஆலன் போ, கோகோல்** போன்ற ஆசிரியப் பெருமக்களின் புத்தம் புதுப்படைப்பாகச் **'சிறுகதை'** என்ற தனி இலக்கிய வகை உலகில் உதயமாகியது. மேனாட்டினர் உறவால் சிறுகதைப் படைப்பு தமிழ் இலக்கியத்திலும் தலை தூக்கியது. வார, மாத, நாளிதழ்கள் சிறுகதைகளை மிகுதியாக வெளியிட்டு, அவற்றின் வளர்ச்சிக்கு உரமிட்டன. நிற்கவே நேரமில்லாத இன்றைய மனிதனின் பரபரப்பும், விறுவிறுப்பும் மிக்க மன நிலைமைக்கு ஏற்ப அளவில் சிறியதாகவும், சுவையில் புனைகதையாகவும் தோன்றிய தனி இலக்கிய வகையே சிறுகதை ஆகும்.

1927-இல், எட்டுக் கதைகள் அடங்கிய **'மங்கையர்க் கரசியின் காதல் முதலிய கதைகள்'** என்ற நூலை வெளியிட்டு சிறுகதை இலக்கியத்தைத் தோற்றுவித்தார். **வ.வே.சு.ஐயர்.** அவரைத் தொடர்ந்து இன்று வரை பல சிறுகதை எழுத்தாளர்கள் உருவாகிய வண்ணம் உள்ளனர்.

---

* அணிந்துரை, ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் சிறுகதைகள், ப.5.

ஏர்வாடியாரைக் கவிஞராகக் கண்டிருக்கிறோம்: கட்டுரையாசிரியராகக் கண்டிருக்கிறோம். ஆனால் அவர் ஒரு சிறுகதை எழுத்தாளரும் கூட என்பதை அவரது நான்கு சிறுகதைத் தொகுப்புகள் வெளிப்படுத்துகின்றன. அவரது தொடக்க காலச் சிறுகதைகள் **'ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் சிறுகதைகள்'** என்னும் பெயரிலும், அண்மைக் காலச் சிறுகதைகள் **'அவளுக்கு வயது 60'** என்னும் பெயரிலும், அவரது நகைச்சுவைச் சிறுகதைகள் **'கல்யாணக் கனவுகள்'** என்னும் பெயரிலும் வெளிவந்துள்ளன. இம்மூன்று தொகுதிகளிலும் வெளிவந்துள்ள மொத்தக் கதைகள் 45.

ஏர்வாடியாரின் சிறுகதைகள் நம் வாழ்வில் அன்றாடம் நிகழும் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ளன. 'என் கதைகள் பிரச்சினைகளின் பிரச்சினைகள்' என்று எழுத்தாளர் **ஜெயகாந்தன்** தம் சிறுகதைகளைப் பற்றிக் குறிப்பிடுவது போல், ஏர்வாடியாரும் சமூகத்தில் நிலவும் பிரச்சினைகளை, அவலங்களை, இன்று முதியோர் படும் பாட்டினை, நுண்மையான பெண்மன உணர்வுகளை, முகமூடி அணிந்து செயல்படும் பெரிய மனிதர்களின் இயல்புகளை எனப் பல்வேறு பிரச்சினைகளைத் தம் சிறுகதைகளில் நுட்பமாகப் பதிவு செய்துள்ளார்.

I.சிறுகதையின் தொடக்கம்

சிறுகதையின் மரபுகளுள் ஒன்று அதன் **தொடக்கம்** ஆகும். சிறுகதையை இவ்வாறு தொடங்க வேண்டும், இவ்வாறு முடிக்க வேண்டும் என்று கூறும் விதிகள் இல்லை. சிறுகதையை எங்கும் தொடங்கி எப்படியும் முடிக்கும் உரிமை ஆசிரியருக்கு உண்டு. எனினும், "சிறுகதை இப்படித்தான் தொடங்க வேண்டும் என்ற நியதி ஒன்றும் இல்லைதான். என்றாலும் எப்படியும் தொடங்கிவிட முடியாது. கதைப் பொருளுக்கும் கதைக் கருவிற்கும் ஏற்ற தொடக்கங்கள் அமையும் போதே சிறுகதைகள் வெற்றி பெறுகின்றன" என்று கூறுகிறார் பேராசிரியர் **இரா.தண்டாயுதம்** (தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள், ப.47)

ஏர்வாடியாரின் பெரும்பான்மையான சிறுகதைகள், சுற்றி வளைக்காமல், நேரடியாகக் கதைக்குள் நுழைந்து விடும் உத்தியில் அமைந்துள்ளன. ஓர் எடுத்துக்காட்டு:

"ஏன்யா தணிகாசலம், தினமும் உங்க வீட்டிலே தயிர்சாதம் மட்டும்தானா...? உன் ஒய்ஃபுக்கு வேற எதுவும் பண்ணத் தெரியாதா...? வாரத்தில் ஒரு நாள் ரெண்டு நாள்ன்னா பரவாயில்ல. தினமும் தயிர் சாதம்ன்னா போரடிக்காதா?" (அவளுக்கு வயது 60, ப.71) எனத் தொடங்குகிறது அரசு அதிகாரியாக விளங்கினாலும், தணிகாசலத்தின் நேர்மையைக் காட்டும் **'தணிகாசலமும் தயிர்சாதமும்'** என்னும் சிறுகதை.

" 'என்னதான் வசதியா இருந்தாலும் முதியோர் இல்லம் முதியோர் இல்லம்தான்' என்று மனதில் நினைத்துக் கொண்ட சுந்தரம் ஆச்சாரி தானும் தன் மனைவி தனலட்சுமியும் தங்களின் ஒரே மகன் சிவராம சுப்புவால் அனாதையாக்கப்பட்டதை உணர்ந்தார்" (அவளுக்கு வயது 60, ப.53) என்று தொடங்குகிறது **'நாய்கள் ஜாக்கிரதை'** என்னும் சிறுகதை. நாய்களுக்குக் கொடுக்கப் படும் மரியாதை கூட, பெற்ற தாய் தந்தையருக்குக் கொடுக்காத இன்றைய இளைய தலைமுறையைத் தோலுரித்துக் காட்டுகிறது இக்கதை.

"நேசமணியின் நெஞ்சிலிருந்த சுமை சற்று இறங்கி யிருந்தது. ஆனால் அந்தச் சுமை ஃபாதர் மரியதாஸின் இதயத்தில் ஏறிக்கொண்டது" என முரண் சுவையுடன் கூடிய தொடக்கமாக அமைகிறது **'மனிதர்கள்'** என்னும் கதை (ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் சிறுகதைகள், ப.136)

"உமக்கு ஆயிரம் தேவைகள் இருக்கும். அதுக்கெல்லாம் பணம் வேணும்னா திருடத்தான்வே போகணும்."

"முதலாளி! தயவு பண்ணி கொஞ்சம் பெரிய மனசு பண்ணுங்க. பேட்டை இந்துக் காலேசிலே ஆளைப் பிடிச்சு இந்த இடத்தைப் பிடிக்கப் போதும் போதும்னு ஆயிடுச்சு. வர்ற பத்தாம் தேதிக்குள்ளே பணத்தைக்

கட்டலேன்னா கிடைச்ச இடம் போயிடும்" (ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன், ப.84) என்று முத்தாரம்மன் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் துபாய்ப் புதுப் பணக்காரரர் ஆன ராமலிங்கத்துக்கும், கோவில் பூசாரி மணி ஐயருக்கும் இடையே நடக்கும் உரையாடலுடன் தொடங்குகிறது **'செலவல்ல- மூலதனம்'** என்னும் சிறுகதை.

"அரங்கேற்றத்தோடு நின்றுவிடாமல் அடிக்கடி மேடையேறுகிற ஒரு பிரபலமான நாடகக் குழுவை நடத்தியதால் மட்டுமல்ல. எந்த ஒரு நாடகத்திலும் நிற்கக்கூடிய நல்ல பாத்திரத்தை ஏற்றுக்கொள்ளும் ரவிகுமார் சென்னையில் பிரபலமாக விளங்கும் ஒரு கவர்ச்சி நாடக நடிகன்" எனக் கதைமாந்தர் அறிமுகத்துடன் தொடங்குகிறது **'பலநாள் காதலன்'** என்னும் சிறுகதை. (கல்யாணக் கனவுகள், ப.55)

இங்ஙனம் ஏர்வாடியாரின் சிறுகதைகள் கதையின் சூழலை விளக்கும் வகையில், தலைப்புக்கேற்ற தொடக்கம், கதைப்பொருளை உணர்த்தும் தொடக்கம், உரையாடல் தொடக்கம், முரண்சுவையுடன் கூடிய தொடக்கம், கதைமாந்தர் அறிமுகத் தொடக்கம் எனப் பல வகையான தொடக்கங்களைப் பெற்றுள்ளன.

II. சிறுகதையின் முடிவு

"கதைத் தொடக்கம் போல், கதையின் முடிவும் சிறுகதை மரபுகளுள் ஒன்று ஆகும். ஒரு நல்ல சிறுகதையின் தொடக்கம் படிப்பவரின் ஆர்வத்தையும் கற்பனையையும் தூண்டக்கூடிய முறையில் அமைதல் போல், அதன் முடிவு படிப்பவர் நெஞ்சில் பற்பல எண்ணச் சூழல்களையும் உணர்வு அலைகளையும் நிலைநிறுத்தும் வகையில் அமைதல் வேண்டும்" (சிறுகதைச் சிற்பி கு.ப.ரா., ப.37) என்பர் பேராசிரியர் **இரா.மோகன்.** ஏர்வாடியார் தம் கதைகளுக்குத் தரும் முடிவுகள், கதைகளின் போக்கிற்கு ஏற்றவாறு, இயற்கையாகவும், நம்பும்படியாகவும் அமைந்துள்ளன.

கணவன் இறந்த பிறகு விதவையாக, கைக் குழந்தையுடன் பிழைப்புத் தேடி வந்த வாய் பேச முடியாத

அழகம்மையை விபச்சாரியாக்கி அனுபவித்த மேல்நிலை மக்கள் அவள் இறந்த பிறகு அவள் மகள் புஷ்பாவை ஊரை விட்டுத் தள்ளி வைக்க வேண்டும், இல்லாவிட்டால் இளைஞர் சமுதாயம் கெட்டுப்போய்விடும் என்று பஞ்சாயத்தில் பேசுகின்றனர். இந்நிலையைக் கண்டு கொதித்துப் போகிறான் அவ்வூருக்குக் கால்நடை மருத்துவனாக வந்த சுந்தர் என்னும் இளைஞன். **'குற்றவாளிகளே தீர்ப்பு வழங்குகிறார்கள்'** என்ற கதையின் தலைப்புக்கேற்றவாறு, கதையை வளர்த்துச் செல்லும் ஏர்வாடியார் அவர்களை எதிர்த்துப் பேச இயலாமல் தவிக்கும் சுந்தர் மூலமாக ஒரு நல்ல முடிவை அளிக்கிறார். அம்முடிவு வருமாறு:

"புஷ்பா… நீ இந்த ஊரை விட்டுப் போக வேண்டாம். முதல்லே என்னோட இன்னிக்கு விருதுநகருக்குப் புறப்படு!

புரிந்து கொள்ளவே முயற்சி செய்யாமல் அவனோடு புறப்பட்ட புஷ்பா அடுத்த வாரமே இளவணிகர்குடியில் வந்து இறங்கினாள். ஊரில் இனிமேல் எந்தப் பெரிய மனுஷனும் 'சின்ன வயசுப் பசங்க கெட்டுப் போயிடுவாங்க' என்று கூறி அவளை ஊரைவிட்டு விரட்ட முடியாது. ஏனென்றால் இப்போது அவள் திருமதி புஷ்பா சுந்தர்" (ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் சிறுகதைகள், ப.17).

ஒரு பிரச்சினையோடு தொடங்கும் இச்சிறுகதை, அப்பிரச்சினைக்கு உரிய தீர்வுடன் நிறைவு பெறுவது இயல்பாகவும், இயைபு (Concored) உத்தி என்னும் முறையிலும் அமைந்துள்ளது.

முதியோர் பிரச்சினைகளை **'நாய்கள் ஜாக்கிரதை', 'நாய்கள் காணவில்லை'** என்னும் இரு சிறுகதைகளில் எடுத்துரைக்கின்றார் ஏர்வாடியார். வளர்ப்பு நாய்களுக்குக் கொடுக்கப்படும் மரியாதை கூடப் பெற்றோருக்கு அளிக்கத் தவறுகிறார்கள் இன்றைய தலைமுறை இளைஞர்கள். தம் பிள்ளைகள் அமெரிக்காவிலும், லண்டனிலும் வசதியுடன் வாழ்கிறார்கள் என்று பெருமையடித்துக் கொள்கிற பெற்றோர் அவர்களால் இங்கே அனாதை யாக்கப் பட்டிருப்பதை அறிவதில்லை. மகன் வீடு வாங்குவதற்காக உதவி செய்த தந்தை, மகனது இல்லத்தில்

வசிக்க இயலாத நிலையையும், மகன் லண்டன் செல்வதாகச் சொல்லிப் பெற்றோரை முதியோர் இல்லத்தில் சேர்த்து விடுவதையும் 'நாய்கள் காணவில்லை' என்னும் சிறுகதை எடுத்துரைக்கின்றது. மகன் வளர்த்து வருகின்ற நாய்கள் காணாமல் போக, அவற்றைப் பற்றிய அறிவிப்பு வருகின்ற போதுதான் மகன் மேனாட்டிலிருந்து திரும்பியதும், தம்மை ஏமாற்றித் தந்திரமாக முதியோர் இல்லத்திலேயே வைத்திருப்பதையும் அவர்கள் உணர்கின்றனர். இந்நிலையில் தந்தையாக வரும் வரதராசன் எடுக்கும் முடிவுடன் நிறைவுறுகிறது இக்கதை:

"கேவலம் அந்த வளர்ப்பு நாய்களைக் கண்டுபிடிக்கிறதிலே இருக்கிற ஆர்வம், அதுகளைப் பராமரிக்கிறதிலே காட்டற அக்கறை அவங்களை வளர்த்து ஆளாக்கின நம்ம கிட்ட காட்டலியே? இவுங்களோட போய் நாம ஏன் வாழணும்? இன்னும் சொல்லப்போனா, அவுங்களைப் பொறுத்தவரை நாமும் காணாம போறதுதான் நல்லது. கையிலே கொஞ்சம் பணமிருக்கு. இந்த ஹோமை காலி பண்ணிப்புட்டு தென்காசியிலே என் பிரண்ட் ஒருத்தன் நடத்தற முதியோர் இல்லத்துக்குப் போயிடலாம். பணம் கட்ட வேண்டாம். செலவில்லாத இடம். நம்மைச் சாகற வரை பார்த்துக்குவான். நம்ம பிள்ளைகளுக்குத் தொலைஞ்சி போன நாய்கள் திரும்பக் கிடைக்கட்டும்.... காணாமல் போகப் போற நாம் திரும்பக் கிடைக்க வேண்டாம். தீர்க்கமாக முடிவெடுத்தார் வரதராசன். வேறு வழியில்லாமல் தாட்சாயணியும் சம்மதித்துத் தலையசைத்தாள்" (அவளுக்கு வயது 60, பக்.86-87).

உரையாடல் வடிவில் அமைந்த இம் முடிவு, படிப்பவரைச் சிந்திக்க வைப்பதாகவும், முதியோர் படும் அவல நிலையைச் சித்திரிப்பதாகவும் அமைந்துள்ளது.

'செலவல்ல... மூலதனம்' என்னும் சிறுகதை. கதைமாந்தர் கூற்றோடு முடிகிறது. கோவில் பூசாரி மணி ஐயர், தன் மகனைக் கல்லூரியில் சேர்ப்பதற்குப் பணம் இல்லாமல் தவிக்கிறார்; தர்மகர்த்தாவிடம் முறையிடுகிறார்: கோவில் கேளிக்கைகளுக்காக, வாணவெடிகளுக்காகச்

செலவிட முன்வரும் பணக்கார தர்மகர்த்தாவுக்கு மணி ஐயருக்கு உதவ மனம் வரவில்லை. ஆனால் முன்பு எப்போதோ ஒரு பெண்ணைக் கேலி செய்தான் என்பதற்காக ஊரை விட்டே விரட்டப்பட்ட சினிமா டைரக்டர் ரவிராஜ் கொடுத்த பணத்தைக் கோவில் உண்டியலில் போடுவதற்காக அவ்வூருக்கு வரும் உதவியாளர் சம்பத், மணி ஐயரின் தேவையறிந்து அந்தப் பணத்தை அவரிடம் கொடுத்து விடுகிறான்.

"முத்தாரம்மா... ஈஸ்வரி, நான் செய்ததிலே எந்தத் தப்புமில்லே தாயே. இந்தப் பணம் உனக்குச் சேர வேண்டிய பணம் தான். இருந்தாலும் உன் உண்டியல்லே விழற பணமெல்லாம் சருகாகற மலர்களுக்கும், குப்பை யாகற வெடிகளுக்கும், மறந்து போகிற ஆர்ப்பாட்டங்களுக்கும் போறதை விட, உன்னை நம்பி உன்னோட பாதங்களே கதின்னு கிடக்கிற மணி ஐயரோட பிள்ளையோட படிப்புக்குப் பயன்படக் கொடுத்தது தப்பில்லே. ஏன்னா உன் கோவில் கொடைக்கு வசூலான தொகையிலே இந்த ஐநூறு ரூபாதான் நல்லபடி செலவாயிருக்கிறதா நான் நினைக்கிறேன். சொல்லப் போனா இது செலவல்ல... ஒரு மூலதனம்.

நேற்றே முத்தாரம்மனிடம் விடை பெற்றுப் போயிருந்தான் சம்பத்." (ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் சிறுகதைகள், ப.90).

படிப்பவரைச் சிந்திக்கத் தூண்டும் முடிவாக இது அமைகின்றது.

> **"படமாடக் கோயில் பரமற்கு ஒன்றுஈயில்**
> **நடமாடக் கோயில் நம்பற்கு அஃது ஆகா;**
> **நடமாடக் கோயில் நம்பற்கு ஒன்றுஈயில் அது**
> **படமாடக் கோயில் பரமற்கும் ஆம்"**

என்னும் திருமூலரின் வாக்கை நினைவூட்டுகின்றது இம்முடிவு.

"பிரம்மச்சாரியாக இருக்க எல்லோருக்கும் தான் கொடுத்து வைத்திருக்கிறது. ஆனால் ஒரு சில விதிவிலக்கு

களைத் தவிர பலர் அதைக் கெடுத்துக் கொள்கிறார்கள்" எனத் தொடங்கும் **'பிரம்மச்சாரி'** என்னும் சிறுகதை, அதற்கு விடையளிக்கும் பாங்கில்,

'பிரம்மச்சாரியாக இருக்க எல்லோருக்கும்தான் கொடுத்து வைத்திருக்கிறது. ஆனால் ஒருசில விதிவிலக்கு களைத் தவிர பலர் அதைக் கெடுத்துக் கொள்கிறார்கள் ஒரு குடும்பத்தைச் செய்து கொள்வதின் மூலம்' (அவருக்கு வயது 60, ப.39) என முடிவது, **இயைபு முடிவு** எனப்படும்.

ஏர்வாடியார் தம் கதைகளுக்குத் தந்துள்ள முடிவுகள் கதைகளை முடித்து வைப்பதோடு அமையாமல் படிப்பவர் உள்ளத்தில் கதைகளைப் பற்றிய சிந்தனைகளை அலைஅலையாய் எழுப்பிக்கொண்டே இருக்கும் வகையில் அமைந்துள்ளன.

III. சிறுகதையின் நீளம்

சிறுகதை அரைமணியில் இருந்து இரண்டு மணி நேரத்திற்குள் படித்து முடிக்கக் கூடிய அளவுடையதாக இருக்க வேண்டும் எனச் சிறுகதையின் தந்தையான **எட்கர் ஆலன் போ** கருதுகின்றார். இது கதை தோன்றிய காலத்தில் கூறப்பட்ட இலக்கணம். ஆனால், இன்றைய சூழ்நிலையில் நிற்பதற்கே நேரம் இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கும் மனிதன் சிறுகதை சுருக்கமாகவும், செறிவாகவும் இருப்பதையே விரும்புகிறான். இவ் இயல்பிற்கு ஏற்ப, ஏர்வாடியாரின் சிறுகதைகள் சிற்றெல்லை 6 பக்கமாகவும் பேரெல்லை 12 பக்கமாகவும் அமைந்துள்ளன.

IV. சிறுகதையின் பொருள்

ஏர்வாடியார் படைத்துள்ள சிறுகதைகளை அவற்றின் கதைப் பொருள் அடிப்படையில் ஆறு வகைகளாகப் பகுக்கலாம். அவை வருமாறு:

1. **சமூகச் சிறுகதைகள்**
2. **ஆண் - பெண் உறவு பற்றியவை**
3. **பெண் மன உணர்வுகளைச் சித்திரிப்பவை**

4. மனிதப் பண்புகளைச் சித்திரிப்பவை

5. அரசியல் சிறுகதைகள்

6. நகைச்சுவைச் சிறுகதைகள்

1. சமூகச் சிறுகதைகள்

'ஒரு சமூகப் பிரக்ஞையோடு பிரச்சினைகளை அணுகுகிறார்' (அணிந்துரை, ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் சிறுகதைகள், ப.5) என்று **சு.சமுத்திரம்** குறிப்பிடுவதற்கேற்ப, ஏர்வாடியாரின் சிறுகதைகள் ஒவ்வொன்றும் இன்றைய சமூகப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ளன.

தலைமுறை இடைவெளியை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளது, **'இது பிள்ளைகள் சமாச்சாரம்'** என்னும் கதை. பழைய காலப் பஞ்சாங்கங்களாகத் தேவையற்ற சாஸ்திர சம்பிரதாயங்களைக் கட்டிக்கொண்டு காலத்தை ஓட்டும் முதியவர்களுக்கும், எல்லாவற்றிலும் 'டேக் இட் ஈஸி' மனப்பான்மையுடன் வலம் வரும் இளைய தலைமுறையினருக்கும் இடையே சிக்கித் தவிக்கும் நடுத்தர வயதுக் குடும்பத்தவரின் நிலையை அழகாக விவரிக்கிறது இக்கதை, இளையோரையும், முதியோரையும் இணைக்கும் பாலமாய் எல்லோருக்கும் நல்ல பிள்ளையாக வேண்டிய கட்டாயம் நடுத்தர வயதினருக்கு ஏற்பட்டுள்ளமையை ஏர்வாடியார் இக்கதையில் சிறப்பாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்பது முதுமொழி. இதனை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்துள்ளது. **'செலவல்ல மூலதனம்'** என்னும் கதை. முத்தாரம்மன் கோவில் உண்டியலில் சேர்ப்பதற்காகக் கொண்டு வந்த பணத்தை, மகனது கல்விச் செலவுக்குப் பணம் கட்ட முடியாமல் அவதிப்படும் கோயில் பூசாரி மணி அய்யருக்குக் கொடுத்து உதவுகிறான் சம்பத் என்கிற இளைஞன்.

'வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து' (குறள்:221)

என்னும் வள்ளுவர் வாய்மொழியை நினைவூட்டும் இக்கதை சமூகத்தவர்க்கு வழிகாட்டும் கதை எனலாம்.

'பி.எஸ்.ஸி., கெமிஸ்ட்ரி படித்த தான் தச்சு வேலை செய்வதா?' என்று எண்ணிய ரகு, பல இடங்களிலும் வேலை தேடித் தோற்றுப் போய், உண்மை நிலையை உணர்ந்து, தனக்குத் தெரிந்த தச்சு வேலையில் ஈடுபட்டுப் பணம் சம்பாதிக்கத் தொடங்குவதை **'வேலை(ளை) வந்துவிட்டது'** என்னும் கதை சித்திரிக்கின்றது. 'இப்போது வேலையில்லாப் பட்டதாரிகளின் எண்ணிக்கையில் ஒன்று குறைந்துவிட்டது' என்று முடியும் இக்கதையின் மூலம் இளைஞர்களுக்கு **'உழைப்பே மூலதனம்'** என்று அறிவுறுத்துகிறார் ஏர்வாடியார்.

இன்றைய விஞ்ஞானத்தின் வளர்ச்சியை **'போலீசும் பட்டாப்பட்டி பக்கிரியும்'** என்னும் சிறுகதையின் மூலம் எடுத்துக்காட்டுகின்றார் ஏர்வாடியார். சிறையிலிருந்து திரும்பிய பட்டாப்பட்டி பக்கிரி, ஒரு வீட்டில் திருடி விட்டுத் தன் வீட்டில் படுத்திருக்கும்போது, போலீஸ் அவனை எழுப்பிக் கைது செய்கிறது. "திருடினேனா... என்ன சார் உளர்றீங்க?" என்று கேட்ட பக்கிரிக்கு,

"காண்ட்ராக்டர் கந்தசாமி வீட்டுக்கு நீ ஒரு வாடகைக் காரிலே போய் இறங்கியது முதல் வெளியே புறப்படற வரை எல்லாம் படமாயிருக்கு. டைட்டில் கார்ட் போட்டு ரீரிக்கார்டிங் பண்ணினா ஒரு முழு நீள சினிமா தான். வீட்டிலே கண்காணிப்பு காமிரா மட்டுமில்லேடா அவரோட மகன் பெரிய படிப்பு படிச்சிருக்கானில்லையா... போட்டோ வேற எடுத்திருக்காங்க... உனக்கு ஒரு விஷயம் தெரியுமா...? இப்பல்லாம் வீட்டுக்குத் திரும்பின பிறகுதான் வீட்டிலே நடந்ததைப் பார்க்க முடியும்ங்கிற விஞ்ஞானத்துக்கு மேலே வெளியூர் போயிருந்தாக் கூட லாப்டாப்பிலேயும் செல்போனிலேயும் வீட்டைக் கண்காணிக்க முடியும். சொந்த ஊருக்குப் போயிருக்கிற அவுங்க அங்கேயிருந்தே கமிஷனர் ஆபீசுக்கு போன் பண்ணி படங்களை இ-மெயிலிலே அனுப்பியிருக்காங்க... இப்பல்லாம் வழிப்பறி, விபச்சாரம், கொலை, களவு,

கள்ளச் சாரயம், கள்ள நோட்டுன்னு, எந்தத் தப்பைப் பண்ணினாலும் தப்பிக்கவே முடியாது. எங்க கண்களை விட விஞ்ஞானத்தோட கண்கள் விழிப்பா இருக்கு, கண்டிப்பா மாட்டிக்குவீங்க” என்று கூறுகிறார் போலீஸ் காரர். இன்றைய விஞ்ஞான வளர்ச்சியை எடுத்துக்காட்டும் கதை இது.

2. ஆண் - பெண் உறவு பற்றிய சிறுகதைகள்

குடும்ப வாழ்க்கையில் கணவன் - மனைவிக்கு இடையே எழும் சிக்கல்களைச் சில கதைகளில் வெளிப்படுத்தியுள்ளார் ஏர்வாடியார். காதலித்துத் திருமணம் செய்து கொண்ட டாக்டர் நிர்மலா - டாக்டர் சேகர் ஆகிய இருவரும் தொடக்கத்தில் மனம் நிறைந்த வாழ்க்கை வாழ்கின்றனர். இருவரும் சேர்ந்து ஒரு பெரிய மருத்துவ மனையைக் கட்டுகின்றனர்; பின்னர் ஓர் அழகான வீடு கட்டி அதைச் சொர்க்கபுரி போலவே திட்டமிட்டுக் கட்டி முடிக்கின்றனர். அந்த வீட்டு பால்கனியிலிருந்து பார்த்தால் கடல் தெரியும்; அதிகாலை உதிக்கிற சூரியன் தெரியும்; அஷ்டலட்சுமி கோவில் தெரியும். ஆனால் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கவும், நம்பிக்கை வைக்கவும் தெரியாததால் திருமணம் ஆன இரண்டு ஆண்டுகளில் பிரிகிற நிலை ஏற்படுகிறது. வாழ்க்கையில்தான் பரஸ்பரமான சம்மதத்தோடு பிரிந்தது தவிர, மருத்துவ மனை நிர்வாகத்தில் எந்த மாறுதலும் இல்லை... பெசன்ட் நகர் வீட்டில் டாக்டர் நிர்மலாவும் மருத்துவ மனையின் எட்டாவது தளத்தில் ஒரு சிறிய அபார்ட்மெண்ட் அமைத்துக்கொண்டு டாக்டர் சேகரும் வாழ்ந்து வருகின்றனர்.

இதற்கிடையில் டாக்டர் சாரதா, டாக்டர் ரோஹித் என்னும் இரு மருத்துவர்கள் அவர்களது மருத்துவ மனையில் வேலைக்குச் சேருகின்றனர். டாக்டர் சாரதா டாக்டர் சேகரையும், டாக்டர் ரோஹித் டாக்டர் நிர்மலாவையும் காதலிப்பது போன்ற சூழ்நிலை ஏற்படுகிறது. இரண்டொரு வாரங்களில் அவர்களது வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை ஏற்படுகிறது. டாக்டர் ரோஹித்தும் டாக்டர் சாரதாவும் திருமணம் செய்து

கொள்கிறார்கள் என்றும், டாக்டர் நிர்மலாவின் தலைமையில் நடைபெறுகிறது என்றும் தகவல் டாக்டர் சேகருக்குத் தெரிய வருகிறது. தன் அறையிலிருந்து கீழே இறங்கி வந்த சேகரிடம் திருமண அழைப்பிதழைக் கொடுத்துத் திருமணத்தை நடத்தி வைக்க வேண்டுகிறான் ரோஹித். அவ்வாறே இருவரது தலைமையில் அத்திருமணம் நடந்து முடிகிறது.

"இதுவாவது பரவாயில்லை. என்னிடமே வந்து நிர்மலாவைப் பெண் கேட்ட ரோஹித், என்னுடைய வாழ்க்கையில் வந்து சேருவது போல நெருங்கிய சாரதா... எப்படி எங்களை விட்டுவிட்டுத் தாங்கள் இணைந்து கொண்டார்கள்? எங்கள் வீட்டுப் பெரிசுகள் ஊருக்குப் போகாமல் சென்னையில் தங்கிவிட்டது இதற்காகக்கூட இருக்குமோ என்று எண்ண வைத்தது. எப்படியோ கொஞ்சம் நிம்மதியாக இருந்தது விவாகரத்து பெற்றிருக்கிற எனக்கும் நிர்மலாவுக்கும்" (அவளுக்கு வயது 60, ப.70) என்று சேகர் கூறுவதாக அமையும் முடிவு இருவரது மன உணர்வுகளையும் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

காதலித்துத் திருமணம் செய்து கொண்டாலும், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமலும், ஒருவரை ஒருவர் நம்பாமலும் வேகமாக விவாகரத்து செய்து கொள்ளும் இன்றைய தலைமுறை, விவாகரத்துக்குப் பிறகும் ஒருவர் மீது ஒருவர் கொண்ட காதல் மாறாமல் மீண்டும் வாழ்க்கையில் இணைவதும் இன்றைய நடைமுறையில் காணப்படுகிறது. இச்சூழலை **'மீண்டும் ஒரு வசந்தம்'** கதையில் எடுத்துக்காட்டியுள்ளார் ஏர்வாடியார்.

இளைய தலைமுறையின் காதலை எடுத்துக்காட்டிய ஏர்வாடியார். முதிய தலைமுறையின் காதலை - குடும்ப வாழ்வை - **'தணிகாசலமும் தயிர் சாதமும்'** என்னும் கதையில் எடுத்துரைக்கின்றார். அரசாங்க ஊழியர் ஆயினும், அலுவலகத்தில் இருக்கும் பிறரைப் போல் லஞ்சம் வாங்காமல், தவறுகள் செய்யாமல் நேர்மையாக வேலை பார்க்கும் தணிகாசலத்தை, தம் தேவையைக்

குறைத்துக் கொண்டு எதற்கும் வளைந்து கொடுக்காமல் வாழ்ந்து வரும் தணிகாசலத்தை, தம் காரியத்தை நிறைவேற்றிக் கொள்ள செல்வாக்கு மிக்க அமைச்சர் ஒருவர் முயல்கிறார். 'எதுவும் கிடைக்கிற வழி நல்லதாக இருந்தால் நிலைக்கும்' என்கிற நம்பிக்கை ஒட்டு மொத்தமாகத் தணிகாசலத்தின் குடும்பத்தில் ஒவ்வொரு வருக்கும் இருந்தது.

இந்நிலையில், தணிகாசலத்தின் மனைவி வத்சலாவிற்கு முதுகுத் தண்டுவடத்தில் ஓர் அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதற்குத் தேவையான பணத்தைக் கொடுத்து தம் காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறார் அமைச்சர். ஆனால் அதற்கு இடம் கொடுக்காது. தற்கொலை செய்து கொள்கிறாள் தணிகாசலத்தின் மனைவி வத்சலா.

"'எங்கே நான் அவசரப்பட்டு உன்னை மியாட் ஆஸ்த்திரியிலே அட்மிட் பண்ணிடுவேனோ, இந்த நெருக்கடியைப் பயன்படுத்தி என் கையிலே இந்தப் பாவிகள் பணத்தைத் திணிச்சிட்டுப் போயிடுவாங்களோன்னு நினைச்சித் தடுமாறினேன். அதுக்கெல்லாம் அவசியமில்லாம தற்கொலை பண்ணிக்கிட்டியேடி. தொடக்க காலத்திலேர்ந்து என் கையைச் சுத்தமா வச்சிருக்க உதவிட்டு, இப்பவும் அப்படியே காப்பாத்திட்ட. ஆனா உன்ன நான் காப்பாத்த முடியலயே' என்று மௌனமாக அழுது கொண்டிருந்தார் தணிகாசலம்" (அவளுக்கு வயது 60, ப.79) என்று அமையும் முடிவு, **'ஒவ்வொரு வெற்றி பெற்ற ஆணின் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள்'** என்னும் பழமொழியை நினைவூட்டுகின்றது.

"ஒவ்வொரு கணவனும் நேர்மையா இருக்கறதுக்கு அவங்களோட மனைவிதான் காரணமாக இருக்க முடியும். எந்த சந்தர்ப்பத்திலேயும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு தியாகம் செய்ததாலேயும், தேவைகளைத் தவிர்த்ததாலேயும்தான் தாம் நேர்மையாக இருக்க முடிந்ததில் அவருக்கு மனநிறைவு" (ப.78) என்னும் பகுதி

இக்கதையின் மையப் பொருளை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

ஆண் - பெண் உறவு நிலையைப் புலப்படுத்தும் ஏர்வாடியாரின் கதைகளில் முதிய தலைமுறையிடம் விட்டுக் கொடுத்து, ஒருவரையொருவர் புரிந்து கொண்டு வாழும் முதிர்ச்சியையும், இளைய தலைமுறையிடம் சந்தேகம், புரிந்து கொள்ளாமை, சுயநலம் போன்றவை மேலோங்கி நிற்பதையும் காணமுடிகின்றது.

3. பெண் மன உணர்வுச் சிறுகதைகள்

'அவள் வித்தியாசமானவள்' கதையில் வரும் கோமதி. வசதி இல்லாததால் வயதானவருக்கு இரண்டாந் தாரமாக வாழ்க்கைப்பட்டு விரைவிலேயே விதவை ஆகிறாள். தன் மகளுக்கும் இந்நிலை ஏற்பட்டு விடக் கூடாது என்று கருதிய அவள், தன் மகள் கல்யாணியை ஒரு வசதியானவனுக்குத் திருமணம் முடிக்க நினைக்கிறாள்; ஆனால் கல்யாணியோ பட்டாளத்தில் வேலை பார்க்கும் மாமன் மகன் ராசேந்திரன் மீது காதல் கொள்கிறாள். பட்டாளத்தில் இருப்பவனுக்கு ஆயுள் குறைவு என்பதால் தாய் கோமதி அவர்கள் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ள வில்லை. ஆனால் மகளின் பிடிவாதத்தால் கல்யாணிக்கும் ராசேந்திரனுக்கும் நிச்சயதார்த்தம் நடைபெறுகிறது. திடீரென்று போர் ஏற்பட்டதால் உடனடியாக வேலைக்கு அழைக்கப் படுகிறான் ராசேந்திரன்; போரில் இறந்து போகிறான். நல்லவேளை நிச்சயதார்த்தம் தானே நடந்திருக்கிறது என மகளை சமாதானப்படுத்தி வேறு ஒருவனுக்குக் கட்டி வைத்து விடலாம் என்று தாய் நினைக்கிறாள். தாய் பார்த்த வரனை ஏற்றுக் கொள்ளாமல் விதவைக் கோலம் கொள்கிறாள் கல்யாணி.

"அம்மா, இது பைத்தியக்காரத்தனமான முடிவில்லே. தாலி கட்டியவனைச் சாகக் கொடுத்தவ மட்டும்தான் விதவைன்னு நீ நினைக்கிறே. நீயென்ன இந்த ஊர் உலகமும் அப்படித்தான் நினைச்சிட்டிருக்கு. ஒருவனை மனசிலே நினைச்சிக்கிட்டு அவனோட வாழப்போற வாழ்க்கையை ஒவ்வொரு நாளும் கனவு கண்டுக்கிட்டு இருக்கிற

பொண்ணுக்கு அவன் கிடைக்காம போறதும் ஒரு வகையிலே விதவைத்தனம்தான். ஒருத்தன் கிட்டே உடம்பைக் கறை பண்ணிக்கிட்டா மட்டுந்தான் பெஞ்சாதி யில்லே. மனசைக் கொடுத்திட்டாக் கூட மனைவிதான். அத்தான் செத்த வருத்தத்தை விட அவர் தாலி கட்டறதுக்கு முன்னாடி, ஆறுதல் அடையற உன்னளவுக்கு நான் சுயநலக்காரியில்லேம்மா. ஆத்மா சாந்தியடையறதுக்கு என்னென்னவோ பண்றீங்களே...! நிறைவேறாத ஆசைகளோட செத்திருக்கிற அத்தானுக்கு நான் செய்யற ஆத்ம சாந்திதாம்மா இது. இது நான் அவருக்குச் செய்யற ஆத்ம சாந்தி மட்டுமில்லே, ஒரு இராணுவ வீரனுக்கு எனக்குத் தெரிஞ்சவரை நான் செய்யற ஒரு மரியாதையும் கூட. என்னோட வாழ்நாளை எத்தனையோ ராணுவ விதவைகளோட நல்வாழ்வுக்காக அர்ப்பணிக்கத் தீர்மானிச் சிருக்கேன். எனக்கு இன்னொரு கல்யாணம் வேண்டாம்மா" (ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் சிறுகதைகள், பக்.61-62) என்று கல்யாணி கூறுவது, அவளது ஆழ்ந்த மன உணர்வைப் புலப்படுத்துகிறது.

"ஆத்ம சாந்திக்காக நிச்சயித்த பின் உயிர் துறந்தாலும் அவனையே கணவனாக நினைக்கும் கல்யாணியின் பாத்திரம் காலத்திற்கு ஒவ்வாதது. அந்தப் பெண் அவனையும் நினைத்துக்கொண்டு புற வாழ்க்கைக்கு இன்னொருவனையும் ஏற்றுக்கொள்வதில் தவறில்லை" (மு.நூ., அணிந்துரை, ப.5) என்று இந்நூலுக்கு அணிந்துரை அளித்த எழுத்தாளர் **சு.சமுத்திரத்தின்** கருத்து இங்கே நினைவுகூரத்தக்கது.

'வாசமில்லா மலரிது', 'அவளுக்கு வயது 60', 'இனி வரும் நாள்களில்' ஆகிய கதைகளிலும் பெண்ணின் மன உணர்வுகளை நுட்பமாகப் புலப்படுத்தியுள்ளார் ஏர்வாடியார்.

4.மனிதப் பண்புகளைச் சித்திரிக்கும் சிறுகதைகள்

இன்பம் - துன்பம், நன்மை - தீமை, சிரிப்பு - அழுகை போன்ற இருவேறு உணர்வுகளால் நிறைந்தது தான் வாழ்க்கை. 'இருவேறு உலகத்து இயற்கை, திரு வேறு, தெள்ளியர் ஆதலும் வேறு' (374) என்பார்

வள்ளுவர். வெளியே நல்லவன் போல் நடித்துக்கொண்டு, மனம் நிறைய மாசு நிறைந்தவர்களாகத் திரியும் பச்சோந்தி மனிதர்களை, **'இராவணன்கள் போடும் இராம வேஷம்', 'நாய்கள் ஜாக்கிரதை', 'நாய்கள் காணவில்லை'** ஆகிய கதைகளில் காணமுடிகிறது.

தம்மைச் சுற்றியிருக்கும் புறச்சூழல்களால் பாதிக்கப் படாமல் கடைசி வரை நல்லவர்களாக வாழும் மனிதர் களையும் **'வைராக்யம்', 'தணிகாசலமும் தயிர்சாதமும்', 'செலவல்ல மூலதனம்', 'பாவபுண்ணியம்'** ஆகிய கதைகளில் படம்பிடித்துக் காட்டியுள்ளார் ஏர்வாடியார்.

சுதந்திரப் போராட்ட நாட்களிலிருந்தே அகிம்சை, அடுத்தவர் மீது அன்பு, அக்கறை, நேர்மை, எளிமை, அப்பழுக்கில்லாத வாழ்க்கை வாழ்பவர் **'வைராக்யம்'** கதையில் வரும் நல்லசிவம் பிள்ளை. ஆனால் அவரது மகனோ, உழைக்காமல் ஊரைச் சுற்றிக்கொண்டு, பொது வாழ்க்கை என்ற பெயரில் அடுத்தவர்களைச் சுரண்டி வாழும் ஆடம்பர வாழ்க்கை வாழ்பவன். அவனுடைய இயல்புகளை ஏற்றுக்கொள்ளாத நல்லசிவம் ஊருக்கு வெளியே தனியே ஒரு சிறிய வீட்டில் தாமே சமைத்துச் சாப்பிட்டு, தம் வேலையைக் கவனித்துக் கொண்டு வாழ்கிறார். அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டு அக்கிரமம் செய்து வாழும் மகன் தாம் செத்துப்போனால் தமது இழவுச் செலவுகளைச் செய்யவும் வந்துவிடக் கூடாது என்று கருதிய தியாகி நல்லசிவம், ஒரு கடிதம் எழுதித் தம் நண்பன் சண்முகத்திடம் கொடுத்து விட்டுச் சாகிறார். அக்கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்த செய்தி; 'என்னுடைய உடலை யாரிடமும் ஒப்படைக்க வேண்டாம். திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு உடற்கூறு படிக்க வசதியாக அதை ஒப்படைத்து விடுங்கள்' என்பதுதான்.

'வாழ்ந்த போதும் சரி, மடிந்த போதும் சரி சல்லிக்காசு கூட மகனுடைய பாவப்பட்ட பணத்திலிருந்து பெறக்கூடாது, அனுபவிக்கக் கூடாது என்கிற அவரது வைராக்கியம் வென்றது. உயிரோடு இருந்த காலத்து உறுதி அந்த உயிரற்ற உடலிலும் இருந்தது' (அவளுக்கு

வயது 60, ப.42) என்னும் முடிவு 'சங்கு கட்டாலும் வெண்மை தரும், **கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே'** என்னும் நீதிநூல் கருத்தை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது.

5. அரசியல் சிறுகதைகள்

திருமணம் என்பது 'ஆயிரம் காலத்துப் பயிர்' என்பார்கள். முறைப்படி நடத்த வேண்டிய திருமணத்தைப் பொது மேடையாக்கக் கூடாது என்பதனை, **'மேடையில் சில மங்கல நிகழ்ச்சிகள்'** என்னும் கதையின் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார் ஏர்வாடியார். மணப்பெண்ணின் தந்தை ஆறுமுகம், அமைச்சர் வருவதையொட்டி மிக ஆடம்பரமாகப் பந்தல் அமைத்து, நாற்காலிகள் போட்டு, மேடையில் மணமக்களுக்கு அழகான சோபா, அமைச்சர் உட்கார அரியணை போன்ற ஆசனங்களை அமைத்து திருமண மேடையை அரசியல் மேடையாக ஆக்கி வைத்திருந்தார். பத்து மணிக்குத் திருமணத்தை நடத்தி முடிக்க வேண்டிய அமைச்சர், பத்தரை தாண்டியும் வரவில்லை; அமைச்சர் வருகிறார், வருகிறார் என்று போலீஸ்காரர்கள் வந்து சொல்லிவிட்டுச் சென்றனரே தவிர, அமைச்சர் வரவில்லை. பொறுமையிழந்த மணமகளின் பாட்டி பார்வதிக் கிழவி, உற்றார் உறவினரை அழைத்துக் கொண்டு கோவிலுக்குச் சென்று திருமணத்தை நடத்தி முடித்து விடுகிறாள். தாமதமாக அமைச்சர் வந்ததும் மணமக்களையும் உற்றார் உறவினரையும் வீட்டில் காணாது திகைத்த ஆறுமுகம் மற்றும் அமைச்சர் முன் திருமணம் முடித்த மணமக்கள் வந்து இறங்குகின்றனர். பழியைத் தன் மீது போட்டுக் கொண்டு அமைச்சரிடம் மன்னிப்புக் கேட்கிறாள் பாட்டி. அமைச்சர் வருத்தப்பட்டு சென்று விடுகிறார்.

"வருத்தப்படட்டும்... கல்யாணம்னா இவுங்க என்ன நினைச்சாங்க? இவுங்ககிட்டே தேதி வாங்கறதிலேயிருந்து கதவைத் திறந்து காரிலே ஏத்தி அனுப்பற வரை ஓய்வில்லாம நீ எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பே. நம்ம வீட்டுக் கல்யாண வேலைகளைக் கூடச் சரியாக கவனிக்க

முடியாம அவருக்கு மரியாதை கொடுக்கறதுக்காக ஓடியாடி உழைச்சே... கடைசியிலே என்ன ஆச்சு பார்த்தியா? கல்யாண வீட்டை ஒரு பொதுக்கூட்ட மைதானமா மாத்திப்புட்டு போய்ட்டாங்க. கல்யாணம் வெறும் நிகழ்ச்சி மட்டுமில்லேடா... சம்பிரதாயத்தோட நடக்க வேண்டிய ஒரு மங்கலமான சடங்கு. அதை நீ நடத்தத் தவறினாலும், நான் நடத்தாம விட மாட்டேன்னு சொன்னேனில்லையா... நடத்திக் காட்டிட்டேன்டா" (ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் சிறுகதைகள், ப.47) என்று பார்வதிக் கிழவி கூறும் வார்த்தைகளில் தம் கருத்தைப் புலப்படுத்திச் செல்கிறார் ஏர்வாடியார்.

இதே போல் விளம்பரம் தேடிக் கொள்ளவேண்டும் என்பதற்காக அமைச்சரை அழைத்துப் புதுமனை புகுவிழா நடத்திய லட்சுமணனுக்கு நேர்ந்த கதியை **'விளம்பரங்கள்'** என்னும் கதையில் எடுத்துக்காட்டியுள்ளார் ஏர்வாடியார்.

6. நகைச்சுவைக் கதைகள்

நகைச்சுவை என்பது வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் தேவையான உணர்வாகும். 'நகைச்சுவை வாழ்க்கைக்குத் தேவையா?' என்று ஒருமுறை **மகாத்மா காந்தியிடம்** கேட்டபோது. 'நகைச்சுவை இல்லை என்றால் நான் எப்பொழுதோ தற்கொலை செய்து கொண்டிருப்பேன்' என்றாராம் காந்தியடிகள். 'சிரிப்பது, சிரிக்க வைப்பது இரண்டுமே நகைச்சுவை உணர்வுதான்' என்று குறிப்பிடும் ஏர்வாடியார், **'நல்ல நகைச்சுவை என்பது நம்மை இதப்படுத்துவதைப் போல நம்மைச் சுற்றியுள்ளவரையும் சுகப்படுத்தும், நமக்கு நிறைய நண்பர்களைப் பெற்றுத்தரும், வாழ்க்கையில் நிறைவையும் தரும்'** என்று நூலின் முன்னுரையில் ஏர்வாடியார் குறிப்பிடுகின்றார். ஏர்வாடியாரின் படைப்புகளில் நகைச்சுவை உணர்வு இயல்பாக இழையோடுகிறது. அவருடைய **'கல்யாணக் கனவுகள்'** தொகுப்பு முழுவதும் நகைச்சுவை உணர்வு ததும்பி நிற்கிறது. இந்நூலுக்கு அணிந்துரை அளித்த தென்கச்சி **கோ.சுவாமிநாதனும், 'நண்பர் ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு நகைச்சுவை**

இயல்பாக வருகிறது. கதை அமைப்பிலும் அது இருக்கிறது. எனவே இப் புத்தகத்தைக் கையில் எடுத்துவிட்டால் முழுவதுமாகப் படித்துமுடித்துவிட்டுத் தான் கீழே வைக்க முடிகிறது. அதுவே ஆசிரியருக்குக் கிடைத்திருக்கிற வெற்றி' என்று குறிப்பிடுவது ஒன்றே, அவரது சிறுகதைகளை அளவிடப் போதுமானதாகும்.

ஊறுகாய் பாட்டில் படுத்துகிற பாடு, மூன்றாவது மாடியில் இருக்கிற 'குண்டு' ஏற்படுத்துகிற தவிப்பு. 'ஆட்டோ காணவில்லை' என்று இரு போலீஸ்காரர்கள் செய்கிற கலகலப்பு, கல்யாணக் கனவுகளோடு கல்யாண சுந்தரம் படுகிற பாடு என்று ஒவ்வொரு கதையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைக் களஞ்சியமாக அமைந்துள்ளது.

V. பாத்திரப் படைப்பு

சிறுகதையின் முதன்மையான - சிறப்பான - கூறுகளுள் ஒன்று கதைமாந்தர் பாத்திரப்படைப்பு ஆகும். ஏர்வாடியார் தம் கதைகளில் நல்லவர்களையும் படைத்துள்ளார்; அதே நேரத்தில், மன அழுக்கு மிக்க மனிதர்களையும் படைத்துள்ளார்; இன்றைய இளைஞர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதையும், எப்படி இருக்க வேண்டும் என்பதையும் தம் கதைகளில் பதிவு செய்துள்ளார். சில சான்றுகள் வருமாறு:

"தமிழ்நேசன் - சுற்று வட்டாரத்தில் உள்ள கிராமங்களில் பட்ட மேற்படிப்பு படித்த ஒரே இளைஞர். தமிழ் இலக்கியத்தில் எம்.ஏ., ஜனார்த்தனன் என்று பெற்றோர்கள் இட்ட பெயரைக்கூட தமிழ்நேசன் என்று மாற்றிக் கொண்டவன். பக்கத்து ஊர்களில் நடக்கிற எந்த இலக்கிய நிகழ்ச்சியானாலும் போய்விடுவான்... அரசியல் கட்சிகளில் அவனுக்குத் துளியும் நம்பிக்கை கிடையாது. யாரையும் எந்தச் சபையிலும் துணிந்து விமர்சிப்பான்" (ப.101) என்பது **'இனிவரும் நாள்களில்'** கதையில் வரும் தமிழ்நேசன் பற்றிய அறிமுகம். அறிவாற்றலும், புரட்சிகரமான சிந்தனைகளையும் கொண்ட தமிழ்நேசன், தன் ஊருக்காக எதையும் செய்து கொடுக்காத அரசை எதிர்த்து, தேர்தலைப்

புறக்கணிக்க வேண்டும் என்று மக்கள் கொண்ட எண்ணத்தைத் தனது வேண்டுதலால் மாற்றிக் காட்டுகிறான். 'தேர்தலைத் தவறாகப் பயன்படுத்துவது மட்டுமல்ல; பயன்படுத்தா மலேயே விடுவதும்கூட ஜனநாயகத்தைக் கொச்சைப் படுத்துவதாகும். தனிப்பட்ட உரிமைகளைப் பேசிப் பெற வேண்டும் அல்லது போராடிப் பெற வேண்டுமேயன்றி, ஜனநாயக முறையையே புறக்கணிப்பது தீர்வுமாகாது, விவேகமுமாகாது. நீங்கள் உங்களுடைய பிரதிநிதியாக இருக்க எவருக்குத் தகுதியிருக்கிறயி என்பதைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். அவரைத் துணிந்து தேர்ந்தெடுங்கள். **வாக்குச் சீட்டு உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிற உரிமைச் சீட்டு.** உரிமையை வேண்டாமென்று கூறி இந்த அரிய வாய்ப்பினுக்கு உங்களை அந்நியமாக்கிக் கொள்ளாதீர்கள். தேர்தலில் பங்கு கொள்ளுங்கள்' (ப108) என்று ஒரு துண்டுப் பிரசுரத்தின் மூலம் மக்கள் மனதை மாற்றி ஒரு நல்லவரைத் தேர்ந்தெடுக்க உதவுகிறான் தமிழ்நேசன். "இனி வரும் நாள்களில் தமிழ்நேசனைப் போன்ற இளைஞர்களின் தோள்களில் கிராமங்கள் மட்டுமல்ல, இந்த தேசமே இருக்கப் போகிற தென்ற நம்பிக்கை அவருடைய நெஞ்சில் நிறைந்தது" (ப.108) என்னும் கதையின் முடிவு, நாளைய உலகின் சிறந்த இளைஞர்களைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இதே போல், தான் படித்த படிப்புக்கு வேலை கிடைக்கவில்லை என்ற போது, தன் பரம்பரைத் தொழிலான தச்சு வேலை செய்து வாழலாம் என்று மனம் மாறி உழைக்கத் தொடங்கும் ரகுவை **'வேலை(ளை) வந்து விட்டது'** என்ற கதையில் படைக்கின்றார் ஏர்வாடியார்.

கோவில் உண்டியலில் போடப்படுவதற்காகக் கொடுத்த பணத்தை, மணி ஐயரின் மகனுடைய படிப்புச் செலவுக்குக் கொடுத்து உதவுகிறான் **'செலவல்ல மூலதனம்'** என்ற கதையில் வரும் சம்பத் என்னும் இளைஞன்.

> **'ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்**
> **என்று கும்மியடி'**

என்னும் மகாகவி **பாரதியாரின்** புதுமைப் பெண்ணாகப் படைக்கப் பட்டிருக்கிறாள் **'சேவையா... தேவையா...'** என்னும் கதையில் வரும் விஜி.

"'சூரியன்' என்று சரியாகத்தான் பெயர் வைத்திருக் கிறார்கள். சமுதாயச் சீர்கேடுகளைச் சுட்டெரித்து வருகிறது இந்தச் 'சூரியன்'. அமைதியாகத் தென்றலைப் போலக் கல்லூரிக்குப் போய்வந்த விஜி பட்டப்படிப்பிற்குப் பிறகு 'சூரிய'னில் வேலைக்குச் சேர்ந்தாள். இதை அவள் ஒரு வேலையாக அல்ல; வேள்வியாக மதித்துப் பணியாற்று கிறாள்" (ப.91) என்பது விஜி பற்றிய அறிமுகம். சமூக அநீதிகளையும், போலிகளையும் தோலுரித்துக் காட்டுகின்ற புரட்சிப் பெண் விஜி. சமூக சேவை என்னும் பெயரில், குடும்பத்தையும், குழந்தைகளையும் கவனிக்காமல் அக்கறை கொள்ளாமல் விளம்பரத்திற்காக ஊர் சுற்றித் திரிகிற புஷ்பராணிக்குப் பாடம் புகட்ட நினைக்கிறாள். "தீபாவளி நாளன்று காலையில் சமபந்தி போஜனம், மத்தியானம் அனாதை விடுதி நிகழ்ச்சி, ராத்திரி மியூசிக் அகாடமியில் நட்சத்திர இரவு என்று வரிசையாகத் தான் சமூக சேவை நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவிருப்பதை அறிந்து, சமபந்தி போஜனத்தில், புஷ்பராணியின் கணவரையும் குழந்தைகளையும் அமர வைக்கிறாள் விஜி. அமைச்சர்கள், வட்டாரங்கள் எல்லாரும் அமர்ந்திருக்கும் வரிசையில் பரிமாறிக் கொண்டே வந்த புஷ்பராணி, தன் கணவரையும், குழந்தைகளையும் கண்டவுடன் திகைத்து நின்று விடுகிறாள். 'என்ன புஷ்பா நிறுத்திட்டே!? யாரு இவங் கெல்லாம்?' என்று வினவிய அமைச்சருக்கு உண்மையை உணர்த்துகிறாள் விஜி. 'வீட்டிலே இவுங்க கையாலே சாப்பிட முடியலேன்னா என்ன வெளியிலேயாவது இவுங்க பரிமாறிச் சாப்பிடலாமேன்னு தான் வந்திருக்காங்க' என்று புஷ்பராணியை வெளிற வைத்தாள் விஜி. 'சமூகப் பணிங்கிற பேரிலே தன் குடும்பத்தையும், தன்னை நம்பியிருக்கிற குடும்பத்தாரையும் புறக்கணிக்கிறது சமூக சேவையாகாது. தன் குழந்தைகளை உதாசீனப்படுத்திட்டு இந்தத் தாய் ஊர்ப் பிள்ளைகளுக்கு ஊட்ட வந்தது விளம்பரத்துக்காக. இப்படிப்பட்ட சமூக சேவைகளை

நாம் உற்சாகப்படுத்தணுமா சார்?' (ப.98) என்று அமைச்சரிடம் தெளிவாகத் துணிந்து கேட்கிற விஜி ஒரு புதுமைப் பெண்ணாகவே படைக்கப்பட்டிருக்கிறாள்.

பாஸ்கரைக் காதலித்துத் திருமணம் செய்து கொள்கிறாள் லக்ஷ்மி. நெஞ்சுவலி காரணமாக இறந்து போகிறான் பாஸ்கரன். மாறி வரும் சமூக அமைப்பில் விதவைத் திருமணங்கள் நியாயப்படுத்தப்படும்போது, தன்னை நன்கு புரிந்து கொண்ட - தனக்கு உதவியாக இருக்கும் - கணவரின் நண்பர் சேகரை மறுமணம் செய்ய நினைக்கிறாள் லக்ஷ்மி. சேகருக்கு அந்த எண்ணம் இருந்தாலும், இருவரும் மனம் விட்டுப் பேசாததாலும், சூழ்நிலை காரணமாகவும், திருமணம் நடைபெறவில்லை. 'நானே எனக்குள் அரற்றிக் கொண்டு அழுதேன். முன்பு பாஸ்கரை மணந்து கொண்டு விதவையான நான், இப்போது சேகரை நினைத்துக் கொண்டு விதவையாகி விட்டேன்' (வாசமில்லா மலரிது, ப.75) என்னும் லக்ஷ்மியின் வார்த்தைகளில் அவளது மன உணர்வைப் புலப்படுத்திக் காட்டுகிறார் ஆசிரியர்.

தன்முனைப்பு (Ego) காரணமாக, காதலித்துத் திருமணம் செய்து கொண்ட டாக்டர் நிர்மலாவும், டாக்டர் சேகரும் விவாகரத்து செய்து கொள்கின்றனர்.

இன்றைய இளைய தலைமுறையைப் பல கதைகளில் படம்பிடித்துக் காட்டும் ஏர்வாடியார், **'இராவணன்கள் போடும் இராம வேஷம்'** கதையில், வெளியே நல்லவனாக நடிக்கும் கார்த்திகேயன், பெண்கள் விஷயத்தில் விளையாடும் பச்சோந்தி என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

ஒரே மகனைப் பெற்ற பெற்றோரும் முதியோர் இல்லத்திற்கு அனுப்பப்படுகின்றனர், நன்றாக சம்பாதிக்கும் இரண்டு மகன்களைப் பெற்றவர்களும் முதியோர் இல்லத்திற்கு விதிவிலக்கல்ல என்பதை இரண்டு சிறுகதைகளில் சிவராமசுப்பு, பிறவிப்பெருமாள், மணிகண்டன் ஆகிய கதைமாந்தர்களின் மூலம் புலப்படுத்துகிறார் ஏர்வாடியார்.

'இருவேறு உலகத்து இயற்கை' என்பதை ஏர்வாடியாரின் சிறுகதைகளும், அவர் படைக்கும் கதை மாந்தர்களும் புலப்படுத்துகின்றனர்.

VI. நடை நயம்

நடை என்பது ஓர் ஆசிரியரின் தனித்தன்மையை வெளிப்படுத்த வல்லது. ஒரு நல்ல ஆசிரியரை அவருடைய நடை வாயிலாகவே நாம் இனங்கண்டு கொள்ளலாம் என்பர். "ஓர் ஆசிரியரின் நடை என்பது அவர் கையாளும் மொழியின் அமைப்பும் முறையும் ஆகும். அது அவரது சொற்களாலும், வாக்கியங்களின் அமைப்புக்களாலும் உருவாக்கப்படுவதாகும்" என்கிறார் **ஆலன் கேஸ்டி**. *(மேற்கோள்: இரா.மோகன், சிறுகதைச் சிற்பி கு.ப.ரா., ப.93).*

ஏர்வாடியாரின் சிறுகதைகளில் பெரும்பான்மை யானவையும் பேச்சுத் தமிழ் வழக்கிலேயே அமைந்துள்ளன. சில சிறுகதைகளில் சென்னைத் தமிழும் தலைகாட்டு கின்றது. சில சான்றுகள் வருமாறு:

- *"கவர்ச்சியாக போஸ் தருகிற பெண்களைப் பற்றி கண்டபடி கற்பனை செய்வது தவறு. தழையத் தழையச் சேலை உடுத்திக் கொண்டும் முந்தானையை இழுத்து மூடிக் கொண்டும் வரும் பெண்கள் கூடக் கெட்டுப் போகலாம். நடத்தை என்பது உடுத்துகிற உடையில் இல்லை; நடந்து கொள்ளுகிற விதத்தில்தான் இருக்கிறது..." (ஏர்வாடி இராதாகிருஷ்ணன் சிறுகதைகள், ப.74)*

- *"இருக்கலாம் - ஆனா, உன்னைப் பாத்தா நல்ல பிள்ளையாட்டம் இருக்கு. அவன் அயோக்கியன்... பொறுக்கி... கோமதி... மொள்ளமாறி."*

"பொறம்போக்கு. பேமாணி. அவன் தப்பு பண்ணிடறான் நான் மாட்டிக்கறேன் சார். எங்க வீட்டுப்பிள்ளை எம்.ஜி.ஆர். மாதிரி (க.க., பக்.118-119).

- *ஆங்கிலச் சொற்கள் பயின்று வரும் நடைக்கு ஓர் எடுத்துக்காட்டு.*

"யூ டர்ட்டி இண்டியன் விமன் அன்ட் யுவர் சென்டிமெண்ட்ஸ்."

"சாரிடா செல்லம். இது மோசமான இண்டியன்

சென்டிமெண்ட்ஸ் இல்ல. நியாயமான ஒரு பெண்ணோட உணர்வு. பவித்திரமான நம்ம பண்பாடு. இதை நீ எப்படி வேணும்னாலும் கமெண்ட் பண்ணிக்கோ. இந்த பொஸஸிவ்னெஸ்தான் நம்ம இந்திய வாழ்க்கையிலே குறிப்பா தாம்பத்தியத்திலே சிறந்த அம்சம்" (அவளுக்கு வயது 60, ப.46).

- "அண்ணே... ஒரே ஒரு ரெக்வெஸ்ட். வேண்டுகோள். என்னை உயிருக்குயிரா நேசிக்கிற தாய். இந்த நாயை ஊட்டி வளர்த்த தாய்... உள்ளே இருக்கா. அவங்கிட்டே மட்டும் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வந்திடறேன்."

"நோ! ஊட்டி வளர்த்த தாயோ, கொடைக்கானல் வளர்த்த தாயோ, உன்னை உள்ளே அனுப்ப முடியாது..."

(கல்யாணக் கனவுகள், ப.126).

- "இவனுக்கு இரக்கப்படறது பாம்புக்குப் பாலை வார்க்கற மாதிரி. 'அம்மா'ம்பான். அப்புறம் நம்மை 'அம்போ'ன்னு விட்டுடுவான்... வேண்டாம்..." (கல்யாணக் கனவுகள், ப.127).

"தோழர் ஏர்வாடி கவிதையில் ஆழமாக நடை போட்டு, சிறுகதைத் துறையில் அகலமாக நடை போட்டாலும் அவர் சாயாமல் இருக்கிறார் என்பதே குறிப்பிடத்தக்கது" (அணிந்துரை, ஏர்வாடி இராதாகிருஷ்ணன் சிறுகதைகள், ப.4) என்னும் எழுத்தாளர் **சு.சமுத்திரத்தின்** மதிப்பீடு ஏர்வாடியாரின் சிறுகதைகளைப் பொறுத்த வரையில் உண்மையே எனலாம்.

கலைமாமணி
ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்

வங்கி அதிகாரி என்பதினும் மேலாகப் புகழ்வாய்ந்த தமிழகக் கவிஞராகவும், எழுத்தாளராகவும், நாடகாசிரியராகவும், பத்திரிகையாளராகவும் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களால் பெரிதும் அறியப்பட்டவர் திரு.ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன். 'வங்கி தமக்கு ஜீவனம் தந்த தென்றால் வளர்தமிழ் தன் ஜீவனைக் காத்தது' என்கிற ஏர்வாடியார் இதுவரை 104 சிறந்த தமிழ் நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவரது இரண்டு நூல்கள் தமிழ்நாடு அரசின் சிறந்த நூல்களுக்கான பரிசுகளைப் பெற்றுள்ளன. தமிழகத்தின் தலைசிறந்த அமைப்புகள் சிலவும் அவருடைய நூல்களுக்குப் பரிசுகள் அளித்துள்ளன. அரசாலும், பல்கலைக்கழகங்களாலும் பாட நூல்களாகவும் சில நூல்கள் வைக்கப்பட்டுள்ளன. அவரது சிறுகதையொன்று இந்தியத் திரைப்படக் கழகத்தின் வாயிலாகத் திரைப்படமாகவும் ஆக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு அவருக்கு கலைமாமணி விருதும், பாவேந்தர் பாரதிதாசன் விருதும் வழங்கிச் சிறப்பித்துள்ளது. வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பால் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப் பெற்றவர். கனடா **'உதயன்'** இதழின் உலகளாவிய இலக்கியச் சாதனையாளர் விருது பெற்றவர். பல்வேறு நிறுவனங்களும், அமைப்புகளும் அவருக்கு வழங்கியுள்ள விருதுகள் அரை நூற்றுக்கும் அதிகம்.

அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், இங்கிலாந்து, கிரீஸ், இத்தாலி, மேற்கு ஜெர்மனி, துபாய், இலங்கை, மலேசியா,

சிங்கப்பூர், தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு இலக்கியப் பயணம் சென்று வந்துள்ளார். **'கவிதை உறவு'** என்ற அமைப்பை 46 ஆண்டுகளாகவும், அதே பெயரில் பதிவுறு இதழாக 31 ஆண்டுகளாகவும் தொடர்ந்து நடத்தி வருவது சிறப்பானது. அவர் பெற்ற பரிசுத் தொகைகளால் நிறுவப் பட்டுள்ள **'கவிதை உறவு சாரிடபிள் டிரஸ்ட்'** வாயிலாகப் பல சமூகத் தொண்டுகளும் செய்து வருகிறார்.

வங்கியில் பணியாற்றிய நாள்களிலும் தம் பணிகளைச் சிறப்பாகச் செய்துள்ளார். வங்கியின் ஆட்சிமொழிகள் துறையின் அதிகாரியாக இருந்தபோது அவர் தொகுத்த 'வங்கிக் கலைச்சொல் அகராதி' மாண்புமிகு முதல்வர் டாக்டர் **எம்.ஜி.ஆர்.** அவர்களால் வெளியிடப்பட்டதும், பாராட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஏர்வாடியாரின் படைப்புகள்

கவிதை

- உனக்காக ஒரு பாடல்
- பாட்டு வரும்
- வசந்தம் வருகிறது
- எனது வானில்
- வெளிச்சம் வருகிறது
- ஏர்வாடி இராதாகிருஷ்ணன் கவிதைகள்
- எப்போதாவது...
- கவிதை மின்னல்கள் (முதல் தொகுதி)
- கவிதை வானில்
- கவிதை மின்னல்கள் (2ஆவது தொகுதி)
- பாட்டு வெளியினிலே
- கனவின் பெயர் கவிதை
- யாரும் யாராகவும்
- ஒருநாளும் ஒவ்வொரு நாளும்
- வெளிச்ச மலர்கள்
- அவரவர் வானம்
- எப்போதும்...
- கொஞ்சம் கனவு கொஞ்சம் கவிதை
- ஏர்வாடியார் கவிதைகள்
  (மரபுக் கவிதைகளின் முழுமையான தொகுப்பு)

நாடகம்

- நல்ல மனம் வாழ்க
- இப்போது புரிகிறது

- ❒ இடைவேளை இடைவெளி அல்ல
- ❒ இன்னும் ஒரு மீரா
  (தமிழ் வளர்ச்சித் துறை பரிசு பெற்ற நூல்)
- ❒ பணம் பணம் பணம்
- ❒ பணம் வரும்
- ❒ நிழல் தேடும் நெஞ்சங்கள்
- ❒ ஒரே ஒரு வீடு
- ❒ நீ வந்த நேரம்
- ❒ அன்புள்ள கீதாவுக்கு...
- ❒ சின்னசாமி பெரியசாமி
- ❒ வருகிறாள் உன்னைத் தேடி

சிறுகதை & நாவல்

- ❒ திருமணங்கள் வெறும் நிகழ்ச்சிகள் அல்ல
  (தமிழ் வளர்ச்சித் துறை பரிசு பெற்ற நூல்)
- ❒ ஏர்வாடி இராதாகிருஷ்ணன் சிறுகதைகள்
- ❒ மனிதர்கள்
- ❒ கல்யாணக் கனவுகள் (நகைச்சுவைச் சிறுகதைகள்)
- ❒ ஆதலினால்...
- ❒ இனிவரும் நாள்களில்...
- ❒ நிழல்கள் பொய்யல்ல
- ❒ ஒருமுறைதான் வரும் (பரிசு பெற்ற நாவல்)
- ❒ அவளுக்கு வயது அறுபது

கட்டுரை

- ❒ என் பக்கம் - 13 தொகுதிகள்
- ❒ மனத்தில் பதிந்தவர்கள் - 9 தொகுதிகள்
- ❒ என் பக்கம் - முழுமையான தொகுப்பு (முதல் பகுதி)
- ❒ இன்னும் சில சிறகுகள் (சொற்பொழிவுகள்)
- ❒ மாபெரும் சபைகளில்
- ❒ எண்ணிய வண்ணமாய்
- ❒ மலரோடு மலராக

- ❐ மன்றங்களில் மலர்ந்தவை
- ❐ வாழ்க்கை வாழத்தான் (தன்முன்னேற்ற நூல்)
- ❐ படைப்புக் கடவுளின் பரம்பரையில் வந்தவர்கள்
- ❐ நினைவுக்கு வந்த நிகழ்ச்சிகள்
- ❐ எழுத்தாளர்களுக்கு (ஒரு கையேடு)
- ❐ வெளிநாட்டு வீதியிலே! (கிரீஸ் பயணக் கதை)
- ❐ எழுத்துச் சிறகுகள்
- ❐ கண்ணில் தெரியுது வானம்
- ❐ தமிழ்ச் சுவை
- ❐ தோரணங்கள்
- ❐ சில நந்தவனங்களில் நான்
- ❐ மலரோடு தென்றல்
- ❐ மனம் என்னும் மலர்த் தோட்டம்
- ❐ தலைவாசல்
- ❐ பதிந்ததும் பாதித்ததும்
- ❐ அக்கம் பக்கம்
- ❐ நாளும் நல்லது சொல்வோம்
- ❐ சொந்தமாக ஒரு சொர்க்கம்
- ❐ அனுபவங்கள் வெறும் நிகழ்ச்சிகள் அல்ல
- ❐ தொகுப்புகள்
- ❐ வண்ணங்கள்
- ❐ கவிதை உறவுக் கவிதைகள்
- ❐ அன்னையின் அநேக வடிவங்கள்
- ❐ உயரே உயர
- ❐ மனிதர்கள் வசிக்கிற ஊர்
- ❐ தொடரும்
- ❐ இன்னும் இருக்கிறது
- ❐ மாண்புமிகு மனிதர்கள்
- ❐ மீண்டும் மீண்டும்

- அண்ணா எங்கள் அண்ணா
- காலம் வணங்கும் கலாம்
- மணிக் கவிதைகள்

சிறப்பு வெளியீடு

- வங்கிக் கலைச்சொல் அகராதி

ஏர்வாடியார் குறித்த நூல்கள்

- இலக்கிய வானில் இனிய நிலா
(திரு.பின்னலூர் விவேகானந்தன்)
- எல்லோருக்கும் இனிய ஏர்வாடியார்
(கவிஞர் கூரம் துரை)
- பாட்டுப் பறவைகளின் வேடந்தாங்கல்
(புலவர் அறிவுடை நம்பி)
- எல்லோரும் நலம் வாழ... ஏர்வாடியார்
(பேராசிரியர் இரா.மோகன்)
- ஏர்வாடியாரின் மனத்தில் பதிந்த மாண்புறு மனிதர்கள் 100
(பேராசிரியர் இரா.மோகன்)
- ஏர்வாடியம்
(பேராசிரியர் இரா.மோகன் &
பேராசிரியர் நிர்மலா மோகன்)

பேராசிரியர் இரா.மோகன்



'மு.வ.வின் செல்லப் பிள்ளை' எனத் தமிழ் கூறு நல்லுலகத்தில் அழைக்கப் பெறும் இரா.மோகன் மதுரையில் 10.12.1949-ஆம் நாளன்று பிறந்தார். தந்தையின் பெயர் இராமமூர்த்தி. தாய் - இராசலெட்சுமி. காரைக்குடி அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியில் கல்வி பயின்ற மோகன், கவியரசு **முடியரசனின்** மாணவர்.

இவர் மதுரை தீந்தமிழ்த் தியாகராசர் கல்லூரியில் பயின்று 1972-இல் முதுகலைப் பட்டம் பெற்றார்; மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் **'கு.ப.ராஜகோபாலன் சிறுகதைகள்'** என்னும் பொருளில் ஆராய்ந்து 1976-ஆம் ஆண்டில் முனைவர் பட்டம் பெற்றார்.

மதுரை காமராசர் பல்கலைக்கழக அஞ்சல்வழிக் கல்வித் துறையில் 01.11.1976-இல் விரிவுரையாளராகப் பணியில் சேர்ந்த முனைவர் மோகன், 1987-இல் தமிழியற் புலத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தார்; இணைப்பேராசிரியர், பேராசிரியர், ஒப்பிலக்கியத் துறைத் தலைவர், சிறப்பு நிதியுதவித் திட்ட ஒருங்கிணைப்பாளர், புல ஒருங்கிணைப்பாளர், மூத்த பேராசிரியர் எனப் பல்வேறு பொறுப்புகளில் 34 ஆண்டுக் காலம் தமிழியற் புலத்தில் பணியாற்றினார். மூன்று ஆண்டுக் காலம் பல்கலைக் கழக **ஆட்சிக் குழு உறுப்பினராகவும்** (Syndicate Member) இவர் பணியாற்றியுள்ளார்.

'டாக்டர் மு.வ.வின் நாவல்கள்' என்பது இரா.மோகனின் முதல் நூல்; 1972-ஆம் ஆண்டில் வெளிவந்தது. ஆய்வும் பதிப்பும் தொகுப்புமாக இதுவரை இவரது 143 நூல்கள் வெளிவந்துள்ளன. இவரது **'இன்பமே எந்நாளும்'** என்ற நூல் பாரத மணித்திரு நாட்டின் முன்னைக் குடியரசுத் தலைவர் டாக்டர் **ஆ.ப.ஜெ.அப்துல் கலாமின்** பாராட்டினைப்

பெற்றதாகும். இவரது நூல்கள் பல பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் தன்னாட்சிக் கல்லூரிகளிலும் பாட நூல்களாகப் (Text Books) பரிந்துரைக்கப் பெற்றுள்ளன.

'இலக்கியச் செல்வர்' **குமரி அனந்தன்** உட்படப் பேராசிரியர் மோகனின் மேற்பார்வையில் இதுவரை 38 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

பேராசிரியர் மோகன் தேமதுரத் தமிழோசையைப் பரப்புவதற்காகச் **சிங்கப்பூர்** *(7 முறை)*, **மலேசியா** *(4 முறை)*, **அமெரிக்கா** *(5 முறை)*, **கனடா, இலங்கை, ஷார்ஜா, ஆஸ்திரேலியா** ஆகிய அயல்நாடுகளுக்குச் சென்று வந்துள்ளார். இவர் பல்வேறு வானொலிகளிலும் தொலைக்காட்சிகளிலும் பொதுமேடைகளிலும் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட உரை நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளார்.

பேராசிரியர் மோகன் புதுதில்லி **சாகித்திய அகாதெமியின் பொதுக்குழுவிலும் ஆலோசனைக் குழுவிலும் உறுப்பினராக இருந்துள்ளார். இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவராகவும்** அவர் இருந்துள்ளார்.

சாகித்திய அகாதெமியின் **'இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை'**யில் பேராசிரியர் மோகன், **கு.ப.ரா., கல்கி, வ.சுப. மாணிக்கம், முடியரசன், மீரா** ஆகியோர் குறித்து நூல்கள் எழுதியுள்ளார். **'தமிழ்க் கட்டுரைக் களஞ்சியம்', 'தமிழ் ஹைகூ ஆயிரம்', 'நாவல் வளர்ச்சி', 'புதுக்கவிதை அணிவகுப்பு', 'நகைச்சுவைக் களஞ்சியம்', 'தெரிந்தெடுத்த சங்க இலக்கியப் பாடல்கள்', 'மணிமொழியம்'** ஆகியன இவர் வெளியிட்டுள்ள சிறந்த **தொகை நூல்கள்** ஆகும்.

வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும், தமிழ்நாடு அறக்கட்டளையும் இணைந்து பேராசிரியர் மோகனுக்குத் **'தமிழ்ச் சுடர்'** என்ற விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளன. புதுச்சேரிக் கம்பன் கழகம் வழங்கும் சிறந்த ஆய்வு நூலுக்கான பரிசினைப் பேராசிரியரின் **'கணினி யுகத்திற்குக் கம்பர்'** என்னும் நூல் பெற்றுள்ளது.

2010-இல் வெளிவந்த **'இலக்கிய இணையர் பேராசிரியர் இரா.மோகன்-முனைவர் நிர்மலா மோகன் மணி விழா மல'***ரும்* **'மோகனம்'** *என்னும் தொகை நூலும் (2017) தமிழியல் வளர்ச்சிக்குப் பேராசிரியர் மோகனின் பங்களிப்பினைப் பறைசாற்று வனவாகும்.*

மோகன் பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் **தகைசால் பேராசிரியராக (UGC - Emeritus Fellow)** *மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலத்தில் இரண்டு ஆண்டுகள் (04.1.2011- 03.01.2013) பணியாற்றியுள்ளார்.*

தமிழக அரசின் முத்தமிழ்க் காவலர் **கி.ஆ.பெ.விசுவ நாதம் விருது** *(2011) பெற்றவர் பேராசிரியர் இரா.மோகன் என்பது குறிப்பிடத்தக்கது.*

பேராசிரியர் இரா.மோகனின் நூல்கள்

I. புதுதில்லி சாகித்திய அகாதெமி வெளியீடுகள்

இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை

1. கு.ப.ராஜகோபாலன் (1994)
2. வ.சுப.மாணிக்கம் (1999,2007)
3. கல்கி (2000, 2006)
4. முடியரசன் (2006)
5. மீரா (2014)

தொகுப்பு

6. தமிழ்க் கட்டுரைக் களஞ்சியம் (2009)
7. தமிழ் ஹைகூ ஆயிரம் (2012)
8. புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு (இணைப் பதிப்பாசிரியர்) (2013)
9. மு.வ.வாசகம் (2016)
10. தெரிந்தெடுத்த சங்க இலக்கியப் பாடல்கள் (2017)

II. சென்னை மணிவாசகர் பதிப்பக வெளியீடுகள்

ஆராய்ச்சி

11. டாக்டர் மு.வ.வின் நாவல்கள் (1972,1981,1988)
12. அறிஞர் மு.வ. (1975, 1984)
13. சிறுகதைச் சிற்பி கு.ப.ரா. (1978, 2002)
14. புனைகதைத் திறன் (1980, 2003)
15. உரை மரபுகள் (இணையாசிரியர்) (1985, 2003)
16. இலக்கிய வளம் (1989, 1990, 2009)
17. திரு.வி.க. அல்லது வாழ்க்கை விளக்கம் (1990)
18. ஒப்பியல் சிந்தனைகள் (1990)
19. இலக்கியச் சோலை (1994)
20. இலக்கிய அலசல் (1999)
21. இலக்கியச் செவ்வி (2006)
22. இலக்கியச் செல்வம் (2006)

23. இலக்கிய வித்தகர்கள் (2006)
24. புதுக்கவிதைத் திறன் (2006)
25. பன்முகப் பார்வையில் பாரதி (2006)
26. கவிதைக் குயில்கள் (2006)

பதிப்பு

27. பொதிகை: மலர் 1 (இ.ப.) (1979)
28. பாரதி இயல் (இ.ப.) (1982)
29. புதுக்கவிதை அணிவகுப்பு (1985, 1993)
30. நாவல் வளர்ச்சி (1989)
31. தமிழ் உலா: 2 தொகுதிகள் (இ.ப.) (1993)
32. சிற்பியின் கட்டுரைகள் (1996)
33. கல்கி நூறு (1998)
34. கல்கி கதைகள்: 2 தொகுதிகள் (1999, 2000, 2006)
35. கல்கி கட்டுரைகள்: 3 தொகுதிகள் (1999)
36. செந்தமிழ்த் தேனீ சோமலெ (2002)
37. நாள் ஒரு சிந்தனை (2003, 2007)
38. நகைச்சுவைக் களஞ்சியம் (2004)
39. மு.வ. களஞ்சியம் (2011)

தொகுப்பு

40. மகிழ்ந்ததும் நெகிழ்ந்ததும் (1996)
41. கனவை நனவாக்கும் கலாம் (2003)
42. இலக்கியக் கோலங்கள் (2005)

III. சென்னை வானதி பதிப்பக வெளியீடுகள்

ஆராய்ச்சி

43. காந்தீயக் கவிஞருடன் ஒரு கை குலுக்கல் (1996)
44. கணினி யுகத்திற்குக் கம்பர் (2010)
45. சங்க இலக்கியச் செவ்வி (2010)
46. விருந்தும் மருந்தும் (2011)
47. செவ்வியல் இலக்கியச் செழுமை (2011)
48. மாணிக்கவாசகர் (2011)
49. இலக்கிய முற்றம் (2012)
50. மு.வ. அல்லது முன்னேற்ற வரலாறு (2012)

51.	இனியவை நாற்பது	(2012)
52.	திறமை தான் நமது செல்வம்	(2013)
53.	இலக்கிய மாலை	(2013)
54.	கவிதைக் களஞ்சியம்	(2013)
55.	சங்க இலக்கிய மாண்பு	(2013)
56.	கவிதைச் சாரல்	(2013)
57.	கவிதைச் சுடர்	(2013)
58.	சிற்பியின் படைப்புலகம் (இணையாசிரியர்: முனைவர் நிர்மலா மோகன்)	(2014)
59.	மகிழ்ச்சி மந்திரம்	(2014)
60.	தெய்வத் தமிழ்	(2014)
61.	இலக்கிய அலைவரிசை	(2014)
62.	அமுதும் தேனும்	(2015)
63.	கம்பன் கவியமுதம்	(2015)
64.	இலக்கிய அமுதம்	(2015)
65.	கணினி யுகத்திற்குத் திருக்குறள்	(2016)
66.	வழிகாட்டும் வள்ளுவம் (இணையாசிரியர்: முனைவர் நிர்மலா மோகன்)	(2016)
67.	முன்னுரை இலக்கியம்	(2016)
68.	அயலகக் கவிதைக் குயில்கள்	(2016)
69.	சங்க இலக்கியச் சால்பு	(2016)
70.	நல்லவை நாற்பது (இணையாசிரியர்: முனைவர் நிர்மலா மோகன்)	(2017)
71.	கவிதை ஒளி	(2017)
72.	சங்க இலக்கியச் சாறு	(2017)
73.	பன்முக நோக்கில் குறுந்தொகை	(2017)
74.	பன்முக நோக்கில் புறநானூறு	(2017)
75.	கவிதை வெளியினிலே...	(2018)
76.	பன்முக நோக்கில் சிலப்பதிகாரம் (இணையாசிரியர்: முனைவர் நிர்மலா மோகன்)	(2018)
77.	தமிழ் உலா	(2018)
78.	ஏர்வாடியம் (இணையாசிரியர்: முனைவர் நிர்மலா மோகன்)	(2019)

தொகுப்பு

79. மு.வ. கருவூலம் (2012)
80. குலோத்துங்கம் பண்ணையில் கொய்த கதிர்கள் (2012)
81. மணிமேகலைத் திறன் (2012)
82. நூலின்றி அமையாது உலகு (2014)
83. தி.க.சி.எனும் ஆளுமை (2014)
84. கனவெல்லாம் கலாம் (2015)
85. மணிமொழியம் (2017)
86. எல்லோரும் நலம் வாழ ஏர்வாடியாரின் சிந்தனைகள் (2018)

கடித இலக்கியம்

87. அன்புள்ள நிலாவுக்கு (2010)
(பதிப்பாசிரியர்: நிர்மலா மோகன்)

IV. மதுரை மீனாட்சி புத்தக நிலைய வெளியீடுகள்

ஆராய்ச்சி

88. இலக்கிய விருந்து (1998)
89. இலக்கிய வானம் (2000)
90. இலக்கியப் பேழை (2001)
91. இலக்கியச் சிந்தனை (2004, 2009)

தொகுப்பு

92. புதுமைப்பித்தன் முத்திரைக் கதைகள் (2003)
93. கு.ப.ரா. முத்திரைக் கதைகள் (2003)
94. பேராசிரியர் ம.திருமலையின் ஆய்வுகள் (2017)

V. சென்னை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மற்றும் தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட் வெளியீடுகள்

உரை

95. பத்துப்பாட்டு உரை (1-5) (2004)

ஆராய்ச்சி

96. இலக்கியப் பரல்கள் (2008, 2010, 2011)

தன்முன்னேற்றம்

97. நகைச்சுவை நாயகர்கள் (2009)
98. இன்பமே எந்நாளும் (2000, 2002, 2009, 2012)
99. விரல்கள் பத்தும் மூலதனம் (2006; 2009)
100. விழிப்புணர்வுச் சிந்தனைகள் (2010)

தொகுப்பு

101. இறையன்பு களஞ்சியம் (2010)

VI. சென்னை ஓரியன்ட் லாங்மேன் லிமிடெட் வெளியீடு

102. இலக்கியச் சுடர் (1992, 1996)

VII. சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு

103. வா.செ.கு. என்ற ஆளுமையாளர் (2010)
104. பத்மஸ்ரீ முனைவர் ஔவை நடராசனின் பன்முகம் (2018)

VIII. மதுரை ஏரகம் மற்றும் சோலை நூலக வெளியீடுகள்

105. ஜெயகாந்தன் சிந்தனைகள் (1978)
106. ஆய்வியல் வழிகாட்டி (இ.ஆ.) (1979)
107. புகழ் பெற்ற சங்க இலக்கியப் பொன்மொழிகள் (இ.ப.) (1980)
108. துணுக்குத் திரட்டு (1980)
109. சின்னச் சின்ன இழை (இ.ஆ.) (1980)

IX. மதுரை சர்வோதய இலக்கியப் பண்ணை வெளியீடுகள்

110. டாக்டர் மு.வ. கலைக்களஞ்சியம் (1974)
111. டாக்டர் மு.வ.வின் மணிமொழிகள் (1974)
112. டாக்டர் மு.வ.வின் கடிதங்கள் (இ.ப.) (1977)
113. துணுக்கு இலக்கியம் (1979)

X. தஞ்சாவூர் அகரம் வெளியீடு

114. முன்னுரை நாற்பது (2009)

XI. ஞான பரம்பரை வெளியீடு

115. குமரகுருபரர் (2006)

XII. சென்னை விழிகள் பதிப்பக வெளியீடு

116. கவிதை அலைவரிசை: 2 (2012)

XIII. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற ஆய்வுக் கோவைத் தொகுதிகள்

117. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2006)
118. ஆய்வுக் கோவை: 5 தொகுதிகள் (2007)
119. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2008)
120. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2009)
121. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2010)
122. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2011)
123. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2012)
124. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2013)
125. அயலகத் தமிழ் இலக்கியம் (2013)
126. ஆய்வுக் கோவை: 4 தொகுதிகள் (2014)

XIV. மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியற்புலம் மற்றும் பதிப்புத்துறை வெளியீடுகள்

127. பெண்ணியம் (இ.ப.) (1994)
128. தமிழியல்: ஆய்வுக் கட்டுரைகள்-1(இ.ப.) (2003)
129. சிறுவர் இலக்கியம் (இ.ப.) (2003)
130. சீக்கியமும் தமிழ்ப் பண்பாடும் (இ.ப.) (2007)

XV. மதுரை பார்த்திபன் பதிப்பக வெளியீடு

131. இலக்கிய நயம் (1998)

XVI. மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ் ஆய்வாளர் மன்ற வெளியீடு

132. பரல்கள்: தொகுதி 2 (இ.ப.) (1976)

XVII. மதுரை ஞாலத் தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்ற வெளியீடு

133. பிற துறைத் தமிழ் ஆய்வு (இ.ப.) (2005)

XVIII. மதுரை அறிவகம் மற்றும் செந்தில் புத்தக நிலைய வெளியீடுகள்

134. இலக்கியச் சால்பு (சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத்தின் நிதியுதவியுடன் வெளியிடப் பெற்ற நூல்) (1997)
135. படித்ததும் பிடித்ததும் (தொகுப்பாசிரியர்) (1994)
136. சிரித்ததும் சிலிர்த்ததும் (தொ.ஆ.) (1998)
137. கவிதை அலைவரிசை: 1 (2007)

XIX. சங்க இலக்கிய ஆய்வு மைய வெளியீடு

138. ஐங்குறுநூறு ஆய்வுக் கோவை: 3 தொகுதிகள் (2009)

XX. மேலைச்சிவபுரி, சன்மார்க்க சபை பண்டிதமணி நூற்றாண்டு விழா வெளியீடு

139. பண்டிதமணியின் நடை நயம் (1983)

XXI. மதுரை முத்துப் பதிப்பக வெளியீடு

140. சங்க இலக்கியத் தொகை (பதிப்பாசிரியர்) (2005)

XXII. சிவகங்கை அன்னம் (பி) லிட். வெளியீடு

141. அண்ணல் தமிழ் (இ.ப.) (1990)
142. பண்பார் பேராசிரியர் பரந்தாமனார் (தொ.ஆ.)(2006)

XXIII. உலகத் திருக்குறள் பேரவை வெளியீடு

143. திருக்குறள் ஆய்வுக் களஞ்சியம் (இ .ப.) (2005)

பேராசிரியர் நிர்மலா மோகன்

நிர்மலா மோகன் 05.12.1951-இல் மதுரையில் பிறந்தவர். பெற்றோர்: துரைசாமி - சாவித்திரி. புகுமுக வகுப்பு முதல் முதுகலை வரையிலான கல்லூரிக் கல்வியை மதுரை பாத்திமாக் கல்லூரியில் பெற்ற நிர்மலா, மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் பயின்று ஆய்வியல் நிறைஞர் (எம்ஃபில்) பட்டம் பெற்றவர்; **'குறம், குறவஞ்சி, குளுவ நாடகம் - ஆய்வு'** *என்னும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் (1983) பெற்றவர்.*

01.07.1983-இல் 'நான்காம் தமிழ்ச் சங்கம்' எனச் சிறப்பிக்கப் பெறும் மதுரை செந்தமிழ்க் கல்லூரியில் விரிவுரையாளராகச் சேர்ந்து இணைப்பேராசிரியராக உயர்ந்த நிர்மலா, 27 ஆண்டுக் காலம் அங்கே பணியாற்றி 31.05.2010-இல் ஓய்வு பெற்றார். இவர்தம் வழிகாட்டுதலில் 26 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்; நூற்றுக்கும் மேற்பட்டோர் ஆய்வியல் நிறைஞர் (எம்ஃபில்) பட்டம் பெற்றுள்ளனர்.

முனைவர் நிர்மலா மோகன் ஆய்வும் பதிப்பும் தொகுப்புமாக இதுவரை 33 நூல்களை வெளியிட்டுள்ளார். **'இலக்கியத் தென்றல்', 'இலக்கிய மணிகள்', 'இலக்கிய மலர்கள்', 'இலக்கிய நெறி'** *முதலான இவரது நூல்கள் பல்வேறு பல்கலைக் கழகங்களிலும், தன்னாட்சிக் கல்லூரிகளிலும் பாட நூல்களாகப் பரிந்துரைக்கப் பெற்றுள்ளன.*

முனைவர் நிர்மலா மோகன் தேமதுரத் தமிழோசையைப் பரப்புவதற்காக **அமெரிக்கா** *(6 முறை),* **மலேசியா** *(3*

முறை), **சிங்கப்பூர்** (3 முறை), **ஆஸ்திரேலியா, இலங்கை** ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையும், தமிழ்நாடு அறக்கட்டளையும் இணைந்து 2002-இல் இவருக்குத் **'தமிழ்ச் சுடர்'** என்ற விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளன. மேலும் இவர் **'வாழ்நாள் சாதனையாளர் விருது', 'சிறந்த பேச்சாளர் விருது', 'தமிழ்ப் பணிச் செம்மல் விருது', 'ஔவை விருது', 'இலக்கிய மாமணி விருது', 'கிருபானந்த வாரியார் விருது'** முதலான பல்வேறு விருதுகளையும் பரிசுகளையும் தம் எழுத்து மற்றும் பேச்சுப் பணிகளுக்காகப் பெற்றுள்ளார். பல்வேறு வானொலி மற்றும் தொலைக்காட்சி களில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட உரைகளையும் இவர் நிகழ்த்தியுள்ளார்.

ஐந்தாம், எட்டாம் மற்றும் ஒன்பதாம் உலகத் தமிழ் மாநாடுகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான உலகளாவிய, தேசியக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு முனைவர் நிர்மலா மோகன் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியுள்ளார். சாகித்திய அகாதெமி (புதுதில்லி), செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் (சென்னை), திருமலை திருப்பதி தேவஸ் தானம் (ஆழ்வார் பிரபந்தத் திட்டம்) ஆகியவற்றுடன் இணைந்து பல்வேறு கருத்தரங்குகளும் பயிலரங்குகளும் நடத்திய அனுபவமும் இவருக்கு உண்டு.

நிர்மலாவும் அவரது துணைவர் மோகனும் தமிழ் கூறு நல்லுலகில் **'இலக்கிய இணையர்'** என அழைக்கப் பெறுவது யாவரும் அறிந்ததே.

நிர்மலா தற்போது காந்திகிராம கிராமியப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் **தகைசால் பேராசிரியராக** (UGC- Emeritus Professor) பணியாற்றி வருகின்றார். அண்மையில் தமிழக அரசின் 2015-ஆம் ஆண்டிற்கான **இளங்கோ அடிகள் விருது** பேராசிரியர் நிர்மலாவுக்கு வழங்கப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் நிர்மலா மோகனின் நூல்கள்

I.ஆராய்ச்சி

1. குறவஞ்சி (1978)
2. சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வகையும் (1979)
3. குறவஞ்சி இலக்கியம் (1985)
4. இலக்கியத் தென்றல் (1989, 1998)
5. இலக்கிய மணிகள் (1998, 2001, 2004, 2006, 2008, 2009)
6. கி.வா.ஜகந்நாதன் (1998, 2000)
7. சோமலெ (2001, 2008)
8. பண்டிதமணி (2006, 2009)
9. ஆண்டாள் (2004, 2008)
10. இலக்கிய மலர்கள் (2005)
11. இலக்கிய நெறி (2007)
12. சிற்றிலக்கியங்களில் மும்முனைப் போக்கு (2008)
13. சங்கச் சான்றோர் ஆளுமைத் திறன் (2009)
14. இலக்கிய வளர்ச்சி (2009)
15. உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத் திறன் (2011)
16. ஆய்வுக் களஞ்சியம் - I (2013)
17. ஆய்வுக் களஞ்சியம் - II (2013)
18. ஆய்வுக் களஞ்சியம் - III (2013)
19. சிற்பியின் படைப்புலகம் (2014)
20. அ.ச.ஞானசம்பந்தன் (2015)
21. கம்பன் கவியமுதம் (2015)
22. நல்லவை நாற்பது (2016) (இணை ஆசிரியர்)
23. தமிழ்க் கதிர் வ.சுப.மாணிக்கனார் (2016) (இணை ஆசிரியர்)
24. படித்தாலே இனிக்கும் (2016)
25. வழிகாட்டும் வள்ளுவம் (2016)
26. உரைவேந்தர் ஔவை துரைசாமி (2018)
27. பன்முக நோக்கில் சிலப்பதிகாரம் (2018) (இணை ஆசிரியர்)

28. ஏர்வாடியம் (2019) (இணை ஆசிரியர்)

II.பதிப்பு

29. சங்க இலக்கியச் சால்பு (2006)
30. தமிழ்ச் சித்தர் இலக்கியம் (2010)

III.தொகுப்பு

31. அன்புள்ள நிலாவுக்கு... (2010)
32. பேராசிரியர் இரா.மோகனின் படைப்புலகம் (2011)
33. மோகனம் (2016)



கவிஞர், கலைமாமணி **ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்** அவர்கள் நீண்ட நெடுங்காலமாக என்னுடன் மட்டுமல்ல, எண்ணற்ற தமிழறிஞர்களுடன் தொடர்பில் இருப்பவர். அவரை எல்லோர்க்கும் பிடிக்கும் என்பதைப் போல அவருடைய எழுத்துகளும் எல்லோர்க்கும் பிடிக்கும்.

கவிஞர் ஏர்வாடியாரிடம் மிகுந்திருக்கிற ஆற்றல் மற்றும் அவரது பண்பு நலன்களை ஆவணப்படுத்தும் முகமாகத் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறிந்த தமிழறிஞர் பேராசிரியர் டாக்டர் **இரா.மோகன்** அவர்களும் அவரது துணைவியார் **நிர்மலா மோகன்** அவர்களும் இணைந்து மிகுந்த அன்போடும் ஆர்வத்தோடும் இந்த நூலை ஓர் ஆய்வு நூலாகவே வழங்கியமை பாராட்டிற்கு உரியது.

– முனைவர் **சிலம்பொலி சு.செல்லப்பன்**

இரு பெரும் தமிழ்ப் பேராசிரியர்களாகத் திகழும் இணையரால் இணையற்ற ஒரு பெரும் ஆளுமையாகத் திகழும் **ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்** அவர்களின் வாழ்க்கை குறித்தும் படைப்புகள் குறித்தும் விளக்கும் நல்ல நூல் '**ஏர்வாடியம்**' என்னும் இந்நூலாகும். அவர் கவிஞராகத் திகழ்வதோடு நல்ல மனிதராகத் திகழ்வதாலேயே அவரைப் பற்றி இத்தகைய நூல் வெளிவருகிறது.

பேராசிரிய இணையர் **ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்** அவர்களின் வாழ்க்கையையும் எழுத்துகளையும் கூர்ந்து நோக்கி எழுதியிருப்பது மிக்க மகிழ்ச்சியளிக்கிறது.

ஒருவரின் உயர்வை ஏற்று மதிப்பதற்கும் அதனைப் போற்றி ஆவணப்படுத்துவதற்கும் பெரிய மனம் வேண்டும். பேராசிரியர் **இரா.மோகன்** அவர்களும் பேராசிரியர் **நிர்மலா மோகன்** அவர்களும் 'நனந்தலை உலகம்' போலும் பரந்த உள்ளம் படைத்தவர்கள். ஆழ்ந்த அன்பும் நட்பும் உடையவர்களாலேயே இப்படி சம காலத்தவரைப் பாராட்டும் நூலினைப் படைக்க முடியும்.

– முனைவர் **தெ.ஞானசுந்தரம்**

வானதி பதிப்பகம்